THE HON. SRI A. B. SHETTY :—" Diarrhœa and dysentery we find in many places, but the Malabar Members are more vocal and so, it is brought to the notice of the Government."

Availability of precious stones near Tirupur

* 2312 Q.—SRI S. R. ARUMUGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state— 9-20 a.m.

(*a*) whether the Government have examined the precious stones seized from the Harijans of Perunthuluvu village near Tirupur about a year and a half ago;

(*b*) if so, the quality and value of stones; and

(*c*) whether the Government have conducted any survey for starting a pilot scheme to exploit the precious stones available there?

[26th August 1955

The Hon. Sri M. A. MANICKAVELU :—" (a) Yes. Some stones were quarried from S. No. 194/1, natham poramboke of the village. About 1,373 lb. were seized by the village headman from the members of the Christians' Munnethra Sangam of Perantholavu village, Palladam, under the mistaken impression that they were valuable stones.

" (b) When the matter was further investigated by the Tahsildar, Tiruppur, it was found that the stones were not valuable.

" (c) No further survey for starting a pilot scheme to exploit the stones was conducted as the stones quarried were not valuable."

Sri S. R. ARUMUGAM :—" ஸார், அந்த பெருந்துருவு கிராமத்திலும் அதைச் சுற்றியிருக்கும் கிராமங்களிலும் சாதாரணமாக வியாபாரிகள் சென்று அங்கே இருக்கக்கூடிய பலரகக் கற்களை வாங்கி வருகிறார்கள். சர்க்கார் சொல்லக்கூடிய முறையில் அந்தக் கற்கள் மதிப்பு இல்லை என்று சொன்னால் அந்த வியாபாரிகள் ஏன் அந்தக் கற்களை இவ்வளவு வாங்கிச் செல்லுகிறார்கள் என்பதை சர்க்கார் பரிசீலனை செய்வார்களா ? "

The Hon. Sri M. A. MANICKAVELU :—" The position as it is, is that the stones are said to be not valuable. But, if the hon. Member still persists in saying that there may be valuable stones, I would request him to give me a memorandum or petition. I will look into it."

Sri S. DAIVASIGAMONEY :—" May I know whether the Government have been able to find out whether the stones found in those places could actually be classified as granite stones, valueless stones or some precious stones? "

The Hon. Sri M. A. MANICKAVELU :—" It was thought that they were valuable stones in the sense that to some extent they appeared like precious stones, but as a matter of fact, it was found that probably they were a sort of glittering stones."

(Questions Nos. 2313 and 2314 taken up together.)

Harijan entry into private temples

* 2313 *Q.*—Sri O. KORAN : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(a) how many temples in the State have been declared as public temples and how many as private temples after the Madras Temple Entry Authorization Act was passed in the State; and

(b) whether the Government are contemplating to take any steps, and if so, what steps to get entry into private temples for worship for Harijans?

The Hon. Sri B. PARAMESWARAN :—" (a) The Government have no information.

" (b) The Government do not contemplate any action in the matter."

26th August 1955]

* 2314 *Q.*—SRI M. KATTIMUTHU : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether it is a fact that Harijans are prevented from entering the Niramani Mariamman temple in South Arcot district; and

(*b*) if so, the action taken by the Government?

THE HON. SRI B. PARAMESWARAN :—" (*a*) It is reported that during the Chittrai festival in the temple in 1954 certain Harijans of Poolambadi were prevented from entering the temple because they wanted to go to the sanctum sanctorum and break coconuts there which is against established custom and which only poojaris are allowed to do.

" (*b*) Does not arise."

SRI M. NARAYANA KURUP :—" Sir, as a first step in the direction of the setting up of a socialistic pattern of society, will the Government abolish private property in Gods? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, we do not want to interfere in private properties, whether they belong to Gods or to anybody else."

SRI V. S. SIVAPRAKASAM :—" Sir, the temples may be owned by private persons. But, in these temples, if other communities are allowed and Harijans alone are not allowed will the Government consider the desirability of declaring such temples, though owned by private persons, as public institutions? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, only in cases of dispute, the Government have to decide under section 6 of the Act, whether a particular place was a temple as defined in the Act or not."

SRI P. RAMAMURTHI :—" Sir, I am afraid the Hon. Minister does not understand the distinction between private property of God and private property in God. May I know whether the Government will come forward to abolish private property in God? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" God alone knows that." (Laughter.)

SRI P. RAMAMURTHI :—" கடவுளுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய சொத்துக்களை உபயோகப்படுத்துவது என்பது இல்லை. கடவுளையே சொந்தமாக சிந்திக்கக்கூடிய நிலைமையை மாற்றுவதற்கு சர்க்கார் தயாராக இருக்கிறார்களா என்பது கேள்வி."

THE HON. SRI B. PARAMESWARAN :—" கனம் ராமமூர்த்தி மனதிலேயே கடவுள் இருக்கிறார் என்பதை நான் அவருக்கு ஞாபகப் படுத்துகிறேன்."

[26th August 1955

SRI P. CHELLATHURAI :—" தனி நபர்களுக்குச் சொந்தமான கோவில்களை ஹரிஜன மக்களுக்கு திறந்து விடும்படியாக ஒரு சட்டத்தை அதாவது தனி நபர்களை நிர்பந்திக்கக்கூடிய முறையில் சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் முயற்சிக்குமா ? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" இப்பொழுது இருக்கும் சட்டப்பிரகாரம் அவர்களை நாம் நிர்பந்தப்படுத்த முடியாது."

SRI T. C. NARAYANAN NAMBIAR :—" Sir, the Hon. Minister for Religious Endowments was stating that the Government have no facts and figures with regard to the number of private and public temples. May I know from the Hon. Minister whether, for the effective and efficient administration of the Temple Entry Act, is it not highly necessary that the Government must have facts and figures with regard to the number of private temples and public temples? If so, will the Government see that statistics are taken so that a true picture with regard to untouchability in some of the temples which are the citadel of untouchability in this State will be obtained? "

THE HON. SRI B. PARAMESWARAN :—" Sir, the Collectors who are in charge of the enforcement of this Act have been asked to go into this question and find out the number of temples which have been declared as private temples."

DEPUTY SPEAKER :—" Question No. 2315."

SRI C. H. KANARAN :—" Sir, I rise on a point of order. The Hon. Deputy Speaker is not looking at this side at all. So we are not in a position to put supplementary questions."

DEPUTY SPEAKER :—" I am seeing on all sides. My eyes are looking on all sides."

SRI M. KATTIMUTHU :—" என் கேள்வி என்னவாயிற்று என்று கேட்கிறேன். 2314 கேள்வி என்னுடைய கேள்வி, அதற்கு பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—" 2313, 2314 இந்த இரண்டு கேள்விகளையும் ஒன்ருக எடுத்து பதில் சொல்லியாகிவிட்டது. உங்களுடைய கேள்வியும் முடிந்துவிட்டது."

" That question has been finished and I have passed on to the next question. Question No. 2315."

Vigilance Home for Women in Mylapore, Madras

* 2315 Q.—SRI A. K. SUBBIAH: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there is any proposal to extend or improve the Vigilance Home for Women situated in Mylapore;

(*b*) if so, the details thereof and when it will be given effect to;

(*c*) the amount allotted and spent for the year 1953–54 on this Vigilance Home; and

(*d*) the number of inmates in it at present?

26th August 1955]

THE HON. SRI C. SUBRAMANIAM :—" (*a*) The answer is in the negative.

" (*b*) Does not arise, in view of the answer to clause (*a*) above.

" (*c*) During 1953–54, the total expenses connected with the running of the Vigilance Home and Stri Sadana Rescue Home and Shelter, Madras, amounted to Rs. 1,70,700. Separate figures are not available for the Vigilance Home.

" (*d*) 277 women and 7 children on 16th April 1955."

SRI V. BALAKRISHNAN :—" இந்த விடுதியில் சேருவதற்கு வேண்டிய திறமைகள் என்ன ? "

THE HON. SRI. C. SUBRAMANIAM :—" திறமைகளைப்பற்றி கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்."

(Questions Nos. 2316 and 2317 taken together.)

Local development works in Tiruchirappalli district

* 2316 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the total amount allotted for Tiruchirappalli district in 1954–55 for local development works;

(*b*) whether the whole amount was utilized during the year;

(*c*) if not, how much was actually utilized; and

(*d*) the reasons for not utilizing the full allotment in case it is so?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Rs. 6,75,717.

" (*b*) No, Sir.

" (*c*) The amount spent during the year was Rs. 2,28,392.

" (*d*) The estimates for works could be sanctioned only by the end of December 1954. As the normal staff could not cope with the work, Government sanctioned special Engineering staff who joined duty only in October 1954."

* 2317 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount for which sanction has been sought by the Collector of Tiruchirappalli for local development schemes for the year 1955–56; and

(*b*) how much has been actually sanctioned?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Rupees 5,17,114.

" (*b*) Rupees 5·2 lakhs."

[26th August 1955

SRI M. KALYANASUNDARAM :—" 6 லட்சம் ரூபாய்க்கு மேல் சர்க்கார் அனுமதித்திருந்தும்கூட 2 லட்சம் ரூபாய்க்கு மேல் அந்த ஜில்லாவில் உபயோகப்படுத்த முடியாமல் இருந்தது. காரணம் போதிய சிப்பந்திகள் இல்லாதது. இனியாவது ஜில்லாக்களில் பல அபிவிருத்தி திட்டங்களை எடுத்து உடனடியாக அமுல் நடத்துவதற்குள்ள உத்யோகஸ் தர்களை நியமிக்க சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்பு கிறேன்."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" அவ்வாறு வேண்டிய உத்யோகஸ்தர்களை சர்க்கார் நியமித்துக்கொண்டுதான் வருகிறார்கள். ஆனால் வேறு பல ஜில்லாக்களில் கொடுத்த பணத்தை விட அந்த ஜில்லாவிற்கு அதிகமாக செய்து வருகிறார்கள் என்பதை கனம் அங்கத்தினருக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பணம் பூராவும் செலவு செய்ய வேண்டியதற்கு உத்தியோகஸ்தர்கள் மட்டும் இல்லை. கனம் அங்கத்தினர் போன்றவர்களுடைய ஒத்துழைப்பும் அக்கறையும் வேண்டியதாக இருக்கிறது."

(Many hon. Members stood up in their places.)

DEPUTY SPEAKER :—" We are now discussing the Second Five-Year Plan. Hon. Members can refer to those points during the discussion of the Plan."

Coimbatore District Village Officers' Conference

* 2318 *Q.*—SRI S. R. ARUMUGAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received the resolutions passed by the Coimbatore District Village Officers' Conference held on 29th November 1954;

(*b*) whether the Government gave any favourable reply to their requests as per their resolution No. 9; and

(*c*) if so, what is the reply?

THE HON. SRI M. A. MANICKAVELU :—" (*a*) No.

" (*b*) & (*c*) Do not arise."

DEPUTY SPEAKER :—" We will now take up the short notice question."

Construction of a bridge across Payangadi River.

* 14 *Short Notice Question*—SRI K. P. GOPALAN : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether it is a fact that the Malabar District Board has sent an estimate to the Government for the construction of a bridge across the Payangadi River in Chirakkal taluk, North Malabar; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" (*a*) The answer is in the negative.

" (*b*) Does not arise."

26th August 1955]

SRI K. P. GOPALAN :—" In view of the fact that Government have proposals to construct bridges over all the rivers in this region, either with the subsidy obtained from the Central Government or from the State Government funds, will the Government reconsider this question and include the construction of the bridge across the Payangadi River in Chirakkal taluk under the Central Government subsidy scheme or the State Government scheme? "

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" That is being considered, Sir."

DEPUTY SPEAKER :—" The hon. Member who has given notice of question 2293 requests that his question may be taken up now."

Chinnar Irrigation Scheme in Perambalur taluk

* 2293 *Q.*—SRI N. PARAMASIVA UDAYAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any investigations have been made in regard to the Chinnar Irrigation Scheme in Perambalur taluk, Tiruchirappalli district;

(*b*) whether it is a fact that the scheme has been dropped; and

(*c*) if so, the reasons therefor?

THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" (*a*) Yes.

" (*b*) & (*c*) The attention of the hon. Member is invited to the answer to question No. 171 given on the floor of the Assembly on the 15th March 1954."

SRI N. PARAMASIVA UDAYAR :—" இந்தக் கேள்விக்குப் பதில் தமிழிலில் சொல்ல வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—" இப்பொழுது தமிழில் சொல்வதற்கு நேரம் இல்லை."

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

II.—STATEMENT UNDER RULE 40 OF THE ASSEMBLY RULES *RE* IRRIGATION SITUATION IN TANJORE DISTRICT ON ACCOUNT OF LOW-LEVEL OF WATER IN THE METTUR DAM.

* SRI S. SWAYAMPRAKASAM :—" On a point of order, Sir. Today I find some notice has been circulated under rule 40. In the notice I find my name also. The notice is dated 25th August 1955. I do not remember to have given the notice on that date. On the other hand on the same subject-matter, I gave notice on the 23rd. But last night I have received an order from the office that my notice on the subject-matter will be taken up today. What happened to the notice given by me, dated 23rd August 1955. Are we to dance to the political views of certain parties? " 9-30 a.m.

DEPUTY SEAKER :—" This is not a point of order. If the hon. Member wants any information he can come to my Chamber and get the information from me. How can I give the information here? It is not possible."

* SRI S. SWAYAMPRAKASAM :—" I am not asking for any information, Sir. I find my name also included in this notice. I have not given any notice on the 25th. On the other hand on the same subject-matter I gave notice on the 23rd. I received from the office last night a notice stating that my motion will be taken up today under the same rule."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Sir, it is not impossible that two hon. Members are interested in the same question. I do not see any political advantage in this. The subject-matter is about shortage of water in Tanjore district and both the hon. Members, Sir Thiagaraja Pillai and Sri Swayamprakasam are interested in the matter and perhaps many others also. I do not see why anybody should get excited over this matter as to who gave the notice of the motion. On the other hand the hon. Member Sri Swayamprakasam should be glad that others also are taking up the subject if he is really interested in the subject and wants to get redress."

* SRI K. VINAYAKAM :—" Sir, it is not a question of who is interested in the shortage of water in the dam affecting Tanjore. It is questioning the very procedure adopted by the Secretariat of the Legislative Assembly. A member gives notice of a motion on the 23rd and another member gives a similar notice on the 25th. In all probability . . ."

DEPUTY SPEAKER :—" It has already been explained. Let the hon. Member resume his seat. I know what the hon. Member is going to say."

* SRI K. VINAYAKAM :—" Has the Deputy Speaker understood the implication of this issue . . ."

DEPUTY SPEAKER :—" The hon. Member should resume his seat. The hon. Member Sri Thiagaraja Pillai has given notice of the motion on the 22nd itself and the hon. Member Sri Swayamprakasam gave notice of the motion on the 23rd and not on the 25th."

* SRI S. SWAYAMPRAKASAM :—" The notice circulated is on the 25th. It cannot be taken up today."

DEPUTY SPEAKER :—" I want the hon. Member to be patient and hear me. The hon. Member Sri Thiagaraja Pillai gave notice on the 22nd and the hon. Member Sri Swayamprakasam gave notice on the 23rd. The notice was circulated on the 25th. Everything is in order."

26th August 1955]

* SRI K. VINAYAKAM :—" We have no impatience, so far as the Chair is concerned, Sir."

DEPUTY SPEAKER :—" Notice means, it is circulated to Members on that day. It is not notice of the Members."

SRI K. P. GOPALAN :—" This question under rule 40 cannot be taken because rule 40 says : ' A member may, after questions, and with the previous permission of the Speaker, call the attention of a Minister to any matter of urgent public importance and the Minister may then make a brief statement on the matter or ask for time to make a statement later '. Two members cannot take up the question at the same time." (Laughter.)

DEPUTY SPEAKER :—" Two hon. Members can bring one motion on the same subject-matter. But we cannot have two motions on different subjects on the same day. We have only one motion on the same subject-matter brought by two hon. Members. It is in order."

* SRI M. NARAYANA KURUP :—" Sir, I would like to know, if ten hon. Members gave notice of the same motion jointly, will all the ten persons be allowed to have their say in the matter? "

DEPUTY SPEAKER :—" Motion means, on the same subject-matter, not on different subjects . . ."

* SRI M. NARAYANA KURUP :—" My point is this. The motion is one and on the same subject-matter but ten hon. Members have given notice of the same motion. Will all the ten hon. Members be allowed to speak on the motion? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" There is no question of making a speech on the motion. It is after all bringing to the notice of the Government certain facts. If the hon. Member has omitted some facts, certainly the other hon. Member who has given notice of the same motion can bring them to the notice of the Government. After all we have to build our own procedure and tradition. What is the use of taking technical objections like this instead of going into the matter? "

* SRI M. D. THIAGARAJA PILLAI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்னையானது தஞ்சாவூர் ஜில்லாவில் தண்ணீர் மிகக் குறைவதினால் ஏற்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சியிலுள்ள ஸ்ரீ சுயம்பிரகாசம் அவர்களும் இதே பிரேரணையை சட்டசபை விதி 40-ன் கீழ் கொடுத்திருப்பதிலிருந்தே இந்தப் பிரச்னை தஞ்சாவூர் ஜில்லாவை எவ்வளவு பயங்கரமானதாக எதிர் நோக்கியிருக்கிறது என்பது புலப்படும். இப்பொழுது தஞ்சாவூர் ஜில்லாவில் 10 லட்சம் எக்கராக்கள் நஞ்சை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இப்பொழுது மேட்டூர் டாமில் 60 அடிக்குத் தண்ணீர் குறைந்துவிட்டதன் காரணமாக தஞ்சாவூரிலுள்ள பல மேடான நஞ்சை பூமிக்குத் தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பயிர் காய ஆரம்பித்து விட்டது. இதனால் பல எக்கராக்கள் பாழ்பட்டுப் போகும். அரசாங்கம் இது விஷயத்தில் கவனித்து தக்க நடவடிக்கையை உடனே எடுக்கவேண்டும்."

DEPUTY SPEAKER :—" நீங்கள் உங்களுடைய பிரேரணையை மூவ் பண்ணத்தான் வேண்டும். பிரசங்கம் எதுவும் நிகழ்த்த கூடாது. உட்காருங்கள்."

(Sri M. D. Thiagaraja Pillai rose.)

DEPUTY SPEAKER :—" Order, Order. The hon. Member should resume his seat. He cannot make a speech."

* SRI M. NARAYANA KURUP :—" On a point of order, Sir. The Chair was saying that under this rule, no hon. Member is entitled to make a speech. It is a motion under rule 40 and any hon. Member who is making a motion is entitled to make a speech explaining the position. Only he has no right of reply in these things as in other matters."

DEPUTY SPEAKER :—" He cannot make a speech. That is my ruling."

9-40 a.m. * THE HON. SRI R. SHANMUGA RAJESWARA SETHUPATHI :—" Mr. Deputy Speaker, Sir, the notice refers to three points, viz. :—

(1) The water supplied to Tanjore district has been cut down to the serious detriment of agricultural operation;

(2) In spite of the unsatisfactory position, supply is proposed to Salem and Coimbatore districts; and

(3) This will aggravate the serious situation and result in marked fall in rice production.

" As regards (1), I may tell the hon. Members that this year the Reservoir was opened for irrigation on 20th June 1955, i.e., a little later than the scheduled date, viz., the 12th June and supplies made through the Cauvery, the Vennar and the Grand Anicut Canal. As usual at the earlier stages the supplies were started low and gradually increased to avoid wastage. This operation, no doubt, indicated issues during the second half of June 1955 at lower rates than those provided in the rules of regulation, but it must be remembered that those rules had been framed for seasons commencing from 1st June. In the subsequent periods, the supplies actually made were lower than those provided in the Rules of Regulation only to the extent indicated below :—

Cauvery—July to middle of August.

Vennar—August first half.

G.A. Canal—July first half.

But actually the fields were not denied the requisite supply, because there were heavy rains all over the delta which caused surpluses at the Lower Anicut and several tail-end dams. Excepting a stray case at the earlier stage, no complaint of inadequate supply, was received and the observation is therefore not correct.

26th August 1955] [Sri R. Shanmuga Rajeswara Sethupathi]

"The unsatisfactory storage position in the reservoir had already been noticed by the Government. This is due entirely to circumstances beyond our control, namely, inadequate rains in Coorg and Mysore. There is still hope that there may be rains before the middle of September in these areas and we hope the Mettur Reservoir will get further supplies. The Chief Engineer has been consulted and has reported that every effort is being made to conserve the supplies and make issues frugally consistent with the requirements.

"As regards (2), viz., supply to Right and Left Bank Canals of the Mettur Canals Scheme in Salem and Coimbatore districts, I have to state that the canals are intended to irrigate about 18,000 and 27,000 acres in the Coimbatore and Salem districts respectively, i.e., 45,000 acres. When the storage in the Mettur Reservoir is at or about 40,000 m.c.ft., this area is to be given supply. In the Mettur Canals Scheme, only the Right Bank Canal has been opened for irrigation from last year, and the Left Bank Canal has not yet been opened. Issues to the Right Bank Canal have already commenced this season, but the supply is restricted to 13,000 acres as against the designed ayacut of 18,000 acres. As, however, the hopes entertained by the department, viz., attainment of full reservoir level at Mettur by about this time, have been belied and it was too late to cut off further supplies to the area already allowed under the Right Side Canal, it has been decided to defer supplies to the Left Bank Canal, and watch the position.

"In regard to (3), I would point out that the discharge in the Mettur Canal, which is of the order of 300 cusecs is not likely to be exceeded but reduced during rainy periods. The issues to this area during the entire crop period, i.e., from 1st August 1955 to 15th December 1955 would be about 3,600 m.c. ft., which is roughly within two days' supply to Cauvery delta and hence the chances of this quantity aggravating the situation and affecting the yield are rather remote.

"There has been a misapprehension in the minds of certain hon. Members of this House that the allowing of supplies from the Mettur reservoir for sugarcane cultivation in the Tanjore district, has adversely affected the Mettur storage and consequently the supply position in the delta. Extra supplies to the sugarcane area were allowed from the reservoir during the off-season only, viz., from 1st February 1955 to 20th June 1955 for benefiting 3,565 acres against an area of 4,277 acres approved for supply. The supplies so allowed, amounting to 2,262 m.c. ft., represent the requirements of the delta for one day only and it has in no way affected the storage position in Mettur."

DEPUTY SPEAKER :—"Now I want to explain the position with regard to the point raised by the hon. Member Sri Narayana Kurup. Rule 40 (1) says—

'A member may, after questions, and with the previous permission of the Speaker, call the attention of a Minister to any matter. . .'

So, the Member can only call the attention of the Minister to a particular matter and he cannot make a speech. Such being the case, the hon. Member Mr. Kurup should not think that the Member who moves a motion under rule 40, has got the right of making a speech."

SRI M. NARAYANA KURUP :—" Sir, what I meant is that when the attention of the Hon. Minister is invited by means of a motion, the mover of the Motion has got a right of explaining it and in certain cases, he has also got the right of reply. Such a provision is made in the rules."

DEPUTY SPEAKER :—" Now I would like to invite the attention of the hon. Member to rule 40 (2) which says—

'There shall be no debate on such statement at the time it is made."

So, when there is no debate, the question of reply does not arise."

* SRI M. NARAYANA KURUP :—" Sir, I agree that there is a difference in moving a motion and allowing a debate on it. If there was not such a provision, then automatically the hon. Members would be entitled to participate in the debate. That is a restriction. It is a matter between the mover and the Hon. Minister concerned though it is formally before the House. That is what it means."

* SRI S. SWAYAMPRAKASAM :—" It is an important point. A member cannot call the attention of the Hon. Minister without explaining the matter. He should explain why the matter is urgent and is of public importance . . ."

DEPUTY SPEAKER :—" He should only point out . . ."

* SRI S. SWAYAMPRAKASAM :—" Yes, Sir, he should point out why the matter is urgent and is of public importance . . ."

DEPUTY SPEAKER :—" But he should not go into details."

SRI P. RAMAMURTHI :—" Sir, I should only like to say that the Government or the particular Minister must know what exactly the matter is. There is no use of saying that ' a serious situation has arisen for want of irrigation facilities '. The hon. Member should be given an opportunity to explain what exactly the situation is and how we should meet it."

SRI M. NARAYANA KURUP :—" Sir, rule 73 says—

' Except in the exercise of a right of reply or as otherwise provided, no Member shall speak more than once on any motion . . .

So, the right of speaking once is inherent and is allowed under the rules."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" This is about rule 40 where a special procedure is adopted. So, the hon. Member cannot quote a general procedure and say that anybody is entitled to make a speech."

DEPUTY SPEAKER :—" The next item on the Agenda."

* SRI V. R. KRISHNA AYYAR :—" Sir, before going to the next item, viz., discussion on the Second Five-Year Plan, I should like to make a statement by way of a personal explanation . . ."

DEPUTY SPEAKER :—" The hon. Member cannot make a statement now but only a personal explanation."

* SRI V. R. KRISHNA AYYAR :—" I am not going to make a statement but only a personal explanation out of my great deference and profound respect for the Chair. I also want to associate myself with what other patriotic men of Malabar did the other day when the Second Five-Year Plan was taken up for discussion. I also owe a personal explanation to the House. Of course, it is now pretty familiar from various questions put time and again in this House, from various deputations which waited on the Government and from the agitations which are going on all over Malabar, that 30 lakhs of people of Malabar have been left uncared for and ignored and Malabar has not received a fair deal or square deal in this Draft Plan prepared by the Government. Sir, sober men like Sri K. P. Kesava Menon and distinguished moderates like Sri V. P. Menon have condemned this Plan and even called the other day upon all the Malabar M.L.As. to resign on this issue. So great is the feeling of the people of Malabar against the attitude of this Government which turned an indifferent ear to the interests of Malabar.

" It is now clear from what has been done here that the only course available to Members from Malabar district is to resort to non-co-operation by walking out not merely to record the protest of the people of Malabar against what is being done to them but also to follow the example or the teaching of the great Master—the Father of the Nation—and to rouse the good against the evil in the conscience of the Cabinet and . . ." 9-50 a.m.

DEPUTY SPEAKER :—" I hope the hon. Member will be brief in his statement."

* SRI V. R. KRISHNA AYYAR :—" . . . to see that justice is done to all the people of all the Districts in the State. It is only by this weapon, this spiritual weapon shall I say, we can rouse the conscience of the Cabinet to see that the good in it rises to the surface and overcomes the evil in it, and that apathy and indifference are overcome and a benignant eye is cast on Malabar. It is only with these two objectives that we retire and

I not having had the good fortune to be present here to join the demonstration the other day take this opportunity to walk out along with my comrades and thus record the protest of Malabar in that act.''

The Hon. Sri C. SUBRAMANIAM :—" May I make a submission, Sir? Is it necessary for every Member to perform this ceremony every time an individual arrives here? I thought it had been done collectively by the Members from Malabar. I also thought that that itself was sufficient. But if this should be performed every day as a function, I am afraid that it will become more a farce rather than arousing the spiritual consciousness or whatever it is. I am glad that the hon. Member is now following the footsteps of the Father of the Nation. I hope he will continue to follow his footsteps.''

* Sri V. R. KRISHNA AYYAR :—" I wish, if the Hon. Minister also follows the footsteps of the Father of the Nation . . .''

DEPUTY SPEAKER :—" The hon. Member has no right of reply.''

* Sri V. R. KRISHNA AYYAR :—" By way of personal explanation, Sir.''

DEPUTY SPEAKER :—" No personal explanation is allowed. The hon. Member will resume his seat. I now call upon the hon. Member Sri Bomman to speak.''

III.—DRAFT SECOND FIVE-YEAR PLAN (DISCUSSION—*cont*).

Sri K. H. BOMMAN :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே,
9-52 a.m. நமது சர்க்கார் தயாரித்திருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டத்தை இந்தச் சபையின் பரிசீலனைக்காக நமது சர்க்கார் சபை முன்பு வைத்திருக்கிறார்கள். இதுபற்றிய விவாதம் இரண்டு நாளாக நடந்து வருகிறது. இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நகல் திட்டத்தை சர்க்கார் சபை முன்பு வைக்கும்போது கனம் நிதி மந்திரி அவர்கள் தனது உரையில் இந்தத் திட்டத்தின் நோக்கத்தை தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

" மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டும், நாட்டு மக்களின் தேவைக்கேற்ப உற்பத்தியும் அதிகரிக்கப்படவேண்டுமென்ற கருத்தை மனதில் கொண்டு பல யோசனைகளைச் சொல்லவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார். அந்த அடிப்படையில் இந்தத் திட்டமானது வகுக்கப்பட்டு இருக்கிறது என்பதற்குப்பல சான்றுகள் இதில் காணப்பகிடுன்றன. அதிக உற்பத்தியை பெருக்கவேண்டுமென்பதற்காக பாசன வசதி, மின்சாரவசதி போன்ற ஏனைய வசதிகள் எல்லாம் செய்து கொடுப்பதற்கான திட்டங்கள் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதிகமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்வதற்கான சரக்குகளை கொண்டுவர கிராமங்களிலிருந்து முக்கிய ரோடுகளுக்குத்தொடர்பு கொடுக்க கிராமங்களிடையே ரோடுகள் போட ஏற்பாடுகளும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் இந்தத் திட்டமானது மக்களுடைய திட்டம், மக்களுடைய நலனுக்காக வகுக்கப்பட்ட திட்டம் என்பதில் சிறிதும் சந்தேக

26th August 1955] [Sri K. H. Bomman]

மில்லை. விவசாய உற்பத்திப் பொருள்களை பெருக்குவது மட்டும் போதாது என்றே கன ரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்காகவும் இதில் 45 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கன ரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தும் பொறுப்பை மத்திய சர்க்காரே வைத்துக்கொண்டிருக்கிறார்கள். பலவிதமான திட்டங்களை ராஜ்யத்தின் பூரா நன்மையையும் உத்தேசித்து சர்க்கார் போடும்போது, எங்கள் ஜில்லா புறக்கணிக்கப்பட்டுவிட்டது, அவர்களுடைய ஜில்லா புறக்கணிக்கப்பட்டுவிட்டது என்று இந்தச் சட்டசபையில் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டிருப்பதானது மிகவும் வருந்தத்தக்க விஷயம். உதாரணமாக நீலகிரி ஜில்லாவில் குந்தா மின்சாரத் திட்டத்தை 23¾ கோடி ரூபாயில் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டமானது நீலகிரி ஜில்லாவிற்கு மாத்திரம் பயன்படப்போவதில்லை. ஆனால் அந்த ஜில்லாவிற்கு அதனால் முக்கியத்துவம் ஏற்படும் என்பது உண்மையாக இருக்கலாம். அங்கே உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்தியானது ராஜ்யத்தின் பல பகுதிகளுக்கு சப்ளை செய்யப்படும் என்கின்ற உண்மையை யாரும் மறந்து விடக்கூடாது. நீலகிரி ஜில்லாவில் இந்த மின்சார சக்தியை உபயோகித்துக் கொள்ள வேறு எந்தவிதமான தொழிற்சாலையும் கிடையவே கிடையாது. எங்கள் ஜில்லாவில் குந்தா மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்துவதற்கான வசதிகள் நிறைய இருப்பதின் காரணமாகவே தான் அங்கே இந்தத் திட்டம் ஏற்படுத்தப்படுகிறது. அங்கே உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம் ராஜ்யத்தின் பல பகுதிகள் பயன் அடையப்போகின்றன என்பதை நாம் உணர்ந்தால் அங்கே எதற்காக ஏற்படுத்தவேண்டும், எங்கள் ஜில்லாவில் ஏன் ஏற்படுத்தக்கூடாது என்பதாகப் பேசுவதற்கு இடமேயிருக்காது. ராஜ்யத்தின் எந்தெந்தப் பகுதிகளில் என்னென்ன இயற்கை வளம் இருக்கிறதோ அவை யாவையும் ராஜ்யத்தின் பூரா நன்மையையும் உத்தேசித்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதே நமது நோக்கமாகவும், கருத்தாகவும் இருக்கவேண்டுமென்பதை சபையினருக்கு எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

" மலைப் பிரதேசத்தில் மண் அரிப்பைத் தடுப்பதற்கான பல திட்டங்களும் இதில் போடப்பட்டிருக்கின்றன. மலைப் பிரதேசங்களில் சாகுபடி செய்யக்கூடிய நிலங்கள் மண் அரிப்பினால் பெரிதும் பாதிக்கப்படுகின்றன. மலைப் பிரதேசங்களில் இன்றைக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கும் மண் அரிப்பைத் தடுப்பதற்காக 440 கோடி ரூபாயில் திட்டம் போட்டிருக்கிறார்கள். அந்த பூமியின் சத்து அந்தப் பிரதேசங்களிலேயே இருக்க வேண்டுமென்பதற்காக மட்டுமில்லாது நீலகிரி ஜில்லாவில் இந்த மண் அரிப்பையும் மரங்களை அழிப்பதையும் தவிர்க்காவிடில் குறைந்தது 10 வருஷங்களில் நாம் பல கோடி ரூபாய்கள் செலவு செய்து கட்டப்பட்டுள்ள பவானி சாகர் தூர்ந்துபோய்விடும். என என்ஜினியர்கள் சொல்லுவதால் இந்த அணை கட்டினால் பல ஆயிரக்கணக்கான ஏக்ரா நிலங்கள் பாதிக்கப்படுவதாலும் அதனால் உற்பத்தி குறைவு ஏற்படும் என்ற கருத்தைத் கொண்டுதான் இந்தத் திட்டமே போடப்பட்டிருக்கிறது. இதை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்.

" அதேபோல் காகிதத் தொழிற்சாலையை நீலகிரி ஜில்லாவில் ஏற்படுத்த வேண்டுமென்பதற்கான திட்டம் ஒன்றை சர்க்கார் போட்டிருக்கிறார்கள். நாலாயிரம் டன் காகிதம் அங்கே உற்பத்தி செய்யாவிட்டால் அதை மாகாணம் பூராவும் விநியோகிப்பதற்கான வசதி ஏற்படும். இங்கே இந்தக் காகிதத் தொழிற்சாலையை ஏற்படுத்துவானேன். வேறு ஜில்லாக்களில் ஏற்படுத்தக்கூடாதா என்றால் அது மிகவும் தவறானது என்பதை சபைக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். காகித உற்பத்திக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் நீலகிரி ஜில்லாவில் நிறைய இருக்கின்றன. மூங்கில் நிறைய உற்பத்தியாகிறது. கூடலூரிலிருந்து மைசூர் ரோடுப் பக்கம் 20 மைல் விஸ்தீரணத்திற்கு ஒரே மூங்கில் காடுதான். இதைத் தவிர பிதிர் காடு என்று சொல்லுமிடத்தில் நிறைய மூங்கில்கள் இருக்கின்றன. மூங்கில் காடாயிருப்பதால் அவ்விடத்திற்கு பிதிர் காடு என்று சொல்லப்படுகின்றது. மூங்கிலுக்கு கன்னடத்தில் பிதிர் என்று சொல்லுவது. ஆகவே எதிர் கட்சித் தலைவர் கனம் ராமமூர்த்தி அவர்கள் ஒரு உபக் கேள்வியில் வாட்டல் கற்பூர மரங்கள் இப்போது நட்டால் இன்னும் 10 வருஷங்கள்

பொறுத்துதான் உபயோகிக்க முடியும் என்று நிதி மந்திரி சொன்னதாக சொன்னார். இன்றே காகித தொழிற்சாலையை துடங்க நிறைய கர்பூர மரங்களும், வாட்டல், மூங்கில்கள் உண்டென்பதை அவருக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

“சவுக்கு மரக்கட்டையின் பட்டையின் சாயம் தோல் பதனிடுவதற்கு மிகவும் உபயோகப்படுகிறதென்று சொல்கிறார்கள். சவுக்குமரக் காடுகளும் நீலகிரி ஜில்லாவில் மிக அதிகம். ஆகவே காகிதத் தொழிற்சாலை, வாட்டல் பட்டையை பொடி செய்வதற்கான ஒரு குடிசை தொழிற்சாலை ஆகியவற்றை அந்த ஜில்லாவில் ஆரம்பிப்பதற்குவேண்டிய நடவடிக்கைகளையெல்லாம் எடுத்துக் கொள்ளவேண்டும்.

“அடுத்தபடியாக சில மாதங்களுக்குமுன் பத்திரிகையில் ‘ஹார்லிக்ஸ்’ பாக்டரி ஆரம்பிப்பதற்கு போதிய வசதிகள் அங்கே உண்டு என்ற செய்தியைப் பார்த்தேன். நீலகிரி ஜில்லாவில் நல்ல உயர்ந்தரக மாடுகளை அதாவது ஆஸ்திரேலியர் ஜர்ஸி வளர்ப்பதற்குப் போதுமான வசதிகள் இருக்கின்றன. அந்த ஜில்லாவில் ‘ஹார்லிக்ஸ் பாக்டரி’ யை ஆரம்பித்தால் வேலையில்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க முடியும். கடைசியாக அரவங்காட்டில் இருக்கக்கூடிய வெடி மருந்து தொழிற்சாலையில் இப்போது போதிய வேலையில்லாதக் காரணத்தால் சில இயந்திரங்கள் வேலை செய்யாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவைகளில் காகிதத் தொழிற்சாலைக்கும் இதரத் தொழிற்சாலைகளுக்கும் அவசியமாய் வேண்டிய பல ரசாயனப் பொருள்களை செய்ய போதிய வசதியுண்டு. இது விஷயமாக ஜில்லாத் திட்டம் வகுத்தபொழுது, வெகு தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்து அதன்படி ஆவன செய்ய முன்வந்தால், இதனால் தொழிலில்லாது கஷ்டப்படும் தொழிலாளிகளுக்கு பெரிதும் நன்மை பயக்கும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

“இப்பொழுது இந்தத் திட்டத்தில் மலை வாசிகளுக்கு நிலம் அளிப்பது சம்பந்தமான திட்டம் இருக்கிறது. நீலகிரி ஜில்லாவில் மலைவாசிகள் அதிகம் இருக்கிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். எங்களது நீலகிரி எழிலரசி தன் பெயரைக் கெடுத்துக் கொண்டதைத் திருத்தி இந்தத் திட்டத்தின் மூலம் அவள் தன் எழிலை அதிகப்படுத்திக் கொள்ளுகிறாள் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.”

10-02 a.m. **SRI C. KANDASAMY** :—“கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது விவாதத்திலிருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி ஏற்கெனவே பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளே இந்தத் தேசத்தினுடைய வருமானத்தை வருஷமொன்றுக்கு 5 சதவிகிதம் அதிகமாக்கத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆக, ஒட்டுமொத்தத்தில் இந்தக் காலகட்டத்தில் தேசத்தின் வருமானத்தை 25 சதவிகிதம் உயர்த்துவதற்குத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின் பிரதான நோக்கம் என்னவென்பதைப் பார்க்கும் போது தேசிய வருமானத்தின் உயர்வு, மக்களுடைய வாழ்க்கைத்தர உயர்வு, துரிதத்தொழில் வளர்ச்சி, கன ரகத் தொழிலபிவிருத்தி, எல்லோருக்கும் வேலை கொடுத்தல், சமுகத்திலே நியாயமான வகையில் எல்லோருக்கும் சமசந்தர்ப்பம், இப்படிப்பட்ட அடிப்படையில் திட்டம் போடப்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

“முதல் ஐந்தாண்டுத் திட்டம் வேலை செய்த அடிப்படையில் பார்க்கும் போது அதில் அரசாங்கத்தின் போக்கு எப்படியிருக்கிறதென்பதைப் பார்க்கும்போது எந்த அளவு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவது சாத்தியமென்பதை எங்களைப் போன்றவர்கள் பார்க்கவேண்டியிருக்கிறது. இன்றையதினம் பெரிய அளவில் திட்டத்தின் அடிப்படையில் தொழிலை வளர்க்கப்போகிறோம், 5 ஆயிரம், 6 ஆயிரம் கோடி ரூபாய் தேசத்தின் வளர்ச்சிக்கு ஒதுக்கிவிட்டோம் என்று கொள்கையை

26th August 1955] [Sri C. Kandasamy]

ஒப்புக்கொண்டிருக்கிறோம் என்பது மட்டுமல்ல. அந்தக்கொள்கையை நிறைவேற்றுகிற வகையில் திட்டம் பூரணமாக விளக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கவேண்டியிருக்கிறது.

"சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்த்தால் மூன்று சதவிகித அளவுக்கு மக்களின் வாழ்க்கை உயர்ந்திருக்கிறதென்று சொல்லப்படுகிறது. உண்மையாகவே, பல அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. மின்சார உற்பத்தி ஓரளவு அதிகப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. ஆனால், மூன்று சதவிகித அளவுக்கு அதிகப்பட்டிருக்கிறதா என்பது யோசித்துப் பார்க்கவேண்டிய விஷயம். மூன்று சதவிகிதம் தேசீய வருமானம் அதிகப்பட்டிருக்கிறதென்று வைத்துக்கொண்டாலுங்கூட, அந்த அளவுக்கு பொதுஜன வாழ்வில், சாதாரண விவசாய, தொழிலாள மக்களுடைய வாழ்வில் எதாவது மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறதா என்பதை அரசாங்கம் கொஞ்சம் யோசனை செய்து பதில் கூறக்கடமைப்பட்டிருக்கிறது.

"யதார்த்தத்தில் பார்த்தால் மக்களுடைய வாழ்க்கை உயர்ந்திருக்கிறதா என்றால் இல்லை. அதற்கு நேர்மாறாக வாழ்க்கைத் தரம் வீழ்ந்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. தொழில் வளர்ச்சி என்னும் போது அதிக லாபம் என்ற அடிப்படையில் செய்யப்படுகிறதேயொழிய தொழிலாளிகளுக்கு நன்மை செய்யக்கூடிய அளவில் செய்யப்படவில்லை என்பதை இந்தத் தரப்பிலிருந்து பல அங்கத்தினர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

"வருஷத்திற்கு ஐந்து சதவிகிதம் தேசீய வருமானத்தை உயர்த்துவது என்பது மட்டுமல்ல. சாதாரண மக்கள் முதல் சகல பகுதி மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய முறையிலே திட்டம் இருக்கவேண்டும். இந்தத் திட்டத்தின் பல அம்சங்களை வைத்துக்கொண்டு சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தைப் பார்க்கும்போது சென்ற ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஜனங்களுக்கு அதிக வரி போட்டிருக்கின்றார்கள். வாழ்க்கைத்தரம் குறைந்திருக்கிறது. வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. எந்த நோக்கங்களுக்காக ஐந்தாண்டுத் திட்டம் போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதோ அந்த நோக்கங்கள் பூராவும் வியர்த்த மாக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஐந்து வருஷ காலத்தில் ஆதாயம் அடைந்தவர்கள் பிரிட்டிஷ் மூலதனக்காரர்களும், ஏகபோக மூலதனக்காரர்களுமே தவிர, சாதாரண மக்கள் யாரும் ஆதாயம் அடையவில்லை. தொழிலாள, விவசாய மக்களும், மத்திய தர வர்க்கத்தினருடைய நிலைமையும் சரிந்திருக்கிறது. நேரம் இல்லாததால் நான் இதை அதிகம் விளக்க விரும்பவில்லை.

"இதற்கு என்ன காரணம்? மூன்று வருஷ காலத்திலே உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று எடுத்துக்கொண்டால் பல இனங்களில் தான் அதிகரித்திருக்கிறது. அதிகரிப்புக்குத் தக்க அளவு விலை அதிகமாகக் கிடைக்கவில்லை. விலை குறைந்திருக்கிறது. அதிக உற்பத்தி ஏற்படுகிறது. ஆனால், ஏகபோகக்காரர்கள் கொள்ளை லாபம் அடையக்கூடிய முறையில் அரசாங்கத்தின் கொள்கை அமைந்திருக்கிறது என்பதைத்தான் அரசாங்கத்தின் போக்கு எடுத்துக்காட்டுகிறது. இத்தகைய ஐந்து வருஷத் திட்டம் எவ்வளவு தூரம் உற்பத்தியைப் பெருக்குவதாகச் சொல்லப்பட்ட போதிலும், அதன் பலன் மூலகாரணமாக உள்ளவர்களுக்குப் போய்ச் சேராமல் மூலதனக்காரர்களுக்கே பயன்படக்கூடியதாக இருக்கிறது. தேசத்தின் செல்வத்தைப் பெருக்குகிறோம் என்றாலுங்கூட யதார்த்தத்தில் பார்க்கும் போது செல்வாக்கு உள்ளவர்களுக்கே முழுப் பலனும் போய்ச் சேரக்கூடியதாக அரசாங்கத்தின் கொள்கை இருக்கிறது. எதிர்ப்புச் சக்திகளுடைய கைதான் ஓங்கியிருக்கிறதேயொழிய உழைக்கும் மக்களுக்கு முழுப் பயனும் கிடைத்ததாகச் சொல்லுவதற்கு முடியாமல் சென்ற ஐந்தாண்டுத் திட்டம் நடைமுறையில் இருக்கிறது.

"இந்த ஐந்தாண்டுத் திட்டம் போடும்போதுகூட சென்னை சர்க்கார் 375 கோடி ரூபாய்க்குத் திட்டம் போட்டுக்கொண்டு டில்லிக்குப் போனார்கள். அங்கு நடந்த கூட்டத்தில் நம்முடைய சர்க்காரின் நிதி மந்திரி, முதல்

[Sri C. Kandasamy] [26th August 1955

மந்திரி, மத்திய சர்க்காரின் கீழ் இருக்கும் அதிகாரிகள், ஆகிய எல்லோரும் சேர்ந்து திட்டத்தைப் பரிசீலனை செய்தார்கள். திட்டக் கமிஷனிலுள்ளவர்கள் 215 கோடி வரையில் உள்ள திட்டத்தை அங்கீகரிப்பதாகக் கூறுகிறார்கள். மகாண அடிப்படையில் கொடுக்கவேண்டும் என்று நான் கூறவில்லை. பொதுவாக இன்றையதினம் அங்கிருக்கும் விஷயத்தைப் பார்க்கும்போது, 4,300 கோடி பப்ளிக் செக்டாருக்கு ஒதுக்கப்பட்டதிலே 2,250 கோடி ராஜ்ய சர்க்கார்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதிதான் ராஜ்ய சர்க்காருக்கும் கிடைக்கிறது. பாக்கி 2,050 கோடி ரூபாய் விஷயத்தில் மத்திய சர்க்கார்தான் ஆதிக்கம் வகிக்கவேண்டுமென்ற கொள்கை வைக்கப்படுகிறது. நிதி மந்திரி அவர்கள் கொடுத்த யதாஸ்தின் கடைசியில் புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. சுமார் 225 கோடி ரூபாய் நமது பிரதேசத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது.

" கன ரகத் தொழிலை ஆரம்பிப்பது விஷயமாக சொல்லப்பட்டிருக்கும் வார்த்தைகளைப் பார்க்கும்போது வேடிக்கையாக இருக்கிறது. அலுமினியம் பிளாண்ட் ஏற்படுத்துவது விஷயமாக ஒரு சிறிய கமிஷன் போடப்பட்டிருப்பதாகவும், அந்தக் கமிஷன் சேர்வராயன் மலையில் கிடைக்கும் பாக்ஸைட்டைக்கொண்டு அலுமினியம் உற்பத்தி செய்யலாமா என்பதைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஹெவி எலெக்ட்ரிகள் எக்விப்மெண்ட் உற்பத்தி செய்வதற்கு ஒரு தொழிற்சாலையை நிறுவுவதுபற்றி மத்திய சர்க்கார் முடிவு, செய்துவிட்டதாகவும், ஆனால், அந்தத் தொழிற்சாலையை எங்கே வைப்பது என்பதுபற்றியும், சென்னை ராஜ்யத்தில் அப்படிப்பட்ட தொழிற்சாலையை வைக்கலாமா என்பது ' கன்ஸிடரேஷன் ' கட்டத்தில் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. பைலட் பிளாஸ்ட் பர்னெஸ் ஒன்றை சேலத்தில் வைப்பது பற்றி ' ஞாபகத்தில் வைத்துக்கொள்ளப்படும் ' என்றும் சொல்லப்படுகிறது. காகித உற்பத்தித் தொழிற்சாலை, ஸல்பூரிக் ஆஸிட், ஜிப்ஸத்தைக் கொண்டு சூபர் பாஸ்பேட் தயார் செய்யும் தொழிற்சாலை பவர் அல்கஹால் தயாரிக்கும் தொழிற்சாலை ஆகியவைகளை ஆரம்பிப்பது விஷயம் தனிப்பட்டோருடைய முயற்சிக்கு விடப்போவதாகக் கூறப்படுகிறது. மிச்சம் என்ன இருக்கிறதென்று தெரியவில்லை. இரண்டு ஆயிரத்து இருநூற்று ஐம்பது கோடி பப்ளிக் செக்டாருக்கும், 2,050 ப்ரைவேட் ஸெக்டாருக்கும் என்று சொல்லும்போது இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மூலதனப் பொருள்கள், சாத்தியப்பாடுகள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்தமாக நமக்கு ஏதாவது கிடைக்குமா என்று சொல்ல முடியாத நிலைமையில் இருக்கிறது.

" பெரும்பாலும் இந்தத் திட்டத்திற்கு வேண்டிய பண வசதி எப்படி ஏற்படும் என்பதைப்பார்க்கும்போது, இந்தத் திட்டத்தினால் பூரண பலன் கிடைக்குமா என்பதைப்பற்றி சந்தேகப்படவேண்டியதாக இருக்கிறது. தொழில்களை அரசாங்கம் பப்ளிக் செக்டாருக்குக் கொண்டுவரும் என்று சொன்னால் மாத்திரம் அந்தத் திட்டங்கள் முற்போக்கு ஆகிவிடாது. சமீப காலத்தில் மத்திய சர்க்கார் இந்தத் தேசத்தில் இருக்கக்கூடிய முதலாளிமார்கள் சம்பந்தமாக அவர்கள் காட்டக்கூடிய மனப்பான்மையை பார்க்கும்போது திட்டங்கள் எப்படிப் போய் முடியும் என்பதை நம்மால் யூகிக்க முடியவில்லை. சென்ற இரண்டு ஆண்டுகளில் தொழில் வளர்ச்சிக்காக எவ்வளவு பெரிய பெரிய முதலாளிகளுக்கு சர்க்காருடைய பணம் வட்டியில்லாக் கடனாகக்கொடுக்கப்பட்டிருக்கிறது, என்று பார்க்கும்போது கடைசியாக எவ்வளவுதான் பப்ளிக் செக்டார் என்று பேசினாலுங் கூட சில ஏகபோகக்காரர்கள் பப்ளிக் செக்டாரில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய வகையில் கொண்டுபோய் விடுமோ என்று ஐயப்படவேண்டியதாக இருக்கிறது. எவ்வளவோ புள்ளி விவரங்கள் கொடுக்கமுடியும். டாடா கம்பெனியாருக்கு பத்து கோடி ரூபாயும், இந்தியன் ஸ்டீல் கம்பெனிக்கு 8 கோடி ரூபாயும், ஹார்வி மில்லுக்கு சில கோடி ரூபாயும் சகட்டுமேனிக்கு பொதுஜனப் பணத்தை எடுத்துக்கொடுப்பதாக இருக்கிறதேயொழிய அவ்வளவு, பணம் கொடுத்திருக்கும்போது அந்த முதலாளிகளிடத்தில் சர்க்கார் ஏதாவது பிடிப்பு வைத்திருக்கிறதா என்றால் இல்லை. சர்க்கார் தனிப்பட்டவர்களுக்கு கடன் கொடுத்து உதவுவதற்குத் தகுந்த அளவு

26th August 1955] [Sri C. Kandasamy]

அந்தத்தொழிலில் அரசாங்கம் பிடிப்பை ஏற்படுத்திக்கொண்டு, லாபத்தைக் கட்டுப்படுத்துவது கிடையாது. தனிப்பட்டவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவு சக்தி மத்திய சர்க்காருக்கோ ராஜ்ய சர்க்காருக்கோ இருப்பதாகத் தெரியவில்லை. பெரு முதலாளிகளைக் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அவர்களைப் பகைத்துக்கொள்ளாத வகையில் சர்க்காருடைய கொள்கை இருக்கிறதென்பதை நம்மால் பார்க்க முடிகிறது.

"இந்த நிலைமையில் 5,600 கோடி முதல் 6 ஆயிரம் கோடி ரூபாய் வரையில் வருவாயைத் தேடவேண்டியிருக்கிறது. எப்படி வருகிறதென்று பார்க்கும் போது ஐந்து வருஷத்தில் 700, 800 கோடி ரூபாய் வரையில் வரியின் மூலமாகவும், கடன் மூலமாகவும், அரசாங்கத்தால் நடத்தக்கூடிய தொழில்களின் லாபம் மூலமாகவும் வசூலிக்கவேண்டுமென்று இருக்கிறது. நம்முடைய ராஜ்ய வருமானம், மத்திய சர்க்கார் வருமானம், அது போக இருக்கக்கூடிய துண்டு விழக்கூடிய பகுதிக்கு அந்நிய நாட்டிலிருந்து உதவிகள் பெறவேண்டும். **Deficit finance** மூலமாக ஒரு அளவு. இப்படியாக இந்தத் திட்டம் ஒரு ஸ்திரமான அடிப்படையில் இயங்கக்கூடிய திட்டமாக இல்லை என்று எடுத்துக்காட்ட வேண்டியதாக இருக்கிறது.

"பல பாசனத் திட்டங்கள், மின்சார உற்பத்தித் திட்டங்கள் கொண்டு வரப்பட்டு அமுலுக்கு வருகிறது. இருப்பினுங்கூட இந்தத் திட்டத்தின் சகலவிதமான செலவுகள் விஷயத்தில் யார் மேல் வரி போடப்படுகிறது? யாருடைய வாழ்க்கைத் தரம் இன்னும் உயராமல் மேலும் மேலும் சரிந்து கொண்டிருக்கிறதோ அவர்கள்மீது வரிச் சுமை அதிகமாக்கப்படுகிறது. இந்த ஒரு கொள்கையின் அடிப்படையில்தான் ஐந்தாண்டுத் திட்டம் கொண்டுவரப்படுகிறது. ஆகவேதான் நிச்சயம் எங்களைப் போன்றவர்கள் ஒப்புக்கொள்ளமுடியாமலிருக்கிறது."

THE HON. SRI C. SUBRAMANIAM :—"இதுமாதிரி செய்திருக்கக் கூடிய திட்டங்களெல்லாம்—நீர்ப்பாசனத் திட்டம், மின்சார உற்பத்தித் திட்டம்—வரியை அடிப்படையாகக் கொண்டு நிறைவேற்றப்படவில்லை. கடன் வாங்கியும் வேறு விதமாகவும் கட்டப்பட்டிருக்கின்றனவே தவிர, வரிக்கும் இந்தத் திட்டங்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. முதலீட்டுத் தொகையிலிருந்து இம்மாதிரி திட்டங்கள் நிறைவேற்றப் படுகின்றனவே தவிர, அன்றாட வரியிலிருந்து நிறைவேற்றப்படுவதில்லை என்று கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்."

SRI C. KANDASAMY :—"இன்றையதினம் ஒரு அணைக்கட்டு கட்டிய பிறகு, ஒரு திட்டத்தைப் பூர்த்தி செய்த பிறகு, அதற்காக மீண்டும் ஜனங்களிடமிருந்து அதிகப்படியான வரி வசூல் செய்து இன்றையதினம் அரசாங்கம் செலவு செய்த தொகையை ஈடு கட்டிக்கொள்கிறது. என்பதை மறுக்கமுடியாது. முதலிலே வாங்கிக்கட்டுவது இல்லை. கட்டப்பட்டதற்குப் பிறகு, அபிவிருத்தி வரி போடப்பட்டிருக்கிறது. சர்ச்சார்ஜ் இரண்டு முறை போடப்பட்டிருக்கிறது. இம்மாதிரியான வகையில் இன்றைய தினம் செலவுகளை ஈடுகட்டுவதற்கு ஐந்து வருஷத்தில் மூன்று வரிகள் வந்திருக்கின்றன என்பதை மறுக்க முடியாது. கீழ் பவானிப் பாசனப் பிரதேசத்தில் உள்ள லட்சக் கணக்கான உழவர்கள், இம்மாதிரி வரி விதிப்பைத் தாங்க முடியாமல், 'என் இந்தத் தண்ணீர் வருகிறது?' என்று நினைக்கிறார்கள். நிலத்தைவிட்டு விடக்கூடிய அளவுக்குக்கூட வரி விதிப்பு இருக்கிறதென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வரி கூடாது என்பது அல்ல. வரி விதிக்கும் போது சக்தியுள்ளவர்களை சர்க்கார் தொட மாட்டார்கள். ஏழை விவசாயிகளைத் தொடக்கூடிய முறையில் வரி விதிப்புக் கொள்கையை இந்த சர்க்காருக்கு இருக்கும் வரை எந்த ஐந்தாண்டுத் திட்டம் போட்டு, எத்தனை ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் போட்டாலும், அதனால் பிரயோஜனம் இருக்கப்போவதில்லை. பப்ளிக் செக்டாரில் பல திட்டங்களை கொண்டு வரப்போகிறோம் என்று சொன்னாலுங்கூட, யார் கை மேலோங்கியிருக்கப் போகிறது என்பதைப் பார்க்க வேண்டுமென்பதற்காக நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

"எண்ணூறு கோடி ரூபாய் வரி என்று சொல்லப்படுகிறது. சென்ற ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த தேசத்தின் வருமானம், ஏழை மக்களின் வருமானம், உயரவில்லை என்பதைத் திட்டக்கர்த்தாக்களே ஒத்துக்கொள்ளுகிறார்கள். மக்களின் வாழ்க்கை வசதி குறைந்திருக்கிறதென்று ஒப்பு கொள்ளுகிறார்கள். இருபது ரூபாய்க்கு விற்ற தான்யம் 9 ரூபாய்க்குப் போகிறது. பதினொறு ரூபாய் நஷ்டத்திற்கு விற்கக்கூடிய நிலையில் உழவன் இருக்கிறான். வரிசையாகப் பார்க்கும்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கும்போது ஏற்கனவே சுரண்டப்பட்டிருக்கும் விவசாயிகளிடமிருந்து 75 சத விகிதம் உள்ளவரிகளிடமிருந்து இன்றைய தினம் 800 கோடி ரூபாயை ஈடு கட்ட வேண்டுமென்று சொன்னால், அது எப்படி முடியும் ? இது யாதார்த்தத்தில் எங்கே கொண்டு போய் விடும் என்று கேட்கிறேன்.

"போன ஐந்து வருட திட்டத்திலே **Central Excise duties** 123 கோடி ரூபாய் அதிகமாய் இருப்பதோடு முன்னால் இருந்த வரி இனங்கள் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அதே சந்தர்ப்பத்தில் வருமான வரியும், கார்ப்பரேஷன் வரியும் குறைந்திருக்கிறது. ஒரு பக்கத்தில் முதலாளி கொள்ளை லாபம் அடிக்கிறான். இன்னொரு பக்கத்தில் உறுஞ்சக்கப்படுகிறான். உற்பத்தி அதிகப்பட்டிருக்கிறது. ஆனால் விலை வாசி வீழ்ச்சி அடைந்திருக்கிறது. அதே சந்தர்ப்பத்தில் ஏழைகள் மீது வரி போடப்பட்டிருக்கிறது. பணக்காரர்கள் வரியிலிருந்து தப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு விதிக்கப்பட்டு வந்த வரியும் குறைந்திருக்கிறது. இதைக் வைத்துக் கொண்டு பார்க்கும்போது, 800 கோடி ரூபாய் வரி விதிக்கும்போது ஏன் சக்தியுள்ளவர்களுக்குப் போடக் கூடாதென்று கேட்கிறேன். ஏன் பிரிட்டிஷ் மூலதனத்தைக் கட்டுப்படுத்தக்கூடாது ? பிரிட்டனுக்குப்பணம் வெளியேற்றப்படுவதைத் தடுத்து, அந்தப் பணத்தை இந்தத் தேசத்தின் தொழில் வளர்ச்சியில் ஈடுபடுத்துவதற்குப் கட்டாயக் கடனாக ஏன் வசூலிக்கக் கூடாது ? இதை விட்டு விட்டு வரி விசாரணைக் கமிட்டியினுடைய சிபார்சின் அடிப்படையில் வரி வதிக்கவேண்டுமென்று ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் கூறுகின்றது என்று சொன்னால் நிச்சயம் ஐந்து வருஷத் திட்டம் தேசத்தை நாசப்படுத்தப் போகிறது. இந்த தேசத்திற்கு எந்த விதமான உருப்படியான உதவியும் செய்யப் போவதில்லை என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது.

"மக்களின் வாழ்க்கை உயரவேண்டும், விவசாயச் செல்வம் அதிகரிக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்த நாட்டை ஆண்டு வந்த காலத்தில் **1911**-ல் இருந்த தேசீய வருமானத்தை விட **1921**-ம் வருஷத்தில் நிச்சயம் இரண்டு மடங்கு அதிகரித்து இருந்தது. ஆனால் அதே சமயத்தில், அதே கால கட்டத்தில் மக்களுடைய வாழ்க்கைத்தரம் ஏற வில்லை. இப்படியிருக்க தேசீய வருமானம் அதிகரித்திருக்கிறது என்று சொல்வதில் பிரயோஜனம் இல்லை. வருமான அதிகரிப்பு பரந்த ரீதியில் அதிகரிக்கப்படுகிறதா ? ஏழை மக்களின் கையில் போய்ச் சேருகிறதா என்பதே பிரச்னை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்படும் போதும் இந்தக் கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை.

"அடுத்தப்படியாக, முக்கியமாக இந்தத் தேசத்தில் வெள்ளைக்காரர் மூலதனத்தைப் பிடுங்க முடியாது என்ற கொள்கையை அனுசரித்து வருகிறது. மகாத்மா காந்தி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் காங்கிரஸ் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளையும் பார்க்கும்போது, இந்தத் தேசத்தில் சுயராஜ்யம் வந்ததற்குப் பிறகு வெளிநாட்டாருடைய ஆதிக்கம் இருக்கக்கூடாது. அப்படி யிருப்பது தேசத்தின் தன்மானத்திற்கு உகந்தது அல்ல. இருந்தாலும்கூட யதார்த்தத்தில் பார்க்கும் போது இந்தத் தேசத்திலிருந்து ஆங்கிலேய வெள்ளைக்காரர் ஆதிக்கம் ஒழிய வேண்டுமென்று சொன்னோம், என்பதை மறக்கக்கூடாது. வெள்ளைக்காரர்கள் தொழில் செய்யப்படும். ஆனால், பெரிய முதலாளிகள், எப்படித் தொழில் செய்தாலும் அடையக்கூடிய லாபமானது தொழிலாளிகளுக்கும், இந்த நாட்டின் தொழில் வளர்ச்சிக்கும் பயன்படவேண்டும். அதற்கான வகை

26th August 1955] [Sri C. Kandasamy]

சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வெள்ளைக்கார மூலதனத்தைத் தொடாமல், வருஷா வருஷம் வருகிற லாபத்தை அவர்கள் வெளியேற்றிக் கொண்டிருக்கும்போது, அதைத் தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்காமல் மக்களின் மீது வரி போட்டு ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவது என்று சொன்னால், மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் நிச்சயம் பெரிய போராட்டம் நடக்கப் போகிறது என்று நான் சூசகமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இனிமேல் ஜனங்களிடமிருந்து ஒரு துளி சொட்டு வருமானத்தைக்கூட சர்க்கார் எதிர்பார்ப்பதற்கு முடியாது. அந்த அளவுக்கு மாகாணத்தில் இனிமேல் வரி போட முடியாது. இந்தக் கால கட்டத்தில் எப்படி வரி கொடுப்பார்கள் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக்கொண்டு வர விரும்புகிறேன்.

"அடுத்தப்படியாக கவனிக்கவேண்டியது விலைவாசி வீழ்ச்சிப்பிரச்னை. நடைமுறையில் இதைப்பற்றிப் பல விஷயங்களைச் சொல்லமுடியும். இந்த ஒரு வருஷ காலத்தில் ஏதோ விவசாயிகளுக்கு வருமானம் வந்ததென்று சொன்னாலும் விலைவாசி வீழ்ச்சி காரணமாக அவர்களுடைய வாங்கும் சக்தி குறைந்திருக்கிறது. உள்நாட்டு மார்க்கெட் மந்தமாக இருக்கிறதென் பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். 10-18 a.m.

"நம் ராஜ்யத்தில் உருக்குத் தொழிற்சாலையை அமைக்கவேண்டும் என்று சொல்கிறோம். இன்னும் பல தொழில்களையும் ஸ்தாபிக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் இந்தத் தொழில் அபிவிருத்தியில் ஏற்படக்கூடிய லாபத்தை அகில இந்திய உள்நாட்டு மார்க்கெட் ஸ்வீகரித்துக் கொள்கிறது. இந்த தேசத்தில் இருக்கக்கூடிய தொழில் சட்ரக்சர் எவ்வாறு இருக்கிறது? டாடாவும், பிர்லாவும் லாபப் பணத்தை தொழில் வளர்ச்சிக்கு உபயோகப் படுத்தாமல் பணத்தை **share market**-இல் போடுவதும் குறைந்த விலைக்கு ஏலம் போடுவதுமாக இருக்கிறார்கள். இதனால் தான் விலைவாசி வீழ்ச்சி ஏற்படுகிறது. விலைவாசி வீழ்ச்சி என்று குறிப்பிடும்போது ஏதோ ஒரு விவசாயிக்கு மாத்திரம் வரும் வருமானத்தை வைத்துக்கொண்டு சொல்லவில்லை. இந்த விலைவாசி வீழ்ச்சிப் பிரச்னை தேசத்தின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு கேந்திரப் பிரச்னை என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஏற்கெனவே மத்திய சர்க்கார் பொருளாதார ஆலோசகராயிருந்த ப்ரொபஸர் மாஹல நோபிஸ் சமீபத்தில் ஏற்பட்ட விலைவாசி வீழ்ச்சியினால் திருவாங்கூர் - கொச்சிக்கு ரூ. 60 கோடி நஷ்டம் ஏற்பட்டிருக்கிறதென்று சொல்கிறார். மணிலாக் கொட்டை வியாபாரத்தில் 35 சதவிகிதம் விலைவாசி வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறதென்றால் வாங்கும் சக்தியும் 35 சதவிகிதம் குறைந்திருக்கிறதென்று எடுத்துக்கொள்ளலாம். விலைவாசி வீழ்ச்சியைத் தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவது எப்படி? ஜனங்கள் கஷ்டப்படும்போது பெரிய முதலாளிகள் கொள்ளை லாபம் அடித்துக்கொண்டு போவதைத் தடுக்கவேண்டும். இல்லாவிட்டால் தேசத்தின் பொருளாதார நிலை குலைந்து விடும். விலைவாசி வீழ்ச்சியைத் தடுக்காவிட்டால் அது இந்த ஐந்து வருஷத் திட்டத்தின் அடிப்படையையே நாசம் செய்துவிடும். பலவிதமான பொருள்களும் 25, 30 **per cent** விகிதம் விலை வீழ்ச்சியை அடைந்திருக்கின்றன என்று அரசாங்கத்தின் **Commerce** டிபார்மெண்டே ஒத்துக்கொண்டிருக்கிறது. தனி நபர் கையில் சேரும் மூலதனத்தையும் லாபத்தையும் கட்டுப்படுத்துவதுதான் இந்த ஐந்து வருஷத்திட்டத்துக்கு அஸ்திவாரமாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கம்யூனிஸ்டு என்ற முறையில் அவர்களிடமிருந்து பணத்தைப் பிடுங்கிக் கொள்ளவேண்டுமென்று சொல்லவில்லை. நல்வாழ்வு வாழக்கூடிய அவர்களைப் பார்த்து பொறாமைப்படுவதினாலும் இவ்வாறு சொல்லவில்லை. மக்களுடைய வாங்கும் சக்தியை உயர்த்துவதற்காகத்தான் விலைவாசி வீழ்ச்சியைத் தடுக்கவேண்டுமென்று சொல்கிறேன்.

"கடன் வசதி விஷயமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கிருக்கக்கூடிய நிலைமையில் விவசாயிகள் மீதுள்ள கடன் சுமையையும் அவர்களுக்கு இருக்கக்கூடிய கடன் வசதியையும் யோசித்துப் பார்க்கவேண்டும். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த ஐந்து வருஷத்திட்டம் வருங்காலத்தில் விவசாயத்தைச் சீர்படுத்துவதற்காகவே நிர்ணயிக்கப்படுகிறது. விவசாயத் தொழிலாளிகள்தான் இந்த தேசத்தின்

[Sri C. Kandasamy] [26th August 1955

பெரும்பாலான மக்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆகையால் அவர்களுடைய வருமான உயர்வுதான் தேசத்தின் உயர்வு என்பதையும் நினைத்துக்கொண்டு இந்த அரசாங்கம் விவசாய அபிவிருத்திக்கு என்ன செய்யப்போகிறது என்பதைப்பற்றி யோசிக்க வேண்டியிருக்கிறது. சமீபத்தில் நிலவெளியேற்றத்தைத் தடுப்பதற்கு ஒரு சட்டம் வந்திருக்கிறது. அதைப் பார்க்கும்போது விவசாயிக்கு அது அதிக மாக நன்மை பயக்காது என்று தெரிகிறது. நாட்டுக்கு உண்மையில் நல்லது பிறக்க வேண்டுமென்ருல் அந்தச் சட்டம் போதாது. நிச்சயமாக அரசாங்கம் இன்று பிற்போக்கு சக்திகளால் இழுக்கப்படுகிறது. நிலப்பிரபுக் களின் ஆதிக்கத்தால் அரசாங்கம் இழுத்துச்செல்லப்படுகிறது.

"இப்போது ஸ்டேட் பாங்கில் யார் யார் இருக்கிருர்கள் ? சகலவித ஏக போகக்காரர்கள்தான் இன்று டைரக்டர்கள் என்றும், மற்றப் பதவிகளிலும் இருக்கிருர்கள். ஸ்டேட் பாங்கின் எதிர்காலம் எப்படி இருக்குமோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது. குறைந்தபக்ஷம் ரூ. 250 கோடியாவது ஸ்டேட் பாங்குக்கென்று ஒதுக்கி, பல இடங்களில் அதன் கிளேகளை வைத்து சாகுபடி காலத்திலாவது விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்குவேண்டிய பணத்தைக் கொடுத்து ஏழை விவசாயிகளைக் கைதூக்கிவிட்டால் நல்லது. அப்போதுதான் விவசாயி வாழ முடியும். அப்போதுதான் தேசத்தின் பொருளாதாரம் வளரும்.

"அடுத்தபடியாக விவசாயிகளுக்குக் கடன் வசதியளிக்க திட்டவட்டமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏற்கெனவே விவசாயிகள் அநியாயமாகக் கடனில் ஆழ்த்தப்பட்டிருக்கிருர்கள். ஆகையால் அநியாயமாக உள்ள கடனே நிவர்த்திக்கவேண்டும். அப்போதுதான் நம் தேசம் முன்னேற்ற மடைய, சுபிக்ஷமடைய அஸ்திவாரம் ஏற்படும் என்று நினைக்கிறேன்.

"நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்போகிருேம் என்று வாய் அளவில் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லே. நிலச்சீர்த்தத்தின் முதலா வது படிவந்தாய் விட்டது. இரண்டாவது படி வரப்போகிறது. முதல் படியைப் பார்க்கும்போது இரண்டாவது படி எப்படியிருக்குமோ என்று ஐயப்படவேண்டியிருக்கிறது. கம்யூனிஸமோ சோஷலிஸமோ என்று பயப் படாமல் இந்த நாட்டின் நன்மைக்கு எடுக்கவேண்டிய முதல் நடவடிக்கை **ceiling**-ஐ நிர்ணயிக்கவேண்டியது. அவ்வாறு **ceiling**-ஐ நிர்ண யித்து அதிகப்படியாக உள்ள நிலங்களே பொதுஜனங்களுக்கு வினி யோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்காகப் பெரிய அளவு க்கு நஷ்டஈடு கொடுப்பதென்ருல் இந்தச் சட்டத்தினுல் ஏற்படக்கூடிய நன்மையானது தீமையாகிவிடும். **ceiling** நிர்ணயித்தால்தான் தேசத்தில் **10, 15** வருஷத்தில் புனருத்தாரணம் ஏற்படும். நிலப் பிரபுக்களுக்கு ஜீவனும்சம் மட்டும் வழங்கக்கூடிய வகையில் திட்டம் கொண்டுவந்தால் தான் கிராமத்திலுள்ள மக்களின் வாங்கும் சக்தி உயரும். அவர்கள் முன்னேறவும் முடியும்.

"இந்தத் திட்டத்தை காங்கிரஸ்காரர்கள் கொண்டுவந்திருக்கிருர்கள் என்ற முறையில் ஆதரிக்கவோ, எதிர்க்கவோ விரும்பவில்லே. ஆனல் ஏற்கனவே இருக்கக்கூடிய நிலைமையை மறந்துவிட்டு ஒரேயடியாக இந்தத் திட்டத்தை ஆதரிப்போமென்று சொல்வதற்கில்லே. இந்தத் திட்டத்தில் பல குறைகள் இருக்கின்றன. சந்தேகத்திற்கு பல ஆஸ்பதங்கள் இருக்கின்றன. ஆவடி காங்கிரஸில் சோஷலிஸ்ட் பாணியில் சமுதாயத்தை நிருவப் போகிருேம் என்று சொல்லிவிட்டு சும்மாயிருந்தால் பிரயோஜனமில்லே. மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கும் தேசீய செல்வத்தை வளர்ப்பதற்கும் சர்க்கார் எந்த நடவடிக்கையை எடுத்தாலும் அதை நாங் கள் ஆதரிப்போம். அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் பெரு மூல தனக்காரர்களுக்கும், நிலப்பிரபுக்களுக்கும் ஆதரவாய் இருக்கும்படி நட வடிக்கை எடுத்தால் அதனுல் நாட்டுமக்களுக்கு நன்மை உண்டாகாது என்று சொல்லிக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக்கொள் கிறேன்."

26th August 1955]

* SRI A. RAMASWAMI TEVAR :—" As many Members are very eager to speak on this subject, may I suggest to the Deputy Speaker to fix the time-limit for each Member at ten minutes? "

DEPUTY SPEAKER :—" I want to reduce the time-limit from ten minutes to five minutes. There are as many as forty Members who are anxious to speak."

SRI S. DAIVASIGAMONEY :—" May I suggest that you may reduce the number of speakers instead of reducing the time-limit? The Plan covers a lot of subjects and five minutes for each speaker is quite inadequate."

DEPUTY SPEAKER :—" The list of speakers is prepared by the party leaders and not by the Chair. There are yet forty names in the lists with me. If the leaders of parties come to a decision and give me an agreed list, I have no objection to follow it."

SRI S. DAIVASIGAMONEY :—" If the party leaders—I cannot say, they are foolish enough—want to restrict the time to five minutes, it is deplorable."

SRI P. RAMAMURTHI :—" Considering the importance of the subject, I should think the Chair should realize that it will be impossible for a Member to make any point whatsoever within five minutes. I hope all the parties will see that the number of speakers is reduced and that the Members allowed to speak are given sufficient time to make some points at least."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Various points of view on the Plan as such have already been expressed. Besides, to-morrow the party leaders will be speaking on the Plan. If each speaker concentrates on the requirements of his constituency, I think five minutes will do. If certain Members want to bring to the notice of the Government the various requirements of their constituency, it is better to satisfy them and give them an opportunity to speak. We cannot go on extending the debate without any limit whatever. Considering the fact that as many as forty more Members want to participate in the debate, the time has got to be limited."

SRI A. GOVINDASWAMI NAYAGAR :—" We can have a night session to-day."

THE HON. SRI C. SUBRAMANIAM :—" It is easy for the hon. Member to suggest the holding of a night session. I have to be in this House from 8-30 a.m. to 1-30 p.m. and in the Council from 3 p.m. to 6 p.m. If there is to be a night session, I have again to come to this House. If I need not be present, it is all right. But I have a duty to perform; I have to sit down and listen. There is a limit to the physical strain that I will be able to undergo. I hope hon. Members will sympathize with me and not ask for extension of time."

10-30 a.m. * Sri S. SWAYAMPRAKASAM :—" Sir, a number of Members want to speak on this subject. Certain Members also feel that five minutes will be a very short period. Certain Members are prepared to speak during the night session. The Hon. the Leader of the House need not be present during the night session. Some other Minister may remain here during the night session. This is after all a Plan of the Government. Therefore, the number of speakers on the other side may be reduced and more opportunities given to the Members on this side."

Sri P. RAMAMURTHI :—" We can have a night session, Sir."

DEPUTY SPEAKER :—" If the Hon. the Leader of the House has no objection, I do not stand in the way."

The Hon. Sri C. SUBRAMANIAM :—" If the hon. Members do not insist that I should be present here, I have absolutely no objection to have a night session. We may start at 8-30 p.m. and go on till 11-30 p.m. We may have a sitting for three hours and all the hon. Members may have an opportunity to speak. Therefore, we may stick to the 10 minutes' time-limit. Even if no Minister is present here during the night session, the Whip will be here. He will take notes and pass them on to us."

An Hon. MEMBER :—" It is not worth having a night session if the Ministers are not present then. It is rather better to extend the debate by one day."

Sri P. RAMAMURTHI :—" We shall have a night session whether the Ministers are present or not. We expect the Ministers will be able to attend it. If not, we expect that they will go through the reports. If they do not go through the reports, it does not matter." (Laughter.)

Sri A. RAMASWAMI TEVAR :—" I most earnestly request the Hon. the Leader of the House that he may please ask the Minister for Local Administration to be present here during the night session."

* Sri S. VENKATRAMA AYYAR :—" Mr. Deputy Speaker, Sir, after even hearing the criticism levelled by the hon. Member Sri Kandasami coming from my own district, I feel that there is sufficient matter for satisfaction in that the Plan is so prepared as to envisage an all-round and integrated development in all directions, namely, agriculture, education, irrigation and electricity and, for the matter of that, animal husbandry also. Due importance has been given in the Plan to the development of agriculture and animal husbandry also. As a matter of fact, when I read the Plan, I find that a larger amount is provided therein, even more than the amount allotted in the First Plan for agriculture and animal husbandry. With reference to this aspect, I would like to suggest that so far as agriculture is concerned, the agricultural research station at Pattukkottai in Tanjore district

which caters to the needs of all the agriculturists in Tanjore district may be upgraded with a Superintendent in charge with independent powers as is being done in Aduthurai in the same district. We have made due representation in this matter with reference to the upgrading of the Research Station for agriculture and animal husbandry to the Union Minister for Food and Agriculture when he happened to visit Pattukkottai taluk recently. He also assured us that he would consider the matter favourably, having seen the Livestock Farm at Orthanad and the Agricultural Research Station at Pattukkottai. With reference to animal husbandry, the station started at Orthanad will practically cater to the needs of the entire State and not only for Tanjore district as it is situated in a wide area of about 300 to 400 acres of land. It was stated recently and it has to be upgraded. Murray buffaloes, Sindry cows and Umbalacheri breed are there. But they are in thatched sheds. Pucca buildings have to be constructed for housing them and the Livestock Farm has to be developed suitably.

" Coming to local problems without any regional bias, because it is an integrated development, considering the requirements of the entire State—since the matter is profitable to the whole State, I would like to suggest that so far as the coconut palntation is concerned, main attention is paid to the West Coast. I see from the plan, that the Indian Central Coconut Committee have prepared a draft scheme which was duly approved by the Government of India and that it applies solely to the West Coast, or I would submit for the information of the Government and the hon. Members of this House that next to West Coast, Tanjore district is having a larger area under coconut cultivation. The area is in Muthupet, Thambikottai, Adirampatnam and extends along the coastal line. There is a large plantation there. I may say that two-thirds of the coconut plantation of Tanjore district are in Pattukkottai division. That has to be developed. I would submit that proposals may be formulated for starting a coconut research station at Pattukkottai or in the coastal area of Adirampatnam where there is a large plantation. For that, it would be enough if at least a coconut research station is started there so that proper seedlings may be supplied. There will be a Research Superintendent who will be able to give sufficient information and instructions to the agriculturists who depend upon coconut plantations. In that connection, a member representing the coconut plantation area of Pattukkottai in Tanjore district may be nominated to the Indian Central Coconut Committee.

" Due attention has been paid in the Plan to the production of a larger quantity of fish. Fishing industry has been recognised as one of the most important industries. There is a large coastal area extending from Kodikarai, Muthupet and Adirampatnam up to Thondi. The same long coastal line may be made use of for starting a fishing industry, giving all facilities to the fishermen who number about 30,000. There is a large area extending from Rajamadam up to Sethumahasamudram usually called Sethupettai.

[Sri S. Venkatrama Ayyar] [26th August 1955

10-40 a.m. That deserves special attention. I have also made special representation to the Government to give all facilities to the fishermen of that locality to supply them nets, give them housing facilities and to take up the construction of a road because there are no transport facilities there. They are coming in cycles taking heavy loads in their cycles and travel a great distance, Why, for the matter of that, they come up to Tanjore to market their commodity. That is why I say that Sethupettai must be taken up by the Highways Department immediately. It has to be metalled and bridges have to be constructed over the Agniyar and other places. This is a matter which requires urgent attention by the Government. The work must be taken up immediately in the interests of the fishermen-folk in that area.

" I would like to submit another matter for the consideration of the Government. The Plan itself is so designed as to help the backward areas and develop them. The population basis is not the only criterion. The Planning Commission of the Government of India has taken other factors also into consideration. The Planning Commission is very anxious to develop the backward areas and to give sufficient attention to them. In the Tanjore district, which is said to be the Granary of South India and a fertile deltaic area, there are a number of villages which are entirely backward. For instance, Arantangi taluk deserves special consideration. It is a very backward area and due consideration and attention should be first paid in the matter of communications. I would even say that greater attention should be paid to communications than to the food problem or any other. Because, it is an area where there are no facilities for easy communication. There is need for a number of bridges over jungle-streams. For instance, Pattukkottai division abounds in jungle streams and they have to be properly bridged. Across the Vellar in Arantangi taluk, a bridge has to be constructed. Otherwise, the people of the taluk will find it difficult to go either to Pudukkottai, Ramanathapuram district or even to Pattukkottai side. Greater attention should therefore be paid to the improvement of communications in that area. The Gandharvakottai area deserves attention in this regard. The entire area is a dry area so to say without any irrigation facilities. Adequate irrigation facilities should also be provided by cross-bunding some of the jungle-streams. If this is done, it will be possible to provide some irrigation facilities to the people of that area.

" Sir, I have suggested to the Government to provide a railway link between Tanjore and Pattukkottai. I have information from the Madras Government that this is one of the proposals submitted by the Madras Government to the Central Government. But, this has not been given due priority. I think it is the 8th item or so out of the 13 lines that have been recommended to the Central Government. I would request the Government to give due priority to this proposal. The area is in the heart of the

26th August 1955] [Sri S. Venkatrama Ayyar]

Cauvery-Mettur Project area. There is no railway communication from the Orthanad side to Ramanathapuram district and other neighbouring deficit areas. This is a very important matter and I think it is also engaging the attention of the Central Railway Ministry. I have only to request that due priority may be given to this proposal.

" Sir, I would like to submit that the vast tracts of dry lands in some of the taluks of Tanjore district may be brought under cultivation by constructing some dams across the jungle streams and thus making available sufficient water. We must somehow utilise the jungle streams profitably. Thank you. Sir."

Sri E. L. RAGHAVA MUDALIAR :—" Mr. Deputy Speaker, the Plan has been framed carefully taking all the relevant factors into consideration, viz., the available resources, capital, technical skill, the needs of the country and also the consequences, undesirable consequences like inflation, depression, etc. There may be difference of opinion with regard to the Plan framed and so many theories and arguments will be propounded in favour of one view or another. Instead of wasting time in discussion alone, it is better to act one way or the other and it is in that light, I think, the Government have formulated this Plan. Now, let us see what best we can get out of it.

" Sir, certain heavy industries for the State have been proposed. After all, as pointed out by the hon. Member Sri C. Kandasamy, there is no certainty about the heavy industries. The wording used is very uncertain and vague. Therefore, I urge upon Government to see that at least two heavy industries—one, the Steel Pilot Plant at Salem and the other heavy electrical manufacturing industry for the State are started, especially in view of the fact that the Neiveli Project is conditioned by so many factors and it is preceded by a number of big 'Ifs'. As far as possible, the needs of the State must be met with the things produced in the State itself. Sir, the success of any industrial programme depends on the quality of labour, both skilled and unskilled, available in the State. Again, the condition of labour and the quality of labour depends upon the educational facilities provided for them. So, I request the Government to see that at least their educational programme is not touched. The modest programme that they have made in the educational field must be pushed through. Even in this, the quality of education imparted to the people depends upon the conditions of teachers. The teachers must be contented and they must not have worries about their future and should not be faced with the problem of daily existence. The scales of pay proposed for them should be maintained intact. These proposals may be made uniform to all grades of teachers. Further, it is said that there is a great programme for primary education. Between the ages of 11 and 14, there is a gap and if the pupils are allowed to go back to their villages in this gap, they will relapse into illiteracy again. Therefore, in this period, they must be taken proper care of. Again, there is a big

gap in the higher elementary education programme of the Government. I see that the backward Malabar district is provided with only 615 higher elementary schools. I should say in my district, which is also backward, the number of the schools provided for is very low. In providing these higher elementary schools, we must see that they are properly distributed. For about 10 or 15 primary schools, one higher elementary school must be situated in a centrally-situated place so that it may be easily accessible from all places.

" Sir, next to education, the health of labour is important. It is very necessary that the labourers must be kept in very healthy condition. On this aspect, I will have to state that we must spend more on the preventive side rather than on the curative side. Every rupee spent on the preventive side will pay very high dividends by way of saving on the curative side. I suggest that there should be a periodical and national health survey. Of course, there will be the usual argument that the Government do not have sufficient technical personnel to do that. Sir, it is a well-known fact that medical education is largely subsidised by the State. All those persons who have got proper training from the Government medical colleges and institutions are morally bound to serve the public at least for a few days in a month. These people may be made to do this health survey work so that the labourers who are suffering from preventible disease can be examined, their disease detected and proper treatment given. If this is done, we can avoid waste of labour.

" Sir, the great cause for diseases in our State is defective water-supply and unhealthy living conditions in urban areas. Of course, it is gratifying to note that all the municipalities will be provided with protected water-supply under the Plan. But the municipalities, with their most inelastic source of revenue and the growing demand for amenities by the public, will not be able to meet the situation. In addition to these, they are burdened with all the expenditure connected with the heavy elementary education and secondary education programmes.

10-50 a.m. " These two items of expenditure are a great drain on all the municipalities and they are not able to make both ends meet. Therefore, either the Government should give them more liberal elementary education grants or they must be given other sources of revenue. As the Government have recently done by levying a surcharge on land revenue to provide finances to panchayats, they must find out some other sources of revenue for the municipalities. Otherwise living conditions in the urban areas cannot be improved.

" I see the Government are taking a very complacent view with regard to the food position. Of course though there may be room for complacency on the quantitative side, on the qualitative side there is no room for satisfaction at all. Unless the total production of milk and eggs and other nutritious food are just sufficient for the entire population we cannot take a complacent

26th August 1955] [Sri E. L. Raghava Mudaliar]

view of the food position in the state. To attain self-sufficiency in the supply of nutritious food we must see that poultry farming and dairying are started on a large scale in the State. These should be started not by private individuals or organisations but these should be subsidiary to agriculture. It is a well known fact that the economy of the peasant is a very unbalanced one and his whole fortune is only a gamble with monsoons and pests. He has to go on spreading and labouring from sowing to harvest. If the crop survives the diseases and pests and the drought and if the market does not fall, he may get a small margin to maintain himself and his family throughout the year. Therefore it has been very often said that he must be given a subsidiary occupation to supplement his income from land. It has been suggested that this can be done by taking to dairying and poultry farming. Of course he may own one or two heads of cattle and fowls. But he is not able to market the produce properly. Therefore high yielding cows and good poultry should be supplied to the farmers at subsidised rates and marketing facilities should be afforded to him by co-operative organisations which should collect the produce and market them in places where there is demand for them.

"Coming to small scale industries, I have been very often saying that in most of the villages where there is supply of electricity every farmer and peasant has a five H.P. motor which is working for about four or five hours daily and remains idle for about 16 to 20 hours during the season and during the off season it is entirely idle. It will be better to find out and evolve some small scale industry which will utilise this power and give some profitable trade or occupation to the small peasant or farmer.

"Sir, coming to finance, the Hon. the Leader of the House has been suggesting that taxation is the only method of finding the finances required for the plan and therefore the opposition should not grudge taxation proposals of the Government to meet the growing needs of the plan. I would suggest that it is against well known canons of taxation which has been evolved from experience. It is said that current expenses must be met by current taxation and long term expenses on capital works, especially paying works, should be met by floating loans repayable over a long period of years. Because such schemes benefit future generations, the future generations must be made to pay. Therefore I submit that it is wrong to spend on capital works money obtained by current taxation. With these words I thank you, Sir, and resume my seat."

*Sri A. RAMASUNDARAKARUNALAYA PANDIAN :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே! இந்த சென்னை ராஜ்ய இரண்டாவது ஐந்தாண்டு திட்ட நகல் மீது நடைபெறும் விவாதத்தில் நானும் பங்கு கொண்டு இந்தச் சமயத்தில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 10-55 a.m.

"திருநெல்வேலி ஜில்லா சங்கரன் கோவில் தாலூக்காவில் நீண்ட நாட்களாக ஆவலுடன் எதிர் பார்க்கப்பட்டு வரும் கரியாறு அணைக்கட்டு திட்டம் இந்த 2-வது 5-ஆண்டு திட்டத்தில் இடம் பெருதது கண்டு மிகவும்

வருத்தமடைகிறேன். அப்பகுதியில் உள்ள மக்களும் இதைக் கேள்விப் பட்டு மிகவும் வருத்தமடைவார்கள் என்பது திண்ணம். நீண்ட கால மாகவே இந்தத் திட்டப் பிரச்னையைக் குறித்து பன்முறை இச் சபையில் எடுத்து பேசப்பட்டு வந்திருப்பதுடன், ஒரு தீர்மானமும் அது சம்பந்தமாக கொடுக்கப்பட்டிருக்கிறது. அத்தீர்மானம் இன்னும் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்படவில்லை. தீர்மானத்தின் நகலை கனம் மந்திரி அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று கருதுகிறேன். எனினும், இந்தக் கரியாறு திட்டம் என்ன காரணத்தினால் 2-வது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் பெற வில்லை என்பது எனக்குப் புலப்படவில்லை. திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத் திற்கும், நமது சென்னை ராஜ்யத்திற்கும் இடையே இந்த ஆறு அகப்பட்டு கொண்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இரு ராஜ்யங்களின் சம்மத மும் கொண்டுதான் இத்திட்டத்தை 2-வது 5-ஆண்டு திட்டத்தில் சேர்க்க முடியும் என்றும் நிறைவேற்ற முடியும் என்றும் கருதுகிறார்கள். ஆனால் அது நன்மைக்கு அல்ல என்று நான் சந்தேகப்படுகிறேன். ஏனெனில் பம்பை யாறு திட்டம் 2-வது 5-ஆண்டு திட்டத்தில் இடம் பெற்று இருக்கிறது. கரியாற்றைப் பற்றிய என்ஜினியரிங் டிபார்ட்மெண்டு ரிப்போர்ட்டை கனம் மந்திரி அவர்கள் பார்த்தால், முழு விவரங்களும் தெளிவுபடும். கரியாற் றின் முழுபாகமும் சென்னை ராஜ்ய எல்லைக்குள்தான் இருக்கிறது என்று கூற வேண்டும். ஏனெனில் அந்த ஆற்றில் கால்பாகத்திற்குகூட குறைவான அளவுதான் திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய எல்லைக்குள் இருக்கிறது என்று அபிப்பிராயப்படுகிறார்கள். அந்த ஆற்றில் செல்லும் தண்ணீர் முழுவதும் சென்னை அரசாங்கத்திற்கு சொந்தமானதுதான் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். **Catchment area** அணைக்கட்டு கட்டவேண்டிய பிரதேசம் தண்ணீர் தேங்கி நிற்கும் பிரதேசம் ஆகியவை சென்னை ராஜ்ய எல்லைக்குள் அடங்கியுள்ளன. இந்த கரியாறு திட்டத்தை நிறைவேற்ற சுமார் 180 லட்ச ரூபாய்தான் செல வாகுமென்று என்ஜினியர்கள் மதிப்பீடு செய்திருக்கிறார்கள். இவ்வளவு சிறுதொகை செலவில் ஏற்படக்கூடிய திட்டத்தை ஜனநாயக சுதந்திர சர்க் கார் ஏன் கைவிட்டு விட்டார்கள் என்பதுதான் தெரியவில்லை.

" பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளை செய்து கொடுப்பதுதான் சுதந்திர ஜனநாயக சர்க்காரின் நோக்கம் என்று பிரசாரம் செய்கிறார்கள். அந்த முறையில் மக்களுக்கு செய்யவேண்டிய சௌகரியங்களைச் செய்து கொடுப்பதற்கு ஏன் சர்க்கார் செய்கையில் தாமதமும் பாரபட்சமும் காட்டு கின்றனர் என்பது புரியவில்லை. மக்களுக்கு முதல் தேவை தண்ணீர். அந்த தண்ணீர் வசதி அதாவது, நிரந்தர நீர்ப்பாசன வசதி செய்யப்பட் டால்தான் விவசாயம் தழைக்கும். உணவு உற்பத்தி பெருகும். உற்பத்தி பெருகினால் உணவு பொருட்களின் விலை குறையும். ஏழை மக்கள் மலிந்த விலையில் சௌகரியமாக உணவுப் பொருட்களை வாங்கி உண்டு, மகிழ்ச்சியுடன் வாழ முடியும். ஆகவே, இந்த நோக்கம் ஈடேற, நிரந்தர நீர்ப்பாசனம் தேவையான ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள திட்டத்தை யும் குறிப்பாக சங்கரன்கோவில் தாலூக்காவில் உள்ள கரியாறு திட்டத் தையும் 2-வது 5-ஆண்டு திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்று சர்க்காரை அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" திருநெல்வேலி ஜில்லா, சங்கரன்கோவில் தாலூக்காவை பொருத்த வரையில் கரியாறு திட்டத்திற்கு பதிலாக, பம்பையாறு திட்டம் இந்த 2-வது 5-ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இந்த பம்பையாற் றின் முழுபகுதியும் திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய எல்லைக்குள் இருக்கிறது. அதன் உற்பத்தி ராஜபாளைய நகரத்துக்கு மேற்கே உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் மேற்கு பாகத்தில் ஆரம்பிக்கிறது. இந்த பம்பையாறு திட்டத்தைப்பற்றிய பரிசீலனையுங்கூட இன்னும் செய்யப்படவில்லை. ஆனால் கரியாறு திட்டமோ, வெகு காலத்திற்கு முன்பே பரிசீலனை செய்யப்பட்டி ருக்கிறது. இந்த பம்பையாறு திட்டத்தால் சங்கரன்கோவில் தாலூகாவுக்கு ஒரு பிரயோஜனமும் ஏற்படாது என்று கருதுகிறேன். ஏனெனில், சங்கரன் கோவில் நகரமும் ராஜபாளைய நகரத்திற்கு தெற்கே சுமார் 20 மைல் தூரத்தில் மேட்டுப் பிரதேசத்தில் இருக்கிறது. கரியாறு திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டு அது நிறைவேற்றப்பட்டால்தான் சங்கரன்கோவில் தாலூகா வுக்கு பிரயோஜனம் ஏற்படும் என்பதைத்தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்பையாறு திட்டத்தால் ராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காக்களுக்குத்தான் நன்மை ஏற்படும். நான் இப்படி கூறுவது பம்பையாறு திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டாமென்று குறிப்பிடுவதாக சர்க்கார் கருதக்கூடாது என்று சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அந்த பம்பையாறு திட்டத்தையும் கட்டாயம் நிறைவேற்ற வேண்டியது அவசியமாகதான் இருக்கின்றது. அப்பொழுது தான் மேலே குறிப்பிட்ட ராமநாதபுரம் ஜில்லாவில் ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர் தாலுக்காக்கள் வளம் அடையும். பம்பையாறு திட்டத்தால் சங்கரன் கோவில் தாலுக்காவும் வளமடையும் என்று சர்க்கார் உறுதி கொடுத்தால் கிரியாறு திட்டத்தை வற்புறுத்தவில்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன். பம்பையாறு திட்டத்தால் சங்கரன்கோவில் தாலுக்காவை வளமடைய செய்வதாக இருந்தால் சர்க்காருக்கு எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக்கொள்ளுகிறேன். பம்பையாறு திட்டத்தால் சங்கரன் கோவில் தாலுக்கா வளமடைய முடியாது என்பதை சர்க்கார் கருதினால் இத்திட்டம் ராமநாதபுரம் ஜில்லாவிற்கென்றும் அதே சமயத்தில் திரு நெல்வேலி ஜில்லா சங்கரன்கோவில் தாலுக்காவுக்கு கிரியாறு திட்டத்தை யும் தனித்தனியே நிறைவேற்றினால்தான் சங்கரன்கோவில் தாலுக்கா வளமடையும் என்பதை தெரிவித்துக்கொள்ளவதுடன், இத்திட்டத்தை எவ்வளவு செலவானாலும் அதற்காக சர்க்கார் கவலைப்படாமல் அத்தா லுக்கா மக்களின் நலனைக் கருதி நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று மீண்டும் ஒருமுறை சர்க்காரை கேட்டுக்கொள்ளுகிறேன்.

"நமது சர்க்கார் பஞ்ச நிவாரண வேலைகளுக்கு லட்ச கணக்கில் கோடி கணக்கில் பணம் செலவுசெய்கிறார்கள். நமது சர்க்கார் அந்த இனத்தில் வட்டிக்கணக்குப் பார்ப்பதில்லை. ஆனால் நிரந்தர நீர்ப்பாசன திட்டங்களுக்கு பணம் செலவிடும்போது வட்டிக்கட்டுபடியாகுமா என்று கணக்கிடுவது மிகவும் வருந்தத்தக்க விஷயமாகும் என்று குறிப்பிட விரும்புகிறேன். நீர்ப்பாசன வசதியற்ற பிரதேசங்களில் மக்கள் எப்படி குடியிருக்க முடியும்? இதை சர்க்கார் ஆராய்ந்து ஒன்று தண்ணீர் வசதியுள்ள பிரதேசங்களில் இந்தப்பகுதி மக்களை குடியேற்ற வழி வகை செய்யவேண்டும். அல்லது சகரா பாலைவனம் போன்ற இந்தப் பகுதிக்கு தண்ணீர் வசதி செய்து தர வேண்டும். இவற்றை செய்வது சர்க்காரின் முதல் கடமையாகும். தட்டி கழிக்கக்கூடாதென்று கட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"இன்னும் சில வார்த்தைகள் வரண்ட பிரதேசமான சங்கரன்கோவில் தாலுக்காவைபற்றி கூற விரும்புகிறேன். சங்கரன் கோவில் தாலுக்கா மக்கள் மிகவும் பிற்போக்கான நிலைமையில் வாழுகிறார்கள். ஏனெனில் அங்கு அவர்களுக்கு எந்தவிதமான தொழில் படிப்பு வசதியும் கிடையாது மேலும் மருத்துவ வசதியும் மிகவும் குறைவு. சென்னை ராஜ்யத்தில் இதர பகுதிகளில் நிறைய மருத்துவ வசதி இருக்கும்போது, சங்கரன் கோவில் தாலூக்காவிலும் அவற்றிற்கு இணையான வசதிகள் ஏற்பட வழி செய்வது அவசியம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன். உதா ரணமாக, நலிததல்லூர் பிர்க்காவில் ஒரு ஹைஸ்கூல்கூட கிடையாது. அங்கு வசிப்பவர்களெல்லோரும் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். இங்கு மின்சார வசதியும், போக்குவரத்து, ரோட்டு வசதியும், நீர்ப்பாசன வசதியும் கிடையாது. அப்பகுதி வளமடைவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று சர்க்காரை கேட்டுக்கொள்கிறேன். சங்கரன்கோவில் தாலுக்காவில் மக்களின் முக்கிய தொழில் விவசாயம், நெசவு. ஆகையால் மாதிரி விவசாயப் பண்ணைகளும் மாதிரி நேசவு தொழிற்பள்ளியும் அமைக்கப்பட்டவேண்டும். விவசாய தொழிலாளர்களின் நன்மையும் நெசவுத் தொழிலாளர்களின் நன்மையும் நல்லமுறையில் பாதுகாக்கப்பட்டவேண்டும்.

"2-வது 5 ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு இலாகாஅபிவிருத்திக்கென்று குறிப்பிட்ட தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி ஒதுக்கப்பட்டி ருக்கும் தொகையில் குறிப்பாக நீர்ப்பாசன அபிவிருத்திக்கு அதிகப் பணம் ஒதுக்கப்பட்டால்தான் நாடு முன்னேற முடியும், மக்கள் சுபிட்சமாக வாழ முடியும் என்பதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படு

கிறேன். சங்கரன் கோவில் தாலுக்காவைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசன வசதி எப்படி அமைந்திருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். சங்கரன்கோவில் தாலுக்கா மேற்கு தொடர்ச்சி மலையில் கிழக்கு சரிவில் அமைந்திருக்கிறது. அங்கு ஜீவ நதியே கிடையாது. மழை காலங்களில் நீர் சிற்றாறுகளில் ஓடி ஏரிகளில் பாய் கின்றது. ஆகவே ஏரிப்பாசனத்தின் மூலம்தான் விவசாயம் நடைபெறு கின்றது. ஜீவ நதி எதுவும் இல்லாத காரணத்தால் விவசாய மக்கள் மழையை பெரிதும் நம்பி கஷ்டப்படுகின்றனர். எக்காலமும் சங்கரன் கோவில் தாலுக்கா மக்கள் மழையை நம்பி வாழ முடியாது என்பதை சர்க்கார் உணர்ந்திருந்தும் அப்பகுதிக்கு நிரந்தர நீர்ப்பாசன வசதிக்கு வழி வகை செய்ய வில்லை. சங்கரன்கோவில் தாலுக்காவுக்கு நிரந்தர நீர்ப்பாசன வசதி ஏற்பட வேண்டுமென்றால், இந்த கிரியாறு திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத்தான் முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த கிரியாறு திட்டத்தின் மூலமாக முதல் போகம் 10,000 எக்கரும், இரண்டாவது போகம் 10,000 எக்கரும் ஆக 20,000 எக்கர் விவசாயம் செய்ய முடியும், என்பதை சர்க்கார் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன். ஆகவே, சர்க்கார் வட்டிக்கணக்கு பார்க்காமல் பாரபட்சம் காட்டாமல் இந்த திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றவேண்டுமென்று மறுமுறையும் மன்றாடி சர்க்காரை கேட்டுகொள்கிறேன். இந்த திட்டத் திற்காக சங்கரன் கோவில் தாலுக்காவில் உள்ள மக்கள் தங்களால் இயன் றளவு உதவித்தொகை **Contribution** சர்க்காருக்கு கொடுக்க தயாரா யிருக்கிறார்கள். ஆகவே கிரியாறு திட்டத்திற்கு சர்க்காரால் செலவிடப் படும் மொத்த தொகைகளில் மக்கள் உதவி தொகையை 30 வருடங்களில் அந்தப்பகுதி மக்களிடமிருந்து வசூல்செய்து கொள்ளலாம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்ளுகிறேன். மேலும் என்ன காரணத்தை கருதி கிரியாறு திட்டம் இந்த 2-வது 5-ஆண்டு திட்டத்தில் சேர்க்கப்படவில்லை என்பதையும் சர்க்கார் அந்தப்பகுதி மக்களுக்கு தெரி வித்தால்தான் மக்களுக்கு சர்க்காரின் மீது மனக்கசப்பு ஏற்படாமல் இருக் கும். நீர்ப்பாசன வசதி செய்யப்பட வேண்டுமென்று நீண்ட காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கும். சங்கரன்கோவில் பகுதி மக்களுக்கு சர்க்காரால் உதவி செய்ய முடியவில்லையென்றால் அப்பகுதி மக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை சர்க்கார் உணரவேண்டும் என்பதை தெரி விக்கிறேன். தற்போதுள்ள சட்டசபையில்தான் இது குறித்து பல தடவை கள் வற்புறுத்திருந்தும் சர்க்கார் அதன்மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென்றால், அந்தப் பகுதி பிரதிநிதிகள் சட்டசபையில் இருந்தும் சர்க்காரை ஆதரித்தும் என்ன பிரயோசனம் இருக்கின்றன ? சர்க்கார் பிரிதிநிதிகளின் முறையீட்டுக்கு செவி சாய்க்கவில்லையென்றால், அப்பகு திக்கு பிரதிநிதித்வம் கொடுக்கவேண்டியதில்லை என்றே எண்ணுகிறேன்.

"நமது சுதந்திர சர்க்கார் 5 வருடங்களுக்கு ஒருமுறை 5 வருட திட் டங்கள் தயாரிக்கிறார்கள். அத்தகைய திட்டங்களில் கிராம பகுதிகளை அபிவிருத்தி செய்ய கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும். இப் பொழுது கிராமங்களின் நிலைமையைப் பார்த்தால் சுதந்திரம் வருவதற்கு முன்பு எந்த நிலைமையில் இருந்தனவோ, அதே நிலைமையில்தான் இருந்துகொண்டிருக்கின்றன. சுதந்திரத்துக்கு பின்பும் கூட கிராமங்கள் அபிவிருத்தியடைவதில்லை. அவற்றை முன்னேற்றமடைய செய்யவேண்டு மானால், தற்போது இருக்கிற நிலைமையில் இன்னும் 100 ஆண்டுகளாவது பிடிக்கும் என்றுதான் நான் கருதுகிறேன். இருபது ஆண்டு திட்டங்களை தயாரித்தால்தான் கிராமங்களை நகரங்களுக்கு ஒப்பான நிலைமையில் கொண்டு வர முடியும் என்று எண்ணுகிறேன்.

"அடுத்ததாக, சங்கரன்கோவில் டவுனில் குடிதண்ணீர் வசதி ஏற்படு த்த அங்குள்ள பஞ்சாயத்துபோர்டு தண்ணீர் வரி ஏற்படுத்தி பணம் சேகரி த்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பணத்தை மானியமாக சர்க்காருக்குக் கொடுக்க அவர்கள் தயாராயிருக்கிறார்கள். ஆகவே, புளியங்குடிக்கும் சங்கரன்கோவிலுக்கும் சேர்த்து குடிதண்ணீர் வசதி செய்து தரவேண்டு மென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இறுதியாக நான் கூற விரும்புவதெல்லாம் திருநெல்வேலி ஜில்லாவில் பொதுவாக எல்லா பிர

26th August 1955] [Sri A. Ramasundarakarunalaya Pandian]

தேசங்களும் செழிப்பானவை என்றாலும், குறிப்பாக சங்கரன்கோவில், கோவில்பட்டி போன்ற பிரதேசங்கள் மிகவும் வரண்டவையென்று அரசாங் கத்தாரும் நன்கு அறிவார்கள். இந்த வரண்ட பிரதேசங்களை சர்க்கார் கவனிப்பதில்லை. இந்த வரண்டப் பகுதிகளை முன்னேற்றம் அடையச் செய்ய சர்க்கார் நிரந்தர நீர்ப்பாசான வசதி செய்துகொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளுவதுடன் குறிப்பாக சங்கரன்கோவில் தாலுக் காவிலுள்ள இரியாறு அணைக்கட்டு திட்டத்தை 2-வது 5-ஆண்டு திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று சர்க்காரை கடைசி முறையாக வற்புறுத்தி கேட்டுக் கொள்கின்றேன். இது சம்பந்தமாக ஒரு தீர்மானமும் கொடுத்திருக் கிறேன். அந்தத் தீர்மானம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது பரிசீலனைக்கு வரும்போது இன்னும் அதிகமான விவரங்களைத் தெரி விக்க விரும்புகிறேன் என்று கூறிக்கொண்டு இத்துடன் எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

"சந்தர்ப்பம் அளித்த ஆக்டிங் சபாநாயகர் அவர்களுக்கு எனது நன்றி உறித்தாகுக."

Sri K. R. NALLASIVAM:—"உதவி சபாநாயகர் அவர்களே, இப் பொழுது வந்திருக்கக்கூடிய இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பேசும்பொழுது நமது மாகாணத்தில் இப்பொழுது கிளம்பி இருக்கக்கூடிய ஒரு உணர்ச்சியை சர்க்கார் தனது கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும். எவ்வளவுதான் இந்த நாடு ஒன்று, இந்த நாட்டிலே வாழ்கின்ற எல்லோ ரும் ஓர் குலத்தைச் சேர்ந்தவர்கள் என்றெல்லாம் பேசிக்கொண்டு இருந்த போதிலும்கூட வடக்கும் தெற்கும் வேறுவேறு என்ற எண்ணம் இப்பொழுது வந்திருக்கிறது. அதற்குச் சர்க்கார் மதிப்புக் கொடுக்காவிட்டால், நிச்சயமாக அது எங்கே கொண்டுபோய்விடும் என்று சொல்ல முடியாது. அது ஒரு பெரிய போராட்டமாகாவே கூட மாறிவிடும். தெற்கே கனரக தொழில்கள் வேண்டும் என்ற கிளர்ச்சியானது அதிகப்பட்டுக் கொண்டிருக் கிறது. ஆனால் இதையெல்லாம் கவனத்திலே எடுத்துக்கொண்டு, பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கின்ற நிலையிலே இன்றைக்கு மத்திய சர்க்கார் இருக்கிறதாக தெரியவில்லை. ஆகவே மாகாண சர்க்கார் இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும். 11-04 a.m.

"முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் எப்படி செயல் பட்டது, அதனு டைய பலன்கள் என்ன, என்பதைப் பார்த்தால்தான் இரண்டாவது ஐந் தாண்டுத் திட்டத்தைப்பற்றி சொல்ல முடியும். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்கள் சரிவர நிறைவேற வில்லை என்று சர்க்காரே ஒப்புக்கொள்கின்றது. ஆனால் அதே சமயத்திலே இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி கொஞ்ச நாட்களுக்கு முன்னால் 6,000 கோடி ரூபாய் வரையில் செலவு செய்யப்போவதாக மத்திய அரசாங்க மந் திரிகள் தினசரி அறிவித்துக்கொண்டு இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு அதன் அளவு கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து கொண்டே வருகிறது. திட்டம் ஆரம்பிக்கும் காலத்திலே அது எத்தனை கோடியாக குறையும் என்று நிச்சயமாகச் சொல்லமுடியாது என்று எல்லோரும் சொல்லுகிறார் கள். அது மாத்திரமல்ல. அதனுடைய நோக்கமும் சிதைந்து விடக் கூடாது. ஆனால் சர்க்கார் சொல்கின்ற நோக்கம் இருக்கிறதே அதாவது சிதையாமல் இருக்குமா என்று பார்த்தால் சந்தேகப் படக்கூடியதாக இருக்கிறது. முதலாவது தேசிய வருமானத்தை 25 பர்சென்ட் உயர்த்து வது இரண்டாவது வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்காக ஒரு கோடியே பத்து லட்சம் பேர்களுக்கு வேலை கொடுப்பது. இந்த இரண்டை யும் வைத்துக்கொண்டுதான் இந்த ஐந்தாண்டுத் திட்டம் போட்டிருப்பதாக சர்க்கார் கூறுகிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னால் குடிசைத் தொழி லுக்கு அதிக முக்யத்வம் கொடுப்பதன் மூலமாக ஏராளமான பேர்களுக்கு வேலை கொடுக்கப்போகிறோம் என்று இந்த திட்ட கர்த்தாக்கள் சொன்னார் கள். ஆனால் மத்திய சர்க்கார் நிதி மந்திரி அவர்கள் சமீபத்தில் பேசும் பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஜனங்களுக்குத் தேவை யான அத்தியாவசிய பொருட்களை உற்பத்தி செய்யும் பொறுப்பை வேலை யில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பது என்ற நோக்கத்திற்காக குடிசைத் தொழில்களிடமே விட்டுவைக்க முடியாது, நிச்சயமாக பெரும் தொழில்கள்

இடத்திலே ஒப்படைக்கவேண்டிய நிர்பந்தம் ஏற்படலாம் என்று சூசகமாகச் சொல்லி இருக்கிறார்கள். இது வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்புத் திட்டத்தைத் தூக்கி குப்பையில் போட்டுவிட்டது என்பதைத்தான் குறிக்கிறது. தேசிய வருமானம் உயர்த்தப்படும்போது அது எல்லோருக்கும் சமமாக விநியோகிக்கப்படவேண்டும். தேசீய வருமானம் சமமாக வினியோகிக்கப்படாமல் இருந்தால் 25 பெர்சன்ட் உயர்வினால் ஒருவித பலனும் ஏற்படாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதோ இங்கொரு குளம், இங்கொரு கால்வாய் வெட்டியதனால் மட்டும் ஜனங்கள் திருப்தி அடைந்து விடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது. அதுமட்டுமின்றி தேசிய வருமானம் நிச்சயமாக ஏற்றத்தாழ்வு இல்லாமல் எல்லாவர்க்கத்தினருக்கும் வந்து சேரக்கூடிய வகையிலே செய்யவேண்டும். முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எப்படி அது கையாளப்பட்டது என்று பார்க்கும்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் ஜாக்ரதையாக நடவடிக்கைகளை கவனிக்க வேண்டி இருக்கிறது. சுமார் எவ்வளவு தொகை செலவழிக்கப்படுகின்றதோ அதிலே பாதியை தனிப்பட்ட முதலாளிகள் கையில் அதனுடைய பூரா பொறுப்பையும் சர்க்கார் விடுகின்றது. அது மிகவும் ஆபத்தானது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு சர்க்கார் காரியத்தை செய்யாவிட்டால் அது ஒரு பெரும் போராட்டத்தில் கொண்டுபோய் விடும். நம்முடைய கையிலே சர்க்கார் இருக்கிறது என்று இப்படி செய்துகொண்டு போவது, எவ்வளவு சக்திவாய்ந்த அரசாங்கமாக இருந்தாலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்திலே ஏற்படப்போகும் அப்போராட்டத்தை தவிர்க்கவே முடியாது என்பதை சர்க்கார் உணரவேண்டும்.

"அடுத்தபடியாக இப்பொழுது இருக்கக்கூடிய திட்டத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது நமது மாகாணத்தைப் பொருத்த வரையில் புதிய நீர்ப்பாசன திட்டங்கள் செய்வதற்கு அதிக சந்தர்ப்பங்கள் கிடையாது என்று சர்க்கார் சொல்கின்றது. ஆனால் அதேநேரத்தில் பழைய நீண்ட காலமாக இருக்கக்கூடிய கால்வாய்கள், வாய்க்கால்கள், குளங்களைப் பொருத்த வரையில் சீர்திருத்தங்கள் செய்யப்போவதாக சர்க்கார் சொல்கின்றது. ஆனால் பழைய வாய்க்கால்கள், பழைய மதகுகள், பழைய தண்ணீர் பாயச்சுகின்ற முறைகள் இவைகள் எல்லாம் தண்ணீரை ஏராளமாக சேதப் படுத்துகின்றது. புதிய முறைகள் மூலமாக நிச்சயமாக இன்னும் லட்சக்கணக்கான ஏக்கர்களை சாகுபடிக்குக் கொண்டு வரமுடியும். இதை சர்க்கார் ஆழ்ந்து பரிசீலனை செய்யவேண்டும். 10,000 ஏக்கரா பாயக்கூடிய பழைய முறையிலே இருக்கக்கூடிய கால்வாயை எடுத்துக் கொண்டு சரியான முறையில் சீர்திருத்தம் செய்தால் நிச்சயமாக 20,000 ஏக்கரா தண்ணீர்பாயக் கூடியதாக ஆக்கலாம். கோவை ஜில்லாவிலே உள்ள கீழ் பவனி பாசனத்தை எல்லோரும் அறிவீர்கள். அங்கே குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டு ஏராளமான நிலங்களுக்கு தண்ணீர் பாயக்கூடிய முறையிலே ஒரு புதிய திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த கீழ்பவானி திட்டத்தைப்போல இன்னும் பல புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். இப்பொழுது புஞ்சையாக இருக்கக்கூடிய நிலங்களை, சர்க்கார் மாறுதல் செய்தால் நஞ்சையாக மாற்றமுடியும். இப்பொழுது இரண்டு லட்சத்து ஏழாயிரம் ஏக்கர்களில் 10,000 தான் நஞ்சையாக இருக்கிறது. அங்கே ஒவ்வொரு 10 ஏக்கருக்கும் கிணறு வெட்டிக் கொள்வதற்கு சந்தர்ப்பம் இருக்குமானால் நிச்சயமாக 50,000 ஏக்கர்களை நஞ்சையாக சாகுபடி செய்வதற்கான சந்தர்ப்பம் அங்கே இருக்கிறது. எனவே இந்த முறையை நமது மாகாணத்திலுள்ள வைகை, சாத்தனூர் போன்ற புதியபுதிய திட்டங்களுக்கெல்லாம் கொண்டு வரவேண்டும். அப்பொழுது தான் ஏராளமான நிலம் சாகுபடிக்கு வருவதுடன் ஏராளமானதொழிலாளர்களுக்கும் வேலைகள் கொடுக்க முடியும்.

"அடுத்தபடியாக, இப்பொழுது சர்க்கரை ஆலைகள் ஆங்காங்கே ஆரம்பிக்கப் போவதாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகளிலே விவசாயப் பொருள்களை மட்டும் கவனிப்பதோடு நின்று விடக்கூடாது. இன்றைக்கு இந்த மதுவிலக்குத் திட்டம் ஏன் வெற்றிபெறவில்லை என்றால், மரம் ஏறும் தொழிலாளர்

26th August 1955] [Sri K. R. Nallasivam]

களுக்கு எந்தவித வேலேயும் கொடுக்கவில்லே. ஏதோ பெயரளவிற்கு கருப்பட்டி செய்கிறுர்கள் என்றுதான் இருக்கிறது. ஆகவே கருப்பட்டியின் மூலமாக சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடிய சர்க்கரை ஆலேகளே குறைந்தது 4 இடங்களிலாவது ஏற்படுத்திஞல் மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு ஆறுதல் கொடுக்கக்கூடியதாக இருக்கும்.

"அடுத்தபடியாக, கைத்தறியைப் பற்றி இந்த நாட்டிலே அதிகமாக பேசப்பட்டு கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னே தீர்க்கப்பட்டது போன்ற உணர்ச்சி இருக்கிறது. ஆனுல் உண்மைநிலே அப்படியல்ல. இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கைத்தறி துணிக்கும், மில்களில் உற்பத்தி செய்யக்கூடியதுணிக்கும் ஏதாவது வரையரை வைக்கப்போகிறுர்களா என்ருல் கிடையாது என்றுதான் தெறிகிறது. கைத்தறிக்கு கொடுக்கக்கூடிய உதவியை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும். அப்பொழுது தான் நெசவாளர்கள் ஓரளவு உதவி பெறமுடியும். இந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்களே கூட்டுறவு சங்கத்தின் கீழ் கொண்டு வருவதாக தெரிய விலலே. இதை சர்க்கார் கவனித்து கைத்தறி நெசவாளர்கள் அனேவரையும், கூட்டுறவு சங்கத்தின் கீழ் கொண்டுவந்தும், கைத்தறி துணிக்கும், மில்துணிக்கும் ஒரு வரையரை ஏற்படுத்தியும் இத் தொழிலே பாதுகாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

"எங்கள் பிரதேசத்தைப் பொருத்த வரையில் ஈரோடு, தாராபுரம், பழனி வழியாக ஒரு ரயில் பாதை போடவேண்டும் என்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருந்துகொண்டு இருக்கிறது. இதை சர்க்கார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

"இப்பொழுது சர்க்கார் இந்த க்ஷயரோகம் வராமல் இருப்பதற்காக பி.சி.ஜி. அம்மை குத்துகின்ற வேலேயை நடத்திக்கொண்டிருக்கிறது. ஆனுல் இதைவிடக் கொடுமையான குஷ்ட ரோகத்தை தடுப்பதற்கு ஒன்றும் செய்யவில்லே. இந்த வியாதி எங்கு பார்த்தாலும் வேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. இது தென் ஆறகாடு ஜில்லாவிலே மிகவும் அதிகம். இதைத் தடுப்பதற்கு ஆஸ்பத்திரிகள் இருந்தால் கூட அங்கே தேவையான வசதிகள் கிடையாது. ஆகவே, எப்படி இந்த பி.சி.ஜி. இயக்கம் இருக்கிறதோ, அதேபோல குஷ்ட ரோகத்தை ஒழிப்பதற்கு ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்கி அதை ஒரு இயக்கமாக நடத்தவேண்டும்.

"இன்றைக்கு சர்க்கார் கொண்டு வந்திருக்கக்கூடிய நிலவெளியேற்ற பாதுகாப்பு சட்டம், வார குத்தகை நிர்ணயச் சட்டம் முதலியவற்ருல் நாட்டிலே உள்ள பெருவாரியான மக்களுடைய வருமானத்திலே உயர்வு காணமுடியாது. இந்த நாட்டிலே 100க்கு 80 பேராக இருக்கக்கூடிய விவசாயிகளின் பிரச்னேயைத் தீர்த்தால்தான் நாட்டிலே நிச்சயம் சுபிட்சம் நிலேபெறமுடியும். இதை விட்டுவிட்டு எத்தனே ஐந்தாண்டுத்திட்டங்கள் போட்டாலும் சுபிட்சம் ஏற்படாது.

"அதற்கு என்ன செய்தாக வேண்டும்? ஜனங்களே வேறு தவருன வழியிலே திருப்புவதற்காக அல்ல.

"மக்கள் நல்ல மனுேபாவத்துடன் வாழ வேண்டும் என்பதற்காக 11–14 a.m.
நிலச் சீர்திருத்தம் கொண்டு வரப்படவேண்டும். அப்படிக் கொண்டு வரப்படவேண்டும் என்று நீண்டநாளாக கோஷமிட்டுக்கொண்டு வருகிருர்கள். முழு உருவத்தில் வரப்போகிறது என்று சர்க்கார் பதில் சொல்லிக்கொண்டு வருகிருர்கள். ஆனுல் இப்பொழுது இருக்கும் நிலேமையைப் பார்த்தால் பயமாக இருக்கிறது அது வருமோ வராதோ என்று. அரசியல் சட்டத்திற்குத் திருத்தம் கொண்டு வந்து அதன்படி கொண்டு வரலாம் என்று நினேத்துக் கொண்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். அப்படிக் கொண்டு வரும்போது உயர்ந்த பட்சத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். அதாவது 20 அல்லது 30 அல்லது 40 எக்கர் என்று நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று சொல்லுவதாகக் கேள்விப்படுகிறேன். குத்தகை வாரம் முதலியவைகளே நிர்ணயம் செய்ய வேண்டும். 25 எக்கருக்கு மேல் உள்ள நிலச்சுவாந்தார்களுடைய குத்தகை வாரத்தை கொடுத்து விட வேண்டும் என்று கொண்டு வரப்போவதாகக்

கேள்விப்படுகிறேன். அந்த முறையில் இருக்கக் கூடாது. விவசாயி களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையில் நில சீர்திருத்தத்தை கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

* Sri V. K. RAMASWAMI MUDALIAR :—" Mr. Deputy Speaker, Sir, I am glad that the Second Five-Year Plan aims at providing the elementary requirements of the villagers. But it is very unfortunate that the Government of India have cut short our estimates by nearly 50 per cent, with the result, I am afraid, that we cannot achieve our objects completely. The whole Plan seems to be uncertain because we have to put before them the revised plan and then place it before this House so as to enable hon. Members of this House to have their say on the Second Five-Year Plan. I am sure, our Finance Minister will take early steps to see that the revised Plan is placed before this House early.

" Barring, of course, all the big projects, all the other schemes of a general nature should be planned at the district level and added together to form the State Plan. That is the aim of the Second Five-Year Plan. I am sure, the Government have realized it and are going to do it.

" Sir, they must, first of all, give priority to agriculture and animal husbandry. According to the latest report received from different Collectors, we find that nearly three million acres of arable land, that is *pucca* waste land, fit for cultivation, are lying waste. The Government must try to see that those lands are brought under the plough and assigned to landless poor as early as possible so that the food production in the State may go up.

" So also with regard to Animal Husbandry, they must take early steps to see that more cattle farms are started in almost all the districts. In the district of Chingleput also, they must start a cattle farm and I was told recently that it is under the serious contemplation of the Government and if that is done, it will augment the City's milk supply. I am sure, they will push through the scheme as early as possible. But there is a dearth of technical staff in the Animal Husbandry Department. Unless they evolve some method by which a short-term course is started and more officers are appointed, the plan with regard to the Animal Husbandry Department will only be a paper plan, as no useful purpose can be served without any technical staff.

" Then, Sir, regarding irrigation schemes, it has been stated that Malabar has been given special treatment so far as minor irrigation projects are concerned. While I will have no objection to give preferential treatment to Malabar, I would request the Hon. Minister to show the same consideration to other districts also. I know that in many of the districts, minor irrigation tanks are still in a state of disrepair and require very urgent repairs and I am sure, they will receive the earnest consideration at the hands of the Government.

26th August 1955] [Sri V. K. Ramaswami Mudaliar]

" Then, Sir, power projects are also very important. Though the Electricity Department are doing their best in the matter, still they must push through the schemes as expeditiously as possible so that all the villages in the State will be served with electricity before the end of the Second Five-Year Plan period.

" I would request the Government to introduce a National Extension Scheme Block in each taluk of the District and that 11-20 a.m.
too in the most backward areas in that taluk. Now, I find that in only contiguous areas National Extension Scheme Blocks are introduced. This system has not worked very well in many places. People will come to appreciate these National Extension Schemes if the Government take steps to introduce one N.E.S. Block at least in each taluk of the district. I am sure, Government will pay early attention to this matter.

" These are only a few of my suggestions and I am sure the Government will give another opportunity to all the Members of the Assembly to discuss the proposals of the Government under the Second Five-Year Plan after they are finally revised."

*Sri K. S. LAKSHMIPATHI NAICKER :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு விவாதத்தில் இருக்கக்கூடிய இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி எனக்குக் கொடுத்திருக்கக்கூடிய குறுகிய காலத்திற்குள் நான் சில முக்கியமான விஷயங்களைப்பற்றிப் பேச ஆசைப் படுகிறேன். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் சில நீர்பாசன வசதிகளை செய்து கொடுப்பதாகச் சொல்லி மதுரை ஜில்லா பழனி தாலூகாவில் சில இடங்களுக்கு விஸ்தரித்தார்கள். அங்குள்ள காட்டாறுகளைத் தடுத்து அதன் மூலமாக வரண்ட பிரதேசங்களுக்குப் பாசன வசதி அளிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அந்த முறையில் ஒன்றும் கையாளப்படவில்லை. அணைகள் இதுவரையிலும் செய்து முடிக்கப்படவில்லை. அதுபோன்ற வேலைகளை இந்த ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக்கொண்டு சர்க்கார் வேலை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" சட்டசபையிலுள்ளவர்களும் மந்திரிமார்களும் அரசாங்கத்திலுள்ளவர்களும் மதுரை ஜில்லாவில் வைகை திட்டத்தை ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் மதுரை ஜில்லா பூராவும் பலன் அடைந்து விட்டது என்று நினைக்கக்கூடும். கனம் மந்திரிகள் எல்லோரும் தங்களுக்கு பதவி உயர வேண்டும், எல்லா வகையிலும் நன்றாக வாழ வேண்டும் என்று நினைக்கக்கூடியவர்கள் எல்லோரும் அந்த ஜில்லாவிலுள்ள பழனியாண்டவனை தரிசனம் செய்யாமல் போவது இல்லை. அவர்களை அடிக்கடி பழனியாண்டவன், இழுத்து பழனிக்கு அவர்கள் வந்தாலும் கூட அந்த பிரதேசம் முன்னுக்கு வர வேண்டும் என்று அவர்கள் ஆசைப்படுவதில்லை. இதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

" சென்னையில் தினசரி மழை பெய்து கொண்டிருப்பதைப் பார்த்தால் நாங்கள் ஆத்திரப்படவேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் பழனியில் மழையே கிடையாது. அங்கு பல இடங்கள் ரொம்பவும் பொட்டலாக இருக்கிறது. பல வருஷங்களாக பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது. விதை விதைக்கக்கூட மழையில்லை. அப்படி இருந்தும் அங்கு பெரிய நீர்பாசன திட்டங்களை எடுத்துக்கொள்வதாக இல்லை. அவைகளை அந்த தாலூகாவிற்குக் கொண்டு வருவதற்கு எந்த விதமான சாதகமும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அங்கு இருக்கக்கூடிய அநேக கிணறுகள் மூலம் நீர்ப்பாசனத்தை நடத்திக் கொண்டு வருகிறார்கள். அதனால் அந்த இடத்திற்கு மின்சார வசதி செய்து கொடுப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. அப்படி செய்துகொடுக்க வேண்டும் என்று நான் சர்க்காரை மிகவும் மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri K. S. Lakshmipathi Naicker] [26th August 1955

"சமீபத்தில் சேலத்திலிருந்து மதுரைக்குச் செல்ல இருக்கும் ரயில் பாதை ஒன்றைக் கொண்டு வரவேண்டும். அப்படிக் கொண்டு வந்தால் ஒட்டன்சத்திரம் பிராந்திய மக்களுக்கு சௌகர்யமாக இருக்கும். அப்படிப் பட்ட ரயில் பாதை ஒன்று ஒட்டன்சத்திரம் தொகுதி வழியாக செல்லும் படியாக மத்திய சர்க்காருக்கு இந்த சர்க்கார், வரப்போகும் ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக்கொள்ளும்படியாக சிபாரிசு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"முக்கியமான ஒரு விஷயத்தைப்பற்றி இந்த ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அனிமல் ஹஸ்பண்டரி அதாவது கால்நடை அபி விருத்தியைப்பற்றிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு அதையும் விவரமாக கொடுத்திருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் எவ்வளவு தூரம் கால்நடை அபிவிருத்தி இந்த சர்க்காரால் செய்யப்பட்டது என்பதைப்பற்றி பார்க்கும் போது ஒன்றுமே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அதற்குக் காரணம் முக்கியமாக என்ன என்று கேட்டால் அங்குள்ள கால்நடை அபிவிருத்தி இலாகா ஒருவருடைய கையில் இல்லாததால் தான். அதிலும் அவரிடம் கம்யூனிட்டி ப்ராஜெக்ட், நாஷனல் எக்ஸ் டென்ஷன் ஸ்கீம் இது போன்ற திட்டங்கள் அவருடைய கையில் இருக்கிறது. அவைகளுடன் கால்நடை அபிவிருத்தி இலாகாவையும் வைத்து கொண் டிருக்கிறார். மற்றும் பிளாக்டெவலப்மெண்டு கம்யூனிட்டி பிராஜக்டில் உள்ள கால் நடை அபிவிருத்தி இலாகா டெக்னிஷயன்கள் என்று சொல்லக் கூடியவர்களின்கையில் இல்லை. பட்டம் பெற்றவர்களுடைய கவனத்தில் இல்லாமலும் அவர்களுடைய உதவியில் இல்லாமலும் தனிப்பட்ட முறை யில் இருப்பதால் அதை அவர்கள் சரிவர கவனிக்க முடியாமல் இருக் கிறது. அந்த இலாகா டைரெக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்டரியின் நேரடி சூப்பர்விஷனில் இருந்தால் அது மிகவும் நன்மையாக இருக்கும். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கால் நடை அபவிருத்திக்கு முதல் ஸ்தானம் கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது அதை எடுத்து நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த அதிகாரிகள் இருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். அதற்காக அதிகாரிகளை உற்பத்தி செய்வது என்று ஆரம்பித்தால் இரண்டு மூன்று வருஷ காலமாகும். மூன்று வருஷங்களுக்குப் பிறகுதான் அந்த இலாகாவை கையில் எடுத்து அமுலுக்குக் கொண்டுவரக்கூடிய அதிகாரிகள் அவர் களிடத்தில் இருப்பார்கள். ஆகவே இந்த கால்நடை அபிவிருத்தி திட்டம் ஐந்தாண்டு திட்டத்தில் முக்கியம் பெற வேண்டும் என்று சர்க்காருக்கு அபிப்பிராயம் இருந்தால் வெடர்நரி இலாகாவையும் கால்நடை அபி விருத்தி இலாகாவையும் தனித்தனியாக பிரித்து விட்டால்தான் நன்றாக நடைபெறும். இப்பொழுது இருக்கும் மந்திரியிடம் எற்கெனவே அதிகப் படியான போர்ட்போலியோ இருக்கிறது. அதனால் இதையும் சேர்த்து கவனிக்க முடியாது. அதனால் தனிப்பட்ட முறையில் கால்நடை அபிவிருத்திக்கு அதிக நேரம் கவனிக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அதன்மேல் அந்த இலாகா சரிவர நடைபெற்று முன்னேற்ற மடையும். அதற்கு என்று தனிப்பட்ட ஒரு இலாகாவை அமைத்து அதன் மூலமாக அதை கவனித்தால் இந்த அபிவிருத்தி திட்டத்தை சரிவர கவனிக்க முடியும். உதாரணமாக இப்பொழுது ஒவ்வொரு ஜில் லாவிலும் சுமார் 150 பொலி காளைகளை வைத்திருக்கக்கூடும். அவைக ளுக்கு ப்ரிமியம் சர்ட்டிபிகேட் கொடுக்கவேண்டும் என்றால் அவைகளை ஜில்லா கால்நடை அதிகாரிகள் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. சர்ட்டி பிகேட் கொடுப்பதற்கு முன்னதாக அந்த அதிகாரிகள் அந்தப் பொலி காளைகளை பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஒரு காளையை கவனிக்க வருஷத்தில் இரண்டு நாட்களாகிறது. அப்படி 150 காளைகளையும் பார்வை யிடவேண்டுமென்றால் வருஷத்தில் 300 நாட்கள் வேண்டியதாக இருக்கும். இவற்றுடன் மற்ற வேலைகளையும் அவர்கள் கவனிக்க வேண்டி இருக்கிறது. அதனால் எல்லா வேலைகளையும் சரிவர கவனிக்க முடியாது. அதனால் தனிப்பட்ட இலாகாவை அமைத்தால் கால்நடை அபிவிருத்தியை நல்ல முறையில் கண்காணிக்க முடியும். ஆகையால் வெடரிநரி டிபார்ட்மெண் டையும் கால்நடை இலாகாவையும் தனித்தனியாக பிரித்து விட வேண்டும்

26th August 1955] [Sri K. S. Lakshmipathi Naicker]

என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவைகளுக்கு தனித்தனி டைரெக்டர்களை நியமித்தால் நல்ல முறையில் நடக்கும். அப்பொழுது தான் ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிட்டபடி உறுப்படியான வேலைகள் நடக்கும்.

"கால்நடை அபிவிருத்திக்கு ஏராளமான ஸ்கீம்கள் போட்டிருக்கிறார்கள். பொலிகாளைகளை வாங்குவதற்கு என்று ஐந்து லட்சம் ரூபாய் ஒரு வருஷத்திற்கு செலவிடுவது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஐந்து லட்சம் ரூபாய்க்கு எவ்வளவு பொலிகாளைகளை வாங்க முடியும்? மாகாணம் பூராவும் வாங்கவேண்டும் என்றால் குறைந்தது 500 காளைகள் தான் வாங்கமுடியும். ஒருகாளை ஒன்று 500 ரூபாய் என்று வைத்துக் கொண்டாலும் 500 காளைகள்தான் வாங்கலாம். இதை வைத்துக் கொண்டு மாகாணம் பூராவும் கால்நடைகளை அபிவிருத்தி செய்ய முடியும் என்று சர்க்கார் நினைப்பது தவறு. அதனால் அதற்கு இன்னும் அதிகப்படியானதொகை ஒதுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஒரு பொலி காளைக்கு 100 பசுக்கள் வேண்டியதாக இருக்கும். அந்த கணக்கில் பசுக்களின் சங்கியைக்கு பொலிகாளைகள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதன்படி காளைகள் கொடுத்தால்தான் கால்நடையை அபிவிருத்தி செய்ய முடியும்.

"அடுத்தபடியாக ஆடு அபிவிருத்தியைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. ஆனால் நாலு பண்ணைகளை ஆரம்பிக்கப்போவதாக சொல்லுகிறார்கள். வரப்போகும் ஐந்தாண்டு திட்டத்தில் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் பொலி காளைகள் வாங்கிக்கொடுக்கப்போவதாக சொல்லுகிறார்கள். அதைப்போலவே ராம்ஸ் அதாவது ஆட்டுக்கடாக்களையும் வாங்கிக் கொடுத்தால் நன்மையாக இருக்கும். ராமநாதபுரம், மதுரை பக்கங்களில் அதிகப்படி கொடுத்து உதவ வேண்டும். மற்றும் கோழிப்பண்ணை ஆரம்பிக்கப் போவதாக சொல்லுகிறார்கள். பௌல்ட்ரி யூனிட்டை மிகவும் பொருத்தமான இடங்களில் ஆரம்பித்து கிராமத்திலுள்ளவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இந்த திட்டங்களை எவ்வளவு சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டு வர வேண்டுமோ அவ்வளவு சீக்கிரத்தில் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அத்துடன் பசு இனங்களையும் ஆடு இனங்களையும் அதிகப்படுத்தவேண்டும்.

"கால்நடைகளை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்றால் அவைகளுக்கு மேய்ச்சல் நிலம் அவசியம் தேவை. அதற்கு வேண்டிய நிலங்களை சர்க்கார் இன்னும் ஒதுக்கி வைக்கவில்லை என்பதை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். இது ரொம்பவும் முக்கியமான விஷயம். கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் அவசியமாக வேண்டும். நீர்பாசன வசதியுள்ள இடங்களில் மாட்டுத் தீவனம் உற்பத்தி செய்தால் ஏக்கருக்கு பத்து ரூபாய் கொடுக்கப்படும் என்று இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது ரொம்பவும் குறைந்த தொகை. அதை அதிகமாக்க வேண்டும். கால்நடை அபிவிருத்தி திட்டத்தை உடனடியாக நடத்தினால் பின்னாடி உதவியாக இருக்கும். அதனால் இந்த திட்டங்களை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"கடைசியாக எனக்குப் பேசுவதற்கு இவ்வளவு நேரம் கொடுத்தற்கு கனம் சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

*Sri R. KRISHNASWAMI NAIDU :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றி பேசுவதற்கான சந்தர்ப்பம் அளித்த அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகிறேன். சம்பிரதாய முறையில் இந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மக்களுடைய திட்டமாக அடையவேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் கிராமங்கள் தோறும் கமிட்டியை நிறுவி, ஜில்லாக்கள் தோறும் கமிட்டியை நிறுவி, ராஜ்ய சர்க்காரின் ரீதியில் சட்ட சபையில் அதை விவாதித்து மத்திய சர்க்காருக்கும், ப்ளானிங் கமிஷனுக்கும் அனுப்பி வைப்பதற்கான முறையில் 11-31 a.m.

ஏற்பாடு செய்திருப்பது உண்மையிலேயே பாராட்டத் தகுந்த விஷயமாகும். ஆகவே ஒவ்வொரு கிராமத்திலும் வாழ்கின்ற மக்களின் அபிலாஷைகள் இந்தத் திட்டங்களில் பிரதிபலிப்பதற்கு வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்தத் திட்டத்தைப்பற்றி யாரும் போதுமான அவகாசம் திட்டத்தைப்பற்றி பரிசீலிப்பதற்கு கொடுக்கப்படவில்லையென்றும் யாரையுமே கேட்டுக்கொள்ளாமல் இந்தத் திட்டத்தைத் தயாரித்துவிட்டார்கள் என்று சொல்வதற்கும் வழியில்லை.

"முதலாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி நாம் பெருமைப்படலாம். 'யானையைப் பார்ப்பதற்கு வெள்ளெழுத்துக்காரனுக்குக்கூட கண்ணாடி வேண்டியதில்லை' என்பதைப்போல முதலாவது ஐந்தாண்டு திட்டத்தினால் நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய அபிவிருத்திகளையெல்லாம் நாம் இங்கு எடுத்துச் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. எனக்கு நன்றாகத் தெரியும். என்னுடைய ஜில்லாவிலுள்ள பல கிராமங்கள் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினால். மக்களின் வாழ்க்கைத்தரம் பலவகையிலும் உயர்ந்திருக்கிறது என்பதற்கான பல புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை கிராமங்களிலுள்ள விவசாய மக்களே நன்கு உணர்ந்திருக்கிறார்கள். கிராமத்திலுள்ளவர்கள் இந்த அபிவிருத்தி திட்டங்களில் எவ்வளவு அக்கறை காட்டுகிறார்கள் என்பதை கிராமப்புறத்துக்குச் சென்று பார்த்தால் நன்கு தெரியும். இன்றைக்கு தேசீய அபிவிருத்தி, ஸ்தல அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி ஆகிய பல திட்டங்களின் மூலம் சர்க்கார் அவர்களுடைய உற்சாகத்தை ஊக்கத்தை பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள். இன்னும் சுகாதார வசதி, தண்ணீர் வசதி, சாக்கடை வசதி ஆகியவற்றையெல்லாம் நிறைவேற்றப் போதுமான முறையில் அவர்கள் ஒத்துழைக்கிறார்கள். பொது மக்களுடைய கவனம் இந்தப் பக்கம் இப்பொழுது திரும்பி இருக்கிறது. ஆகையால் இப்பொழுது போடப்போகின்ற இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தைப் பலவகையிலும் உயர்த்துவதற்கான வசதிகள் நமக்கு ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாக ராஜ்ய மக்களுடைய நிலைமை பலதுறைகளிலும் வளர்ச்சி அடையும். ஆகவே முதல் ஐந்தாண்டுத் திட்டம் வெற்றிபெறவில்லை. தோற்றுப் போய்விட்டது. அதைப்போலவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் வெற்றி பெறப்போவதில்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக எந்த வரியையாவது போடுவதற்கு சர்க்கார் நினைத்தால் அதனால் பெரிய போராட்டம் வரும் என்பதாக யாரும் சர்க்காரைப் பயமுறுத்தவேண்டியதில்லை, அதனால் எவ்விதப் பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை என்று சர்க்காருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எவ்வித பயமுறுத்தல்களுக்கும் பயந்து சர்க்கார் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை விட்டுவிடப்போவதில்லை என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை செம்மையாக நிறைவேற்றி விட்டோம் என்கின்ற கர்வத்தினால் அப்படிப் பேசவில்லை. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினால் நமக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. அந்த அனுபவத்தைக் கொண்டு நிச்சயமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மிக வெற்றிகரமாக நிறைவேற்றிவிட முடியும் என்கின்ற நம்பிக்கையால் தான் அப்படிப் பேசுகின்றேன். மதிப்பிற்குரிய பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் என்றைக்குமே, 'நாங்கள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் பல தவறுகளை செய்திருக்கக்கூடும். நாங்கள் செய்திருக்கும் தவறுகள் என்னென்ன என்பதை எடுத்துச் சொல்லுங்கள். அதனால் அவற்றைத் திருத்திக்கொள்ள முடியும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதே தவறுகளை நாங்கள் திரும்பவும் செய்யாமல் இருக்க முடியும்,' என்று தான் சொல்லிக்கொண்டு வருகிறார். அம்மாதிரியாக உருப்படியான யோசனைகளைத்தான் நாம் எடுத்துச் சொல்லவேண்டும். நிதான புத்தியுடன், விருப்பு வெறுப்பின்றி, வெற்றி தோல்வி என்னென்ன என்பதை, நமக்கு வெற்றியா, அல்லது அந்தக் கட்சிக்கு வெற்றியா என்பதை யோசிக்காமல் சொல்லவேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. எந்தெந்த வழிகளெல்லாம் நமது தேசீய வருமானத்தை அதிகப்படுத்த முடியுமோ அந்தந்த வழிகளெல்லாம் அதிகப்படுத்துவதற்கான யோசனைகளை கூறவேண்டும்.

26th August 1955] [Sri R. Krishnaswami Naidu]

" எங்களுடைய தாலூக்காவில் உள்ள கிராமப் பிரதேசங்களில் 12 எரியாக்களிலுள்ள பொதுஜனங்களைக் கூட்டி, கட்சி சம்பந்தமில்லாமல் கூட்டி, அந்தந்த பிராந்திய மக்களுடைய யோசனைகளையெல்லாம் திரட்டி, கட்சி சார்பில்லாத ஒரு கமிட்டியை ஏற்படுத்தி, அந்தந்த மக்களுடைய அபிலாஷைகள், எண்ணங்கள் முதலியன பிரதிபலிக்கும்படியான திட்டத்தைத் தயாரித்து சர்க்காருக்கு அனுப்பிவைக்க நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். சர்க்கார் இதற்கான அவகாசத்தையும் உதவியையும் அளித்தார்கள். ஆகவே சர்க்காரே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் மக்களுடைய எண்ணங்களை, கருத்துக்களைத் தெரிந்து கொள்ளாமலேயே தயாரித்துவிட்டதாகப் புகார் சொல்வதற்கே காரணம் இல்லை. அம்மாதிரி கூறினால் நம்முடைய பிழையை பிறர் மீது சுமத்திவிட்டு தப்பித்துக்கொள்ளப் பார்க்கும் ஒரு முயற்சியாகத்தான் இருக்கும். தங்கள் தங்கள் கட்சியின் செல்வாக்கை இந்தத் திட்டங்களின் மூலம் அதிகப்படுத்திக்கொள்ள முடியவில்லையே என்பதற்காகவும் தேசப் பொது நலனுக்ககாகப் போடப்படுகிற திட்டங்களை எதிர்ப்பதிலும் எவ்விதப் பிரயோஜனமும் கிடையாது.

" ராமநாதபுரம் ஜில்லாவைப்பற்றி உங்கள் எல்லோருக்கும் தெரியும். 1910-ம் வருஷத்தில் ராமநாதபுரம் ஜில்லா என்ற பெயரே கிடையாது. அதற்குப் பிறகுதான் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து ஏழு தாலுக்காக்களையும், மதுரை ஜில்லாவிலிருந்து ஏழு தாலுக்காக்களையும் பிரித்து எடுத்து அவற்றை ஒரு தனி ஜில்லாவாக, ராமநாதபுரம் ஜில்லாவாக ஏற்படுத்தினார்கள். மதுரை ஜில்லாவிலிருந்து பிரிக்கப்பட்ட ஏழு தாலுக்காக்கள் ஜமீன் பிராந்தியத்தில் சேர்ந்திருந்தது. அதனால் அவை நீர்ப்பாசன வசதி போன்ற துறைகளில் மிகவும் பிற்போக்கான நிலையிலேயே இருக்கின்றன. மற்ற பிரதேச மக்கள் பலதுறைகளிலும் அபிவிருத்தி அடைந்திருப்பதைப் போல இந்த ஜில்லா மக்கள் அபிவிருத்தி அடைவதற்குப் போதுமான சந்தர்ப்பம் அளிக்கப்படவேயில்லை. ஜமீன் பிரதேசங்களை எல்லாம் இரண்டு வருஷங்களுக்கு முன்பே சர்க்கார் ஒருவழியாக ஒழித்துக் கட்டியிருக்கிறார்கள். சர்க்காருடைய நேரிடையான ஆட்சி முறை இரண்டு வருஷங்களுக்கு முன்புதான் அந்தப் பிரதேச மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஒழுங்கு படுத்தப்பட்ட ஆட்சி முறையின்கீழ் அவர்கள் இப்பொழுது தான் வந்திருக்கிறார்கள். ஆகவே இன்றைக்கும் அந்த ஜில்லா மக்களைப் பார்த்தால் அவர்கள் மிகவும் பின்னடைந்த நிலையிலேதான் இருந்து வருகிறார்கள். நமது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே அந்த ஜில்லாவிற்கு சரியான ஒரு நீர்ப்பாசன வசதியை, குறிப்பாக ஆற்றுப் பாசன வசதியை ஏற்படுத்திக் கொடுத்தால் மிகவும் நன்றாக அவர்கள் அபிவிருத்தி அடைவதற்கு வழி ஏற்படும். அதிர்ஷ்டவசமாக திருவாங்கூர்-கொச்சி ராஜ்யம் வழியாக அரபிக் கடலில் போய் வீணாக விழுகின்ற ஆறுகளின் தண்ணீரை மேற்குத் தொடர்ச்சிமலைப் பிரதேசத்தில் அணைகட்டி சென்னை இராஜ்யத்தின் பக்கமாகத் திருப்பி விடலாம் என்று சொல்லுகிறார்கள். அதன் மூலமாக ராமநாதபுரம் ஜில்லாவிற்கு அனுகூலம் ஏற்படலாம். ஆனால் இது சம்பந்தமாக நம் சர்க்கார் திருவாங்கூர்-கொச்சி சர்க்காரோடு பேச்சு வார்த்தை நடத்த வேண்டியிருக்கிறது. அவர்கள் சுமுகமான ஒப்பந்தத்திற்கு வராவிட்டால் மத்திய சர்க்காராவது இவ் விஷயத்தில் தலையிட்டு இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்க வேண்டும். இது நல்லதொரு திட்டமாகும். இன்றைக்கு ராமநாதபுரம் ஜில்லா பருவ மழையையே நம்பியிருப்பதால் சரியாக மழை பெய்யாத காலங்களில் பயிர் நாசமாகி விடுகிறது. அதனாலேயே ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள பல பிரதேசங்கள் வறண்டு கிடக்கிறது. அதற்காகவே ராமநாதபுரம் ஜில்லாவிற்கு தனிச் சலுகை அளிக்கவேண்டுமென்பதற்காக ஸ்ரீ அருள் தாஸ் என்ற ஒருவரை ஸ்பெஷல் அதிகாரியைப் போட்டு, அவருக்குக் கீழ் பல சிப்பந்திகளைப் போட்டு ராமநாதபுரம் ஜில்லாவை எந்தெந்த வகைகளிலெல்லாம் அபிவிருத்தி அடையச் செய்யலாம் என்பதற்கு ஒரு ரிப்போர்ட் தயாரிக்கச் சொன்னார்கள். அந்த ரிப்போர்ட்டும் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்டதான அந்த ரிப்போர்ட் அச்சிடப்பட்டிருக்கிறது. கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னது போல ஆலாடி நதியையோ, பம்பை நதியையோ அந்தப் பக்கத்தில் திருப்பி

விட்டால் அதனால் அந்த ஜில்லா மிகவும் செழிப்புள்ள ஜில்லாவாக மாற முடியும். அதற்கான ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" குடிசைத் தொழில் விஷயமாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். தீப்பெட்டித் தொழிலானது அநேகமாக நகரங்களில் தினம் ஒன்றுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் குரோஸ் உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாக வளர்ந்து விட்டது. அதைக்கூட பிரிக்க வேண்டும். மத்திய கைத்தொழில் போர்டார் யோசனை சொன்ன முறையில், கிராமந் தோறும் 25 குரோஸ் செய்யக்கூடிய தொழிலாக அதைச் செய்தால் இன்னும் அனுகூலமாக இருக்குமென்று நான் தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

" கைக்குத்தல் அரிசி விஷயமாகவும் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டும். நெல் அறைக்கும் மில்களுக்கு இனிமேல் அனுமதி கொடுக்கக் கூடாது.

" கிராமப் பகுதிகளில் உள்ள ரோடுகளில் லாரிகள் போக அனுமதி கொடுக்கக்கூடாது. கிராம ரோடுகளின் வழியாக கிராமங்களுக்கு லாரிகள் வருவதால் கிராமங்களிலுள்ள கட்டை வண்டிகளுக்கு வேலையில்லாமற் போகின்றன. ஐந்நூறு, 1,000 கட்டைவண்டிகள் வேலையில்லாமல் கிடக் கின்றன. ஆகையால், கிராமங்களிலிருந்து நகரங்களுக்குப் போவதற்கும் வருவதற்கும் கட்டை வண்டிகள் உபயோகப்படுத்தப்பட்டால் கிராமக் கைத் தொழில்களுக்கு ஊக்கம் ஏற்படும். ஆகவே, கிராமாந்திரத் தொழில்களை அபிவிருத்தி செய்யவேண்டும். அவைகளுக்குச் சர்க்கார் ஆதரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்ளுகின்றேன்."

11-42 a.m. SRI M. PALANIYANDI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நாடு சுதந்திரம் அடைந்த ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு இப் பொழுது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி விவாதிக்கப் புகுந் திருக்கிறோம். முதல் ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி நிதி மந்திரி அவர்கள் சொல்லும் காலத்திலும், அறிக்கையின் வாயிலாக நாம் பார்க்கின்ற போதும், மக்களுடைய வாழ்க்கையின் தரம் மூன்று சத விகிதம் உயர்ந்து இருக்கிறது என்று தெரிகிறது. அது சராசரியாக போட்ட கணக்காகத்தான் இருக்கும். உண்மையாகவே கிராம மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த நிலைமையைவிட இப்பொழுது அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிட்டதாகச் சொல்ல முடியாது.

" ' உற்பத்தி செய்யுங்கள் அல்லது அழிந்து விடுங்கள் ' **(Produce or perish)** என்று சொல்லப்படுகிறது. ஆனால் உண்மை நிலை எப்படி யிருக் கிறது ? ' உற்பத்தி செய்து அழிந்து விடுங்கள் ' **(Produce and perish)** என்ற நிலைமைதான் இருக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை. தொழிலாள மக்களும், விவசாய மக்களும், நாட்டில் உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தயாராக இருக்கிறார்கள். அதே மாதிரி உற்பத்தியை யும் பெருக்குகிறார்கள். உற்பத்தியை என்னவோ அவர்கள் பெருக்கிக் கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந் திருக்கிறதா என்றால் அதுதான் கிடையாது. மூன்று சத விகிதம் வாழ்க் கைத்தரம் உயர்ந்திருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. இரண்டாவது ஐந் தாண்டு திட்டக் காலத்தில் இன்னும் அதிகமாக உயர்த்தப் போவதாகச் சொல்லுகிறார்கள்.

" கனம் நிதி மந்திரி அவர்கள் கொள்கையை விளக்கும் காலத்தில் கன ரகத் தொழில்களை முதல்படியாக அமைக்கப்போவதாகவும், அதற்கு அடுத்தபடியாக குடிசைத் தொழில்களை அபிவிருத்தி செய்யப் போவதாக வும், அதன் மூலமாக மக்களுடைய வாங்கும் சக்தி உயரும் என்றும், விவசாயத்திலே மாறுபாடு செய்யப்போகிறோம் என்றும் சொன்னார்கள்.

26th August 1955] [Sri M. Palaniyandi]

"கன ரகத் தொழிலைப்பற்றி சொல்லும்போது, உருக்குத் தொழிற் சாலையை டில்லி நகரத்திலும் அலுமினியம் தொழிற்சாலையை இன்னொரு இடத்திலும் வைக்கப்போவதாக யோசிக்கப்படுகிறது. எஃகு தொழிற் சாலையை பீஹாரில் நிறுவலாமா என்று பேசப்படுவதாக நேற்று பத்திரிகை யில் பார்த்தேன். அது என் என்று சொல்ல வேண்டும்? தென்னாட்டில் பல அங்கத்தினர்கள், நாங்கள் மட்டுமல்ல, காங்கிரஸ் பக்கத்திலுள்ள அங்கத்தினர்கள்கூட நிச்சயமாக தென்னாட்டிலே சரியான ஆலைத்தொழில் இல்லை யென்று சொல்லிவந்திருக்கிறார்கள். சேலத்தில் ஒரு இரும்பு உருக்கு தொழிற்சாலையை நிறுவ வேண்டுமென்று இந்த மாகாணத்தில் இருக்கக்கூடிய சகல மக்களும் தெரிவித்தும்கூட சேலத்தில் நிலக்கரி கிடை யாது, அதனால் உருக்கு தொழிற்சாலையை ஏற்படுத்த முடியாது என்று மத்திய சர்க்காரால் பேசப்படுகிறது. ஆனால் பத்திராவதியில் நடப்பது என்ன? டன் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் மத்திய சர்க்கார் subsidy கொடுக்கிறார்கள். அதேமாதிரி சேலத்தில் உருக்குத் தொழிற்சாலையை அமைப்பதற்கு வேண்டிய உதவியையும் மத்திய அரசாங்கம் அளிப்பதற்கு முன் வரவேண்டும். அலுமினியம், பாக்சைட் ஆகிய தாதுப் பொருள்கள் சேலத்தில் கிடைக்கின்றன. நிச்சயமாக ஒரு அலுமினிய உற்பத்தி தொழிற் சாலையை அங்கு அமைக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரைக் கட்டாயப் படுத்தவேண்டும். திருச்சி ஜில்லாவில் ஆயிரக்கணக்கான டன் எடை உள்ள ஜிப்சம் கிடைக்கிறது. அதைக்கொண்டு சூப்பர்பாஸ்பேட் செய்ய நல்லதொரு தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். இம்மாதிரி கன ரக தொழிற்சாலைகளை ஏற்படுத்தும்போது அவை தனிப்பட்டோருடைய மேற் பார்வையில் விடப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அப்படிச் செய் வதற்கு பதிலாக மத்திய சர்க்காரோ, சென்னை சர்க்காரோ நேரடியாக நடத்துவதற்கு முன் வர வேண்டும். தனிப்பட்டவர்களுக்கு கொள்ளை லாபம் கிடைக்கும்படியாக விட்டுவிடக் கூடாது என்று சொல்ல விரும்பு கிறேன்.

"சென்ற ஐந்தாண்டு திட்டத்தில் உற்பத்தி பெருகிவிட்டது என்று சொல்லப்பட்டது. பஞ்சாலைத் தொழிலிலும், சிமெண்ட் தொழிலிலும் உற்பத்தி பெருகி யிருக்கிறது. அதன் மூலம் தனிப்பட்டவர்களுக்கு லட்சக் கணக்கான ரூபாய் லாபம் சென்று கொண்டிருக்கிறது. அந்த லாபத்தை நிறுத்திக் கட்டுப்படுத்த வேண்டும். நாட்டின் முன்னேற்றத்துக்குப் பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லும்போது அதற்கு பணம் வேண்டியிருக்கிறது. அந்தப் பணத்திற்கு வரி போட வேண்டுமென்று வரி விசாரணைக் கமிட்டி சொன்னாலும்கூட, நமது நிதி மந்திரி அவர்கள் அம்மாதிரி வரி போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அதைக் கண்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். நிதி மந்திரி அவர்கள் சொன்ன வார்த்தையைக் கடைசி வரையில் காப்பாற்ற வேண்டும். இல்லாவிட்டால் மிகவும் மோசமான நிலைமை வந்துவிடும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மக்களின் மீது மேலும் மேலும் வரியை சுமத்திக்கொண்டிருப்பதற்கு பதிலாக ஆலைத்தொழிலை நடத்தக்கூடிய பெரும் முதலாளிகள் அடைந்துவரும் லாபத்தைக் கட்டுப்படுத்த வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சிமிண்ட் தொழிலில் சுமார் 50 முதல் 60 லட்சம் வரை மூலதனம் போட்டவர்கள்கூட இன்று கொள்ளை லாபம் அடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏ.ஸி.ஸி., டால்மியா போன்றவர்களும், இன்னும் சாதாரணமாக மூலதனம் போட்டவர்களும் ரிசர்வ் நிதியில் எவ்வளவு சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்பதற்கு புள்ளிவிவரத்தை பல அங்கத்தினர்கள் இதற்குமுன் கொடுத்திருக்கிறார்கள். தேயிலைத் தோட்டத் தொழிலின் மூலம் வெள்ளைக்கார முதலாளிகள் நிறைய லாபம் சம்பாதித்து, பணத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார் கள். தேயிலைத் தொழிலில் முதலாளிகள் கொள்ளை லாபம் அடிப்பதற்குக் காரணம் என்னவென்றால், அதில் வேலை செய்யும் தொழிலாளிகளுக்கு முதலாளிகள் யாதொரு விதமான வசதியும் செய்துகொடுக்காததுதான். வெள்ளைக்கார முதலாளிகள் லாபத்தை வெளிநாடுகளுக்கு அனுப்பிக் கொண்டிருப்பதில் அக்கறை செலுத்துகிறார்களே தவிர, தங்கள் கீழ் வேலை செய்யும் தேயிலைத் தோட்டத் தொழிலாளிகளுக்கு வேண்டிய மருத்துவ வசதி, வீட்டு வசதி, குழந்தைகளின் கல்வி வசதி இதுபோன்ற

[Sri M. Palaniyandi] [26th August 1955

பல வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியிருக்க யாதொன்றும் செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள் என்று நீலகிரியிலிருந்து புகார்கள் வந்திருக்கின்றன. சென்ற ஆண்டில் வெள்ளை முதலாளிகள் ஏராளமான லாபத்தைச் சம்பாதித்திருக்கிறார்கள். இவர்களுடைய லாபத்தைச் சர்க்கார் ஏன் கட்டுப்படுத்தக் கூடாது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். பெரும் முதலாளிகளுடைய லாபத்தைக் கட்டுப்படுத்தி அளவுக்கு மேற்பட்ட லாபத்தை சர்க்கார் எடுத்துக் கொள்வதின் மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டங்களை நிறைவேற்றலாம். அப்படிச் செய்தால் மக்கள் மீது வரி போட்டுக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று நான் யோசனை கூற விரும்புகிறேன். மக்களுக்கு இன்னும் வரி போட்டுக் கொண்டிருந்தால் நிச்சயமாக அவர்களுடைய வாழ்க்கைத் தரம் மேலும் மேலும் கீழேதான் போய்விடும்.

11-47 a.m. "விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரம் எப்படி யிருக்கிறது? சாதாரண விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயரவில்லை யென்று உறுதியாகக் கூற முடியும். விவசாயியின் வாழ்க்கைத் தரம் உயரவேண்டுமானால் அரசாங்கம் நிலச் சீர்திருத்த மசோதா கொண்டுவர வேண்டும். நாட்டிலிருக்கக்கூடிய விவசாயிகளுடைய வாங்கும் சக்தியைப் பெருக்க வேண்டும். அவர்களுடைய வாங்கும் சக்தி உயர்ந்தால்தான் அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர முடியும். உற்பத்தியாகிற பொருளை அவர்கள் வாங்குவதற்கு வழி செய்யவேண்டும். உதாரணமாக, நாட்டில் சிமெண்டு உற்பத்தியாகிறது. இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் அதை உபயோகிக்கிறார்களா? கிடையாது. ஆகையால், அது நம் நாட்டில் உபயோகிக்கப்படாமல் வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. ஏனென்றால், மக்களுடைய வாங்கும் சக்தி குறைவாகயிருக்கிறது. அதனால்தான் நிலச் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறோம். அந்தச் சீர்திருத்தம் கொண்டு வந்தால்தான் உற்பத்தியாகிற பொருளைச் சரியான முறையில் வினியோகிக்க முடியும். பொருளை வினியோகிக்க அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறதா? அரசாங்கத்தார் டாடாவுக்கு ரூ. 10 கோடி கொடுக்கிறார்கள். மற்றும் பல கம்பெனிகளுக்கும் இம்மாதிரி உதவியளிக்கப்படுகிறது. ஆனால் அக்கம்பெனிகளின் நிர்வாகத்தில் அரசாங்கத்துக்கு பங்கு அல்லது Control இருக்கிறதா? கிடையாது. லாபத்தையும் அதிகமாக அடிக்க விட்டுவிட்டு, தனிப்பட்ட மூலதனக்காரர்களுக்குக் கடன் கொடுக்கப்படுகிறது. நேற்றுக் கூட மத்திய அரசாங்க நிர்வாகத்தைப்பற்றிப் பேசுகிற காலத்தில் Industrial Finance Corporation-ல் நடக்கும் ஊழல்களைப்பற்றி பல அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள். அவர்கள் அனுசரிக்கும் முறையைக் கண்டித்துப் பேசியிருக்கிறார்கள். சாதாரண, சிறு தொழில்களுக்குக் கடன் கொடுத்து ஆதரிக்கவேண்டுமே யல்லாது, தொழிலாளிகளுக்கும் குறைந்த சம்பளம் கொடுக்கும் தனிப்பட்ட பெரு முதலாளிகளுக்கு வட்டியேயில்லாமல் கடன் கொடுப்பதை நிறுத்தவேண்டும். தனிப்பட்டவர்களுடைய லாபத்தைக் கட்டுப்படுத்தி, தொழிலாளிகளுடைய நிலைமையை உயர்த்தி, நிலச் சீர்திருத்தம் கொண்டு வந்தால்தான் நாட்டு மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும். 'ஐந்து வருஷத் திட்டம் போட்டுவிட்டோம்; அதை அமுலாக்கப் போகிறோம்' என்று சொன்னால் போதாது. நிர்வாகத்திலும் சீர்திருத்தம் செய்யவேண்டும். திட்டத்தின் கர்த்தாக்கள் நிர்வாகத் திறமை வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நிர்வாக அதிகாரம் ஒரே இடத்தில் இருக்கவேண்டும். துரிதமாக முடிவு செய்து திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு அதிகாரிகளுக்கு அதிகாரம் வேண்டும்.

"அடுத்தபடியாக, யாருக்கு வரி போடவேண்டும்? பெரும்பாலான அளவில் நாட்டில் மக்களுடைய வாழ்க்கையிலுள்ள ஏற்றத்தாழ்வைக் குறைக்கவேண்டும். பெரும் பணம் படைத்தவர்களுடைய வரியைக் குறைத்து, சாதாரண மக்களுக்கு வரி ஏற்றப்பட்டு பல துறைகளில் அவர்களிடமிருந்து வரி வசூலிக்கும் வழக்கம் நிறுத்தப்பட வேண்டும். நிறையப் பணம் படைத்த பணக்காரர்களுக்கு வரி போட்டு ஏழைகளுக்கு வரி போடாமலிருந்தால்தான் மக்களுடைய வாங்கும் சக்தி பெருகும். தென்னாட்டிலுள்ள விவசாயிகளுக்குத்தான் சம்பளம் மிகக் குறைவு. அகில இந்திய ரீதியில் தயாரிக்கப்பட்ட ஒரு ரிப்போர்ட்டின்படி பெப்சுவில் பெண்களுக்கு ரூ. 1¾ சம்பளம். தென்னாட்டில் அவர்களுக்கு ரூ. ¾ சம்பளம்

26th August 1955] [Sri M. Palaniyandi]

பளம். இந்த ரிப்போர்ட்டை நாங்கள் தயாரிக்கவில்லே; இதை மத்திய அரசாங்கம் தயாரித்திருக்கிறது. வேறு ராஜ்யத்தில் தொழிலாளிகளுக்குச் சம்பளம் ரூ. 4, ரூ. 5 என்ருல், நம் ராஜ்யத்தில் ரூ. 2 தான். ஆகையால், தொழிலாளிகளுக்கு லாபகரமான தொழிலே ஸ்தாபிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

“சேலத்தில் கிடைக்கும் இரும்பையும், திருச்சிராப்பள்ளியில் கிடைக்கும் ஜிப்சத்தையும் வைத்துக்கொண்டு கனரகத் தொழில் ஆரம்பிக்க சர்க்கார் முன்வர வேண்டும்.

“அடுத்தபடியாக, நீர்ப்பாசன வசதிகளேப்பற்றிக் குறிப்பிடும்போது, ரூ. 2,000, ரூ. 3,000 செலவாகக்கூடிய திட்டங்களே எடுத்துக்கொள்வது மிகவும் கஷ்டம் என்று அரசாங்கத்தார் சொன்னுர்கள். அப்படியானுல், குறைந்த செலவு ஆகக்கூடிய புள்ளம்பாடித் திட்டம், கட்டளேத் திட்டம் ஆகியவைகளே நிறைவேற்றலாம். அவற்ருல் சுமார் 20,000 ஏக்கருக்குத் தண்ணீர் வசதி ஏற்படும். நமது தென்னுடு ஒரு பிற்பட்ட பகுதி. உடையார் பாளயம் தாலுகாவில் இந்த மாதிரி சாதாரணத் திட்டங்களே ஆரம்பித்தால், ஏழைகளுக்கு உபயோகமாயிருக்கும். ஆகையால், புள்ளம்பாடி, கட்டளேத் திட்டங்களே எடுத்துக்கொண்டு, தொழிலாளிகளுக்கு வேலே கொடுத்து, தண்ணீர் இல்லாத கஷ்டத்தை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.”

SRI K. ARANGANATHAN :—“கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது 5 வருஷத் திட்டம் மக்களுடைய திட்டமாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், அதிகாரிகளே நியமித்து நாட்டை எப்படி வளமுள்ளதாக்கமுடியும், எப்படியெல்லாம் தொழிலே அபிவிருத்தி செய்யலாம், மக்களுடைய வேலேயில்லாத் திண்டாட்டத்தை எப்படிப் போக்கமுடியும் என்று சர்க்கார் திட்டமிட்டு முன் வந்திருப்பது ஒரு நல்ல செயல். அதிகாரிகள் மக்களோடு நெருங்கிப் பழகும்போது இந்த 5 வருஷத் திட்டம் சம்பந்தப்பட்டவரையில், சுமுகமாகப் பழக வேண்டும். மக்கள் தங்களுடைய கருத்துக்களேத் தெரிவிக்கக்கூடிய அளவுக்கு அதிகாரிகள் நண்பர்களாகப் பழகவேண்டும். 11-52 a.m.

“நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்கள் பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய நிலேமை உயர்ந்தால் தான் ஆட்சியின் நிலே உயரும். அப்போதுதான் மக்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு ஏதுவாக இருக்கும். இப்போதுள்ள திட்டத்தில் இப்பேற்பட்ட மக்களுடைய முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் மிகக் குறைவு. இவர்கள் முன்னேறினுல்தான் நாடு முன்னேற முடியும். பிற்பட்ட இனத்தவரில் பல வகுப்பார் இருக்கிருர்கள். அவர்களில் சிலர் முற்போக்கு வகுப்பினராக இருப்பதால், பிற்பட்ட இனத்தவருக்குச் சேரவேண்டிய சலுகைகளேயெல்லாம் மேற்படி முற்போக்கு வகுப்பினர் அடைந்துகொண்டு போகிருர்கள் என்பதை அரசாங்கம் மறக்கக்கூடாது. அதை மனதில் வைத்துக்கொண்டு மற்ற திட்டங்களேத் தீட்டவேண்டும் என்பதை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

“தென் ஆற்காடு ஜில்லாவில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. 7, 8 ஆண்டுகளாக இப் பிரச்னே பரிசீலனேயில் இருந்துகொண்டு வருகிறது. இப்பொழுது மத்திய அரசாங்கம் அந்த வேலேயை எடுத்துக்கொண்டு நடத்துவதாக செயலில் ஈடுபட்டிருக்கிறது. ஆனுல், வேலே மிகவும் தாமதமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சென்னே அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கொஞ்சம் வேகமாக வேலேயை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டும். நெய்வேலியில் கிடைக்கக்கூடிய பொருள்களேக்கொண்டு தொழிற்சாலேகள் ஏற்படுத்தலாம். அதன் மூலம் தென் ஆற்காட்டிலும் மற்ற ஜில்லாக்களிலும் உள்ள மக்களுக்கு வேலே கிடைக்குமாறு வசதி செய்யலாம்.

[Sri K. Aranganathan] [26th August 1955

"நெய்வேலியில் கிடைப்பதுபோல் திண்டிவனத்திலும் 3 சதுர மைல் தூரத்துக்கு பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. இதை நானே நேரில் சென்று பார்த்தேன். இந்த நிலக்கரி நெய்வேலி நிலக்கரியைவிட உயர்ந்த ரகமாக இருக்குமென்று நினைக்கிறேன். ஆகையால், இதை mining expert-களைக்கொண்டு அரசாங்கத்தார் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

"அதோடுகூட, தென்னாற்காடு ஜில்லாவில் பல இடங்களில் வெள்ளைக் களிமண் கிடைக்கிறது. அதைக்கொண்டு Ceramic Industry ஆரம்பிக்கலாம். நமக்கு மின்சாரத்துக்கு வேண்டிய அனேகம் சாமான்களை வெள்ளைக் களிமண்ணைக்கொண்டு செய்யமுடியும்; அதற்கு நாம் வெளி நாட்டையோ மற்ற ராஜ்யங்களையோ எதிர்பார்க்கவேண்டியதில்லை. அங்கு கிடைக்கும் களிமண் மிக உயர்ந்த ரகக் களிமண். அது இப்பொழுது ரயிலில் மற்ற ராஜ்யங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அதை வைத்துக் கொண்டு தென்னாற்காட்டில் Ceramic Industry-ஐ ஆரம்பிக்கலாம்.

"நமது ராஜ்யத்திலுள்ள பெரும்பாலான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். ஆனால் நமது அரசாங்கம் இதுவரையில் விவசாயி களுக்குக் காட்டிவந்த சலுகை பெரிய அளவில் இல்லையென்பதுதான் என் கருத்து. நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் ஒரு சில இடத்தில்தான் இருக்கின்றன. நமது ராஜ்யத்திலிருக்கும் வரண்ட பிரதேசங்களான இராமநாதபுரம், தென்னாற்காடு, சேலம், வட ஆற்காடு, செங்கல்பட்டு முதலிய இடங்களில் சரியான நீர்ப்பாசன வசதி கிடையாது. அவ்விடங் களில் புதிய பிராஜெக்டுகளை கொண்டுவரும் பிரச்னை பரிசீலனையில் இருந்துகொண்டிருக்கிறது. தென்னாற்காடு சம்பந்தப்பட்டவரையில் மிக வும் மேட்டுப்பாங்கான செஞ்சி, கல்லக்குரிச்சி முதலிய இடங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. கொடுக்கப்பட்டுள்ள 2-வது ஐந்து வருஷத் திட்ட Preliminary draft proposals-ல் Vidur Reservoir Project சேர்க்கப்பட்டிருக்கிறது. அதனால் நீர்ப்பாசன வசதியளிக்கப்படக்கூடிய நிலங்களில் சுமார் 2,000 ஏக்கர் பாண்டிச்சேரியிலிருக்கிறது. நீர்ப்பாசன அதிகாரிகளைக் கேட்டவரையில், இது சாத்தியமில்லையென்று சொல்லியிருக்கி றார்கள். கலெக்டர் அவர்கள் எந்தக் காரணத்தைக்கொண்டு இந்த திட்டத்தைச் சிபாரிசு செய்தார்கள் என்று தெரியவில்லை. ஏற்கெனவே ஸ்ரீ ஓ. பி. இராமசாமி ரெட்டியார் முதன் மந்திரியாக இருந்த காலத்தில், செஞ்சி தாலூக்காவில் சமலாபுரி என்ற இடத்தில் ஒரு ரிசர்வாயர் கட்டுவதாக இருந்தது. அதைத்தான் என்ஜினியரிங் இலாகாவினர் சிபார்சு செய்திருக்கி றார்கள். அது விடப்பட்டு எப்படி Vidur Reservoir Project இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டது என்று தெரிய வில்லை. ஆகையால் சமலாபுரி-சங்கலாபுரி நதியில் ஒரு அணைக்கட்டு கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-57 a.m. "நமது மாகாணத்தில் கிராம ரோடுகளின் நிலைமை மிகவும் கேவல மாக இருக்கிறது. பல கிராமங்களுக்கு மழை காலத்தில் நடந்துபோவது கூட முடியாமல் கஷ்டமாக இருக்கிறது. இந்த விஷயத்தில் ஜில்லா போர்டுகள் அக்கரை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று நாங்கள் வற் புறுத்திக்கொண்டு வருகிறோம். அரசாங்கமும், ஜில்லா போர்டுகளுக்கு அதிகப் பணஉதவி செய்தால்தான் கிராம ரோடுகளை எல்லாம் அவர்கள் செப்பனிட முடியும்.

"நமது மாகாணத்தில் ஒரேயொரு விவசாய கல்லூரிதான் இருக்கி றது. அது போதுமானதல்ல. உணவு உற்பத்தியை பெருக்கவேண்டும் என்ற முயற்சியில் நாம் ஈடுபட்டிருக்கும் சமயத்தில், விவசாயக் கல்வி கற்றவர்கள் அதிகமாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். அண் ணாமலை யூனிவர்ஸிடியில் ஒரு விவசாய கல்லூரியை ஏற்படுத்தவேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அங்கே ஒரு விவசாய கல்லூரியை திறக்கவேண்டிய முயற்சிகளை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

"ஆஸ்பத்திரிகள் சம்பந்தப்பட்டவரையில் நாம் பிற்போக்கில்தான் இருந்து கொண்டிருக்கிறோம். பல தாலூக்கா தலை நகர ஆஸ்பத்திரிகள் இன்னும் அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஜில்லா போர்டு களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. பல சமயங்களில், இந்த ஜில்லா போர்டுகளால் நிர்வகிக்கப்படும் ஆஸ்பத்திரிகளில் தேவையான மருந்துகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. சர்க்கார் மெடிகல் ஸ்டோரி லிருந்துதான் ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகள் தேவையான மருந்துகளை வாங்கவேண்டுமென்று இருப்பதால் குறிப்பிட்ட காலத்திற்குள் மருந்துகள் வந்து சேருவதில்லை. ஆகவே, அந்தந்த வருஷத்திற்கு ஒதுக்கப் படும் தொகைகூட செலவு செய்யப்படாமல் நின்றுவிடுகிறது. இதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகள், முனி சிபல் ஆஸ்பத்திரிகள், சர்க்கார் மெடிகல் ஸ்டோரிலிருந்துதான் மருந்துகள் வாங்கவேண்டுமென்றிருப்பதை மாற்றி அமைத்து, அரசாங்க ஆஸ்பத்திரி கள் எப்படி நேரிடையாக வாங்கிக்கொள்ளலாம் என்றிருக்கிறதோ, அதைப் போல் மாற்றியமைத்தால், ஓரளவிற்கு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத் தால், கிராம மக்களுக்கு வேண்டிய வைத்திய வசதி சுலபமாகக் கிடைக்கும் என்ற யோசனையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri K. V. RAMASWAMI :—"கனம் உதவி சபாநாயகர் அவர் களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை பொதுவாக நான் வரவேற்கிறேன். நமது நாட்டின் பொருளாதாரத்தை திட்டம் தீட்டி அபிவிருத்தி செய்வதை, முன்னேற்றுவதை, நான் பொதுவாக வரவேற் கிறேன். ஆனால் இந்தத் திட்டத்தின் கீழ், இந்த நாட்டின் செல்வங்களை பெருக்கி அவற்றை பாடுபட்டு அபிவிருத்தி செய்து அனுபவிக்கவேண்டிய மக்களைப்பற்றி, இந்தத் திட்டம் போதிய அக்கரை காட்டாமல், நிராகரித் திருக்கிறது. குறிப்பாக, நமது ராஜ்யத்தில் வாழக்கூடிய மலை ஜாதி யினரைப்பற்றி, இந்தத் திட்டத்தில் எந்தவிதமான அம்சமும் குறிப்பிடப் படவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். நான் மட்டுமல்ல, காங்கிரஸ் தரப்பிலிருந்து இரண்டு அங்கத் தினர்களும் இதை சர்க்காரின் கவனத்திற்கு கொண்டுவந்திருக்கிறார்கள். 11-59 a.m.

"இந்த எட்டு வருட சுதந்திரத்தில் மலைகளில் வாழக்கூடிய மக்கள் அங்கே மனிதர்களாக வாழவில்லை. மிருகங்களிலும் கேவலமாக வாழ் கிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சர்க்காரின் கவனத் திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். மிருகங்களுக்காவது சில வசதிகள், சுதந்திரங்கள் உண்டு. தங்களை எதிர்க்க வரக்கூடிய துஷ்ட மிருகங்களை எதிர்த்து போராட சுதந்திரம் உண்டு, மிருகங்களுக்கு. ஆனால் அந்த மலை களில் இருக்கக்கூடிய மக்களுக்கு அந்த சுதந்திரம்கூட இல்லாமல், எந்த விதமான வசதியும் இல்லாது, மிகவும் கேவலமான பரிதாபப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

"குறிப்பாக சேலம் ஜில்லாவிற்கும் திருச்சி ஜில்லாவிற்கும் எல்லை யாக இருக்கக்கூடிய, விரிந்த பரந்த கொல்லிமலையிலுள்ள மக்கள் மிகவும் மோசமான நிலைமையில் இருக்கிறார்கள். எட்டு வருட சுதந்திர ஆட்சிக்குப்பின்னும் அவர்களைப்பற்றி சர்க்கார் எந்தவிதமான அக்கரையும் எடுத்துக்கொள்ளவில்லை. அவர்களின் வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு சில வசதி களை செய்து கொடுக்கவோ, சிறிதளவும் கவனம் செலுத்தப்படவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். 'வெந்ததைத்தின்று விதி வந்தால் சாகலாம்' என்று அவர்கள் மலையுச்சியின் கீழ் வசித்துக்கொண்டிருக் கிறார்கள். மலையில் அவர்கள் புழுப்போல் செத்து மடிந்துகொண்டிருக் கிறார்கள். மழை வந்துவிட்டால் அவர்கள் என்ன செய்வது என்பது தெரியாத நிலையில் தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

"அடுத்தபடியாக, அந்த மலையிலிருந்து கீழே வருவதற்கு அவர் களுக்கு யாதொரு வசதியும் கிடையாது. இவைகள் ஒருபுறமிருக்க, அந்த மலையில் ஏராளமான இயற்கை வளங்கள் இருக்கின்றன. தேக்கு மரங்கள், சந்தன மரங்கள் எல்லாம் அங்கு ஓங்கி வளர்ந்திருக்கின்றன. இயற்கை உற்பத்தி செய்யக்கூடிய அந்த மலைஜாதியினருக்கு எழுத்து

[Sri K. V. Ramaswami] [26th August 1955

வாசனே கிடையாது. அந்த நிலையில் இருக்கக்கூடிய அவர்களுக்கு பள்ளிக்கூட வசதி, வைத்திய வசதி, கடன் வசதி ஆகியவற்றை உடனடியாக செய்து தருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று சர்க்காரை கேட்டுக் கொள்ளுகிறேன்.

"சமுதாய அபிவிருத்தி திட்டங்கள் எங்கெங்கேயோ போடப்படுகின்றன. எங்கள் ஜில்லாவில் பல மலைகள் இருக்கின்றன. அந்த மலைகளிலெல்லாம் எண்ணற்ற ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். இந்த மலைப் பிரதேசங்களில் இரண்டொரு பிர்க்காக்களை எடுத்துக்கொண்டு, சமுதாய அபிவிருத்தி திட்டங்களைப் புகுத்தி, அவர்களின் வாழ்க்கையை மாற்றியமைக்க உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன்.

"அடுத்தபடியாக, சேலம் ஜில்லா ஒரு பின் தங்கிய ஜில்லா. அந்த ஜில்லாவில் நீர்பாசன வசதி மிகவும் குறைவு என்பது சர்க்காருக்குத் தெரியும். அந்த பின்தங்கிய ஜில்லாவில் இருக்கக்கூடிய பின்தங்கிய தாலூக்காக்களில் ஒன்று ஹரூர் தாலூக்கா. போன பொதுத் தேர்தலின்போது இந்த ஹரூர் தாலூக்காவில் முல்லிக்காடு வாணியாறு நீர்ப்பாசன திட்டம் பற்றி பலத்த பிரசாரம் செய்யப்பட்டது. இந்த திட்டத்தை நிறைவேற்றப்போகிறோம் என்று சொல்லி, சர்க்கார் கட்சி ஏராளமான ஓட்டுகளை பெற முயற்சி செய்தது. சர்க்கார் அப்போது வெளியிட்ட "ஐந்தாண்டு அபிவிருத்தி" என்ற அறிக்கையில் இதைப்பற்றி பிரமாதமாக பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. ஆயிரம் ரூபாய் வரையில் செலவிட்டு இந்த திட்டம் சர்வே செய்யப்பட்டது. ஆனால், இந்த திட்டத்தைப்பற்றி இன்றைக்கு பேச்சுமில்லை, மூச்சுமில்லை. சேர்வராயன் மலையிலிருந்து ஏராளமான தண்ணீர் இந்த வாணியாற்றிற்கு வருகிறது. இந்த வாணியாற்று திட்டத்தை நிறைவேற்றுவதால் 4,000 ஏக்கருக்கு அதிகமான நிலப்பரப்பு நீர்ப்பாசன வசதி பெறும். மிகக் குறைந்த செலவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றமுடியும். ஆகவே இந்தத் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு நிறைவேற்றவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் வற்புறுத்த ஆசைப்படுகிறேன்.

"அடுத்தபடியாக, நாமக்கல் தாலூக்கா, மோஹனூர் பிர்க்காவில் ஒரு வாய்க்கால் வந்து சேருகிறது. அதனால் பல நூறு ஏக்கர் நீர்ப்பாசன வசதி பெற்று வருகிறது. அங்கே ஒரு **Bed regulator** கட்டுவதற்கு இடையூறாக இன்றைக்கு ஒரு குறம்பு இருக்கிறது. இது சேதத்தை உண்டாக்கி நஷ்டத்தை விளைவிக்கிறது. அந்த பகுதியில் இருக்கக்கூடிய விவசாயிகள் ஒரு **Bed regulator** கட்டுவதற்கு தங்களால் இயன்ற சகல உதவிகளையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள் எனவே, நான் குறிப்பிட்ட இடையூறை நீக்கி, ஒரு **Bed regulator** கட்டுவதற்கு சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"அடுத்தபடியாக சேலம் ஜில்லாவில் ஏராளமான கனிப் பொருள்கள் உண்டு என்பது சர்க்காருக்குத் தெரியும். அன்றைக்கு அமரகவி பாரதியார் பாடினார் 'செல்வம் எத்தனையுண்டு புவிமீதே, அவையாவும் படைத்த தமிழ் நாடு" என்று. உலகத்தில் இருக்கக்கூடிய செல்வங்கள் எல்லாவற்றையும் விட அபரிமிதமான செல்வங்கள் தமிழ் நாட்டில் உண்டு என்று அன்றைக்கு சொன்னார் பாரதியார். அந்தச் செல்வங்களில் பெரும் பகுதி சேலம் ஜில்லாவில்தான் இருக்கின்றன. அங்கே, இரும்பு உண்டு, மாக்னிசைட் உண்டு, தங்கம் உண்டு, வெள்ளி உண்டு, இன்னும் பல செல்வங்கள் உண்டு. சேலத்தில் இருக்கக்கூடிய இரும்பைப்பற்றி 200 ஆண்டுகளுக்கு மேலாகவே நமக்குத் தெரியும். ஆனால் அந்த இரும்பை எடுக்க எந்தவிதமான முயற்சிகளும் எடுக்கப்படவில்லை. முயற்சி செய்வதாக சர்க்கார் பல தடவைகளில் பிரசாரம் செய்துவந்திருந்தபோதிலும், 200 வருடங்களுக்கு மேலாகவே தெரியக்கூடிய இரும்பை எடுக்க திட்டவட்டமாக எந்த முயற்சியும் எடுக்கவில்லை. பல தடவைகள் சொல்லப்பட்டது, இந்த இரும்பை வெட்டியெடுக்க திட்டம் தீட்டப்போகிறோம் என்று. பத்திரிக்கைகளை புரட்டினால் தெரியும். பல தடவைகளில் மந்திரிகள் சொல்லியிருக்கிறார்கள். திட்ட கமிஷன் சொல்லியிருக்கிறது. நமக்கு

26th August 1955] [Sri K. V. Ramaswami]

கொடுக்கப்பட்ட '**Second Five Year Plan Preliminary Draft Proposals**' என்ற புத்தகத்திலும்கூட அதைப்பற்றி குறிப்பிடப் பட்டிருந்தது. ஆனால் கடைசியாக மிகவும் வருத்தத்துடன் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அந்த யோசனை கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மந்திரிகளால் கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய வாக்குறுதிகளி லிருந்து அந்த திட்டம் நிறைவேறும் என்று எந்தவிதமான நம்பிக் கையும் ஏற்பட முடியாமலிருக்கிறது. இந்த இரும்பை தேடி எடுத்தால், அதிலிருந்து பல உரப் பொருட்கள் கிடைக்குமென்று நிபுணர்கள் கூறு கிறார்கள். குறிப்பாக, பாஸ்பரஸ், சிலிகா, கந்தகம் போன்ற உபப் பொருட்கள் (**By-products**) கிடைக்கும். அவற்றை வைத்துக்கொண்டு இன்னும் பல தொழில்களை ஏற்படுத்தி, அதன்மூலம் வேலையில்லாமல் தவியாய் தவித்துக்கொண்டிருக்கும் எண்ணற்றுயிர மக்களுக்கு வேலை கொடுக்க முடியும். எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் கவனம் செலுத்தவேண்டுமென்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

"அடுத்தபடியாக சேலத்தில் பாக்ஸைட் உண்டு. உலகத்தில் கிடைக் கக்கூடிய பாக்ஸைட்டில் தலை சிறந்தது சேலத்தில் இருக்கக்கூடியது. அது மிகவும் உயர்ந்த ரகத்தை சேர்ந்தது என்று நிபுணர்கள் சர்க்காருக்கு சொல்லி இருக்கிறார்கள். அதைத் தோண்டி எடுத்தால் ஒரு அருமையான தொழிற்சாலையை சேலத்தில் உண்டாக்க முடியும். ஆனால் இந்த செல் வத்தை தோண்டி எடுப்பதாக சொல்லி விட்டு கடைசியாக இதற்கு போதிய பணமும், **technical assistance** கிடையாது என்ற காரணங்களைக் காட்டி இந்த அலுமினியத்திற்கும் அரோகரா போட்டு விட்டது சர்க்கார்.

"அதன் பிறகு மேட்டூரிலே ஒரு **Paper Mills** கட்ட முடியும். இன்றைக்கு சென்னை ராஜ்யத்திலே ஒரு பேப்பர் மில் கூட கிடையாது. ஆனால் ஆந்திராவிலேயும், மைசூரிலேயும் **Paper Mills** இருக்கின்றன. மேட்டூரிலே பேப்பர் மில்லுக்கு வேண்டிய **Chemicals** உற்பத்தி செய் யப்படுகின்றன. காஸ்டிக் சோடா, க்ளோரின், அலம், சோடியம் சல்பைட் போன்ற **Chemicals, Mettur Chemicals**-ல் உற்பத்தியாகின்றன. இங்கிருந்து உற்பத்தியாகும் ரசாயனப் பொருட்கள்தான் புனலூர் பேப்பர் மில், பத்ராவதி பேப்பர் மில் முதலியனவற்றுக்கு அனுப்பப்படுகின்றன. ஆகவே அந்த கெமிக்கல்ஸையும் வைத்துக் கொண்டு, கொள்ளேகாலிலே கிடைக்கக்கூடிய மூங்கிலையும் கொண்டு வந்து மேட்டூரிலே ஒரு அருமை யான காகித தொழிற்சாலை ஏற்படுத்த முடியும். அங்கேயுள்ள தொழில் அதிபர்களும் இதற்கு தயாராக இருக்கிறார்கள். இதை சர்க்காருக்கும் தெரி வித்திருக்கிறார்கள். ஆகவே மேட்டூரிலே ஒரு பேப்பர் மில்லை ஏற்படுத்தும்படி சர்க்காரைக் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துகொள்ளு கிறேன்."

SRI A. RAMASWAMI TEVAR :—" கனம் **Deputy Speaker-in-charge**. (சிரிப்பு.) நான் சொல்வதைப்பார்த்து எல்லோரும் நகைக்கின்றார் கள். ஆனால் சட்டப்பிரகாரம் **Deputy Speaker-in-charge** என்றுதான் சொல்ல வேண்டும். அதுதான் சரியான முறை. 12-9 p.m.

" இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே திருச்சிராப்பள்ளி யிலேயிருந்து **New Kattalai High Level Channel Scheme, Pullambadi Canal Scheme** என்ற இரு திட்டங்களும் **Planning Commission**-க்கு சிபார்சு செய்து அனுப்பப்பட்டன. அதை கனம் நிதி மந்திரி அவர்கள் பெரும் முயற்சியினால் ஏற்படுத்தி விட்டால் அநேக ஆயிரக்கணக்கான நிலங்கள் விவசாயத்திற்கு வந்து உணவு அதிகமாக உற்பத்தியாகும். சில நாட்களுக்கு முன்னால் நமது நிதி அமைச்சர் மத்திய சர்க்காரிடம் நமது திட்டங்களைப்பற்றி நன்றாக எடுத்துச் சொல் லியும், பொருள் அதற்கு குறைவாக கிடைத்திருப்பதற்கு காரணம் என்ன வென்று தெரியவில்லை.

"நான் இவ்விடத்தில் முக்கியமாக சொல்லிக் கொள்ள விரும்புவது நகர சபையின் அபிவிருத்தியைப் பற்றி. அதிர்ஷ்ட வசமாக நமது நிதி அமைச்சர் அவர்களும் கோயம்பத்தூர் நகர சபை பிரதி நிதியாகவும் இருக்கிறார்கள். கோயம்பத்தூர், திருச்சிராப்பள்ளி மதுரை, சேலம் போன்ற

பெரிய நகர சபைகளில் ஜனங்கள் வியாபாரத்திற்காகவும், நியாய ஸ்தலங்களுக்காகவும், மற்ற முக்கியமான காரியங்களுக்காகவும் **(Floating population)** வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அந் நகர சபைகளில் தண்ணீர் வசதி குறைவாக இருக்கிறது. கோயம்பத்தூரிலே கூட, நான் சென்றிருந்த போது பார்த்தேன். பகலில் தண்ணீர் விடுகிறார்கள். இரவில் தண்ணீரை நிறுத்தி விடுகிறார்கள். இம்மாதிரி ஒவ்வொரு நகர சபையிலும் தண்ணீர் கஷ்டம் இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்த கஷ்டத்தைப் போக்க நடவடிக்கை எடுத்தால் ஜனங்களுக்கு மிகவும் நன்மையாக இருக்கும்.

"இரண்டாவதாக பாதாள சாக்கடை **(underground drainage)** அநேக பெரிய நகர சபைகளில்கூட கிடையாது. இதனால் சுகாதார வசதி குறைந்திருக்கிறது. ஆகவே இந்த 2-வது ஐந்தாண்டு திட்டத்தில் எல்லா நகர சபைகளுக்கும் பாதாள சாக்கடை திட்டத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"மூன்றாவதாக கிராமங்களில் இருக்கிறவர்கள் எல்லாம் நகரத்தில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், பிரசவ விடுதிகளுக்கும் அதிகமாக வருகிறார்கள். ஆனால் இங்கு உள்ள ஆஸ்பத்திரிகளில் படுக்கைகளும், பிரசவ விடுதி வசதிகளும் குறைவு. இதை ஒவ்வொரு அங்கத்தினரும் இச்சபையில் சொல்லியிருப்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியும். ஆகையினால் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே ஆஸ்பத்திரிகளையும், பிரசவ விடுதிகளையும் மிகவும் விருத்தி செய்யவேண்டும். எனவே நகர சபைகளுக்கு 'Medical relief' க்காக உதவி செய்யவேண்டும் என்பதை இந்த சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திண்டுக்கல், திருச்சிராப்பள்ளி போன்றவிடங்களில் சுருட்டுத் தொழில் குடிசைத் தொழிலாக இருக்கிறது. அது இப்பொழுது க்ஷீண தெசையை அடைந்திருக்கிறது. அதற்கு அரசாங்கம் இது வரையில் எந்த வித உதவியும் செய்ததே கிடையாது. முக்கியமாக கனம் நிதி மந்திரி அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது என்ன வென்றால் அமெரிக்கா தவிர, இந்த திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல் முதலியவிடங்களில் உற்பத்தியாகும் சுருட்டுகள் இந்த உலகம் பூராவும் பரவியிருக்கிறது. உலகத்தில் இந்த சுருட்டுகளை மிகவும் மெச்சிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலிலிருந்து மத்திய சர்க்காருக்கும், நமது சர்க்காருக்கும் அதிக வருவாய் வருகிறது. இந்தத் தொழிலில் பல்லாயிரக் கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே இந்தக் குடிசைத் தொழிலை விருத்தி செய்யவேண்டுமென்று நிதி மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"கடைசியாக கனம் நிதி மந்திரி அவர்கள் நகர சபைப் பிரதி நிதியாகவும் இருப்பதினாலே நகர சபைகளுக்கு தண்ணீர், பாதாள சாக்கடை, ஆஸ்பத்திரி, பிரசவ விடுதி முதலிய வசதிகளைச் செய்து கொடுக்கும்படியாக மறு முறையும் கேட்டுக் கொள்ளுகிறேன். மேலேயுள்ள வசதிகளையெல்லாம் திருச்சிராப்பள்ளி நகர சபைக்கும் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, உதவி சபாநாயகர் அவர்களுக்கு என் வந்தனத்தையும் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

12-15 p.m. *Sri K. MOOKKIAH THEVAR :—"கனம் உதவி தலைவர் அவர்களே, இந்த இரண்டாது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி பேசுகிற போது முதலாவது ஐந்தாண்டு திட்டம் என்னவாயிற்று, அது எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது, அதன் முடிவு என்ன என்பதைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. 1952-ம் வருஷத் தேர்தலின் போது காங்கிரஸ் மானிபெஸ்டோ தனியாக ஒன்றும் கொடுக்கவில்லை. அதற்கு பதிலாக இந்த திட்டத்தை புஸ்தக ரூபமாக பிரசுரித்து அதுதான் மானிபெஸ்டோவாக தேர்தலில் வைக்கப்பட்டது. அப்பொழுது தேர்தல் நடந்த காலத்தில் அந்த திட்ட புஸ்தகங்களின் அட்டையைப் பார்த்தால், மதுரை, ராமேஸ்வரம், தஞ்சை கோவில் கோபுரங்களை அச்சடித்திருந்தார்கள். அதைப்

26th August 1955] [Sri K. Mookkiah Thevar]

பார்த்து முதலில் மக்கள் என்ன நினைத்தார்கள் என்றால் அந்த கோபுரங்களின் அளவு தாங்களும் உயரத்தான் போகிறோம் என்று நினைத்து காங்கிரஸ் நல்ல முறையில் நிச்சயமாக வெற்றி பெறவேண்டும் என்று நிறைய வோட்டுப் போட்டு வெற்றியைக் கொடுத்தார்கள். வெற்றி கிடைத்த பிறகு கடந்த ஐந்து வருஷத்தில் என்னத்தைப் பார்த்திருக்கிறோம் என்றால் நாட்டில் என்ன நடந்திருக்கிறது என்று பார்த்தால் பசியும், பட்டினியும், விபசாரமும், வேலையில்லா திண்டாட்டமும்தான் நாட்டில் பெருகிக் கொண்டிருந்தது. அந்த ஐந்து வருஷ திட்டத்தைப் பின் பற்றி இந்த ஐந்தாண்டு திட்டத்தையும் தயாரித்திருக்கிறார்களா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அந்த அடிப்படையில் இதுவும் இருந்தால் இதுவும் அடுத்து வரும் தேர்தல் மானிபெஸ்டோவாகத்தான் இருக்க முடியும் என்றுதான் இந்தப் பக்கத்திலுள்ளவர்கள் முக்கியமாக சந்தேகப்படக் கூடியதாக இருக்கிறது. அது மாதிரி இருக்கக் கூடாது என்பதுதான் எல்லோருடைய விருப்பம். நாடுமுன்னேற்றமடைந்து சுபிட்சம் அடைய வேண்டும் என்றால் நல்ல முறையில் தயாரித்திருக்கவேண்டும்.

" மற்றும் இந்த திட்டத்தை எடுத்துப் பார்த்தால் இதில் நன்மைகளும் இருக்கத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட நன்மைகள் இருக்கும்போது அது எப்படி மக்களிடத்தில் சேருகிறது என்று பார்க்கும்போது அது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும். கிராமங்களுக்கு சலுகைகள் கொடுக்க வேண்டும் என்று நினைத்தால் அது சரிவர போய்ச் சேருகிறதா என்று பார்த்தால் கழுதை தேய்ந்து கட்டெரும்பு ஆகும் கதையைப்போல் ஆகி விடுகிறது. இந்த திட்டங்களையெல்லாம் நல்ல முறையில் அமுல் நடத்த வேண்டும் என்றால் அரசாங்கத்தின் அதிகாரிகளில் முக்கால் வாசிப் பேர்கள் அவைகளை நல்ல முறையில் நடத்துவதற்கு உதவி செய்வதாக இல்லை. அவர்கள் பழங் காலத்தில் எந்த முறையில் இருந்தார்களோ அந்த முறையில்தான் இப்பொழுதும் இருக்கிறார்கள். அவர்களுடைய மனம் இன்னும் மாறுதல் அடையவில்லை. இவர்களிடம் பணத்தை ஒப்படைப்பது களிம்புஏறின பாத்திரத்தில் பாலை வைப்பது போலாகும். இந்த திட்டங்கள்மூலமாக எந்தெந்த தாலூகாக்களுக்கு அரசாங்கத்தால் சலுகைகள் கொடுக்கப் படுகின்றனவோ அவைகள் எல்லாம் அதிகமாக நகரங்களுக்குத்தான் செல்லுகிறது, கிராமங்களுக்கு அதிகமாகச் செல்லுவதில்லை. கிராமங்களையும் அதிகமாக கவனிப்பது இல்லை. தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்றால் அவைகள் கிராமங்களுக்குச் செல்வது இல்லை, நகரங்களுக்குத் தான் செல்லுகிறது. அரசாங்கத்தார் நகரங்களைத்தான் சலுகைகள் காட்டுவதில் அதிகமாக கவனிக்கிறார்கள். இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகளை கவனித்தாலும் நகரங்களுக்குத்தான் சலுகைகள் காட்டப் பட்டிருப்பது நன்றாக தெரியும். அதனால் இரண்டாது ஐந்தாண்டு திட்டத்திலாவது கிராமங்களுக்கு அதிகப்படியான சலுகைகள் காட்டுவதற்கான திட்டங்களைப் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த சந்தர்ப்பத்தை பயன் படுத்திக்கொண்டு கிராமங்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" நமது நாடு நீர்வளம் நில வளம் பொருந்திய நாடு என்று சொல்லப் படுகிறது. மற்றும் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் வேண்டிய நில வளத்தையும் நீர் வளத்தையும் செய்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். இப்பொழுது நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கம் இருப்பதாகக் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதைப்பற்றிய பரிசீலனையைச் செய்ய நிபுணர்களை வரவழைக்கிறார்கள். அப்படிப் பரிசீலனை செய்து அங்கு வேண்டிய தொழில்களை ஆரம்பிக்கப்போவதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு பல ஸ்கீம்கள் போடப் பட்டிருக்கின்றன. ஆனால் நம் நாட்டில் இன்னும் அநேகம் இயற்கை வளங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் நிறைய மினரல்கள் இருக்கின்றன. அவைகளையெல்லாம் இன்னும் சரியானபடி கண்டு பிடிக்கவில்லை. எங்கு நிலக்கரி இருக்கிறதோ, எங்கு இரும்பு இருக்கிறதோ, எங்கு தங்கம் இருக்கிறதோ, அவைகளை சர்வே செய்து அவைகளைக் கண்டு பிடிப்பதாக இல்லை. ஆனால் யாராகிலும் ஒரு இடத்தில் இருக்கிறது என்று சொன்னால் அந்த இடத்தில் இருக்கிறதா என்று தான் பார்க்கிறார்கள். ஆனால் இதற்கு முன் என்ன நடந்தது ? எங்கு எல்லாம் அப்படிப்பட்ட வளங்கள் இருந்தனவோ

[Sri K. Mookkiah Thevar] [26th August 1955

அதையெல்லாம் ஆராய்ச்சி மூலமாகக் கண்டு பிடித்து வந்தார்கள். மதுரை மலைப்பிரதேசங்களில் ஈயம் தங்கம் போன்ற பொருள்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி 1885-ம் வருஷமே வெள்ளையர்கள் இருந்த காலத்தில் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். அப்படி இயற்கை வளங்கள் இருக்கும் இடங்களைக் கண்டு பிடித்து பூமியில் எந்த இடங்களில் இருக்கின்றனவோ அந்த இடங்களைக் கண்டுபிடித்து அவைகளை வைத்துக்கொண்டு திட்டம் தயாரித்தால் அது மிகவும் நன்றாக இருக்கும்.

"அடுத்தபடியாக உலக சரித்திரத்திலேயே பிரசித்த பெற்ற நகரமாக இருந்த துறைமுகப்பட்டணங்களை கவனிப்பதாக இல்லை. இன்றைக்கு கடற்கரை வளத்தில் அதிகப்படியான கவனம் செலுத்தப்படுவதாக இல்லை. நாகரீகத்தையும் வியாபாரத்தையும் பரப்பிய காயல்பட்டிணம், தொண்டி போன்ற துறைமுகப் பட்டிணங்கள் இப்பொழுது மண் மேடிட்டு இருக்கின்றன. கிழக்கு துரைமுகப்பட்டணங்களில் கடற்கரையிலும் முத்துக்குளித்தல், மீன் பிடித்தல், உப்பு, கிளிஞ்சல் எடுத்தல் போன்ற தொழில்களை ஆரம்பிக்கலாம். அப்படி எடுக்கப்பட்ட முத்துக்கள் உலக பிரசித்தி பெற்றது. உலகத்திலுள்ள பெரிய நகரங்களுக்கு அதை ஏற்றுமதி செய்து கொண்டு வந்திருக்கிறார்கள். அப்படி சரித்திரம் பிரசித்தி பெற்ற தொழில் இப்பொழுது மூடப்பட்டிருக்கிறது. அதை சரியானபடி கண்டு பிடித்து அதை மறுபடியும் ஆரம்பித்தால் ராமநாதபுரத்தில் பல ஆயிரம் பேர்களுக்கு வேலை கிடைக்கும். லாபம் கொடுக்கக் கூடிய அப்படிப்பட்ட பெரிய தொழிலை ஆரம்பித்து கடல் வளத்தை சரியானபடி உபயோகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இதில் அதிகப்படியான கவனம் செலுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்படிப்பட்ட கடற்கரை வளப்பத்தைத் தவிர அங்கு அநேகம் பனை மரங்கள் இருக்கின்றன. 100 அல்லது 150 வருஷங்களுக்கு முன்பாக இந்த பனை மரங்களை வைத்துக் கொண்டு அங்கு பெரிய தொழிலை நடத்தி வந்தார்கள். இப்பொழுதும் அங்கு பெரிய தொழிலை ஆரம்பிக்கலாம். சமீபத்தில் டைரெக்டர் ஆப் இண்டஸ்ட்ரீஸ் ஸ்ரீ ராயப்பா அவர்களும் இதைப்பற்றி ஆராய்ச்சி செய்து அதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அங்குள்ள பனை மரங்களின் பனை ஓலைகளைக் கொண்டு நல்ல அழகான சாமான்களைச் செய்யலாம் என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி செய்யக் கூடிய சாமான்களை அமெரிக்காவிற்குக்கூட ஏற்றுமதி செய்தால் நல்ல லாபம் கிடைக்கும். அங்கு அதன் தரத்தைப் பற்றி புகழ்ந்து எடுத்துக் கொள்ளுவார்கள். இப்பொழுதும் அப்படிப்பட்ட சாமான்களை அவர்கள் எடுத்துக்கொள்ள தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு தொழிற் சாலையை அங்கு அமைத்தால் சுமார் ஆயிரம் மக்களுக்கு அதில் வேலை கிடைக்கும். இப்பொழுது ராமநாதபுரம் ஜில்லாவில் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கும் மக்களுக்கு வேலை கொடுக்கலாம். அதை யோசித்து இப்பொழுது அதற்கு திட்டம் தயாரித்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க விஷயம்.

"ராமநாதபுரம் ஜில்லா இப்பொழுது ஒரு பஞ்சப் பிரதேசமாக இருக்கிறது. அங்குள்ளவர்கள் வெளியேறி விட்டார்கள். வீடுகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. அங்கு திட்டம் போட்டால் யாருக்கு அங்கு திட்டம் போடுகிறார்கள் என்பது தெரியவில்லை. அதைக்கொண்டு யார் நன்றியை அடையப்போகிறார்கள் என்பதும் தெரியவில்லை. அங்கு பங்கைக் கொடுத்து விட்டு யாரைக் கொண்டு வேலை செய்யப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. அங்கு வீடுகளை விட்டு விட்டு வெளிநாடுகளுக்கு வியாபாரம் நிமித்தமாகவும் போயிருக்கிறார்கள். நகரத்தார்கள் சிலோன் மலேயா முதலிய இடங்களுக்குச் சென்றிருக்கிறார்கள். வெளியூர்களுக்கு அனுப்பப் பட்டிருக்கும் ஜனங்களை திருப்பி அனுப்பப்பட்டு அவர்களும் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். அதைப்பார்த்தால் தென்னாடும் கூடிய சீக்கிரத்தில் அகதிக் காம்ப் என்று சொல்லக் கூடிய நிலைமைக்கு வந்து விடுமோ என்று தோன்றுகிறது. அதனால் அங்கு கடல் பகுதிகளில் பெரிய தொழில்களை ஆரம்பிக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. அங்குள்ள துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதும் அவசியமாக இருக்கிறது. அத்துடன் பனை மரங்கள் போன்ற வளங்களை நல்ல முறையில் உபயோகப்படுத்தி

26th August 1955] [Sri K. Mookkiah Thevar]

சாமான்களாகத் தயாரித்து வெளி நாட்டிற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். மற்றும் பனை மரத்திலிருந்து கருப்பட்டி தயாரிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஏற்கனவே அங்கு அப்படிப்பட்ட தொழில் ஒன்று நடைபெற்று வந்து அதை இப்பொழுது நிறுத்தி விட்டார்கள். அந்தத் தொழிலை மீண்டும் ஆரம்பித்து நடத்தினால் அதாவது பனஞ்சர்க் கரையை உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் மக்களுக்கு எவ்வளவோ சௌகர்யமாக இருக்கும். இன்றைக்கு தஞ்சை ஜில்லாவில் கரும்பு பயிரிட வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதற்கு நீர்ப்பாசனமுள்ள நிலத்தைக் கொடுப்பானேன். கரும்பு உற்பத்தி செய்ய அப்படிப்பட்ட நீர்ப்பாசன இடத்தைக் கொடுக்காமல் இந்த ஜில்லாவில் கருப்பட்டியை உற்பத்தி செய்ய ஆரம்பித்தால் ஜனங்களுடைய ஆரோக்கியத்திற்கு எவ்வளவோ நல்லதாக இருக்கும். இப்பொழுது ஏ, பி, சி, முதற்கொண்டு இஜட் வரையில் சொல்லக் கூடிய வைடமின் அவ்வளவும் அந்த கருப்பட்டியில் இருக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். மக்களுடைய சரீரத்தில் சர்க்கரை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த கருப்பட்டியை உபயோகித்தால் அப்படிப்பட்ட வியாதியே வருவதற்கு இடமில்லை. இப்படிப்பட்ட இயற்கை வளங்களை விரயம் செய்யாமல் அங்கு தொழிற்சாலைகளை ஆரம்பித்தால் அந்த ஜில்லா எவ்வளவோ முன்னேற்றமடையும். அதை கருத்தில் கொண்டு நாடு முன்னேற்றமடைவதற்கு வேண்டிய திட்டத்தை தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அது மட்டுமல்ல இப்பொழுது அச்சிடப்பட்ட புஸ்தகங்கள் பிரசாரத்திற்கு என்று இருக்கக் கூடாது. இப்பொழுது தயாரிக்கப்பட்டிருக்கும் திட்டத்தைப் பார்த்தால் புள்ளி விவரங்கள் கொடுப்பதாகத்தான் இருக்கிறது. முதல் ஐந்தாண்டு திட்டத்தில் பல திட்டங்களை வகுத்திருந்தார்கள். ஆனால் அவைகள் ஏழைகளுக்குப் போகவில்லை. அதிகாரிகள் அதை சரியாக புரிந்து கொண்டு வேலை செய்யவில்லை. அப்படி புரிந்து கொண்டு வேலை செய்வதற்கும் அவர்களுக்கு மனதில்லை. அவர்களுக்கு லாபம் இருக்கிறதா என்று பார்த்துக்கொண்டுதான் வேலை செய்தார்கள். போன திட்டம் திருவாழ்த்தான் குதிரை வளர்த்ததுபோல் ஆயிற்று. திட்டத்தைப் பார்த்தால் ஏழைகள் தங்களுக்கு ஏதோ வரப்போகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அது எந்த விதத்தில் போய் முடிந்தது என்றால் : அவர்களுக்கு ஏதாகிலும் நன்மை கிடைத்ததா என்றால் : நாய்க்கு ஒரு எலும்பு துண்டு கிடைத்தவுடன் அந்த நாய் அந்த எலும்புத் துண்டை கடித்து அப்படி கடிப்பதால் தன்னுடைய வாயிலிருந்து வரும் ரத்தத்தை எலும்பின் ரத்தம் என்று நினைத்துக் கொண்டு அதை ருசி பார்த்ததுபோல் இருந்தது ஏழை மக்களுடைய நிலைமை. அந்த விதத்தில் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்ளுகிறேன். முதல் ஐந்தாண்டு திட்டத்தில் ஏழைகளுக்கு சரியானபடி நன்மை செய்யப் படவில்லை. அதை மனதில் வைத்துக் கொண்டு இந்த திட்டத்திலாவது அவர்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதிகாரிகள் சரியானபடி நடந்து கொள்ளுகிறார்களா, சுரண்டல் இல்லாமல் இருக்கிறதா, என்பதையும் கண்காணிக்கவேண்டும். யாரும் லாபத்தை எதிர் பார்க்காமல் இந்த திட்டத்தை அமுல் நடத்தும் அளவில் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன்."

Sri K. S. ARDHANARESWARA GOUNDER—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்பற்றிய புள்ளி விவரங்களைப் பார்த்தால் அவை மிகவும் வரவேற்கக் கூடிய விஷயமாக இருக்கிறது. 'திட்டம் சரியாக இல்லை, முதல் ஐந்தாண்டுத் திட்டமும் சரியாக நடைபெறவில்லை' என்று வாயளவில் யாரும் சொல்லிவிடலாம். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேட்டூர் கால்வாய் நீர் வசதியுள்ள இடங்களில் நீங்கள்போய் பார்த்தால் சர்க்கார் எட்டு வருஷ காலத்திற்குள் என்னென்ன சாதனங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பது நன்கு தெரிந்துகொள்ள முடியும். இருந்தாலும் ஆங்காங்கே இருக்கக்கூடிய சில அதிகாரிகளினால் சில குறைபாடுகள் ஏற்பட்டிருக்க முடியும். இது எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்களுக்கு முதல் ஐந்தாண்டுத் திட் 12-25 p.m.

டத்தைப்பற்றியே குறை கூறுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கக்கூடியதாய் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றிபெற வேண்டுமென்றால் முதல் ஐந்தாண்டு திட்டத்தினால் நமக்கு ஏற்பட்டிருக்கும் படிப்பினைகளை மனதில் வைத்துக்கொண்டு யோசனைகளைச் சொல்லவேண்டும். எதிர்க்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் உருவான முறையில் நல்ல யோசனைகளைச் சொல்லவேண்டுமே தவிர சர்க்காரைப்பற்றி குறைகூறிக் கொண்டேயிருப்பதினால் எவ்வித பிரயோஜனமும் கிடையாது.

“ சேலத்திலும், இதர இடங்களிலும் கன ரகத் தொழிற்சாலைகளை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. சேலத்தில் கனிப்பொருள்கள் எதுவும் இல்லையென்று சொல்ல முடியாது. பல வருஷங்களாக அவ்விடத்தில் இருக்கும் இரும்பை எடுத்து வேலை செய்ய உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயாவது நிச்சயம் உருக்குத் தொழிற்சாலையை ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கப்படுமென்று நினைக்கிறேன். அது நின்றுபோய்விடுமோ என்று பயப்படவேண்டிய அவசியம் இல்லையென்று எண்ணுகிறேன். இருந்தாலும் கொஞ்சம் தயக்கமாகத்தான் இருக்கிறது. சென்ற ஐந்தாண்டு திட்டத்திலேயே வருமென்று சொன்னார்கள். வரவில்லை. இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயாவது வருமென்று எண்ணிக் கொண்டிருக்கும்போது சிலர் அங்கே ஏற்படுத்துவது சாத்தியமில்லை என்று சொல்லுகிறார்கள். அதன் காரணமாகத்தான் அந்தத் தயக்கம் ஏற்படுகிறது. சீக்கிரமேயே அங்கே இருக்கும் இரும்பை எடுப்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் சர்க்கார் செய்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அன்றைக்கு ஒருவர் சொன்னதுபோல, “ சுதந்திரப் போராட்ட காலத்தில் சேலம் ஜில்லா முன்னணியில் இருந்தது என்று சொல்லுகின்ற அளவோடு ஏமாற்றிவிடுகின்றார்கள் ’, என்று இருக்கக்கூடாது. சேலம் ஜில்லா மக்கள் சர்க்கார் போடுகின்ற திட்டங்களையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க பூர்ணமாக ஒத்துழைப்பார்கள்.

“ எனக்கு முன்பு பேசிய பல அங்கத்தினர்கள் இந்தச் சபையில் சேலம் ஜில்லாவில் பாலி டெக்னிக் பள்ளியை ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இதுபோல் எத்தனையோ முறைகள் எடுத்துச் சொல்லி வந்திருப்பினும்கூட இந்தத் தொழிற் கல்லூரியை கோயம்பத்தூருக்குக் கொடுத்திருக்கிறார்கள். சேலத்திற்குக் கொடுக்கப்படவில்லை. பொதுவாக இருக்கக்கூடிய தொழிற் கல்லூரிகள் எல்லாம் கோயம்பத்தூரில்தான் இருக்கின்றன. மேட்டூரை எடுத்துக்கொண்டால் அங்கே இருக்கும் அத்தனை மக்களும் சர்க்கார் அதிகாரிகளாக இருக்கிறார்கள். என் புதியதாக ஆரம்பிக்கப்போகிற தொழிற் கல்லூரியை சேலத்தில் ஆரம்பிக்கக் கூடாது, கோயம்பத்தூரிலேயே ஆரம்பிக்க வேண்டுமென்று எனக்குத் தெரியவில்லை.

“ அடுத்தபடியாக மேட்டூர் கால்வாய் திட்டத்தை இப்பொழுது மறுபடியும் நாமக்கல் தாலூக்காவிற்கும், விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டோம். காவேரியாற்றில் தண்ணீர் இல்லையென்று சொன்னார்கள். இப்பொழுது 5 சத விகிதம் தண்ணீர்தான் காவேரி ஆற்றில் வீணாக்கப்படுகிறதென்றும் சொன்னார்கள். இந்த 5 சத விகிதம் தண்ணீரையாவது இந்தப் பகுதிக்கு எடுத்துச் சென்றால் மிகவும் நன்றாக இருக்கும். காவேரி ஆற்றுத் தண்ணீரை எடுத்துக்கொண்டு போய்விட்டு தஞ்சாவூர் டெல்டா பகுதிகளை கஷ்டத்திற்கு உள்ளாக்கவேண்டுமென்பது எங்கள் நோக்கமல்ல. வீணாகிற தண்ணீரைத்தான் நாமக்கல் தாலூக்கா வரையிலும் எடுத்துச் சென்றால் மிகவும் நன்றாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மேட்டூர் டிரெயினிங் பள்ளியில் 80 பேர்களுக்கு படிக்க வசதி இருக்கிறது. ஆனால் 1,200 விண்ணப்பங்கள் போட்டிருக்கிறார்கள். எண்பது பேர்கள் போக பாக்கி இருப்பவர்களுக்கு என்ன செய்கிறது ? அவர்களுக்கு வேறு வேலை கிடைக்காததால் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ‘ பாக்ஸைட் ’ தொழிற்சாலையாவது ஏற்படுத்தினால் படித்துவிட்டு இருக்கும் பல பேர்களுக்கு வேலை கொடுப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். பல தொழில் பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்திக் கொடுத்தாலும் மிகவும் நன்றாக இருக்கும்.

"சேலம் ஜில்லாவில் அனேக கிராமங்களுக்கு 30 மைல், 40 மைல் நீளம் ரோடு வசதிகளே இல்லை. முதலிலேயே அந்த ரோடுகளை எல்லாம் அமைக்கும் திட்டம் தேசிய விஸ்தரிப்புத் திட்டத்திலே சேர்க்கப்படுமென்று சொன்னார்கள். பிறகு முதல் ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்கப்படுமென்று சொன்னார்கள். அதற்குப் பிறகு ஸ்தல அபிவிருத்தித் திட்டத்திலே சேர்க்கப்படுமென்று சொன்னார்கள். ஆனால் இதுவரையிலும் எந்த உருப்படியான காரியமும் நடக்கவில்லை. புதியதாக ஆரம்பப் பாடசாலைகளுக்கு எல்லாம் கட்டடம் கட்டித் தரவேண்டும், அதற்காகப் பணம் ஒதுக்கப்படும் என்று சொன்னார்கள். அவை எல்லாம் வாயளவில் இருக்கின்றதே தவிர காரிய அளவில் நடைபெறவில்லை. அதற்குக் காரணம் எங்கள் ஜில்லா மிகவும் ஏழ்மை ஜில்லாவாக இருப்பதுதான். 33 லட்சம் ஜனங்கள் வசிக்கக்கூடிய சேலம் ஜில்லா மிகவும் ஏழ்மையானதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அங்கே ஒரே ஒரு காலேஜ்தான் இருக்கிறது. அதுவும் முனிசிபல் காலேஜ். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் கலைக்கல்லூரிகளுங்கூட அங்கே ஏற்படுத்தினால் மிகவும் நன்றாக இருக்கும்.

"ஆனால் அவர்கள் சொல்லுகிறார்கள், சேலத்தில் யாரும் முன்னுக்கு வருவது இல்லை, காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்றால் அவர்கள் பண உதவி எதுவும் செய்ய முன்வருவதில்லை என்பதாக. ஆனால் நீலகிரியை எடுத்துக்கொண்டால் யார் பணம் கொடுத்தார்கள்? சர்க்கார் பணம் கொடுத்தார்களே தவிர அங்கேயுள்ளவர்கள் யாரும் பணம் கொடுக்கவில்லை. ஏன் அதேபோல் சேலத்திற்கும் பணம் கொடுத்து உதவி செய்யக் கூடாது என்று கேட்கிறேன். சேலம் ஜில்லா எந்த விஷயத்திலும் முன்னணியில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அதனை எல்லா வகையிலும் புறக்கணிக்க வேண்டாமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்பொழுது பேப்பர் மில்லைப்பற்றி ஸ்ரீ ராமசாமி எடுத்துச் சொன்னார். பேப்பர் மில்லைப்பற்றிய திட்டம் சரியாக் கமிட்டியில் சேர்த்திருக்கிறார்கள். சர்க்காரே அந்த பேப்பர் மில்லை எடுத்து நடத்தினால் மிகவும் நன்றாக இருக்கும். கூட்டுறவு சொஸைடியின் மூலம் பேப்பர் மில்லை நடத்துவதினால் அங்குள்ள தொழிலாளருக்கு ஒரு வசதி அளிக்க வாய்ப்பு ஏற்படும். சேலத்தில் குறிப்பாக நெசவுத் தொழில் அதிகமாக இருப்பதினால், நெசவாளர்களும் அதிகமாக இருப்பதினால் கூட்டுறவு முறையில் நூல் மில்லை வைத்தால் நல்ல முறையில் அது நடக்கும் என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்."

*SRI A. GOVINDASWAMI NAYAGAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் முதல் ஐந்தாண்டு திட்டத்தின் அடிப்படையில் வருகிறது. முதல் ஐந்தாண்டு திட்டத்தின் மூலம் சர்க்கார் சொல்லுகிற பிரகாரம் தொழில் வளர்ச்சியோ, வேலையில்லாத் திண்டாட்ட ஒழிப்போ மக்களுடைய வாழ்க்கைத் தர உயர்வோ, ஏற்பட்டதாகக் காணவில்லை. நிதி மந்திரி அவர்கள் சொல்லியதிலிருந்து மூன்று சதவிகித அளவு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது. 12-35 p.m.

"முதல் ஐந்தாண்டு திட்டத்தில் வட நாட்டில் ஏராளமாகப் பணம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. நோக்கம் நல்லதாகக் சொல்லப்பட்டாலும்கூட இந்தத் திட்டம் பரவலான முறையில் ஏற்படவில்லை. பரவலான முறையில் ஏற்படச் செய்தால்தான் அரசாங்கத்தின் முக்கியமான குறிக்கோள் நிறைவேறும். ஆனால் வட நாட்டைத் தொழில்மயமாக்கி தென்னாட்டை அதற்கு மார்க்கெட்டாக, ஆக்கிக்கொண்ட அளவுக்குத்தான் முதல் ஐந்தாண்டு திட்டம் நடந்து வந்திருக்கிறது. வடநாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு தென்னாட்டை மார்க்கெட்டாக மட்டும் ஆக்கினால் சுதந்திர சோஷலிச சர்க்கார் நடக்கிறது என்று சொல்வதற்கு அழகாக அமைய முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

"தென்னாட்டில் உற்பத்தியாகும் மணிலாப் பயிரைக் கொண்டு போய் சோப்பாகவும், வனஸ்பதியாகவும் வடநாட்டில் செய்து தென்னாட்டின் தலையிலே திணிக்கிறார்கள். தென்னாட்டை ஒரு மார்க்கெட் ஸ்தலமாக ஆக்கி

[Sri A. Govindaswami Nayagar] [26th August 1955

யிருக்கிருர்கள். நீண்ட காலமாக வடநாடு அரசாங்கத்தாராலும் தனிப்பட்டவர்களாலும், தொழில்மயமாக ஆக்கப்பட்டிருக்கிறது. தென்னுடு விவசாய நாடாக இருக்கிறதேயொழிய தொழில் துறையில் முன்னேரு மலேயே இருக்கிறது.

“விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால், நிர்ப்பாசனத் திட்டங் களும் மின்சாரத் திட்டங்களும் வட நாட்டில் ஏராளமாக எடுத்துக் கொள் ளப்பட்டு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு ஏராளமான பணத்தைச் செலவு செய்திருக்கிருர்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாக பல திட்டங்கள் இருக்கின்றன. கோசி திட்டத்திற்கு 66 கோடி ரூபாயும், பக்ரா நங்கல் திட்டத்திற்கு, 156 கோடி ரூபாயும் தாமோதரப் பள்ளத்தாக்கு திட்டத் திற்கு 200 கோடி ரூபாயும், ஹிராகுட் திட்டத்திற்கு 92 கோடி ரூபாயும் செலவு செய்திருக்கிருர்கள். ஆனல் நண்பர் திரு. அர்த்தநாரி அவர்கள் சொல்வது போல கீழ் பவானித் திட்டத்திற்கு 9 கோடி ரூபாய்தான் செலவு செய்திருக்கிருர்கள். மலம்புழா திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிருர்கள். சேலத்தில் மேட்டூர் கால்வாய் திட்டத்திற்கு இரண்டு கோடி ரூபாய் செலவு செய்திருக்கிருர்கள். இதிலிருந்து வட நாட்டுக்கும் தென்னுட்டுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பாருங்கள். 200 கோடி ரூபாய் எங்கே ? 9 கோடி ரூபாய் எங்கே ? அதில் உள்ள வித்தியாசத்தை அர சாங்கம் உணர்ந்துதான் இருக்கிருர்கள்.

“காங்கிரஸை ஆதரிக்கின்ற ஏடாகிய ‘சுதேசமித்திரன்’ பத்திரிகை யில் கொஞ்ச காலத்திற்கு முன்பு ஒரு படம் போடப்பட்டிருந்தது. அந்தப் படத்தை நிதி மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். அந்தப் படத்தை அவர்களுக்கு காட்டப் போகிறேன். ‘என் இந்தப் பாரபட்சம்’ என்ற தலைப்புடன் சுதேசமித்திரன் பத்திரி கையில் ஒரு படம் வந்திருக்கிறது. அந்த பத்திரிகையின் நகல் ஒன்றை நான் இங்கே கொண்டு வந்திருக்கிறேன். நிதி மந்திரி அவர்களுக்கு இந்த பத்திரிகையை சபாநாயகர் மூலமாக சமர்ப்பிக்கின்றேன்.”

THE HON. SRI C. SUBRAMANIAM :—“சுதேசமித்திரன் பத்திரிகைக்கு கனம் அங்கத்தினர் இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பதற்கு காரணம் என்ன என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகின்றேன்.”

* SRI A. GOVINDASWAMI NAYAGAR :—“சுதேசமித்திரன் பத்திரிகை ஏக இந்தியக் கொள்கையைப் பரப்புகின்ற ஒரு பத்திரிகையாகும். வட இந்தியா தென்னுட்டின் தேவையை புறக்கணிக்கிறது என்பதை சுதேச மித்திரன் பத்திரிகையும் உணர்ந்து அதைச் சித்தரிக்கும் வகையில் படம் போட்டிருப்பதைக் கண்டு நான் வரவேற்கிறேன். அந்த அளவு அவர்கள் உணர்வு பெற்றிருக்கக்கூடியதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். படத்தை மந்திரி அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சபா நாயகரின் மூலமாக (இத்தருணத்தில் படத்தை மந்திரி அவர்களிடம் கனம் அங்கத்தினர் கொடுத்தார்). இந்தப் படத்தில் வடநாட்டாருக்கு பலகாரம் அரிசி வைத்திருப்பதைப் பாருங்கள். அவர்களுடைய தட்டு நிறைய பல காரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன ; ஆனல் தென் நாட்டுக்கு ஒரே தட்டு வைக்கப்பட்டு இருக்கின்றது. இதிலிருந்து என்ன தெரிகின்றது ? வட நாட்டிற்கே வசதிகள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன என்பதைத்தான் இது காட்டுகிறது.

“நமது நிதி மந்திரி அவர்களின் குருவான ராஜாஜி அவர்கள் இன்ஷ் சூரன்ஸ் கம்பெனியார்களின் கூட்டத்தில் ஒன்று பேசியிருக்கிருர். ‘வட நாட்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி என்ற பசு மாட்டிற்கு தென்னுட்டுக்காரர்கள் தீனி வைக்கிருர்கள். வட நாட்டுக்காரர்கள் பால் கறக்கிருர்கள்’ என்று அந்தக் கூட்டத்தில் பேசினர். அதைச் சித்தரிக்கும் வகையில் கல்கி பத்திரி கையில் ஒரு படம் வந்திருந்தது. அந்தப் படத்தையாவது நிதி மந்திரி அவர்கள் பார்த்திருப்பார், என்று நினைக்கிறேன்.

26th August 1955] [Sri A. Govindaswami Nayagar]

"இந்த உணர்ச்சி நிதி மந்திரி கனம் திரு. சுப்ரமண்யம் அவர்களுக்கும் வந்திருக்கிறது. திட்டக் கமிஷனிலும் வட நாட்டு ஆதிக்கம் இருக்கிறது. ஜனத் தொகை அடிப்படையில் நமக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய 500 கோடி ரூபாய்க்குப் பதிலாக நிதி மந்திரி அவர்கள் நல்ல புத்தியோடு 400 கோடி ரூபாய் கேட்டார்கள், ஓரளவு குறைத்துக்கொண்டு. ஆனால், வடநாட்டார் 200 கோடி ரூபாய்தான் கொடுப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்று முன் தினம் பத்திரிகையில் பார்த்ததில் 180 கோடிதான் கொடுக்கப்போகிறார்கள் என்று தெரிகிறது. 'கழுதை தேய்ந்து கட்டை எறும்பு ஆன கதை' தான் எனக்கு இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. நாங்கள் எப்படி வேதனைக் குரலில் சொல்லுகிறோமோ அதேமுறையில்தான் நிதி மந்திரி அவர்களும் திட்டக் கமிஷன் கூட்டத்திலேயும் பேசியிருப்பார் என்பதில் சந்தேகம் இருக்காது. ஆளும் கட்சியாக இருந்தாலுங்கூட குறை சொல்லாமல் விடவில்லை என்பதையும் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது.

"வடநாட்டார் நம்மைக் கவனிக்காமல் ஆட்சி பீடத்தில் அதிகாரத்தோடு இருப்பதால்தான் அவர்களுடைய ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து நாம் விலகவேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறோம். வடநாட்டு ஆதிக்கத்திலிருந்து நாம் பிரிந்து தனி சுதந்திர திராவிட நாடாக இருக்கவேண்டும். சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த ஸ்ரீ நல்லசிவம் அவர்களும், மற்றும் ஸ்ரீ பழனியாண்டி அவர்களைப் போன்றவர்களும் வடநாடு தென்னாடு வித்தியாசத்தை உணர்ந்து நல்ல முறையில் சொல்லியிருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் அதைக் குறிப்பாகப் பேசியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறோம். அந்த முறையில் அந்த உணர்ச்சி வளர்ந்து நல்ல பரிகாரம் தேட வேண்டுமென்று நாங்கள் சொல்லுகிறோம்.

"மக்கள் அடிப்படையில் தொகையைப் பிரிக்கவேண்டுமென்று நிதி மந்திரி அவர்கள் சொன்னார். மக்களினுடைய பொருளாதார அடிப்படையில்தான் தொழில்கள் வளரமுடியுமேதவிர, ஜனத் தொகையை அடிப்படையை மட்டும் பார்க்கக்கூடாது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன்.

"தென்னாட்டிலே தொழில் வளரவில்லை என்று நிதி மந்திரி அவர்களே ஒரு கூட்டத்தில் சொல்லியிருக்கிறார். தென்னாட்டிலே தொழிற்சாலைகள் அதிகம் ஏற்படவேண்டுமென்று அவர்கள் திட்டவட்டமாக சொல்லியிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தரப்பிலிருந்து நாங்கள் சொல்லுகிறோம்.

"நெய்வேலித் திட்டத்தை ஏன் துரிதமாக அமுல் நடத்தவில்லை? திட்டம் சந்தேகத்திற்கிடமாக இருப்பதாகச் சொல்லப்படுவதற்குக் காரணம் என்ன? தென்னாட்டில் நெய்வேலி இருப்பதுதான். இதே வசதி வடநாட்டில் இருந்திருந்தால் எப்பொழுதோ திட்டம் அமுலுக்கு வந்திருக்கும்! வடநாட்டில் இல்லாமல் தென்னாட்டில் நெய்வேலித் திட்டம் இருப்பதால்தான் வடநாட்டார் அசிரத்தையாக இருக்கிறார்கள். நெய்வேலித் திட்டம் வெற்றிபெற்றால் பல உப தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு வசதி ஏற்படும். மின்சாரத் திட்டம் ஏற்படலாம். நெய்வேலித் திட்டம் வெற்றி பெற்றால் இந்தியா பூராவும் ரயில் விடுவதற்கு நிலக்கரி கிடைக்கும் என்று வடநாட்டுக்காரர்கள் சொல்லுகிறார்கள். தென்னாடு பூராவும் விவசாயத்திற்கு மின்சாரம் கொடுக்கலாம் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பரிக்ஷார்த்தமாக சில ஜில்லாக்களை அபிவிருத்தி செய்வதற்காக எடுத்துக் கொள்ளுகிறார்கள். கோயமுத்தூர் ஜில்லாவும், மதுரை ஜில்லாவும், இராமனாதபுரம் ஜில்லாவும், செங்கற்பட்டு ஜில்லாவும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், பின்தங்கின ஜில்லாக்களான வடாற்காடு, தென்னாற்காடு, திருச்சி ஜில்லாக்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லை. இது என் பாரபட்சம் என்று நான் கேட்கிறேன். அந்த ஜில்லாக்கள் விஷயத்திலும் சர்க்கார் அக்கரை காட்ட வேண்டாமா? பின்தங்கிய ஜில்லாக்களை முன்னேற்றினால்தானே சுதந்திர

சோஷலிச சர்க்கார் என்று சொல்லிக்கொள்ள முடியும்? பின்தங்கிய தென்னுற்காடு ஜில்லாவானது ஏன் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

"தென்னுற்காடு ஜில்லாவில் அதிகமாக உற்பத்தியாகும் பொருள் மணிலாக்கொட்டை. மணிலாப் பயிரிலிருந்து வனஸ்பதி தயார் செய்யலாம். ஆகவே, விழுப்புரத்தில் ஒரு வனஸ்பதித் தொழிற்சாலையை ஏற்பாடு செய்தார்கள். அது இப்பொழுது வேலை செய்யாமல் இருக்கிறது. அதைத் திரும்பவும் திறப்பதற்கு துரிதப்படுத்தவேண்டும்.

"தென்னுற்காடு ஜில்லாவில் கரும்பாலையொன்றை விழுப்புரத்திற்கு அடுத்த கோலியனூர் கிராமத்தில் நிறுவப் போவதாகச் சொன்னுர்கள். ஆனுல், அந்த யோசனையையும் கைவிட்டுவிட்டதாகத் தெரிகிறது. கோலியனூரிலும், கள்ளக்குரிச்சியிலும் சர்க்கரை ஆலையை ஏற்படுத்தவேண்டும்.

"கடலூரில் உயர்தர கலைக் கல்லூரியொன்றை ஏற்படுத்தவேண்டும். ஏனென்ருல் தென்னுற்காடு ஜில்லாவுக்கு கடலூர், ஜில்லா தலை நகரமாக இருக்கிறது. அங்கு ஒரு கலைக் கல்லூரி இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது.

"கள்ளக்குரிச்சியில் மூங்கில் அதிகமாக கிடைக்கிறது. அதைக்கொண்டு ஒரு நியுஸ் பிரிண்ட் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். கடலூரிலும் திண்டிவனத்திலும் சவுக்கு ஏராளமாக பயிர் செய்யப்படுகிறது. அங்கு ஒரு காகித உற்பத்திச்சாலையை ஏற்படுத்தலாம்.

"தென்னுட்டில் உருக்கு ஆலையை ஏற்படுத்துவதற்குப் போதுமான வசதியில்லையென்று சொல்லுகிறுர்கள். பென்சில், உர உற்பத்திச் சாலையையாவது ஏன் ஏற்படுத்தக்கூடாது? தென்னுட்டில் இதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றன.

"சிறு சிறு நீர்ப்பாசனத்திற்காக 300 குழாய்க் கிணறுகள் ஐந்து வருஷத்தில் வைக்கப்போவதாக சொல்லப்படுகிறது. அப்படியென்ருல் வருஷத்திற்கு 60 குழாய்க் கிணறுகள்தான் வைக்கமுடியும். 20 ஆயிரம் கிராமங்களில் ஐந்து வருஷத்திலே நீர்ப்பாசனத் திட்டம் எந்த அளவு வெற்றி பெறும், எப்படி விவசாயம் முன்னுக்கு வரும் என்று தெரியவில்லை. என்னுடைய தொகுதியாகிய விக்கிரவாண்டியில் ஐந்து ஆயிர ரூபாயில் நிறைவேற்றக்கூடிய திட்டத்தைக்கூட செய்யாமல் இருக்கிறுர்கள். பனைமலை ஏரிக்குத் தண்ணீர் வர நந்தன்கால் வாய்க்காலை வெட்டவேண்டும். அதனுல் 4,000, 5,000 ஏக்கர்கள் பயன் அடையும் என்று ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். விக்கிரவாண்டி—பிரஞ்சு வாய்க்காலை ஆழப்படுத்துவதோடு மேற்கண்ட வாய்க்காலிலிருந்து வெட்டுக்காடு கிராமத்திற்கு தொரகி கிராமத்திற்கு பக்கத்திலிருந்து கிளை வாய்க்கால் ஒன்று வெட்ட திட்டம் போட்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

12–25 p.m. "ஒரு முக்கியமான விஷயத்தைப்பற்றிக் கூற விரும்புகிறேன். இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தைத் துருவித் துருவிப் படித்தேன். அதில் மதுரையில் பைத்தியக்கார ஆஸ்பத்திரி அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் காங்கிரஸ் ஆட்சியில் பைத்தியக்காரர்கள் அதிகமாக உற்பத்தியாகிறுர்கள் என்பதற்கு இது அத்தாக்ஷியாகிறது. இம்மாதிரி பைத்தியக்கார ஆஸ்பத்திரி அமைப்பதற்கு பதிலாக திட்டத்தில் மக்கள் சுபீக்ஷமாக வாழ்வதற்கான ஏற்பாடு செய்யவேண்டும்.

"சோஷலிச சமுதாயத்தை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் இன்று மக்கள் என்ன நிலையிலிருக்கிறுர்கள்? எங்கள் ஜில்லாவை எடுத்துக்கொண்டால், காடாம்புலியூர் ஜனங்கள் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறுர்கள். ஆனுல் காடாம்புலியூர் குடிதண்ணீர் சப்ளை செய்யப் படும் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. இதெல்லாம்

26th August 1955] [Sri A. Govindaswami Nayagar]

எலெக்ஷன் காலத்தில் மக்களிடமிருந்து வோட்டுப் பெறலாம் என்பதற்காகத்தான் செய்யப்படுகிற காரியம். நல்ல குடிதண்ணீர் இல்லாத தினுல் நரம்புச்சிலந்தி என்ற நோய் வருகிறதென்று சொல்லுகிருர்கள். ஆனுல் அதைத் தடுக்கத் திட்டம் ஒன்றும் கிடையாது. இந்த இடங்களில் குளங்களில் தண்ணீர் செம்மண்ணுேடு கலந்து இருக்கும். ஒரு குடம் தண்ணீர் எடுத்து வந்து தேத்தான்கொட்டை போட்டு கரைத்தால் அரைக் குடமாகி பிறகு கால் குடம் தண்ணீர்தான் கிடைக்கும். இந்த நரம்புச் சிலந்தியைத் தடுப்பதற்கு ஒரு நடவடிக்கையும் கிடையாது. ஒரு வன் நரம்புச்சிலந்தி வியாதியால் பீடிக்கப்பட்டால் ஆறு மாதம், ஒரு வருஷம் பீடிக்கப்பட்டு சக்தியிழந்து விடுகிறுன். ஆகையால் குடிதண்ணீர் வசதியை செய்து கொடுக்க வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளு கிறேன். இந்த சர்க்கார் பெரிய நகரங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்கிருர்களே யொழிய கிராமங்களுக்குச் செய்வது கிடையாது. பல கிராமங்களுக்கு ரோடு வசதி செய்து கொடுப்பது கிடையாது. பல கிராம ரோடுகள் சரியாக கவனிக்கப்படாத நிலையில் இருக்கின்றன. சென்னையில் தார் ரோடும், சிமென்ட் ரோடும் போடுகிருர்களே தவிர கிராமங்களிலுள்ள ரோடுகளைப்பற்றி சர்க்கார் கவனிப்பது கிடையாது. சென்னையில் பக்கிங்ஹாம் கனுலை ஆழமாக்குவதற்குத் திட்டம் போடுகிருர்களே தவிர கிராமங்களில் நீர்பாசன வசதி செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்வ தில்லை. கிராமங்களுக்கு வோட்டுக் கேட்கப் போகும்போதுதான் இவர்கள் இதனுடைய பலனை யெல்லாம் அனுபவிக்க நேரிடுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

" நம் ராஜ்யத்தில் மீன் பிடிப்பவர்களுக்கு என்று இரண்டாயிரம் வீடுகள் கட்ட திட்டம் போடப்பட்டிருக்கிறது. மீனவர்கள் லக்ஷ கணக்கில் இருக்கிருர்கள். இவர்கள் எங்கே வாழ்வது ? குறைந்தது இருபதினுயிரம் வீடாவது கட்டித்தர வேண்டும். ஆதித்திராவிடர்களுக்கு என்ன வசதி செய்திருக் கிருர்கள் ? இந்த ஆதித்திராவிடர் ஒவ்வொருவருக்கும் வீடு கட்டிக் கொள்ள 150 ரூபாய் இனுமாகவும் 150 ரூபாய் கடனுகவும் சர்க்கார் கொடுத்து இந்தக் கடனை 15 **instalment**-களில் திருப்பிக் கொடுக்கலா மென்று ஏதாவது திட்டம் போட வேண்டும். சேரிகளில் உள்ளவர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும். ' நாங்கள் ஹரிஜனங்களைக் கோவி லுக்குள் விட்டிருக்கிருேம் ' என்று சொல்லலாம். ஆனுல் கோவிலில் அவர்கள் பிரவேசம் செய்யவிடுவதால் என்ன பிரயோஜனம் ? இவர் களுடைய வாழ்க்கைக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்காவிட்டால் யாதொரு பிரயோஜனமும் இல்லை. ஆதலால் அவர்களுக்கு கூரை வீடு களாவது கட்டித்தர வேண்டும்.

" எங்கள் ஜில்லாவைப் பொருத்த வரையில் அங்கு ஹை ஸ்கூல்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. அங்கு 39 ஹை ஸ்கூல்கள்தான் இருக்கின்றன. கோயம்பத்தூரில் 96 ஹை ஸ்கூல்களும் சேலத்தில் 80 ஹை ஸ்கூல்களும் மலபாரில் 180 ஹை ஸ்கூல்களும் இருக்கின்றன. எங்கள் ஜில்லாவில் நான்கு, ஐந்து ஹை ஸ்கூல்கள் திறக்க வேண்டுமென்றுல் படாத பாடு படவேண்டியிருக்கிறது. இந்த ஜில்லாவில் ஹை ஸ்கூல்களும் ட்ரெயினிங் ஸ்கூல்களும் திறப்பதற்கு சர்க்கார் உதவி செய்யவேண்டு மென்று எங்கள் ஜில்லா சார்பில் ஸ்ரீ வாகீஸம் பிள்ளை தலைமையில் சர்வ கட்சி சட்டசபை அங்கத்தினர்களும் ஒரு கூட்டம் போட்டு ஒரு திட்டம் தயாரித்திருக்கிருேம். அந்தத் திட்டத்தை நிதி மந்திரி அவர்கள் அமு லுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்."

* SRI Y. MANJAYA SHETTY :—" Sir, when the First Five-Year Plan came into operation, the country was facing food crisis due to prevalence of drought conditions. So, the objective of the whole Plan was to make the country self-sufficient in the matter of food and as such, great emphasis was laid on agriculture and irrigation in the Plan. Having attained self-sufficiency in the matter of food, the Government propose to lay emphasis in the 12-49 p.m.

[Sri Y. Manjaya Shetty] [26th August 1955

Second Five-Year Plan upon the industrialisation of the country. Our great Prime Minister has been telling us that the future of the country depends upon the development of both heavy and small-scale industries. It is gratifying to note that the responsibility of the development of industries is taken up by the Central Government and we hope that the Central Government would achieve the desired results within the Second Five-Year Plan period with the resources at its command. Unlike the First Five-Year Plan, the Second Five-Year Plan will be the People's Plan. The Planning Commission has given directions to the State Governments to prepare the Plan in consultation with the people of the various States. As a result of that, our State Government have directed that the Plan should be prepared at district level taking
12-50 p.m. into confidence the people of the respective districts. No doubt, this has given an opportunity to the people living in the remotest corner of the State to put forth before the Government their needs and requirements so that they may be included in the Second Five-Year Plan. Sir, one finds a good deal of enthusiasm among the people in the implementation of the First Five-Year Plan. This is evident from the manner in which the people have been evincing keen interest in the welfare schemes sponsored by the Government under the National Extension Service Schemes, Community Projects and Local Development Works. The First Five-Year Plan has aroused mass consciousness. It is for the Government to see that the enthusiasm and the mass consciousness that are aroused in the people do not cool down in the Second Five-Year Plan period. To achieve that end, it would be necessary for the Government to usher in social and economic reforms for the benefit of the people. The expenditure on Irrigation during the Second Five-Year Plan period is expected to be between Rs. 75 to Rs. 80 crores. Several irrigation projects are proposed under the Plan. It is also the intention and desire of the Government to see that preference in the matter of irrigation projects is given to the backward areas where irrigation facilities are poor at present. Sir, I must say that South Kanara is one of such areas. We are glad that South Kanara is fortunate in having heavy rains, but I am sorry to point out that all the water is being washed away into the Arabian Sea for want of proper irrigation projects in that area. I am glad and grateful to the Government for including one major irrigation scheme, namely, Halady for South Kanara in the Second Five-Year Plan. But I must say that mere inclusion is not sufficient; I request the Government to give the highest priority to the execution of that scheme. I am told that if that scheme is implemented, it would give better results at a cheaper cost than many of the schemes undertaken by the Government for execution. Apart from this, there are several minor irrigation projects which must receive the special consideration and attention at the hands of the Government.

" With regard to electricity, it is said that about 2,500 villages have been supplied with electric power during the First Five-Year Plan period and the same number of villages will be provided with

26th August 1955] [Sri Y. Manjaya Shetty]

electric power during the Second Five-Year Plan period also. I must really congratulate the Government on their excellent achievement in this direction. I need not emphasize the usefulness of electric power for the development of agriculture and industry. But, our great regret is that hardly ten villages in South Kanara have been benefited by electricity. So, I would request the Government to see that electric power from Jog is supplied to South Kanara as expeditiously as possible and also to see that at least one-third of the villages in the district get the benefit of electric power during the Second Five-Year Plan period so that the people of those villages may use the same for the development of agriculture and industries and thereby better their economic conditions.

" Sir, excuse me, when I say that very little has been done with regard to providing medical facilities for the rural population during the First Plan. The difficulties and hardships experienced by our rural population in getting medical aid, maternity aid, etc., cannot be adequately explained. It must be the endeavour of the Government to see that at least in the Second Five-Year Plan adequate medical facilities are provided for the rural areas at the rate of one dispensary and one maternity centre to serve the needs of two or three villages as a unit. Sir, I am also quite conscious of the difficulties of the Government in getting sufficient number of medical men to serve in rural parts. But, that should not come in the way of the Government's policy to help the rural-folk. The Government must adopt some method or other to see that the medical men go and serve in the rural parts. I would suggest to the Government to take an undertaking from each and every student who seeks admission into the Government medical colleges or schools to the effect that they agree to serve for a period of two or three years in rural parts after they finish their course. Unless the Government take such a bold attitude, I do not think the Government will be able to solve this problem for years to come.

" Sir, in the field of education, the Government seem to meet the longstanding demand of the elementary school teachers with regard to their scales of pay during the second Five-Year Plan period. The Parulekar Committee has long ago recommended increased scales of pay to the teachers and I am glad that the Government will be implementing their recommendations. I congratulate the Government on their granting school fee concession to poor students up to the eighth standard. I would request the Government to extend this concession up to the secondary stage of education. In the matter of opening basic training schools and colleges, the Government should adopt the policy of opening such institutions in the rural areas instead of opening them in the urban areas and cities.

" Sir, it is regrettable that in spite of repeated agitations, the low-paid N.G.Os., continue to be paid low and no hope is held out to them in the Second Five-Year Plan. I am pleading on behalf of such of the N.G.Os. who are getting less than Rs. 50 as their basic salary. I must state that the plight of these people is in no way better than that of the elementary school teachers. They

deserve sympathy at the hands of the Government. So, I request the Government to see that the low-paid N.G.Os., are paid at least Rs. 50 as basic salary at the beginning of the Second Five-Year Plan. It is needless for me to say that the panchayats and district boards have to play a very significant part in the various developmental and welfare schemes undertaken and sponsored by the Government. Government have issued instructions to the district boards and panchayats to contribute liberally—at least at the rate of one-fourth of the cost of the scheme—undertaken under the National Extension Service Schemes, Community Projects and Local Development Works. Because of lack of finance, they could not discharge their functions properly. It is for the Government to see that the finances of the district boards and panchayats are adequately augmented so as to enable them to effectively participate in the Local Development Works, National Extension Service Schemes and Community Projects sponsored by the Government. To ensure a socialistic pattern of society, the Government propose to introduce land reforms within the course of a year or so. I must congratulate the Government on their having announced such a decision. But, mere land reforms could not bring a socialistic pattern of society. There is an opinion gaining ground in the country that ceilings should be fixed on personal incomes also. By fixing ceilings on personal incomes, we could narrow down the difference between the rich and poor that exists now. So, I request the Government to take immediate steps for fixing a ceiling on personal incomes in furtherance of their policy of establishing a socialistic pattern of society. Thank you, Sir."

12–59 p m. * **Sri T. S. Ardhanari** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தைப்பற்றிப் பேசும்போது கோயம்புத்தூர் ஜில்லாவையும், சேலம் ஜில்லாவையும் இணைப்பதற்கு பள்ளிமாபாளையம் பகுதியில் ஒரு பாலம் கட்டவேண்டுமென்று பல வருஷங்களாக மக்கள் கோரிக்கொண்டு வருகிறார்கள் என்பதை நான் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அதையும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இரண்டாவதாக மேட்டூர் அணையில் அதிகமாகத் தண்ணீர் தங்கும் காலத்தில் வீணாகப் போகும் தண்ணீரை திருச்செங்கோடு தாலூகாவில் பயன்படுத்த முடியுமென்று அது சம்பந்தமான ரிக்கார்டுகள் பூராவும் சர்க்காருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த திட்டத்தையும் இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் சேர்த்துக்கொண்டால் ஏறக்குறைய 15 ஏரிகளுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதனால் 15 ஆயிரம் ஏகருக்கு பாசன வசதி கிடைக்குமென்று அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகள் சொல்லுகிறார்கள். அத்திட்டத்தை அமுலாக்குவதற்கு ஆகும் செலவில் பாதி பணத்தை அங்குள்ள மக்கள் கொடுப்பதாகச் சொல்வதால் அந்தத் திட்டத்தையும் இந்த இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

"அடுத்தபடியாக கைத்தறி விஷயமாக சில விஷயங்களைப் பேசவேண்டுமென்று விரும்புகிறேன். பொதுவாக நிதி மந்திரி அவர்கள் ஆரம்பத்திலேயே திட்டத்தின் லக்ஷியத்தைப்பற்றிப் பேசும்போது இந்த இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் கைத்தறிக்கு மிகவும் சாதகமான ஒரு சூழ்நிலை ஏற்படப்போகிறதென்று நாங்கள் நம்பினோம். பொதுவாக இந்த திட்டம் கைத்தறிக்காரருக்கு ஒரு பசுமாடுபோல இருக்கிறதென்றும், அதைப் பால் கறந்து சாப்பிடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமென்றும் உற்சாகமான பார்வையோடு நாங்கள் இந்தத் திட்டத்தைப் பார்த்தோம். ஆனால் இந்தத் திட்

டத்தின் மேல் நடந்த விவாதத்தைப் பார்க்கும்போது அத்திட்டத்தினுல் கைத்தறிக்காரர்களுக்கு மிகவும் பாதகம் ஏற்படக்கூடிய சூழ்நிலைதான் இருக்கப்போவதாகத் தெரிகிறது. பசு என்று பார்த்தால் அது பசுந்தோல் போர்த்திய புலி போல் இருக்கிறது. ஜவுளித் துணி சம்பந்தமாக, மத்திய சர்க்காருக்கும், ராஜ்ய சர்க்காருக்கும் தெளிவான கொள்கை இல்லை என்று கனம் மந்திரி அவர்கள் பிரசங்கத்திலிருந்து எங்களால் புரிந்துகொள்ள முடிந்தது. கனம் மந்திரி அவர்கள் பேசும்போது விசைத்தறிகளை நம்முடைய ராஜ்யத்தில் புகுத்த இடம் கொடுக்கமாட்டோம் என்று சொன்னுர். ஆனல் ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முதலாளிகளுக்குக் கொடுத்த வாக்குறுதியில் டெக்ஸ்டைல் தொழிலை வளர்ப்பதற்கு 300 கோடி ரூபாய்க் குத் திட்டம் தயார் செய்ய அனுமதிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிருர். ஆகையினுல் இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது வருங் காலத்தில் கைத்தறிக்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற்படப்போகிறதென்கிற பயம் ஏற்படுகிறது. பொதுவாக கனம் மந்திரி அவர்கள் தைரியமாக இருக்கும் படி சொல்லுகிருர். ஆனல் மத்திய சர்க்கார் மந்திரி நம்முடைய கைத்தறிக் கொள்கைக்கு நேர் விரோதமான பாதையில் செல்கிருர். ஆகவே, இரண்டு குரல்களில் இரண்டுவித அபிப்பிராயங்களைச் சொல்லும்போது எதை ஒத்துக்கொள்வதென்று எங்களுக்குப் புரியவில்லை. ஸ்ரீ டி.டி.கே. பேசுவது ஒன்று செய்வது ஒன்று என்று இருக்கிருர். ஆனல் மத்திய சர்க்கார் மந்திரியாக அவர் இருப்பதால் அவருக்குத் தான் ஜவுளி சம்பந்தமாக ஒரு நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது. ஆகையால் மத்திய சர்க்கார் மந்திரி சொல்வதைத்தான் நாம் எடுத்துக்கொள்ளலாமே தவிர அதிகாரம் இல்லாமல் வெறும் ஒரு உத்திரவாதத்தைக் கொடுத்தால் அதை நம்பமுடியாத நிலையில்தான் நாம் இருக்கிருேம். பொதுவாக ஜனங்களுடைய விரோதிகள் என்று சொல்லக்கூடிய முதலாளிகளின் கையாட்கள் என்ன செய்துகொண்டு வருகிருர்களோ அதுபோன்ற காரியத்தைத் தான் ஸ்ரீ டி.டி.கே.யும் செய்கிருர் என்று இங்கேயும் நான் வருத்தத்தோடு சொல்லுகிறேன். அவர் முதலாளிகளுக்குச் சாதகமான ஆள் என்று நாம் எண்ணவேண்டியிருக்கிறது. அவருடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அவர் ராஜிஞமா செய்வார். அவர் ராஜிஞமா செய்தால் பெரிய பெரிய முதலாளிகள் எல்லாம் அவரை ராஜிஞமாவை வாபஸ் பெறும்படி சொல்லி அவரை திரும்பக்கொண்டுவரப் பார்ப்பார்கள். பிறகு அவர் மந்திரியாக மறுபடியும் வரலாம். ஆகவே அவர் இப்பேர்ப்பட்ட பதவியிலிருப்பதால் அவர் தம் இஷ்டம்போல் காரியத்தைச் செய்கிருர். அவர் சொல்வதைத்தான் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்க்கவேண்டும். ஜவுளி சம்பந்தமாகப் பேசும்போது கைத்தறிக்கு எதிர்காலம் இல்லையென்று தான் நினைக்கவேண்டியிருக்கிறது. பொதுவாக ஒரு விசைத்தறி வைத்தால் 3,000 ரூபாய் செலவாகும். அதே 3,000 ரூபாயை வைத்துக்கொண்டு 20 கைத்தறியை நடத்தலாம். விசைத்தறி 5 பேருக்கு வேலை கொடுக்கும் 15 கைத்தறி வைத்தால் 75 பேருக்கு வேலை கொடுக்கமுடியும். ஒரு கைத்தறியின் மூலம் தினசரி 6 கெஜம் உற்பத்தி செய்யமுடியும். பதினைந்து கைத்தறிகளில் ஒரு நாளைக்கு 90 கெஜம் உற்பத்தி செய்யலாம். ஆகையால் விசைத்தறியில் உற்பத்தி பண்ணக்கூடிய அளவை கைத்தறியைக்கொண்டு நாம் உற்பத்தி பண்ணமுடியும். மில்கள் என்ருல் அவைகளுக்கு அதிகமான மூலதனம் வேண்டும். அந்த மூலதனத்தை வேறு இயந்திரத் தொழில்களுக்கு உபயோகப்படுத்தினுல் கைத்தறிகள் மூலம் அதிகமான பேருக்கு வேலை கொடுப்பதோடு உற்பத்தியையும் அதிகரிக்கலாம் என்பதை சர்க்காருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நம்முடைய நாட்டில், கானுங்கோ கமிட்டி ரிபோர்ட்டில் 15 லட்சம் தறிகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. ஆனல் சர்க்காருடைய கணக்கில் 27 லக்ஷம் தறிகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. கைத்தறிகளை அழிப்பதற்காக அந்த ரிப்போர்ட்டில் ஒரே மோசமான கணக்கைத் தயார் செய்திருக்கிருர்களோ என்று தான் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. சர்க்காருடைய கணக்கையும் கானுங்கோ ரிப்போர்ட் கணக்கையும் விட்டுவிட்டு கிட்டத்தட்ட 25 லக்ஷம் தறிகள் இருப்பதாக வைத்துக் கொண்டாலும் அவற்றின் மூலம் 400 கோடி கெஜத்துக்கு மேல் நம்மால் உற்பத்தி செய்யமுடியும். தினசரி 6 கெஜம் உற்பத்தி செய்தாலும் கைத்தறிகள் மூலம் நாம் 400 கோடி கெஜத்துக்குமேல் உற்பத்தி செய்ய

[Sri T. S. Ardhanari] [26th August 1955

முடியும். இன்றைக்கு ஜவுளி சம்பந்தமாகக் கவனிக்கும்போது, இருக்கக் கூடிய கைத்தறிகளை சரியானபடி நடத்திவந்தால் ஜவுளிக் கஷ்டம் ஏற்படாது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்குக்கூட நம்மால் துணி உற்பத்தி செய்ய முடியும்.

1 05 p.m. "ஆகவே இன்றைக்கு ஜவுளித் தொழிலை எடுத்துப் பார்க்கும்போது, இருக்கக்கூடிய இயந்திரங்களையும், கைத்தறிகளையும் சரியானபடி நடத்தினால் நமக்கு நஷ்டம் ஏற்படாது என்பது தெளிவாகிறது. ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு கூட நாம் போக முடியும்.

"நமது சர்க்காரின் ஜவுளி சம்பந்தமான கொள்கை இரண்டு விதமான கொள்கையாகத் தெரிகிறது. இந்த நாட்டுத் தொழில் வளர்ச்சிக்காகவும், மக்களின் வருமானத்தை உயர்த்துவதற்காகவும் கைத்தறியை ஆதரிக்க வேண்டுமென்பது ஒன்று. இரண்டாவது, ஜவுளியை குறைந்த செலவில் உற்பத்தி செய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி லாபம் சம்பாதிக்க வேண்டுமென்பது இரண்டு. ஜவுளி மில் முதலாளிகளுக்கு இந்த நாட்டைப்பற்றி கவலைகிடையாது. அவர்கள், என்னென்ன முறைகளை கையாண்டால் அதிக லாபம் கிடைக்குமோ, அந்த முறைகளை அனுஷ்டித்து வியாபாரம் செய்யத் தயாராக இருக்கிறார்கள். உலக மார்க்கெட் சுருங்கியிருக்கும்போது, அந்த மார்க்கெட்டோடு போட்டியிடவேண்டுமென்றால் உற்பத்திச் செலவைகுறைத்து ஜவுளியின் விலையைக் குறைக்க வேண்டியிருக்கிறது. அப்படியானால், உற்பத்திச் செலவைக் குறைக்க, நவீன இயந்திர சாதனங்களை உபயோகித்து, ஐந்து தொழிலாளர்கள் வேலை செய்த இடத்தில், இரண்டு பேர்களை வைத்துக்கொண்டு, மற்ற மூன்று பேர்களுக்கும் வேலையில்லா திண்டாட்டத்தை உண்டாக்க வேண்டுமென்பது அவர்களுடைய கோரிக்கை. இந்த கோரிக்கையை ஆதரிக்கும் முறையில் தான் நமது அரசாங்கத்தின் இரண்டாவது கொள்கை அமைந்திருக்கிறது. நான் குறிப்பிட்ட இந்த இரு கண்ணோட்டத்துடன், இரு குரலுடன் திட்டம் தீட்டி மக்களை ஒத்துழைக்கும்படி சர்க்கார் வேண்டினால், எப்படி எதிர்கட்சியில் இருக்கக்கூடியவர்கள் அதை பரிபூரணமாக ஒப்புக்கொள்ள முடியம். 'எதை யெடுத்தாலும் எதிர்கட்சியினருக்கு சந்தேகம்தான்' என்று சர்க்கார் கட்சி தரப்பிலிருந்து பேசியவர்கள் வருத்தப்பட்டார்கள். இரு குரலில் பேசினால் ஏன் சந்தேகம் வராது என்று நான் அவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். ஜவுளி இயந்திரத்தை அபிவிருத்தி செய்ய 30 கோடி ரூபாய் மில் ஜவுளி முதலாளிகளுக்கு சர்க்கார் கடனாகக்கொடுக்கப்போகிறது. எதற்காக இந்தத் கடன் என்றால், நவீன இயந்திரங்களை, புதிய முறையில் இயங்கக் கூடிய இயந்திரங்களை வைப்பதற்கு. அப்படியானால் இதன் அர்த்தமென்ன என்பதை புரிந்து கொள்ளவேண்டும். நமது கைத்தறிகளில் வேலை செய்து கொண்டிருக்கக்கூடிய தொழிலாளிகளிடையே வேலையில்லா திண்டாட்டத்தை ஏற்படுத்துவதுதான் இதன் நோக்கம். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை விளக்கிச் சொல்லும்போது, கனம் நிதி மந்திரி அவர்கள் சொன்னார்கள், 400 கோடி ரூபாய் அளவிற்குதான் நமது இந்திய சர்க்கார் தனிப்பட்ட முதலாளிகளை தொழில் நடத்த அனுமதிக்க போகிறதென்று. ஆனால் மத்திய வர்த்தக மந்திரி கனம் கிருஷ்ணமாச்சாரியார் '750 கோடி ரூபாய் வரையில் அனுமதிக்கபோகிறோம், முதலாளிகளே கவலைப்படாதீர்கள், நான் சந்தோஷ செய்தி கொண்டுவந்திருக்கிறேன்.' என்று கூறுகிறார். ஆகவே, முன்னுக்கு பின் முரணான கொள்கையை அனுமதித்தால், நிச்சயமாக எந்த லட்சியத்திற்காக திட்டம் தீட்டுகிறோமோ, அந்த லட்சியம் நிறைவேறாது என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

"இரண்டாவதாக, மக்களுடைய வாங்கும் சக்தியை உயர்த்தவேண்டும், தொழில்களை அதிகரித்தால் வாங்கும் சக்தி உயரும், நாட்டில் பஞ்சம் தீரும் என்று நிதி மந்திரி சொன்னார். எனக்கு இந்த முறையில் ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. தொழில் வளர்ச்சியால் மட்டும், மக்களுடைய வாங்கும் சக்தி உயருமா என்று கவனித்தால், உயராது என்பது தான் என்னுடைய கருத்து."

Sri K. VINAYAKAM :—"Mr. Deputy Speaker, Sir on a small point of order. I am afraid we do not have quorum."

26th August 1955]

DEPUTY SPEAKER:—"We are 23. I think we have quorum."

SRI K. VINAYAKAM :—" No, Sir, we are only 18. "

DEPUTY SPEAKER:—" No we are 23 and we have quorum."

SRI K. VINAYAKAM :—" Another point of order, Sir. To-day being Friday under ordinary circumstances we should have adjourned at 1 p.m."

DEPUTY SPEAKER :—" Yes, but in consultation with the leaders of parties and the Hon. the Leader of the House to-day we are sitting till 1-30 p.m. "

SRI K. VINAYAKAM :—" I think we should have been informed of it. "

DEPUTY SPEAKER :—" Yes, I should have announced this to the House. "

*SRI T. S. ARDHANARI:—" உதவி சபாநாயகர் அவர்களே, பொதுவாக நமது தேசீய வருமானம் தொழிற் வளர்ச்சியால் அதிகப்பட, அதிகப்பட, அந்த தேசீய வருமானம் மக்களுக்குள் எப்படி பங்கிடப்படுகிறதோ, அதைப் பொருத்துத்தான் மக்களுடைய வாங்கும் சக்தி இருக்கும். தேசீய வருமானம் உயர்வதால் மட்டும், மக்களுடைய வாங்கும் சக்தி உயராது. எங்கள் ஊரில் புள்ளிகரம் மில் என்று ஒரு மில் இருக்கிறது. அந்த மில்லில் சுமார் 400 தொழிலாளிகள் வேலை செய்கிறார்கள். அந்த மில்லின் நிகர லாபம் 27 லட்ச ரூபாய் வருடத்திற்கு. இந்த லாபம் அந்த தொழிலாளிகளின் உழைப்பினால் தான் ஏற்படுகிறது. அவர்கள் உழைப்பினால் ஏற்படுகிற லாபத்தை, அந்த தொழிலாளிகளுக்கு பகிர்ந்து கொடுக்கப்படுமேயானால் அவர்களுடைய வாங்கும் சக்தி உயரும். தனிப்பட்ட முதலாளி, அந்த 27 லட்ச ரூபாயையும் தன் பெட்டிக்குள் போட்டுக்கொண்டால், 400 தொழிலாளிகளின் வாங்கும் சக்தி எப்படி உயரும். அதே மாதிரிதான், நமது ஒட்டு மொத்தமான தேசீய வருமானம் தொழில் வளர்ச்சியால் உயர்ந்து, அந்த வருமானம் எப்படி மக்களிடையே பங்கிடப்பட்டு வாழ்க்கைத்தரம் உயருகிறதோ, அதைப்பொருத்துத்தான் வாங்கும் சக்தி இருக்கும்.

" விவசாய தொழிலாளர்களை எடுத்துக்கொண்டால், பொருள்களின் விலைவாசி அவர்களைச் சுரண்டுகிறது. இரண்டாவதாக லேவாதேவிக்காரர்கள் சுரண்டுகிறார்கள். மூன்றாவதாக சர்க்காரின் வரிகளால் சுரண்டப்படுகிறார்கள் இந்த மூன்று பேர்களுக்கும் வாரி கொடுத்து விட்ட பிறகு, அவர்கள் கையில் என்ன இருக்கமுடியும் ? அவர்கள் கையில் காசு இல்லையென்றால் எப்படி துணி எடுப்பார்கள். துணி விற்கவில்லையென்றால், கைத்தறித் தொழிலோ, இயந்திரத் தொழிலோ அபிவிருத்தியாகி என்ன பிரயோஜனம். ஆகவே, உழைக்கக்கூடிய மக்களால் அபிவிருத்தி செய்யப்படும் தேசீய வருமானத்தை, அந்த மக்களிடையே சமமாக பங்கிட்டு கொடுக்கக்கூடிய திட்டமொன்றை சர்க்கார் வகுத்து வழி காட்டினால்தான், மக்களுக்கு பொதுவாக ஐந்தாண்டு திட்டங்களில் நம்பிக்கை ஏற்படும். கனரகத்தொழில்களையும், சிறு தொழில்களையும் வளர்க்க திட்டமிட்டிருப்பது, கொள்கை அடிப்படையில் பார்க்கும்போது, நன்றாகயிருக்கிறது. ஆனால் அந்த திட்டத்தால் ஏதாவது பொதுமக்களுக்கு பலன் இருக்கிறதா என்றால் இல்லை என்ற சமாசாரத்திற்கு விட்டுவிடக் கூடாது என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

" இறுதியாக, ஜவுளி சம்பந்தமாக, மத்திய சர்க்காரின் போக்கை, கொள்கையை எதிர்த்து நமது மாகாண சர்க்கார் உறுதியோடு போராட வேண்டும். விசைத் தறியை அபிவிருத்தி செய்ய அனுமதிக்கமாட்டோம் என்று சொன்னால்மட்டும் போதாது. இந்த மந்திரி சபை பூராவும் இந்த பிரச்னையில் ஈடுபட்டு மத்திய சர்க்காரை எதிர்த்து போராடுமேயானால் மாகாண மக்கள் பூராவும் சர்க்காருக்கு பக்க பலமாக நிற்பார்கள் என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

[26th August 1955

1-10 p.m. **Sri G. VAGHEESAM PILLAI** :—“ கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதல் ஐந்து வருஷ திட்டம் வெற்றிகரமாக நடந்துகொண்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் எல்லாரும் அந்த திட்டத்தில் ஊக்கத்துடன் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கும் தங்கள் ஒத்துழைப்பை கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

“ தற்போது பல இடங்களில் இந்த சமுதாய நல திட்டம், தேசீய விஸ்தரிப்பு திட்டம் ஆகிய திட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டு, பல அபிவிருத்திகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் இவற்றை எந்தெந்த இடங்களுக்கு விஸ்தரித்து, அபிவிருத்தி செய்யவேண்டுமென்பதை கவனிக்க பயிற்சி பெற்ற அதிகாரிகள் அதிகமாக இல்லாததால், மேற்கொண்டு இத் திட்டங்களை விஸ்தரிக்கும் வேலை தாமதமாகப் போகலாம். ஆகவே, ஸ்தல அபிவிருத்தி திட்டங்களை மற்ற இடங்களில் அமுலாக்கலாம். இந்த சமுதாய நல திட்டம், தேசீய விஸ்தரிப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் நிறுவப்படாத பல இடங்களில், ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேலை நன்றாக நடந்துகொண்டிருக்கிறது. இந்த ஸ்தல அபிவிருத்தி திட்டத்தைப் பொருத்த வரையில், சில பகுதிகளில் 3,000 ரூபாய்க்கு கீழ்பட்டு செலவாகக்கூடிய வேலைகளை, **District Development Council sanction** இல்லாமல் ஆரம்பித்து நிறைவேற்றக்கூடியதாக இருந்தால், பேர் பாதி தொகையை அந்தப் பகுதி மக்களிடமிருந்து வாங்கிக்கொண்டு, வேலையை முடித்த பிறகு **estimate** போட்டு பணத்தை கொடுத்து விடலாம் என்று போட்டிருக்கிறது. நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், இந்த வரம்பை **5,000** ரூபாய்க்கு உயர்த்தி விட்டால், அனேக சிறிய வேலைகளை உடனடியாக எடுத்து நிறைவேற்ற சௌகரியமாக இருக்கும். மேலும், **5,000** ரூபாய் வரை இந்த ஸ்தல அபிவிருத்தி வேலைகளுக்கு **sanction** செய்ய ஜில்லா கலெக்டர்களுக்கோ அல்லது **Head of the Department**களுக்கோ அதிகாரம் அளிக்கலாம்.

“ ஸ்தல அபிவிருத்தி திட்டங்கள், சமுதாய நல திட்டங்கள் இவைகளைப் பற்றிய தஸ்தாவேஜுகள் சில ஆபீஸ்களில் அதிக காலதாமதம் செய்யப்படுகிறது. இந்த அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமான தஸ்தாவேஜுகள் எல்லாம், ஒவ்வொரு ஆபீஸிலும் ஒரு வாரத்திற்கு மேல் தங்கக்கூடாது. தங்கினால் **Heads of Departments** தாமதத்திற்கு ஆன காரணங்களை விளக்கவேண்டும் என்கிற உத்திரவு இருக்கவேண்டும். சாதாரணமாக **estimate**-கள் ஒரு வார காலத்தில் தயார் செய்யமுடியாது. ஆகவே **estimate**-கள் தயார் செய்ய வேண்டிய தஸ்தாவேஜுகளை மாத்திரம் **15** நாட்களோ அல்லது ஒரு மாதமோ வைத்துக்கொள்ளலாம். அதற்கு மேல் காலதாமதம் ஆகவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், தலைமை அதிகாரியிடம் **Permission** வாங்கிக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனை இருக்கவேண்டும். இந்த மாதிரியான நிபந்தனைகள் இருந்தால், இந்த திட்டங்கள் சம்பந்தமான வேலைகள் சீக்கிரம் உருவாகும். கால தாமதம் ஏற்படாது. இதை சர்க்கார் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

“ இப்பொழுது க்ஷயரோகம், இன்னும் அதுபோன்ற மற்ற வியாதிகளுக்கு எல்லாம் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவற்றிற்கு எல்லாம் என்னென்ன சிகிச்சை செய்யவேண்டுமென்பதும் பேசப்பட்டு வருகிறது. ஆனால் நமது தேசத்திலே, வியாதியிலும் பெரிய வியாதி என்று சொல்லப்படுகிற குஷ்டரோகம் அதிகமாக பரவிக்கொண்டு வருகிறது. தென்னாற்காடு ஜில்லாவை எடுத்துக்கொண்டு பார்த்தால், உலகத்திலே வேறெங்கும் இருப்பதை விட தென்னாற்காடு ஜில்லாவில் தான் இந்த வியாதி அதிகமாக பரவியிருக்கிறது என்பது புள்ளி விவரங்களிலிருந்து தெரியவருகிறது. அகில இந்திய குஷ்டரோக நிவாரண சங்கம் புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். அதைப் பார்த்தால், தென்னாற்காடு ஜில்லாவில்தான் இந்த வியாதி அதிகமாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே இந்த வியாதியைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில், இந்த வியாதியின் சிகிச்சைக்காக **36** லட்ச ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். மாகாணம் பூராவுக்கும் இந்தத் தொகை கொஞ்சம்கூட

26th August 1955] [Sri G. Vagheesam Pillai]

போாதது. இந்த 36 லட்ச ரூபாயை, 36 கோடி ரூபாயாக வேண்டுமானு லும் ஆக்கலாம். 50,60 கோடி ரூபாயாக ஆக்கினுலும் ஆக்கலாம். அவ் வளவு அதிகமான தொகை ஒதுக்கிஞல்தான் குறுக்கிய காலத்திற்குள் இந்த நோயைத் தடுக்க முடியும். சமீபத்தில் இந்த வியாதியை தீர்க்க 4 ரூபாய் விலையுள்ள ஒரு மாத்திரை கண்டுபிடித்திருக்கிருர்கள். இதை வருஷகணக்கில் சாப்பிட்டால் வியாதி தீர்ந்துவிடும் என்று சொல்லப்படு கிறது. சிலர் இதை 2, 3 மாதம் சாப்பிட்டு நிறுத்திவிடுகிருர்கள் வறுமை யின் காரணத்தால். ஆகவே சர்க்கார் இந்த வியாதியின் சிகிச்சைக்காக 36 லட்சம் ரூபாய் போதாது 50 கோடி ரூபாய் அளவில் துணிந்து தொகை ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" நமது மாகாணத்தில் இப்பொழுது ஒரேயொரு விவசாய கல்லூரிதான் இருக்கிறது. விவசாயம் நமது தேசத்தின் முக்கியமன தொழிலாக இருப் பதால், இன்னும் அதிகமான விவசாய பட்டாதாரிகள் தேவைப்படுகின்றன. ஆகையால் தற்போது அண்ணுமலை பல்கலைக் கழகத்தில், இண்டர்மீடியட், பி.எஸ்.ஸி. பட்ட படிப்புகளுக்கு விவசாயத்தை ஒரு பாடமாக வைத்து, நடத்திவருகிருர்கள். அண்ணுமலை நகர பகுதியில் 250 ஏக்கர் நஞ்செய் நில மிருப்பதால், அந்தப் பல்கலைக்கழகத்தில் ஒரு விவசாய கல்லூரியை ஏற்படுத்த வசதியிருக்கிறது. அங்கே ஒரு விவசாய கல்லூரியை ஏற்படுத்தவேண்டும் என்று பல அங்கத்தினர்கள் சர்க்காரை கேட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆகவே ஒரு விவசாய கல்லூரியை ஏற்படுத்த சர்க்கார் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும்."

SRI V. BALAKRISHNAN :—" Mr. Deputy Speaker, Sir, have we quorum ?"

DEPUTY SPEAKER :—" Yes, we have. Some members are sitting in the back benches. The hon. Member has not probably noticed them."

SRI G. VAGHEESAM PILLAI :—" இப்பொழுது நெய்வேலியில் **mining** ஏற்பட போவதால் **mining subject**-ஐ தனியாக ஒரு **Degree Course**-ஆக ஏற்படுத்தி அதையும் அங்கேயே ஏற்படுத்திஞல் சவுகரியமாக இருக்கும். ஆகவே இதையும் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். 1-15 p.m.

" இப்பொழுது தென்னுற்காடு ஜில்லாவிலே 30 லட்சம் பேர்கள் இருந்த போதிலும்கூட **high school**-கள் 38 தான் இருக்கின்றன. இன்னும் 20, 30 பள்ளிக்கூடங்களாவது ஏற்படுத்த இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் வகை செய்யவேண்டும். அப்பொழுதுதான் அங்குள்ளவர்களுக்கு படிப்பு வசதி கிடைக்கும். ஆகவே இதையும் கவனிக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

" தஞ்சை ஜில்லாவைப்போலவே சிதம்பரம் தாலுகாவிலும் **extension of cherries** என்கிற ஒரு திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டும். நஞ்சை நிலங்கள்தான் சிதம்பரம் தாலூகாவில் இருப்பதனுல், அதை **acquire** செய்யக்கூடாது என்ற விதி இருப்பதனுல், அதைமாற்றி நஞ்சை நிலமாய் இருந்தால்கூட அதை கட்டாயமாக வாங்கி ஏழை ஹரி ஜனங்களுக்குக் கொடுக்கவேண்டும். சிதம்பரம் தாலுகாவில் சுமார் 65 கிரா மங்களுக்கு சேரிகள் விஸ்தரிக்கவேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிருர் கள். அதையும் சர்க்கார் கவனிக்கவேண்டும்.

" இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சுமார் 4 கோடி ரூபாய் செலவில் ஒவ்வொரு கிராமத்திற்கும் போக்குவரத்து வசதி ஏற்படுத்த வேண்டும் என்பதற்கு முக்யத்வம் கொடுத்திருப்பதை நான் வரவேற் கிறேன். **P.W.D. Scheme** என்று ஒரு திட்டம் தயாரித்து போக்கு வரத்து வசதியை விருத்தி செய்வதற்காக வைத்திருக்கிருர்கள். இதை தயாரித்து அநேக வருஷங்கள் ஆகிவிட்டன. ஒவ்வொரு தாலுகாவிலும் சுமார் 20 கிராமங்களுக்கு போக்குவரத்து வசதிகள் செய்யப்படாமல் இருக்

கின்றன. ஜில்லா போர்டுக்கு இவைகளை **half grant work** கொடுத்து செய்யும் பழக்கத்தில் இருக்கிறது. ஆகவே அதைக் கண்டிப்பாக மேற்கொள்ள வேண்டும் என்று கூறிக்கொள்ளுகின்றேன்.

"சிதம்பரத்திலிருந்து அரியலூருக்கு ரயில் வசதி வேண்டும் என்று அநேக வருஷங்களாக சொல்லிக்கொண்டு வருவதால் அதையும் இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

"தென்னுற்காடு ஜில்லாவில் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் ஒன்று தான் இருக்கிறது. ஆகவே கடலூரில் ஒரு கல்லூரி ஏற்படுத்தவேண்டும். இதற்கு ஆவன செய்யுமாறு சர்க்காரை கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்."

1-18 p.m. * Sri R. S. ARUMUGAM :—"கனம் தலைவர் அவர்களே, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஆரம்பிக்கின்ற காலத்திலே உணவுக்கஷ்டம் இருந்தது. அக்கஷ்டத்தை முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுல் வெற்றிகரமாக சமாளித்து விட்டு, இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு வந்திருக்கிறுர்கள். இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மிகவும் புத்திசாலித் தனமாக தயாரித்து இருக்கிறுர்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பெரும் உருக்குத் தொழிற்சாலைகள் இந்த நாட்டுக்குத்தேவை. ஏனெனில் கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்கு வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை தருவிக்கக் கூடாது. ஆகவே இந்த நாட்டிலே பெரும் உருக்குத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தி, அவற்றிலிருந்து புதிய இயந்திரங்களைத் தயார் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்குவதற்காகவும், சிறு சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்கவேண்டும் என்ற அடிப்படையிலேயும் மிகவும் புத்திசாலித்தனமாக இந்த திட்டத்தை வகுத்திருக்கிறுர்கள் என்பதை சொல்லிக்கொள்வதிலே பெருமைப் படுகிறேன்.

"நாகரீகம் மிகுந்த நாடுகளில் இந்தக்காலத்திலே 10-மனிதர்கள் செய்யவேண்டிய வேலையை ஒரு மனிதன் செய்யக்கூடிய அளவிற்கு விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதனுல் ஓர் அளவு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படலாம். ஆனுல் சிறு சிறு கைத்தொழில்கள் கிராமங்களிலே பரவலாக வருகிறபொழுது ஆயிரக் கணக்கான மக்களுக்கு வேலை கிடைக்கும். இந்த அடிப்படையிலே கிராம மக்களுக்கு. நன்மை செய்ய வேண்டும் என்று இந்தத் திட்டத்தை வகுத்திருக்கிறுர்கள்.

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எல்லா கிராமங்களுக்கும் மின்சாரவசதி ஏற்படும் என்ற திட்டமானது மிகவும் நல்லது. எல்லோரும் வரவேற்கத் தக்கது. இதனுல் நாட்டில் பெருமளவு முன்னேற்றம் ஏற்படும் என்பதை யாராவது இல்லை என்று சொன்னுல் அவர்கள் உண்மையை மறைத்துக் கூறுகிறுர்கள் என்பதேத் தவிர வேறு ஒன்றும் சொல்ல முடியாது.

"அடுத்தபடியாக நல்ல நீர்ப்பாசன திட்டங்களை எடுத்திருக்கிறுர்கள். அவைகளிலே முக்கியமானது பம்பையாறு திட்டம். இதை நிறைவேற்றினுல் தான் ராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களில் பல பகுதிகளில் நீர்ப்பாசன வசதி ஏற்படும். ஆகவே இந்த பம்பையாறு திட்டத்தை எப்படியாவது பரிசீலனை செய்து இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள் முடிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக் கொண்டால் வடபகுதி வறண்டு. கிடக்கிறது. இந்த திட்டத்தினுல் அந்த வறட்சி மாறும்படியான நிலை ஏற்படும்.

"கடந்த வருஷங்களிலே எங்கள் தாலுகாவிலே மானுர், கங்கைகொண்டான் ஆகிய இரண்டு இடங்களிலுள்ள இரண்டு குளங்களுக்கும், தண்ணீர் வரக்கூடிய வாய்க்கால்கள் ஏற்படுத்தப் போவதாக சொல்லி வந்தார்கள். ஆனுல் அவைகளை இது வரையிலும் செய்யவில்லை. ஆகவே அவற்றை 2வது ஐந்தாண்டுத் திட்டத்திலே எப்படியாவது செய்யவேண்டும்

26th August 1955] [Sri R. S. Arumugam]

என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்பகுதி மிகவரண்ட பிரதேசம். அந்தப் பகுதிகளுக்கு மின்சார வசதிகளையும் உடனடியாக செய்து கொடுக்க வேண்டும்.

" தாமிரபரணியிலே வசதியான அளவு தண்ணீர் இருந்தபோதிலுங்கூட குளங்களில் தண்ணீர் பெருகக்கூடிய நிலையில் இல்லை. குளங்களையும், கால்வாய்களையும் ஆழப்படுத்தவேண்டும். உதாரணமாக திருநெல்வேலிக்காலை எடுத்துக்கொண்டால் அது மிகவும் மோடாக இருக்கிறது. அதன் கிழ்பகுதி குளங்களும் அப்படித்தான் இருக்கிறது. ஆகவே இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தில் இவைகள் கட்டாயம் ஆழப்படுத்தப்பட வேண்டும் என நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

" எங்கள் நெல்லை தாலுகாவிலே ராமயன்பட்டி பகுதியில் சுண்ணும்புக்கல் ஏராளமாக கிடைக்கின்றன. ஆகவே அங்கு அதற்கான தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தினல் மிகவும் நல்லது என்று கருதுகிறேன்.

" எங்கள் ஜில்லாவிலே **Engineering College**-க்காக சென்னைக்கோ, கோயம்பத்தூருக்கோதான் போகவேண்டியிருக்கிறது. ஆகவே ஒரு **Engineering College**-ம், ஒரு **Polytechnic** காலேஜும் பாளையங்கோட்டையிலே ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" தூத்துக்குடி துறைமுகம் மிகவும் பழமையானது. அதை செப்பனிட்டு, ஆழப்படுத்தி பெரியதுறை முகமாக ஆக்குவதற்கு செய்யவேண்டிய காரியங்களை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

" திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்கு ஒரு ரயில்பாதை போடப் போவதாகக் கேள்விப்பட்டு நாங்கள் சந்தோஷப்படுகிறோம். இதோடு கோவில்பட்டி தாலுகா மிகவும் வறண்ட பிரதேசம். அங்கேயும் ரயில் போக்கு வரத்தை ஏற்படுத்தவேண்டும். மணியாச்சியிலிருந்து மானுமதுரைக்கு ஒரு ' ரயில்வே லைன்' போடுவதாக இருந்தது. ஆனால் அதை வேறு இடத்திலிருந்து போட ஏற்பாடு செய்திருப்பதாகக் கேள்வி.

" இந்த மார்க்கத்தில் ரயில் அவசியமில்லை வேறு மார்க்கத்தில் அமைக்கலாம் என்ற எண்ணமிருந்தால் அதை மாற்றி விட்டு மணியாச்சியிலிருந்து ரயில் லயன் போடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதைச் செய்து முடித்தால் அங்கு போக்குவரத்திற்கு சௌகர்யமாக இருக்கும் என்பதையும் இந்த இடத்தில் ஞாபகப் படுத்த விரும்புகிறேன். அதை மாற்றுவதற்கு எந்த எண்ணம் இருந்தாலும் அதை மாற்றிவிட்டு மானுமதுரையிலிருந்து மணியாச்சிக்குப் போகக் கூடிய அந்தப்பாதையையே எடுத்து நடத்த சர்க்கார் சிபாரிசு செய்ய வேண்டும், அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொள்ளுகிறேன். 1-25 p.m.

" திருநெல்வேலி தாலூகாவில் மூன்று முனிசிபாலிட்டிகள் இருக்கின்றன. சரியான வருமானம் வராத நிலைமையில் இருக்கின்றன. பாளையங்கோட்டை முனிசிபாலிட்டி பத்து லட்சம் ரூபாய் செலவில் ஹரிஜன காலனி அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தை தயாரித்து அதை சர்க்காருக்கு அனுப்பி யிருக்கிறார்கள். அந்த முனிசிபாலிட்டி மேலும் **drainage** திட்டம் போட்டு அதற்கு என்று சுமார் 48 லட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். அதையெல்லாம் நமது சர்க்கார் பரிசீலனை செய்து அதற்கு இடம் அளிக்க வேண்டும் என்று இந்த இடத்தில் கேட்டுக் கொள்ளுகிறேன்.

" அதே மாதிரி திருநெல்வேலியிலும் 50 லட்சம் ரூபாய்க்கு **drainage** திட்டம் போட்டு அதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்து நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். தாம்பரபரணி ஒரு ஜீவநதி. அந்த நதியைப்பற்றி எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதனுடைய பெருமையும் எல்லோருக்கும் தெரியும். ஆனால் நெல்லை ஜங்ஷனுக்குச் சமீபம் நதியின் பக்கத்தில் சென்றால் நதியிலிருந்து பொறுக்க முடியாத சாக்கடை நாற்றம் அடிக்கிறது. அந்த நாற்றத்தின் சகிப்பை தாங்க முடியவில்லை. பழம் பெரும் பெருமை வாய்ந்த தாம்பிரபரணி அம்மாதிரி துர்நாற்றம் வீசும் நிலையில்

[Sri R. S. Arumugam] [26th August 1955

இருப்பது நியாயம் ஆகாது. அந்தத் தண்ணீரை இப்பொழுது லட்சக்கணக்கான ஜனங்கள் எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சகல விஷயங்களுக்கும் உபயோகித்து வருகிறார்கள். அதனால் அந்தத் தண்ணீரை நல்ல முறையில் சுத்தமாக வைப்பதற்கு தக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஆகவேதான் நெல்லை முனிஸிபாலிட்டியில் தற்சமயம் குடி தண்ணீர் திட்டத்துக்கு ஏற்பாடு செய்திருப்பதோடு **drainage** திட்டத்தையும் இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்று மிகவும் தயவாய்க்கேட்டுக் கொள்ளுகிறேன்.

" தச்சநல்லூர் பஞ்சாயத்தில் 18 ஆயிரத்திற்குமேல் ஜனங்கள் வசிக்கிறார்கள். அங்கு ஹைஸ்கூல் கிடையாது, மெடர்னிட்டி ஆஸ்பத்திரி கிடையாது. இவைகள் வேண்டும் என்று திட்டம் தயாரித்து அனுப்பியிருக்கிறார்கள். இவைகள் மிகமிக அவசியம் இல்லையா ? எனவே இந்த ஐந்தாண்டு திட்டத்தில் இவைகளை எப்படியும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இங்கிருந்து ஜங்ஷனுக்குச் செல்வதற்கு அதிகதூரம் சுற்றிப்போகவேண்டும். நேராக பாதை அமைக்க திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். வாய்க்காலைக்கடந்து செல்ல ஒரு பாலமும் தேவைப்படுகிறது. இவைகளையும் இரண்டாவது 5 ஆண்டு திட்டத்தில் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலப்பாளையம் நகரசபை எல்லைக்குள் பெரும்பாலும் ஏழை கைத்தறி நெசவாளர்கள்தான் இருக்கிறார்கள். அந்த முனிசிபாலிட்டிக்கு ஜாஸ்தி வருமானம் கிடையாது. திருநெல்வேலியிலிருந்து அங்கு செல்ல வேண்டும் என்றால் ஆற்றைக் கடந்துதான் செல்ல வேண்டியதாக இருக்கிறது. அங்கு ஒரு தாம்போதி கட்ட வேண்டும் என்று சில வருஷங்களாக பரிசீலனையில் இருந்தும் அதை இன்னும் எடுத்து செய்யப்படாமல் இருக்கிறது. அதை இந்த ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்து நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அங்கு ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல முறையில் முன்னேற்றமடைய வேண்டுமென்றால் கரைபோட்ட துணிகளை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் மிகவும் கஷ்டப் பட்டகாலத்தில் சர்க்கார் அவர்களுக்கு செய்த உதவியை அவர்கள் எப்பொழுதும் மறக்கமாட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இந்த சர்க்காரை அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் முன்பு வைத்துக் கொண்டிருந்த சந்தேகங்களையெல்லாம் இப்பொழுது மறந்து விட்டார்கள். மேலும் அவர்கள் நெசவு செய்யும் துணிகளை வெளி நாட்டிற்கு அனுப்பி வைப்பது மிகவும் நல்லதாக இருக்காதா ? என்பதை ஞாபகப்படுத்துகிறேன். இப்பொழுது அவர்கள் நல்ல துணிகளை உற்பத்தி செய்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அந்த முறையில் அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இவைகளையெல்லாம் செய்தால் எங்கள் ஜில்லாவிலுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கிடைக்கும். அவர்களும் சந்தோஷப்படுவார்கள். எங்கள் தாலுகாவில் பாளையங்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களிலும் ஏராளமான கைத்தறியாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருமே சந்தோஷப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நேரம் இல்லாததால் கடைசியில் ஒரு வார்த்தை. இந்த சர்க்கார் மத்திய சர்க்காரிடமிருந்து எவ்வளவு பணத்தைப் பெற்றுக்கொள்ள முடியுமோ அந்த முறையில் பெற்றுக்கொண்டு திட்டத்தைப் நிறைவேற்ற வேண்டும். அந்த முறையில் பணத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய புத்திசாலித்தனம் வாய்ந்தவர்கள் நமது சர்க்காரின் பொறுப்பை ஏற்று நடத்துகிறார்கள் என்பதைக் கண்டு நாங்கள் பெருமைப்படுகிறோம். நமது மாகாணத்திற்கு வரக்கூடிய பணத்தை விட்டு விடாமல் பெற்றுக்கொண்டு நமது மாகாணத்திற்கு செய்ய வேண்டிய திட்டங்களைச் செய்ய வேண்டும் என்று மீண்டும் கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—" The House will now adjourn and meet again at 8-30 p.m. to-night."

The House then adjourned.

26th August 1955]

[Night sitting—8·30 p.m.]

DEPUTY SPEAKER :—" Now, we shall continue the discussion on the Second Five-Year Plan."

* SRI S. PANCHAKSHARAM :—" Mr. Speaker, Sir, last time when I had an occasion to speak about the Second Five-Year Plan, I congratulated the Government on the efforts they had made for bringing out a comprehensive plan of the order of Rs. 400 crores. I said ' the entire Government including the Hon. Minister for Finance deserve congratulations in this respect.' I also said ' the Hon. Minister for Finance has got to convince the Planning Commission and he has to wage a battle royal and make every strenuous effort to see that he gets the seal of approval for the entire Plan of Rs. 400 crores to be implemented in this State.' Somehow the battle that has been waged has been lost by this Government because a conservative body that the Planning Commission is, they were not very imaginative to see the nature of the Plan and, therefore, they seemed to have cut down the entire Plan to one-third of its extent. Sir, it is rather unfortunate that, with the reservations they have made about finding the necessary resources for the starting of heavy industries, still an amount of Rs. 165 crores which has been approved for the present by the Planning Commission, is not adequate and enough for the future that we envisage for our State.

" Sir, the First Five-Year Plan had been framed with the object of solving the food problem. We have had several river valley projects and within two or three years of planning, the food problem has been solved and now we are supposed to be a surplus country in the matter of food. The Second Five-Year Plan that is sought to be pushed through is a Plan which is more ordered and more definite and the object with which they want to implement the proposals under the Second Five-Year Plan seems to be to solve the twin problem of unemployment and the raising of the living standard of the people of this country.

" Sir, after having studied the Planning Commission's proposals and also the proposals of this State, in simple language we understand it to be : ' produce more and earn more '. That seems to be the economics of the Second Five-Year Plan. In trying to do so, I feel that there is a fallacy in the argument that has been put forward by the Planning Commission. At any rate, in South India in respect of both unemployment and raising of living standards of the people, the problem entirely rests on the level of the prices of foodgrains. Rice is the staple food for South Indians and when the prices of foodgrains in South India shoot up, then the prices of other domestic commodities also shoot up consequently. If the prices of foodgrains fall or come down—now it has crumbled down from Rs. 30 to Rs. 12 for a bag of two maunds—the prices of other commodities have also a tendency to come down in proportion to the prices of foodgrains. Therefore, when the level of the prices of foodgrains is not going to be maintained, then how are we going to raise the standard of living of the people in South India. If we are

[Sri S. Panchakssharam] [26th August 1955

going to produce more, the problem is going to be further accentuated. Production without consumption is going to make it cheaper and cheaper. Therefore, I am not able to understand how these two principles are going to be reconciled and how matters are going to be worked out. But, whatever it is, I am not now on the question of living standards at all. From the proposals under the Second Five-Year Plan made before us, I see that at least Rs. 165 crores are going to be spent in South India and to that extent we feel glad because money to that extent is going to be distributed into the hands of the poor people in South India. To some extent, it is going to improve the social conditions of the people here in South India.

8-40 p.m.

" What is the present position of South Indians here? Conditions in villages are really very bad. People in villages are illiterate. They do not have drinking water facilities and approach roads to their villages. They are suffering for lack of medical aid. If a person wants to get medical aid, he has to travel a long distance. In North Arcot district the position is worse. We have to feel thankful to the Planning Commission for having allotted that much amount of Rs. 165 crores for being spent over here for improving the social conditions of the people. In this connection when I am speaking on improving the social conditions of the people I wish to bring to the notice of the House the position of the people in North Arcot district.

" The condition of the people in North Arcot district is really very bad and worse than the condition of the people in many other districts. If I can say with an amount of truth, North Arcot district is the residuary of the present Rayalaseema area. People in this district are really poor. They do not have any avocation. Lakhs of people are either unemployed or under-employed. It is a dry district with an average rainfall of 25 inches a year. Under these conditions, agriculturists in this district feel it very hard to carry on agricultural operations. The present position is simply alarming. During the last three faslis—1361, 1362 and 1363—people are in arrears in the payment of revenue taxes to a very large extent. Fasli No. 1364 is coming. Dues to Land Mortgage Banks have not been paid. All the loans advanced by the Revenue Department have not been cleared. The dues to co-operative societies are in very heavy arrears. People are not able to get any accommodation from neighbouring creditors. That is the present position in North Arcot district. Under these circumstances the position of North Arcot district deserves special attention in the future set-up of the Second Five-Year Plan. I submit that pressure of agricultural labour on land is very great. We have got more men depending on agriculture than what is actually required. That is, if one person can do a particular acreage of land, there are at least three people crowding on that land. This kind of overcrowding has got to be diverted into other channels. This state of affairs makes the condition of the people worse than what it is in other districts. People are not able to get living wages. They are only getting starvation wages. For six months they get something to live upon and for the other six months they are suffering. The

26th August 1955] [Sri S. Panchaksharam]

problem in this district is not one of unemployment, but of under-employment also. In such conditions, North Arcot district deserves special treatment and special planning for the solution of the problems. Because of frequent failure of monsoons and because of the poor rainfall of 25 inches per year, people in this district are not able to raise even one crop of paddy which is the normal crop in that district. Therefore, in order to safeguard the position of agriculturists, I would submit the following proposals.

"About one lakh of acres in North Arcot district are used to be irrigated every year from waters in the Palar river. Palar freshes have failed and the reason for the same is known to all. With regard to the dispute with the Mysore Government regarding the sharing of waters, the Government are taking some steps for resolving the dispute. If the dispute is settled, I am sure, one lakh of acres will have an assured supply of water and people who depend on these one lakh of acres will have certainly some amount of employment and there will not be also failure of crops.

"Electric energy is another thing which is very necessary for our district. We have got about 30,000 wells with the help of which lift-irrigation is carried on. To make agricultural operations easier than at present, electrical energy must be supplied to every one of the villages in North Arcot district.

"There are 2,000 minor irrigation tanks in this district. Most of these tanks have got silted up. They have been reduced to half their original capacity, though for revenue purposes their capacity is considered full. These tanks have got to be deepened and silt has got to be cleared. They have to be restored to their original capacity so that assured supply of water may be got.

"There is a very big tank, called the Kaveripak tank. Its bund from one end to the other is seven miles in length. It is said that its full tank cacpacity was three times the present capacity at the time of Tippu Sultan and that it was supplying water for irrigating lands in 32 villages. This tank has got highly silted up, so much so it can hold water enough for supply for only ten months. It may be even seven or eight months now. The problem of desilting this tank and restoring its capacity at least to half its original capacity must be attended to either now or some time in the immediate future. River pumping schemes can also be introduced. Deep bore-wells in Palar and Cheyar can also be dug.

"As regards industries, handloom industry must be put on a firm basis. Match-making industries which are very thriving can also be set up. Hand-pounding of rice will give occupation to people who are unemployed. With reference to the heavy industries, there is a proposal to start a sugar factory on a co-operative basis. Even this is going to be pushed through, there is also room for another sugar factory to be started on a joint stock company basis. A glass factory, leather flaying and tanning factory and a factory for the manufacture of drugs with the help of Indian medicinal herbs

can also be started. Pencil manufacturing on cottage industry basis can also be started. If all these industries can be started, unemployment can be solved to some extent.

" Rural indebtedness has also got to be solved. Now, agriculturists are not able to get any credit at all. For that, rural banks have got to be started all over the district so that people may get loans not only for carrying agricultural operations but also for other purposes.''

8-48 p.m. **Sri P. Jeevanandam** :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே கடந்த 3 நாட்களாக இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் மீது இங்குள்ள அங்கத்தினர்கள் பலர் பற்பல யோசனைகளைக் கூறியிருக்கிறார்கள். அந்த யோசனைகளையெல்லாம் திரட்டி, இந்தத் திட்டத்திலேயே சேர்த்தால், இவற்றையெல்லாம் நிறைவேற்றுவதற்கு எவ்வளவு செலவாகும் என்று பார்த்தோமானால் உத்தேசமாகச் சொன்னால் கூட இரண்டாயிரம் கோடிக்கு மேல் செலவாகும் என்று எனக்கு தென்படுகிறது. மந்திரி சபையினர் எங்களுடைய சர்க்கார் அதிகாரிகள் தயாரித்த திட்டங்களை வைத்துக்கொண்டு, அதன் பேரில் உங்கள் யோசனைகளைச் சொல்லுங்கள் என்று நம்மிடம் கேட்டிருக்கிறார்கள். ஜில்லாவிலிருந்து வந்திருக்கும் எல்லா கட்சி அங்கத்தினர்களும் எல்லா தரப்பில் இருக்கிறவர்களும் யோசனைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். போட்டி போட்டும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். அதற்காகத்தான் இந்த இரவில் கூட சபை கூடுகிறது. நிதி மந்திரி அவர்கள் திட்டத்தை சமர்ப்பிக்கும்பொழுது முதலிலேயே சொன்னார், நாங்கள் திட்டவட்டமாக 400 கோடிக்கு திட்டம் தயாரித்திருக்கிறோம். இருந்தாலும் மத்திய சர்க்கார் தற்காலிகமாக சென்னை ராஜ்யத்திற்கு ஒதுக்கி இருப்பது 225 கோடி ரூபாய் என்று சொன்னார். 400 கோடி திட்டம் தயாரித்து அது 225 கோடிக்கு குறைக்கப்பட்டு இருக்கும்பொழுது, நாம் மேலும் மேலும் திட்டத்தின் செலவை அதிகப்படுத்தக்கூடிய அளவில் யோசனை சொல்லிக்கொண்டே போவது வெறும் விருதா என்று நிச்சயமாகக் தெரிகிறது. நமது இந்திய நாட்டிலேயே இருக்கக்கூடிய செல்வாதாரம், பௌதீக செல்வாதாரம், மனித சக்தி ஆகியவற்றை எடுத்துக்கொண்டால் நமக்கு மித மிஞ்சியிருக்கிறது என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம். மனித சக்தியும், பௌதீக செல்வாதாரமும் நம் நாட்டில் மித மிஞ்சி இருக்கிறபோது நமது திட்டங்கள் யாவும் வெற்றி பெறத்தானே வேண்டும். அது இல்லாமல் நாம் போடுகின்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற முடியாத நிலையில் குறைத்துக் கொள்வதற்கு காரணம் என்ன ? பணம் இல்லை. 400 கோடி ரூபாய் திட்டங்களை அவர்கள் என் அப்படியே ஒத்துக் கொள்ளவில்லை ? பணம் இல்லை. அதற்காகத்தான் 200 கோடிக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். உண்மையிலேயே பணம் இல்லையா ? இன்றைக்கு நாட்டில் இருக்கக்கூடிய பிரிட்டீஷ், அமெரிக்க முதலாளிகள் எல்லாம் ஏராளமான பேர்கள் இருக்கிறார்களே? அவர்களிடம் பணம் இல்லையா ? நம் நாட்டில் இருக்கக்கூடிய ஏகபோக முதலாளிகளிடத்தில் பணம் இல்லையர் ? நம் நாட்டில் இருக்கக்கூடிய நிலப்பிரபுக்கதிடத்தில் பணம் இல்லையா ? நம் நாட்டில் இருக்கக்கூடிய ராஜாக்கள் இடத்தில் பணம் இல்லையா ? பணம் இருக்கிறது. பணம் அவர்களுடைய பக்கத்தில் குவிந்து கிடக்கிறது. ஆனால் அந்தப் பணம் சுலபத்தில் இந்த திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்கத்திற்கு வரமாட்டேன் என்கிறது. இந்த அடிப்படை உண்மையை நாம் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக பணம் இல்லையென்ற காரணத்திற்காக, அரசாங்கத்தார் அங்கத்தினர்கள் சொல்லுகின்ற யோசனைகளை மகாண வாரியாக, ஜில்லாவாரியாக கவனிக்க முடியவில்லையென்று சொல்லலாமே தவிர, பணம் இருந்தால் மட்டும் இவர்கள் சொல்லக்கூடிய யோசனைகள் ஒன்றையும் கூட வேண்டாமென்று சொல்லமாட்டார்கள். கம்யூனிஸ்ட் பக்கதிலிருந்து வைத்திருக்கின்ற யோசனைகள் எல்லாம் கூட அமுலுக்கு வரும். ஆனால் பணம்

26th August 1955] [Sri P. Jeevanandam]

இல்லை. ஆகையால் இன்றைக்கு வெறும் எட்டுச் சுரைக்காய் திட்டமாக நாம் சொல்லுகின்ற யோசனைகள் எல்லாம் இந்தத்தி ட்டத்தில் சேர்க்கப்படுகிறது. இந்த திட்டத்துக்கு எந்த அந்நிய நாட்டு முதலாளிகளிடம் பணம் இருக்கிறதோ, எந்த நிலப் பிரபுக்களிடத்தில் பணம் இருக்கிறதோ, எந்த ராஜாக்களிடத்தில் பணம் இருக்கிறதோ அவர்களிடமிருந்து எல்லாம் போதுமான பணத்தைப் பெறுவதற்கு சர்க்கார் முயற்சிக்கவில்லை. அந்தக் கண்ணேட்டமே அவர்களுக்கு ஏற்படவில்லை. ஆனால் சொல்லுகிறது, இது மக்கள் திட்டம், இந்த திட்டத்திற்கு செலவாகும் தொகையில் பாதியையோ, கால் பங்கையோ அந்தந்த பிராந்திய மக்களே கொடுக்க வேண்டும் என்பதாக எல்லாம் சொல்லுகிறார்கள். பால் பிழிந்துவிட்டு, தேங்காய் சக்கையில் மறுபடியும் தண்ணீரைத் தெளித்து பாலாக பிழிய முயற்சிக்கிறது போல இருக்கின்றது இந்தச் செய்கை. எந்தந்த வகையில் எல்லாம் மக்கள் இடத்திலிருந்து வரியாக பணம் திரட்ட முடியுமோ, அந்தந்த வகையில் எல்லாம் அவர்களிடமிருந்து செல்வத்தை சுரண்டிக்கொண்டிருக்கிறோம். இன்றைக்கு மேலும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கே அவர்களே பணம் கொடுக்க வேண்டுமென்றால், அது சக்கையில் தண்ணீர் தெளித்து பால் பிழிய முயற்சிக்கின்ற கதையைப் போல்தான் ஆகும். நம் நாட்டில் உள்ள செல்வாதாரம், பௌதிக செல்வாதாரம் ஆகியவற்றையும் பயன்படுத்திக்கொண்டு பல திட்டங்களைச் சர்க்கார் போடவேண்டுமென்றால், சர்க்காருடைய அடிப்படைக் கொள்கையிலேயே ஒரு மாற்றம் ஏற்படவேண்டும். இன்றைக்கு எந்த இடத்தில் பணம் போய் குவிந்து இருக்கிறதோ, அந்த இடங்களிலிருந்து இத்திட்டத்திற்கு போதுமான பணம் வந்து விழும்படியாகச் செய்ய, இன்றைக்கு இருக்கக்கூடிய பொருளாதார ஏற்றத்தாழ்வு நிலை உடைத்தெரியப்படவேண்டும்.

"ஒரு சின்ன உதாரணம், தொழிலாளி, விவசாயி, மனித சக்தி, இவையெல்லாம் நமது சோஷலிஸ்ட் பார்வையில் வருகிறதில்லை. என்னுடைய தொகுதியில் மீனவர்கள் இருக்கிறார்கள். "மீனவர்கள் வாழ்க்கையில் மேம்பாடு அடைய பல வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்க பல திட்டங்கள் இதில் அடங்கி இருக்கின்றன. மீன் சம்பந்தமாக பல ஆராய்ச்சிகள் நடத்துவதற்கும் பல நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு எல்லாம் மாணவர்களைச் சேர்க்கும்போது, அதிகாரிகளைச் சேர்க்கும்போது பி.ஏ., எம்.ஏ., படித்த பட்டதாரிகளையே சேர்க்கக்கூடிய வகையில் அரசாங்கத்தில் கண்ணேட்டம் போகிறதே தவிர, பட்டம் பெருவிட்டாலும்கூட மீனவர்களது குழந்தைகளை சேர்த்துக்கொள்ளும் திசையில் அவர்கள் போகவில்லை. விவசாயக் கல்லூரிகள் ஆகட்டும், விவசாயிகளுடைய குழந்தைகள் இடம் பெறுவதற்கு பதிலாக பட்டதாரிகள் உள்ளே புகுந்துகொள்வதற்குத்தான் வசதி இருக்கின்றன. பட்டதாரிகள் எல்லாம் இத்துறைக்கு வரக்கூடாதென்ற பார்வையில் நான் இதைச் சொல்லவில்லை. ஆனால் **1947**-க்குப்பிறகு இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்ததிலிருந்து பற்பல தொழில்களில் ஈடுபட்டிருக்கிற நம் நாட்டு தொழிலாளிகள் எல்லாம் முன்னேற்றம் அடையவேண்டுமென்றால் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிப்பதோடு அவர்களுக்கெல்லாம் அவர்கள் செய்கின்ற தொழிலில் உற்சாகம் ஏற்படுத்தும்வண்ணம் அந்தந்த தொழில்களுக்கு வகுக்கப்படுகின்ற கல்லூரிகளில் அந்தத் தொழிலாளர்களுடைய குழந்தைகளே அதிக இடம் பெரும்படிச் செய்தால் அதனால் அந்தத் தொழில் மிக அதிகமாக வளர்ச்சி அடையும். இந்தத் திசையில் அரசாங்கத்தின் பார்வை செல்லவில்லை. இந்தத் திசையில் செலுத்தும் வரையில் நாம் என்னதான் இந்தத் தொழில்களில் முன்னேற்றத்திற்கு மூலதனம் போட்டுப் பார்த்தாலும் அதனால் பயன் இருக்காது. நாம் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் வெற்றி பெறவேண்டுமென்றால் குறைந்த பட்சம் நம்முடைய பார்வைகள் இந்தத் திசையிலேயே திரும்பியாகவேண்டும். பணக்காரர்களுடைய பணம் இந்தத் திட்டத்திற்கு வந்துவிடும்படியான திசையிலேயே நமது கொள்கை வகுக்கப்படவேண்டும். இதை மீண்டும் மீண்டும் சொல்வதற்குக் காரணம் எந்தத் திட்டத்தைக்கொண்டு வந்தாலும் அது வெற்றி

பெற வேண்டுமென்ருல், இந்தக் கொள்கையில் நமது பார்வையெல்லாம் திரும்பினுல்தான் வெற்றி பெற முடியுமே தவிர 2,000 யோசனைகளை, 2,000 கோடி ரூபாய் செலவில் சொல்லிக்கொண்டே போனுல் அதனுல் எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை. ஆகவேதான் நானும் என்னுடைய தொகுதிக்கும் அல்லது நான் தொடர்புகொண்டுள்ள தொகுதிகளுக்கும் மற்ற அங்கத்தினர்கள்போல இந்தத் திட்டங்களை ஏற்படுத்துங்கள் என்று யோசனை கூறவில்லை. இது மக்களுடைய திட்டம், இது மக்களுக்காகவே வகுக்கப்பட்ட திட்டம் என்றெல்லாம், எவ்வளவுதான் மதிப்பிற்குரிய பண்டித ஜவஹர்லால் நேரு பிளானிங் கவுன்சில் தலைவராக இருந்துகொண்டு கூறினுலும்கூட நிலப் பிரபுக்களிடம் குவிந்து கிடக்கும் பணம், ராஜாக்களிடையே குவிந்துகிடக்கும் பணம், அன்னிய நாட்டு முதலாளிகளிடையே குவிந்து கிடக்கும் பணம், இந்தத் திசைப்பக்கம் திருப்பப்படாவிட்டால் இதனுல் பிரயோஜனம் இல்லை. வரி போடும் கொள்கையில் சர்க்காரின் போக்கு மாறவேண்டும். ஏற்றுமதிக் கொள்கையில் சர்க்காரின் போக்கு மாறவேண்டும். என்றைக்கு இந்தத் திசையிலே நம்முடைய கண்ணேட்டம் செல்லுகிறதோ அன்றைக்கே எந்தத் திட்டமும் வெற்றி பெற முடியும். அது இல்லாதவரையில் எவ்வளவு யோசனைகளைக் கூறினுலும் அவை 11-ேடு 12-ஆக சேர்ந்து கொண்டு போகுமே தவிர வேறு வழி இருக்காது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தையே உருவாக்கிக்கொடுத்த நிபுணர் மகலநோபிஸ் கன இயந்திர தொழில் இந்த நாட்டில் அபிவிருத்தி அடையத்தான் இந்த தேசம் பொருளாதார துறையில் மேம்பாடு அடைவதோடு இதர தொழில்களிலும் அபிவிருத்தி அடையமுடியும் என்று கூறி இருக்கிருர். அதை நாம் ஒப்புக்கொள்ளுகிருேம். அந்தக் கொள்கையின் அடிப்படையில் கன ரக தொழில்களுக்கு திட்டம் எடுத்துக்கொண்டு நமது பிரதிநிதிகள் டில்லிக்குப் போகிறபோது அங்கே இந்தத் திட்டங்களுக்கு போதுமான பணம் இல்லையே என்ற காரணத்திற்காக, இந்த ராஜ்யத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 225 கோடி ரூபாய்தான் என்கின்ற காரணத்திற்காக அந்த கன ரகத் தொழில்களை ஆரம்பிக்கும் யோசனையை கை கழுவிவிட்டு வந்திருக்கிருர்கள். இதையும் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். கன ரகத்தொழிலை ஆரம்பிக்கப் பணம் இல்லையென்ருல் இந்த நாடு செல்வாதாரமே அற்ற நாடா? என்பதை கனம் அங்கத்தினர்கள் யோசிக்கவேண்டும். செல்வாதாரம் பொங்கிக் கிடக்கும் நாடு இது, பௌதிக செல்வாதாரம் நிரம்பிக் கிடக்கும் நாடு இது, என்கின்ற உண்மையை நாம் எல்லோரும் உணர்கின்ற காலத்தில் நம் நாட்டில் உள்ள செல்வாதாரம் எந்தப் பக்கத்தில் போய் குவிந்து கிடக்கின்றது என்பதையும் நாம் உணர்கின்ற காலத்தில் ஒரு பக்கத்தில் குவிந்து கிடக்கின்ற செல்வாதாரத்தை நமது முன்னேற்றத் திட்டங்களில் வகுப்பதற்கான பாதையில் திருப்பிவிடுவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்காவிட்டால் எவ்விதமான பிரயோஜனமும் ஏற்படாது. ஆகவே அந்தச் செல்வாதாரத்தை இந்தத் திசையில் திருப்புவதற்கான நடவடிக்கையை எடுக்க சர்க்கார் என்றைக்கு துணிகிறதோ அன்றைக்கே இந்த திட்டங்களுக்கு எல்லாம் வெற்றி நிச்சயம் எனக்கூறி முடித்துக் கொள்ளுகிறேன்.''

9 p.m. SRI S. N. SOMAYAJULU :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை சில கோணங்களிலிருந்து நாம் பார்க்கின்றேம். அந்தக் கோணங்களிலிருந்து பார்க்கும்போது, நாம் எந்த அளவுக்கு அரசியல் கண்ணேட்டத்துடன் கவனிக்கின்ேறமோ, அந்த அளவுக்கு அது திருப்திப்படவில்லை என்ற எண்ணத்தில் வாதம் போகும்போதுதான் நமக்கு 400 கோடி அல்ல, 4,000 கோடி செலவிட்டு 15 வருஷங்கள் பாடுபட்டாலும், நல்ல அபிவிருத்தியை நாட்டில் ஏற்படுத்தினுலுங்கூட அதனுல் ஜனங்களுக்கு திருப்தி ஏற்படுமா என்ற சந்தேகம் எழுகிறது. ஆகையால், 200 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு இதற்குள் எவ்வளவு தூரம் சதுரங்கம் ஆடுவதற்குமுடியுமோ, அவ்வளவு தூரம்தான் ஆடமுடியுமே தவிர அதற்கு மேலும் ஆடவேண்டுமென்று சொன்னுல், அதற்கு ஏராளமான நிதிகள் வசூலிக்கத் தயாராயிருக்க வேண்டும். அதை வரி மூலமாகவும், கடன் மூலமாகவும், ஜனங்களின்

26th August 1955] [Sri S. N. Somayajulu]

ஒத்துழைப்பின் மூலமாகவும்தான், நாம் செய்வதற்கு முடியும். ஏற்கெனவே ஜனங்களிடத்திலே உழைக்க வேண்டுமென்ற ஆசை ஏற்பட்டிருக்கிறது. ஜனங்களிடத்தில், தாங்களாகவே வலிய வந்து உழைக்க வேண்டுமென்ற எண்ணம் இப்பொழுது வளர்ந்து எழுந்திருக்கிறது. அந்த எண்ணம் வருவதை உபயோகப்படுத்தினுல்தான் பண்டித நேரு சொன்ன மாதிரியாக, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஜனங்கள் சுபிட்சமாக இருப்பதற்கு முடியும். சாதாரணமாக, சர்க்கார் சில திட்டங்களை வைத்துக்கொண்டு, அவைகளை மேலெழுந்தவாரியாக தயாரித்து ஜனங்களிடத்திலே திணிப்பதைக் காட்டிலும், ஜனங்களுக்கு தேவைப்படும் திட்டங்களை அவர்களுடைய எண்ணம் போலவே போடுவதற்கு முன்வந்தால் ஜனங்கள், தங்களது வலிய உழைப்பின் மூலமாகவும், தங்களது இடைவிடாத சேவையின் மூலமாகவும் அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு வழி இருக்கும். எத்தனைத் திட்டம் போட்டாலும் அதைச் செய்வதற்கு முடியும். அந்தக் கோணத்தில் பார்க்கிறபோது, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கிற 200 கோடி ரூபாயானது மிகக் குறைவு என்று வருத்தத்துடன் சொல்ல விரும்புகிறேன். மக்களுடைய ஒத்துழைப்பு நமக்கு ஏற்படும் பட்சத்தில் 400 கோடி ரூபாய் செலவாகக்கூடிய திட்டங்களை 200 கோடி ரூபாய்க்கே செய்ய முடியும். அது இல்லாவிட்டால் 200 கோடி ரூபாயிக்குத் திட்டம் வகுத்திருந்தாலும், அது 400 கோடியாக வேண்டும். எல்லா ராஜ்யங்களும் சேர்ந்து இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்கு இரண்டாயிரம் கோடி செலவழிக்க திட்டம் போடப்பட்டிருக்கிறதென்றும், அதில் சென்னை மாகாணத்திற்கு 200 கோடி ரூபாய் செலவழிக்கக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லுகிருர்கள். இதை அதிகபட்சமாக, எவ்வளவு அதிகம் செய்ய முடியுமோ அதைச் செய்வதற்கு கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக, நமக்குள்ள பல தேவைகள் இருக்கின்றன. நம் ராஜ்யத்திலுள்ள பல குடிசைத் தொழில்களும் பெருவாரியாக வளர்க்கப்படவேண்டும். ஜப்பானில் எப்படி எப்படி குடிசைத் தொழிலை வளர்க்கிருர்கள், எப்படி எப்படி குடிசைத் தொழில்களை வளர்பதற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்பது போன்ற பல காரியங்களை நாம் அடிப்படையாக வைத்துக்கொண்டு, நம் நாட்டிலும் குடிசைத் தொழில்களை வளர்க்க ஏற்பாடு செய்தால், அதனுல் அதிக நன்மை ஏற்படும்.

“இன்றைக்கு ஜப்பானிய முறையில் நம் நாட்டிலும்கூட நெல் சாகுபடி செய்ய வேண்டுமென்று பிரமாதமாக விளம்பரம் செய்யப்படுவதோடு, அது சம்பந்தமாக பல காரியங்கள் செய்யப்படுகின்றன. அதே மாதிரியாக குடிசைத் தொழில்களையும், வளர்ப்பதற்கு நாம் பல காரியங்களை ஆரம்பித்தால், இந்த ஐந்து வருஷத்திட்டக் காலத்திற்குள்ளேயே மிகச் சிறப்பான முறையில் குடிசைத் தொழில்களை வளர்ப்பதற்கு முடியும். அதனுல் நாட்டிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கும் முடியும். அதுவும் குறிப்பாக ஒவ்வொரு ஜில்லாவிலும் டெக்னலாஜிகல் இன்ஸ்டிட்யூட்டுகளை ஏற்படுத்தவேண்டும். இப்பொழுது தொழிற் கல்லூரிகளில் சேரவேண்டுமென்று ஏராளமான மாணவர்கள் முன்வருகிருர்கள். தற்பொழுதிருக்கும் பொறி இயற் கல்லூரிகளிலும், பாலிடெக்னிக்குகளிலும், இன்னும் இதுபோன்ற தொழிற் கல்லூரிகளிலும் சேரவேண்டுமென்று மாணவர்கள் அதிகமாக முன்வந்தாலும் போதுமான மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான இடம் கிடையாது. சென்னை ராஜ்யத்திலுள்ள சில குறிப்பிட்ட இடங்களில் இம்மாதிரியான தொழிற் கல்லூரிகள் ஓரளவு இருந்தாலுங்கூட ஜில்லாவாரியாக பரவலான முறையில் இப்படிப்பட்ட பாலிடெக்னிக் இன்ஸ்டிட்யூட்டுகளை ஏற்படுத்தினுல் நூற்றுக் கணக்கான மாணவர்கள் அங்கேயே சேர்ந்து பயிற்சி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகப்படும்.

“சிறு சிறு குடிசைத் தொழிகள் இன்றைக்கும் நம்முடைய நாட்டில் உள்ள பல கிராமங்களில் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக, திருநெல்வேலி ஜில்லாவில் பார்த்தால், பத்தமடைப் பாய்களும், குற்ருலத்து மூங்கில் கூடைகளும் செய்யப்படுகின்றன. இவற்றையெல்லாம் நல்ல முறையில் தயாரித்து வெளிநாடுகளுக்கு அனுப்பினுல் இப்பொருள்களுக்கு

[Sri S. N. Somayajulu] [26th August 1955

அதிக கிராக்கி ஏற்படும். அதனால் அத்தொழில்களில் ஈடுபட்டிருப்போரிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் நீக்கமுடியும். குடிசைத் தொழில்களும் பெருகும். இது மாத்திரமல்ல, இந்தப் பொருள்களை எந்தெந்த பாட்டர்னில் செய்தால் வெளிநாட்டில் உள்ளவர்கள் அதிகமாக வாங்குவார்கள், அவற்றை எப்படிச் செய்யவேண்டும், அவற்றிற்கு என்ன விலை கிடைக்கும் என்பது போன்ற விஷயங்களை இந்தத் தொழிற் கல்லூரிகளில் ஈடு பட்டிருப்போர் பரிசீலனை செய்து, அதே மாதிரியாக செய்தும் காட்டினால், அது அந்தக் குடிசைத் தொழிலில் ஈடுபட்டிருப்போர் களுக்குச் சாதகமாக இருக்கும் என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்திற் குள் குடிசைத் தொழிலை வளர்ப்பதற்கு இது ஒரு முக்கியமான முறை என்பதையும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

" அதற்கு அடுத்தாற்போல, நம்முடைய நாட்டுக்கு மிகவும் பாதகமான வகையில் நீண்ட கடற்கரை அமைந்திருக்கிறது. அதைப் பாதுகாப்பதற்கு நீண்ட கடற்கரையோரங்களிலே நல்ல ரோடுகள் அமைக்க வேண்டுவது அவசியம். முன் காலத்திலேயே அதுமாதிரியான ஏற்பாடு ஆங்காங்கே செய்யப்பட்டிருந்தது. கன்யாகுமாரியிலிருந்து தூத்துக்குடி வரைக்கும் ரோடு அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தூத்துக்குடியிலி ருந்து மணற்பாங்கான பிரதேசம். அதுமாதிரி சேது வரைக்கும் பஸ்கள் விடுவதற்கும், கடலோரப் பிரயாணம் செய்வதற்கும் இந்த ரஸ்தாக்கள் அமைக்கப்பட்டால் மிக வசதியாகவும், சாத்தியமாகவும் இருக்கும். எந்தச் சந்தர்ப்பத்தில் யுத்தம் வரும் என்று நாம் சொல்வதற்கு முடியாது. எந்தச் சந்தர்ப்பத்தில் உலகத்தில் யுத்தம் மூண்டாலும் நம் தேசத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு நாம் தயாராக இருக்கவேண்டும். அதற்குச் சாதகமாக கடற்கரை யோரங்கள் முழுதும் நல்ல ரோடுகள் இருந்தால் மிகவும் நன்றாக இருக்கும். ஐந்நூறு வருஷங்களுக்கு முன்னால் நமது நாடு எப்படி இருந்தது என்பதை தமிழ் நூல்களில் பார்த்தால் மிகவும் நன்றாகத் தெரியும். அன்றைக்கும் கடற்கரையோரமாக அமைக்கப்பட்ட ரோடு இன்றைக்கும் சேது ரஸ்தா என்ற பெயரில் விளங்கி வருகிறது. அதன் மூலம் கடற்கரையோரமாக 100 மைல்கள் போகமுடியும். அந்த சேது ரஸ்தாவின் மூலமாக விளாத்திகுளம் வழியாக கடற்கரையோர வர்த்தகம் செய்வதற்கும், வாணிபம் செய்வதற்கும் வசதி இருக்கிறது. அதனால் 500 மைல் நீளத்திற்கு விஸ்தரிக்க முடியும். இந்த விஷயத்தில் சர்க்கார் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

" மூன்றாவதாக, முதல் ஐந்தாண்டு திட்டம் முடியக்கூடிய தரு வாயில் இருக்கும் இந்தக் காலத்தில், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் ஆரம்பிக்கக்கூடிய இந்தக் காலத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறமிருக்க பிச்சைக்காரர்களுடைய பிரச்னை எங்கு பார்த்தாலும் இருக்கி றது. ரயிலில் பார்த்தாலும், பஸ் ஸ்டாண்டுகளில் பார்த்தாலும், ஏன் அசெம்பிளிக்கு முன் பார்த்தாலுங்கூட பிச்சைக்காரர்கள்தான். நமது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இப் பிச்சைக்காரர்கள் பிரச்னை விஷ யத்தில் கொஞ்சம்கூட கவனம் செலுத்தப்படவில்லை. இன்றைக்கு நாட்டில் லட்சோபலட்சம் பிச்சைக்காரர்கள் தெருவில் நடமாடுகிறார்கள். வேண்டு மென்றே அல்லது வேலை கிடைக்காததினால் ஏற்படுகின்ற வறுமையின் காரணமாகவோ குட்சியின் கொடுமையாலோ பிச்சை எடுக்கிறார்கள். இதைக் கட்டுப்படுத்துவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும். மேல் நாடுகளிலிருந்து பலர் நமது நாடடுக்கு வருகின்றனர். நமது நாட்டிலே என்னென்ன விதமான அபிவிருத்தித் திட்டங்கள் போடப்படுகின்றன என்பதைப் பார்த்து பிரமிக்கிறார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று, இங்கே ஐந்தாண்டு திட்டம் போட்டு அபிவிருத்தி வேலைகள் எல்லாம் மிகவும் அழகாக நடந்து வருகின்றன என்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால், நமது நாட்டிலேயே இருக்கக்கூடிய பலவீனம் இந்தப் பிச்சைக்காரத்தனம் தான். இதை ஒழிக்க நாம் ஏதாவது ஏற்பாடு செய்தால் அது ரொம்ப நல்லதாக இருக்கும். 'ஐயம் இட்டு உண்' என்று ஔவையார் சொல்லி யிருக்கிறார்களே, அப்படியிருக்கும் பொழுது பிச்சை எடுக்கிறவர்களுக்குக் கொடுக்காது, அவர்களையே எப்படி ஒழித்து விடுவது என்று சிலர் எண்ணி னாலும் 'ஏற்பது இகழ்ச்சி' என்று அதே ஔவைப் பாட்டி சொல்லி

26th August 1955] [Sri S. N. Somayajulu]

யிருப்பதின் காரணமாக இம்மாதிரி பிச்சை எடுக்கிறவர்களையெல்லாம் ஒழிப்பதில் எவ்விதமான பாதகமும் இல்லை. பிச்சை எடுப்பவரைப் பிடித்து, அவர்கள் பிச்சை எடுக்கின்ற குற்றத்திற்கு ஏதாவது 'பெனல்டி' விதிக்கக்கூட சட்டம் இயற்றலாம். அப்படிச் செய்தால்தான் நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் வேலை செய்தே பிழைக்கவேண்டும் என்ற எண்ணம் தோன்றும். நாடு சுபிட்சம் அடைவதற்கும் வசதியாக இருக்கும். அதற்குச் சர்க்கார் இப்பொழுதே ஆவன செய்து, பிச்சைக்காரர்களுக்கென ஒரு நிதி ஒதுக்கி அவர்களைப் பிச்சை எடுக்காமலிருக்க வேறு ஏற்பாடு செய்யவேண்டும்.

"அடுத்தாற்போல திருநெல்வேலியில் கீரியாறு திட்டம் சம்பந்தமாகப் பலர் பேசுகிறார்கள். பல நதிகள் ஒன்று சேர்ந்து குறிப்பாக வாழை நதி, கீரியாறு போன்றவைகள் சேர்ந்து கல்லாறாக மாறுகிறது. என்ஜினியர்கள் கொஞ்சம் உற்சாகமாகவும், சுறுசுறுப்பாகவும் வேலை செய்தால் கீரியாறு திட்டத்தைச் சீக்கிரத்திலேயே நிறைவேற்றி, கோவில்பட்டி ஏரியா வரையிலும் அதைக் கொண்டு போகலாம். தென்காசி தாலூகாவில் ஒரு பகுதி வரையிலும் கொண்டுபோக முடியும். மானூர் குளத்திற்கு உதவி செய்ய முடியும். தாம்பிரபரணியைப் பொறுத்தவரையில் எவ்வளவோ முயற்சித்தும் அது முடியவில்லை. ஆனால், கல்லாறு நதி மூலமாக அதைச் செய்வதற்கு சாத்தியம் இருக்கிறது. இதற்கு வேண்டிய ரிகார்டுகள் இருக்கின்றன. நான் சமீபத்தில் திருவாங்கூருக்குச் சென்றுவந்த காலத்தில் அது சம்பந்தமான ரிகார்டுகளெல்லாம் கொண்டுவந்திருக்கிறேன். என்னென்ன நதிகள், எந்தெந்தப் பிராந்தியத்தில் இருக்கின்றன, குறிப்பாக அனுமன் ஆறு, கல்லாறு, வாழையாறு, கீரியாறு போன்ற ஆறுகளின் நீளம் எவ்வளவு, அவை எந்தெந்தப் பிரதேசங்களின் வழியாகச் செல்கின்றன, எவ்வளவு அடி உயரத்தில் உற்பத்தியாகின்றன, எவ்வளவு சரிவில் அவை வருகின்றன என்பதைப் போன்ற பல தகவல்கள் அந்த ரிகார்டுகளில் அடங்கியிருக்கின்றன. நான் இந்தத் தகவலை ஏற்கனவே ஒரு முறை மராமத்து இலாகா மந்திரியவர்களிடம் கொடுத்திருக்கிறேன். தற்பொழுதும் நாளைக்கு கனம் மந்திரி அவர்களிடம் அதுசம்பந்தமான ரிகார்டுகளை சமர்ப்பிப்பதற்குத் தயாராயிருக்கிறேன். அவற்றைத் தவிர, நம்முடைய ராஜ்யத்தில் வேறு எந்த விதமான நீர்த் தேக்கங்களையும் கட்டுவதற்கு சாத்தியமில்லை. நம்முடைய மாகாணத்தில் வைகை நதி இருக்கிறது. அது வைகையாகத்தான் இருக்கிறது. வடாற்காடு ஜில்லாவில் பாலாறு ஓடுகிறதென்றால் மழை பெய்யும் காலங்களில் தண்ணீர் ஓடுமேதவிர, இதர காலங்களில் பால் போன்ற வெள்ளை மணலைத்தான் அதில் பார்க்க முடியும். அதைப் போலவுள்ள வைகையில் நீர்த் தேக்கம் கட்டுகிறார்கள். அதற்கு அடுத்தாற்போல பெரியாற்றில் குறுக்கே தேக்கம் கட்டுவதற்கு முயற்சி செய்கிறார்கள். எல்லாவற்றையும்விட, பெரியாறு திட்டத்தை நிறைவேற்றுவதின் மூலம் மிக அதிகமான நன்மை ஏற்படும். இதைத் தவிர, பெரியாறு நீர்த் தேக்கங்கள் கட்டுவதற்கு நம் நாட்டில் வசதிகள் இல்லை.

"பெரிய நீர்த் தேக்கங்கள் கட்டுவதை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு இன்றைக்கிருக்கும் பல காட்டாறுகளில் மழை பெய்கின்ற காலங்களில், வீணாகி ஓடுகின்ற தண்ணீரை எப்படி விவசாயத்திற்கு உபயோகப்படுத்திக் கொள்ளலாம் என்பதையும் நாம் யோசிக்கவேண்டும். இந்த காட்டாறுகளிலிருந்து சரியான கால்வாய் வசதிகள் ஏற்படுத்தினால், மழை பெய்கின்ற காலத்தில் ஓடுகின்ற மழைத் தண்ணீரை கால்வாய்களின் மூலம் குளங்களுக்குக் கொண்டுபோய், குளங்களில் தேக்கி வைத்துக்கொள்வதற்கு முடியும். 500, 600 வருஷங்களுக்கு முன்னால் தமிழ் நாட்டில் பிறந்த மங்கம்மா என்ற வீராங்கனை, அப்பொழுது விவசாயத்திற்கு அத்தியாவசியமான குளங்களை வெட்டியிருந்ததோடு, அந்தக் குளங்களுக்கு நீர் போய்ச் சேருவதற்குப் பல கால்வாய்களையும் ஏற்படுத்தியிருந்தாள். எல்லோரும் அதிசயப்படத்தக்க வகையில் மராமத்து வேலைகளையெல்லாம் அவள் அந்தக் காலத்திலேயே செய்து வைத்திருக்கிறாள். சேது ரஸ்தாவும் அவள் காலத்தில்தான் ஏற்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்த சர்க்கார் புதிதாகக் குளங்களை வெட்டாவிட்டாலுங்கூட

காட்டாறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டுவதோடுகூட, காட்டாறுகளிலிருந்து வரும் மழைத் தண்ணீரை குளங்களில் தேக்கிவைத்துக் கொள்வதற்காக கால்வாய் வசதிகளையும் செய்துகொடுத்தால் மிகவும் நன்றாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

"அதற்கடுத்தாற்போல், மின்சார சக்தியை விநியோகிக்கும் உரிமையை சில தனிப்பட்டவர்களின் கையில் கொடுத்துவிட்டு இன்றைக்கு நாம் அவஸ்தைப்படுவது மிகவும் தர்மசங்கடமாக இருக்கிறது. குறிப்பாக, திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், திருநெல்வேலி, மேலப்பாளையம், பாளையங்கோட்டை ஆகிய மூன்று இடங்களுக்கும் மின்சாரம் விநியோகிக்கும் உரிமை ஒரு தனிப்பட்ட கம்பெனியிடம் இருக்கிறது. அவர்கள் அதைச் சுற்றியுள்ள இடத்திற்கு மின்சாரம் விநியோகிப்பதற்கு எவ்வளவு காலதாமதம் செய்கிறார்கள் என்பதைச் சொல்லவே முடியாது. குறிப்பாக, அந்தப் பிரதேசத்திலிருந்து 6-வது மைலில் ரெட்டியார்பட்டி என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்த கிராமத்திலுள்ள ஏழை பாட்டாளி மக்கள் எப்படியாவது தங்களுடைய கிராமத்திற்கும் மின்சாரம் வர வேண்டுமென்ற எண்ணத்தில் ஆறு, ஏழு மாதங்களுக்கு முன்பே இருபதாயிரம் ரூபாயை 'டெபாசிட்' செய்துவிட்டார்கள். ஆனால், இன்னும் அந்த ஊருக்கு மின்சாரம் வந்தபாடில்லை. இம்மாதிரியான அவஸ்தையை எல்லாம் ஒழித்துக்கட்டுவதற்கு சர்க்கார் உடனடியாக தனிப்பட்ட நபர்களிடம் இருக்கும் மின்சார விநியோகக் கம்பெனிகளை தேசியமயமாக்கிவிட்டால்கூட மிக நன்றாக இருக்கும். நான் குறிப்பிட்ட இந்த மின்சார விநியோகக் கம்பெனிக்கு அருகிலேயே தூத்துக்குடிக்கு அடுத்தாற்போல உள்ள இடங்களில் சர்க்கார் மின்சார இலாகாவினர் மிகச் சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். மட மட வென்று கம்பிகளை யெல்லாம் கிராமங்களுக்கு எடுத்துக்கொண்டே போகிறார்கள். ஆனால், மூன்று முனிசிபாலிடிகளிலும் சேர்ந்து இரண்டரை லட்சம் ஜனங்கள் வசிக்கக்கூடிய இடத்தில் இந்தக் கம்பெனி மிகவும் படுமோசமான நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நிலையில் இருந்தால் எப்படி எல்லா இடங்களுக்கும் மின்சாரம் கொண்டுபோக முடியும்? நண்பர் ஸ்ரீ ஆறுமுகம் அவர்களுடைய ஊருக்குத்தான் எந்தக் காலத்தில் மின்சாரம் கொண்டுபோக முடியும்? நிலைமை இப்படியே இருந்தால் எந்தக் காலத்தில்தான் கொண்டுபோக முடியும் என்று தெரியவில்லை. ஆகவே இப்படிப்பட்ட படுமோசமான நிலைமையை ஒழிப்பதற்கு ஏதாவது செய்தே தீரவேண்டும். இதையெல்லாம் உத்தேசித்து தனிப்பட்டவர்களிடமிருக்கும் மின்சார விநியோக கார்ப்போரேஷனை தேசியமயமாக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் என்னென்ன காரியங்கள் செய்யப்படவேண்டும் என்பதற்காக நான் கூறிய யோசனைகளான டெக்னலாஜிகல் இன்ஸ்ட்டிட்யூட்டுகளை நிறுவுவது, கீரியாறு திட்டத்தை ஏற்படுத்துவது, சேது ரஸ்தாவை செப்பனிடுவதோடு கடற்கரையோரமாக நல்ல ரஸ்தா போடுவது, குளங்கள் மராமத்து செய்வது, பிச்சைக்காரர்களுடைய பிரச்னைகளை ஒழிப்பது, தனிப்பட்டவர்களிடமுள்ள மின்சார விநியோகக் கம்பெனிகளை தேசியமயமாக்குவது என்று சொல்லிக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்."

9-10 p.m.

P. RANGASWAMI REDDIAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்ட நகலின் மீது விவாதிக்கும்போது, நமது நாட்டில் மக்களிடையே இந்த திட்டங்களைப் பற்றி இரண்டு விதமான தப்பு அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன. அதாவது, இந்த திட்டங்களைப்பற்றி விவாதம் புரிந்து அதிகமாக பணம் செலவழிக்க படுகிறதேயொழிய முடிவாக காரியங்கள் ஒன்றும் நிறைவேற்றப் படுவதில்லை என்பது ஒன்று. மற்றொன்று, இந்த திட்டங்கள் எல்லாம், இன்று காலை கனம் மூக்கைய தேவர் சொன்னதுமாதிரி, கண்துடைப்பு வேலையாக தயாரிக்கப்படுகின்றன என்பது. பொது மக்களிடையே இந்த இரண்டு தப்பு அபிப்பிராயங்களுக்கும் காரணமில்லாமலில்லை.

26th August 1955] [Sri P. Rangaswami Reddiar]

" 1951-ம் ஆண்டு, 'ஐந்தாண்டு அபிவிருத்தி' என்ற நான்கணு விலேயுள்ள ஒரு புத்தகத்தை ஜில்லாவாரியாக சர்க்கார் பிரசுரித்தார்கள். திருச்சி ஜில்லாவை பொருத்தவரை, இந்த 'ஐந்தாண்டு அபிவிருத்தி' என்ற புத்தகத்தின் 27-வது பக்கத்தில் 'மணச்சநல்லூரிலிருந்து எலந் தலைப்பட்டிக்கு செல்லும் ரோடு, மேலமாத்தூரிலிருந்து திட்டக்குடிக்கு செல்லும் ரஸ்தா, அரியலூரிலிருந்து காரை செல்லும் ரஸ்தா ஆகிய னவும் தார் ரோடுகளாக மாற்றப்பட்டிருக்கின்றன' என்று, 1951-க்கு முன்பாகவே இந்த ரோடுகளெல்லாம் தார் ரோடுகளாக மாற்றப்பட்டி ருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த மூன்று இடங்களிலும் அனேகமாக **metal road**-கள் கூட கிடையாது. சில இடங்களில் ரோடுகள் பூர்த்திகூட செய்யப்படவில்லை என்று தெரிகிறது. ஒரு சமயம் இந்த புத்தகத்தில் தவறுதலாக போடப்பட்டிருந்தாலும் இருக்கலாம் அல்லது எலெக்ஷன் காலத்தில் போடப்பட்ட புத்தகமானதால், மிகைப் படுத்தி (**exaggerate**) போடப்பட்டிருக்கலாம். ஆகையால்தான் நான் குறிப்பிட்ட மாதிரியான தப்பு எண்ணங்கள் நாட்டில் இருந்து வருகிறது.

" இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி பேசும்போது, கடைசியாக பேசிய நண்பர் கனம் சோமையாஜுலு அவர்கள் ராணி மங்கம்மாள் சேதுபதி ரஸ்தா நிறுவியது, மற்றும் பல காரியங்கள் செய்த தைப்பற்றி குறிப்பிட்டார்கள். திருச்சி ஜில்லாவில் காவேரி ஆற்றின் குறுக்கே, சோழ ராஜாக்களால் நீண்ட நாட்களுக்கு முன்பு **Grand Anicut** என்ற ஒரு அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. இந்த அணை நாளது வரையில் எந்த வெள்ளத்திற்கும் அசையாமல், அப்படியே இருந்து வருகிறது. இந்த அணை ஐந்தாண்டு திட்டம் தீட்டப்பட்டு, அதன் கீழ் போடப்பட்டதாக தெரிய வில்லை. அதேமாதிரி, சேதுபதி ரஸ்தாவும் எந்த ஐந்தாண்டு திட்டத்தின் கீழும் போடப்பட்டதாக தெரியவில்லை. இவற்றை அப்போதிருந்த அமைச் சர்கள் ஆரம்பித்து வைத்ததாகவோ அல்லது திறந்து வைத்ததாகவோ தெரியவில்லை. இருந்தாலும் இவை காலப்போக்கில் நிரந்தரமாக இருந்து மக்களுக்கு சேவை செய்து வருகின்றன. ஆனால் இக்காலத்திலோ, திறந் துவைப்பதும், ஆரம்பித்துவைப்பதும் மிகவும் பிரமாதப்படுத்தப்படுகிறதே தவிர, செய்யப்படும் வேலைகளின் தரம் அவ்வளவு நன்றாக இருப்பதாக தெரியவில்லை.

" 1952-ம் ஞூ டிசம்பர்மீ 5உ-ல் இந்த சட்ட சபையில் இது சம்பந்தமாக நான் ஒரு கேள்வி கேட்டேன். அதாவது 249·34 எக்கர் நஞ்செய் ஆயக்கட்டை உடைய முசிரி தாலுக்காவில் ஒரு சிறு அணை பல ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. அந்த அணை 1941-ம் வருஷத்திய வெள்ளத்தில் காட்டிலிருந்து மரங்கள் அடித்து வரப்பட்டதன் காரணமாக சேதம் ஏற்பட்டு உடைந்து விட்டது. 1943–44-ல் நமது சர்க்கார் 54 ஆயிரம் ரூபாய் செலவு செய்து ஒரு புதிய அணையை கட்டினார்கள். ஆனால் புதிதாக கட்டப்பட்ட இந்த அணை ஒரு ஆண்டு அல்லது $1\frac{1}{2}$ ஆண்டுகளுக்குள்ளாகவே மறுபடியும் போய்விட்டது. என் ஜினியர்கள் சொல்லுகிறார்கள், இருப்பத்து ஐந்து ஆயிரம் ரூபாய் செலவில் புதிதாக மறுபடியும் அணைகட்ட திட்டமிருப்பதாக. ஐம்பத்து நான்கு ஆயிரம் ரூபாய் செலவு செய்து 1943–44-ல் கட்டப்பட்ட அணை ஒரு ஆண்டுக்குள் உடைந்துவிட்டதென்றால், அது என்ஜினியர்களின் திறமையா அல்லது சர்க்காருடைய திறமையா என்பது கனம் அங்கத்தினர்கள் யோசித்துக் கொள்ளவேண்டிய ஒரு விஷயமாகும்.

" **Protected water-supply** பற்றி இந்த ஐந்தாண்டு திட்ட நகலில், 46-வது பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில்—

" It would also aim at providing water-supply schemes to some 64 urban panchayats representing about 40 per cent of the existing urban panchayat population at an estimated cost of 5·35 crores. '

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த **protected water-supply scheme**-ஐ பொருத்தவரையில், இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் இறுதியாக உருவாகும்போது, துரையூர் பஞ்சாயத்து அதில் சேர்க்கப்படுமோ, படாதோ என்பது சந்தேகமாகயிருக்கிறது. சேர்க்கப்படவேண்டியது மிகவும் அவ சியம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். துரையூர் பஞ்சாயத்து

[Sri P. Rangaswami Reddiar] [26th August 1955

போர்டு **protected water-supply scheme**-ஐ ஏற்படுத்துவதற்கு $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். துரையூரில் குடி தண்ணீர் திட்டம் ஏற்படுத்துவது சம்பந்தமாக 1953-ம் வருஷம் மார்ச்சுமீ 12உ–யில் இந்த சட்டசபையில் கேட்ட ஒரு கேள்விக்கு சுகாதார மந்திரி சொன்ன பதில் : **' A preliminary inspection by an Officer of the Sanitary Engineering Branch was made in the year 1928.'** என்பதாக சொன்னார். $1\frac{1}{2}$ லட்ச ரூபாய் பஞ்சாயத்து போர்டு கொடுக்கத் தயாராக இருந்தும், 1928-லிருந்து 27 ஆண்டுகள் கழிந்தும், இன்னும் இந்த விஷயம் பரிசீலனையில்தான் இருக்கிறதே ஒழிய, குடிதண்ணீர் வசதி செய்ய, உருவான நடவடிக்கைகள் எடுத்துகொள்ளப்படுவதாகத் தெரியவில்லை. இந்த சிறிய விஷயத்திலேயே இவ்வளவு காலதாமதம் ஏற்படுமேயானால், மற்ற வேலைகள், அதுவும் இப்போது விவாதிக்கப்படுகிற இரண்டாவது ஐந்தாண்டு திட்ட வேலைகள் எல்லாம் இன்னும் 30 ஆண்டுகளுக்குப் பிறகுதான் உருவாகும் என்று கூறினாலும் அது மிகையாகாது.

" **Major irrigation**-ஐ பற்றி நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் நமது மாகாணத்தில் அதற்கு போதுமான வசதியில்லை என்கிறார்கள். திருச்சி ஜில்லாவை பொருத்த வரையில், இரு பெரிய நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்றப்போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். புள்ளம்பாடி வாய்க்கால் திட்டத்திற்கு 65 லட்ச ரூபாயும், கட்டளைமேட்டு கால்வாய் திட்டத்திற்கு 123 லட்ச ரூபாயும் அனுமதிக்கப்பட்டிருப்பதாக, ' ஐந்தாண்டு அபிவிருத்தி ' என்ற புத்தகத்தில் 1951-லேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்ட நகல் என்ற புத்தகத்தில் இந்த திட்டங்களுக்காக 281 லட்ச ரூபாய் ஒதுக்கப்படப்போவதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். வேலை ஆரம்பிக்கப்படாததால், புள்ளி விவரத்தில் 100 லட்ச ரூபாய் அபிவிருத்தி அடைந்திருக்கிறதே ஒழிய, கட்டளை வாய்க்காலிலோ அல்லது புள்ளம்பாடி வாய்க்காலிலோ, ஒரு மணலைத் தோண்டி எடுத்திருப்பதாக தெரியவில்லை.

" **Minor irrigation**-ஐ பற்றி பலர் பேசினார்கள். நமது நாட்டில் அனேக இடங்களில் ஜமீன்தார்கள் இருந்தார்கள். அவர்கள் எஸ்டேட்டுகளில் இருந்த ஏரிகள் 100 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பழுது பார்க்கப்படவில்லை ; அவற்றின் கரைகள் உடைந்து, கலிங்குகள், மதகுகள் எல்லாம் வளைந்து சீர்கெட்டிருக்கின்றன. அவைகளை செப்பனிட வேண்டியது மிகவும் அவசியம். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை போதாது என்பதை, நான் மட்டுமல்ல, மற்ற பல அங்கத்தினர்களும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்ட நகலின் 28-வது பக்கத்தில் :

' A sum of Rs. 410 lakhs has been provided for the improvement of minor irrigation sources in this State, including a sum of Rs. 35 lakhs for the completion of works which will be under execution at the close of the First Plan period. In addition, it is proposed to spend a sum of Rs. 150 lakhs on schemes of de-silting and raising the F.T.L. of tanks.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. **' De-silting and raising the F.T.L. of tanks '** என்ற வேலைக்கு செலவிட உத்தேசித்திருக்கும் 150 லட்ச ரூபாய் போதாது. இது முக்கியமாக, மாகாணம் பூராவிலும் ஒரே காலத்தில் கவனிக்கப்படவேண்டிய விஷயம். அப்போதுதான் உணவு உற்பத்தியை பெருக்கமுடியும். இல்லாவிட்டால் உணவு உற்பத்தி குறைந்து, நாட்டு மக்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

" ரெயில்வே லைன்கள் போடுவதுபற்றி ஒரு அங்கத்தினர் காலையில் குறிப்பிட்டார்கள். தஞ்சையிலிருந்து பட்டுக்கோட்டைக்கு ரெயில்வே லைன் போடுவதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதாக சொன்னார்கள். இந்த நாட்டிலுள்ள உணவுப் பொருள்கள் ஒரு இடத்திலிருந்து

26th August 1955] [Sri P. Rangaswami Reddiar]

மற்றொரு இடத்திற்கு சுலபமாக போகவும், மக்கள் போக்குவரத்து வசதிக்கும் ரெயில் இன்றியமையாதது. ஆகவே தஞ்சாவூரிலிருந்து, அரியலூர் மார்க்கமாக, தஞ்சை, அரியலூர், பெரம்பலூர், துரையூர், நாமக்கல், ராசிபுரம், சங்கரிதுர்க்கம் இந்த இடங்களை இணைத்து ஒரு ரெயில்வே லைன் போட மாகாண சர்க்கார் மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்தால், அது மேற்கு கரையிலுள்ள ஜில்லாக்களில் வசிக்கும் மக்களுக்கு உணவுப் பொருள்கள் பற்றாக்குறை அல்லது தட்டு ஏற்படாமல் இருக்க, தஞ்சை முதலிய இடங்களிலிருந்து உணவுப் பொருள்கள் செல்ல வசதியாக இருக்கும். ஆத்தூரிலிருந்து, தம்மம்பட்டி, துரையூர், மணச்சநல்லூர், திருச்சி வழியாக ஒரு ரெயில்வே லைன் போட ஏற்பாடு செய்தால் அதுவும் மிகவும் நலமாக இருக்கும்.

" கொல்லிமலையில் ஒரு நீர்த்தேக்க திட்டம் ஏற்படுத்த வேண்டும். அந்த மலையின் உச்சியிலிருந்து வருகிற தண்ணீர் மேற்பக்கத்திலிருக்கிற ஜம்பேரியில் போய் சேருகிறது. அந்த மலையில் ஒரு நீர்த்தேக்க திட்டத்தை ஏற்படுத்தினால், பல ஏக்கர் நிலம் பாசன வசதி பெறமுடியும். தற்போது **direct irrigation** பெற்று வருகிற ஏராளமான ஆயக்கட்டுகள் அங்கேயிருக்கின்றன. ' ஐந்தாண்டு அபிவிருத்தி ' என்ற புத்தகத்தின் 22-வது பக்கத்தில் ' முசிரி தாலுக்காவில் கொல்லிமலை நீர்த்தேக்க திட்டம், காணம்பாடித் திட்டம், குண்டார் அணைக்கட்டு திட்டம் முதலியவைகளும் பரிசீலனையில் உள்ளன ' என்று 1951-ல் சொன்ன விஷயம், 1955-லாவது பரிசீலனை செய்யப்படாமல் போகக்கூடாது என்று சொல்லி, அவைகளை மீண்டும் பரிசிலனைசெய்து, இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை இறுதியாக உருவாக்கும்போது, அவைகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

" **Public Health**-ஐ பொருத்த வரையில், ஆங்காங்கு **septic tanks** கட்டப்படவேண்டும். கொசுக்களின் உபத்திரவம் இரண்டாவதாக ஒழிக்கப்படவேண்டும். இரண்டு மூன்று கொசுக்கள், ஒரு ஆளை விரட்டியடிக்கக்கூடிய அளவு உபத்திரவத்தை தருகிறது. ஆகவே, மாகாணம் பூராவும், கொசுக்களை ஒழிக்க முயற்சி செய்ய வேண்டும். மருந்துகளின் மூலமாகவோ, அல்லது வேறு வகைகளிலோ கொசுக்களை ஒழிக்க வசதி செய்தால், மக்களுடைய பொது சுகாதாரம் அபிவிருத்தியடையும் என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri R. M. PALANIAPPAN :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே ! இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி பேசும்பொழுது குறிப்பாக புதுக்கோட்டை பிரதேசத்திலிருந்து வந்திருக்கும் நான் புதுக்கோட்டையைப்பற்றி சில வார்த்தை சொல்ல விரும்புகிறேன். புதுக்கோட்டை சமஸ்தானத்தை சென்னை மாகாணத்தில் இணைக்கும் காலத்தில் அங்குள்ள மக்கள் எல்லோரும் புதுக்கோட்டைக்கு காவேரி ஆற்றிலிருந்து வாய்க்கால் வந்துவிடும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். புதுக்கோட்டையை இணைக்க வந்த கலெக்டர்கூட அங்கு காவேரியிலிருந்து வாய்க்கால் வந்துவிடும் என்று உறுதி கூறினார்கள். சென்னை மாகாணத்திலிருந்து மந்திரிகள் யார் வந்தாலும் புதுக்கோட்டையில் முதல் முதலாக மக்கள் சொல்வது அங்கு காவேரியிலிருந்து தண்ணீர் வேண்டும் என்பதுதான். இரண்டாவதாக புதுக்கோட்டை ஒரு ஜில்லாவின் தலைநகரமாக இருக்க வேண்டும் என்பது. புதுக்கோட்டைக்கு தெற்கேயுள்ள பிரதேசம் முழுவதும் ராமநாதபுரம் போன்ற பிரதேசங்களெல்லாம் மிகவும் பஞ்சத்தால் வாடும் பிரதேசம். ஆகவே அப்பிரதேசங்களுக்கெல்லாம் விவசாயத்திற்கு தண்ணீர் கொண்டுவந்தால்தான் அங்குள்ள மக்கள் நன்றாக வாழ முடியும். ஆகவே புதுக்கோட்டைக்கு காவேரியிலிருந்து தண்ணீர் கொண்டு வர சர்க்கார் ஏற்பாடு செய்வார்கள் என்று நினைக்கிறேன். 9-20 p.m.

" அடுத்தபடியாக நமது நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருந்து கொண்டு வருகிறது. இன்று படித்துக்கொண்டிருக்கும் குழந்தைகளுக்கும் வேலை கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அதனால் குடிசைத் தொழில் போன்றவைகளை உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும். குடிசைத் தொழில்கள் ஏற்பாடு செய்வதற்கு

[Sri R. M. Palaniappan] [26th August 1955

முதலிலே மின்சாரம் வேண்டும். மின்சாரத்திற்காக நெய்வேலித் திட்டத்தை மத்திய சர்க்கார் எடுத்துக்கொண்டு செலவு செய்கிறார்கள் என்பதற்காக நாம் அவர்களுக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

"குடிசைத் தொழிலைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜப்பான் குடிசைத் தொழிலில் முன்னேற்றமடைந்த நாடு என்பது எல்லோருக்கும் தெரியும். நான் நேரடியாக ஜப்பானுக்கு சென்றிருந்தபோது அங்கு குடிசைத் தொழில் எந்தமாதிரி இருக்கிறது என்பதை தெரிந்து கொண்டேன்.

"ஜப்பானிய குடிசைத் தொழில் பெரிய பெரிய கட்டிடங்களில் நடக்கவில்லை. சிறு சிறு அறைகளில்தான் எல்லா வேலைகளுமே நடக்கின்றன. அங்கே உற்பத்தி செய்பவர்களுக்கு இருக்கக்கூடிய வசதிகள் என்னவென்றால் சிறு சிறு உறுப்புகளை **cycle**-க்கோ, **motor car**-க்கோ உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்தவுடன் அந்த உறுப்புகளை **assemble** செய்கிறவர்கள் விலைக்கு வாங்கிக்கொண்டு விடுகிறார்கள். ஆனால் நமது நாட்டிலே ஒரு சாமானை உற்பத்தி செய்துவிட்டால் அந்த சாமானை அவர் விற்று, பணம் திரும்ப அவருக்கு வருவதற்கு இரண்டு, மூன்று மாதங்கள் ஆகிவிடுகின்றன. உற்பத்தி செய்கிறவர்களிடம் உடனடியாக பணம் போய்ச் சேர்ந்தால்தான் அவர்கள் மறுபடியும் தொழிலை விருத்தி செய்துகொண்டு போகமுடியும். ஜப்பானிலே அப்படித்தான் செய்கிறார்கள். அங்கே **marketing society** என்று வைத்திருக்கிறார்கள். அந்த **society**-க்கு சிறு சிறு உறுப்புகளை செய்தவுடன் கொடுத்து விடுகிறார்கள். அந்த **marketing society** அந்த உறுப்புகளை **assemble** செய்தவுடன் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறது. அதனால் உண்டாகும் லாப நஷ்டங்களை சர்க்கார் அந்த தொழிலுக்குக் கொடுத்து உதவுகின்றனர். ஆகவே அதேமாதிரி நம் நாட்டிலும் சிறு சிறு தொழில்கள் முன்னேற வேண்டுமானால் சாமான் செய்கிறவர்களுக்கு உடனடியாக கையில் பணம் போய் சேரவேண்டும். இப்படி இல்லாது இருப்பதால்தான் நம்முடைய நாட்டில் உற்பத்தி குறைவாக இருக்கிறது என்பது என்னுடைய அபிப்பிராயம்.

"முதலில் போட்ட திட்டத்தை முதல் ஐந்தாண்டு திட்டம் என்று சொல்லிகொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் அந்த திட்டம் என்னவென்பதே மக்களுக்கு தெரியாது. இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் அது மாதிரி இருக்கக்கூடாது. இந்தத் திட்டத்தில் என்னவென்ன செய்யப் போகின்றோம் என்பதை ஜனங்கள் எல்லோருக்கும் தெரியக் கூடிய முறையில் விளம்பரப் படுத்தவேண்டியது அவசியம். அவர்களுக்கு இந்த 2-வது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி தெரிந்தால்தான் அவர்கள் இந்த திட்டத்திற்கு உதவிசெய்ய முடியும். திட்டம் என்னவென்பதே தெரியாமலிருந்தால் அவர்கள் எப்படி உதவி செய்ய முடியும்? ஆகவே இந்த திட்டங்களுக்கு சர்க்கார் அதிகமாக விளம்பரம் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

"அடுத்தப்படியாக கிராமத்திலே உள்ள ஜனங்களுக்கு வைத்திய உதவி மிகவும் அவசியம். இப்பொழுது **Local Development Fund** என்று இப்பொழுது ஏற்படுத்தி இருக்கின்றோம். சட்டசபை மெம்பர்கள் எல்லாம் அதில் ஒத்துழைத்து எவ்வளவு அபிவிருத்தி செய்ய முடியுமோ அவ்வளவு செய்யவேண்டும் என்று நிதி மந்திரி சுப்பிரமணியம் அவர்கள் சட்டசபையில் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் இது சம்பந்தமாக நான் சுற்றிப் பார்க்கும்பொழுது, அங்கு கிராமாந்தரங்களில் பிரசவ விடுதிகள் ஏற்படுத்த வேண்டுமென்று ஜனங்கள் நினைக்கின்றார்கள். பிரசவவிடுதி ஏற்படுத்துவதற்கான செலவில் பாதியைக்கூட கொடுப்பதற்கு தயாராக இருக்கிறார்கள். ஆனால் ஜில்லா போர்டார் அவைகளை நடத்துவதற்கு தங்களிடம் பணவசதியில்லை என்று சொல்லி வருகிறார்கள். அந்த மாதிரி இல்லாமல், எல்லா கிராமங்களிலும் பிரசவ விடுதிகள் ஏற்படுத்துவதற்கு சர்க்கார் உதவி செய்யவேண்டும்.

26th August 1955] [Sri R. M. Palaniappan]

" நமது நாட்டில் இன்று எல்லா ஜனங்களும் கிராமாந்தரங்களில் உள்ளவர்கள்கூட தங்களுடைய குழந்தைகளை படிக்கவைக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அந்த படிப்பின் விளைவு என்ன வென்றால் college-லோ, high school-லிலோ படித்துவிட்டு ரூ. 50-க்கு உத்தியோகம் சென்னையில் கிடைத்தால்போதும், கிராமத்தில் ரூ. 100 கிடைத்தால்கூட வேண்டாம் என்ற நிலையில் இருக்கிறது. ஆகவே இந்த நிலை மாற தொழிற் கல்விக்கு முதலிடம் கொடுத்து நம்முடைய நாட்டிலுள்ள இளைஞர்களெல்லாம் தொழிலில் ஈடுபட வசதி செய்யவேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, எனக்கு பேச சந்தர்ப்பம் அளித்ததற்காக உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்."

Sri A. VELOO :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தைப்பற்றி இந்த சபையின் முன்பாக இரண்டொரு வார்த்தைகள் பேச ஆசைப்படுகிறேன். முதலாவது ஐந்து வருஷத் திட்டம் முடியும் தருவாயில் இருக்கும்போது ஹரி ஜனங்களுடைய நிலைமை ஆரம்பத்தில் எவ்வாறு இருந்ததோ அதே நிலைமையில்தான் இருந்துகொண்டு வருகிறது என்பதை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். குடிதண்ணீர் வசதி, சுகாதாரம், மற்ற போக்குவரத்து வசதிகள்—இவைகள் எல்லாம் சம்பந்தப்பட்ட வரையில் கிராமங்களில், சேரிகளில் வாழக்கூடிய மக்கள் யாதொருவித நன்மையும் பெறவில்லை. சேரிகளில் வாழும் மக்களுக்கு தேசீய விஸ்தரிப்புத் திட்டங்கள் மூலமாகவும் சமுதாய நலத்திட்டங்கள் மூலமாகவும் நன்மை செய்வதாகவும், மற்றுமுள்ள மக்களுக்கும் இவைகளின் மூலம் பொதுவாக நன்மை செய்வதாகவும் கூறப்படுகிறது. பட்ஜெட்டிலும், இன்னும் ஐந்து வருஷத் திட்டத்திலும் ஒதுக்கப்பட்டிருக்கும் பணத்தைப் பார்த்தால் இவைகள் எல்லாம் ஏட்டளவிலேயே இருக்கின்றனவே யொழிய, செயலளவில் நடைபெறுவதில்லை என்றுதான் தோன்றுகிறது. உதாரணமாக சென்னையில் ஒரு இடத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கு சுமார் 100-க்கு மேற்பட்ட இடங்களில் கக்கூஸ் கட்டியிருக்கிறார்கள். ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கக்கூஸ். அந்தக் கக்கூஸுகள் 500 ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டு கட்டப்பட்டிருக்கின்றன. குடியிருப்போருக்கு இடமில்லாத இடத்தில் கக்கூஸுகளைக் கட்டியிருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால் சர்க்கார் ஹரிஜனங்களுக்கு நன்மை செய்வதற்கென்று பணத்தை ஒதுக்கி விட்டாலும் அதை எவ்விதம் செலவு செய்வதென்பதற்குத் திட்டம் இல்லாமல் இருக்கிறதென்றுதான் தெரிகிறது. இந்த ஐந்து வருஷத் திட்டத்தில் ஹரிஜனங்களுக்கென்று ஒதுக்கப்பட்ட பணத்தை செலவு செய்யும்போது சர்க்கார் நல்ல விதத்தில் செலவு செய்யும் என்று நம்புகிறேன். 9–29 p.m.

" அடுத்தபடியாக விவசாயம் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். விவசாயம்தான் நம் நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியமான தொழில். விவசாயம் விருத்தியடைவதற்கு நல்ல விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்யவேண்டும். அப்போதுதான் பலன் கிடைக்கும். இதற்கென்று ஒரே ஒரு ஆராய்ச்சி நிலயம்தான் ஆடுதுரையில் இருக்கிறது. அதை நல்ல முறையில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட தென்னாட்டில் மிகவும் புகழ்பெற்ற மூன்று ராஜ்யங்களாகிய சேர, சோழ, பாண்டிய ராஜ்யங்களை இணைத்த ஒரு கரையுடன் அமைந்திருக்கும் காவிரிப்பூம்பட்டிணத்தில் புதைப்பொருள்களை ஆராய்ச்சி செய்வதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் அதற்கான ஒரு திட்டத்தை இரண்டாவது ஐந்து வருஷத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன். அதோடுகூட தரங்கம்பாடியானது டேனிஷ்காரர்கள் காலத்திலிருந்தே புகழ்பெற்ற ஒரு பிரதேசம். அங்கு பல கோட்டைகள் இருக்கின்றன. அவை மிகவும் சரித்திரப் புகழ் வாய்ந்தவை. அங்கு சுகாதர வசதிக்காகவும், மக்கள் அங்கே தங்கி வசிப்பதற்கு ஏற்றமுறையிலும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, இதையும் இந்த ஐந்து வருஷத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் வார்த்தையை முடித்துக் கொள்கிறேன்."

[26th August 1955

*Sri V. KRISHNASWAMI PADAYACHI :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டு மூன்று நாட்களாக இங்கு இரண்டாவது ஐந்து வருஷத்திட்டத்தைப் பலர் பல கோணங்களிலிருந்து பார்த்து இதனுல் யாதொரு பயனுமில்லையென்று சொல்லிவிட்டார்கள். அவர்கள் சொல்வ திலும் ஓரளவுக்கு உண்மை இருக்கிறது என்பதை யாரும் ஒத்துக் கொள்ளத்தான்வேண்டும். இந்தத் திட்டத்தில் அபிவிருத்திக்காக மிகக் குறைந்த நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைத்தான் அவர்கள் கூறுகிருர்கள். இந்தப் பணத்தைக்கொண்டு ஒரு ஜில்லாவிற்கே ஒன்றும் செய்ய முடியாதபோது ராஜ்யம் பூராவும் அந்தப் பணத்தை உபயோகப்படுத்த வேண்டியிருப்பதால், அதிகமாக யோசனைகளைக் கூறவேண்டியது அவசிய மில்லை.

" இந்தத் திட்டத்தின் நோக்கங்கள் உணவு உற்பத்தியைப் பெருக்கு வதும், மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதும் ஆகும் என்பது எல்லோரும் அறிந்தது. விவசாய முன்னேற்றத்துக்காக பல வழிகளில் நம் அரசாங்கம் வேலை செய்து வந்தாலும், விவசாய நிலைமை இன்னும் சரியாகயில்லை என்பதை யாரும் மறுக்கமுடியாது. விஞ்ஞான முறையில் விவசாயத் தொழிலை நடத்த வேண்டுமென்பதும், அதற்காக மக்களுக்குத் தகுந்த பயிற்சியளிக்கவேண்டு மென்பதும் எல்லோரும் ஒத்துக்கொள்ளவேண்டியது. ஆதலால், நமது ராஜ்யத்தில் ஒரு விவசாயக் கல்லூரி இருப்பது போதாது. விவசாயம் தீவிர மாக நடக்கும் செங்கற்பட்டு, தென்னுற்காடு, தஞ்சை ஆகிய மூன்று ஜில்லாக்களுக்கும் மத்தியிலுள்ள சிதம்பரத்தில் ஒரு விவசாயக் கல்லூரி ஸ்தாபிப்பது மிக அவசியம். அதற்குக் காரணம் சிதம்பரத்தில் அண்ணுமலை பல்கலைக் கழகத்தில் ஏற்கனவே **Intermediate, B.Sc. and M.Sc.** வரையிலும் விவசாயக் கல்வியைப் போதித்தும் ஆராய்ச்சிகள் நடத்திக்கொண்டும்வருகிருர்கள். அங்கு 250 ஏகருக்கு மேலுள்ள பண்ணையில் மாணவர்களுக்குப் பயிற்சி யளித்து விவசாயக் கல்வி போதித்து வருகிருர்கள். ஆதலால், சிதம்பரத்தில் ஒரு விவசாயக் கல்லூரி ஆரம்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" விவசாய முன்னேற்றத்துக்கு நீர்ப்பாசனம் இன்றியமையாதது. பொது வாக, நமது ராஜ்யத்தில் பல இடங்களில் நீர்ப்பாசன வசதி செய்துகொடுக் கப்படவில்லையென்று பல அங்கத்தினர்கள் சொல்லி யிருக்கிருர்கள். தென் னுற்காடு ஜில்லாவிலும் பல இடங்களில் குளங்கள் ஆழமாக்கப்படாமலிருப் பதால் பாசனவசதி இல்லை. அவைகளையெல்லாம் ஆழமாக்கி நல்ல நிலைமை யில் வைக்கவேண்டும்.

" அடுத்தபடியாக, சுகாதார நிலைமையும் சரியானபடி இல்லை என்பதை யாரும் ஒத்துக்கொள்ளவேண்டியிருக்கும். முக்கியமாக, தென்னுற்காடு ஜில்லாவில் குஷ்டரோகம், யானைக்கால் முதலிய வியாதிகள் மிகவும் கடுமையாக இருப்பதால், அங்கு ஆஸ்பத்திரிகளை அமைத்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

" நாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது கைத்தொழில் **heavy industries and large-scale industries** ஆகியவற்றை நடத்தும் பொறுப்பை மத்திய அரசாங்கத்தினர் ஏற்றுக்கொண்டுவிட்டதனுல், சிறிய குடிசைத் தொழில்களையாவது நமது அரசாங்கம் அபிவிருத்தி செய்ய வேண்டும்.

" **Minor ports**-ஐப்பற்றி ஒரு வார்த்தை, நமது ராஜ்யத்தி லுள்ள சிறிய துறைமுகங்கள் கவனிக்கப்படாமல் பாழடைந்த நிலைமையில் இருக்கின்றன. நெய்வேலி நிலக்கரித் திட்டம் வெற்றிபெறுமேயானுல், பல தொழில்களை நடத்த சந்தர்ப்பம் ஏற்படும். அவற்றின் மூலம் வியாபார விருத்திக்கு வசதியிருக்கும். ஆகையால், நெய்வேலிக்குப் பக்கத்தி லுள்ள கடலூர் பரங்கிப்பேட்டை **(Porto Novo)** துறைமுகங்களைச் சீர் படுத்தி மக்களுக்கு பல தொழில்களை ஆரம்பிக்க வசதிசெய்து கொடுக்கு மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

26th August 1955] [Sri V. Krishnaswami Padayachi]

" அடுத்தபடியாக, நம் ராஜ்யத்தில் பிற்போக்கு மக்களுடைய முன்னேற்றத்திற்காக போதுமான தொகை ஒதுக்கப்படவில்லையென்பதை பலர் எடுத்துக்கூறியிருக்கிறார்கள். அவர்கள் அதிகமான எண்ணிக்கையாக இருப்பதால், அதிகமான தொகை ஒதுக்கி அவர்களுக்குவேண்டிய வசதி செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

SRI S. VADIVELU :—" கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இரண்டாவது 5-வருஷத் திட்டத்தைப்பற்றி இந்த சபையில் இரண்டு மூன்று நாட்களாக விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது தமிழகத்தில் தஞ்சாவூர் ஜில்லா ' பொற்களஞ்சியம் ' என்று சொல்லப்படக்கூடிய ஒரு ஜில்லா. அந்த ஜில்லா பல அம்சங்களில் பின்தங்கியிருக்கிறது என்று பல அங்கத்தினர்கள் அநேகம் தடவைகள் எடுத்துக்காட்டியது உண்டு. எங்கள் ஜில்லாவில் ஒரு **Medical College** நிறுவவேண்டுமென்று பல தடவை இந்த சபையிலே நாங்கள் கூறியிருக்கிறோம். இந்த இரண்டாவது 5-வருஷத் திட்டத்திலாவது அதைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் ஒவ்வொருவரும் மறுபடியும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம்.

" ஒரு விவசாயக் கல்லூரி நிறுவினால், விவசாயத்தில் அக்கரை கொள்வதற்கும் அதில் படிக்கும் மாணவர்கள் தேர்ச்சி பெற்று உற்சாகத்துடன் விவசாயத்தில் கவனம் செலுத்துவதற்கும் உதவிகரமாக இருக்குமாதலால், தஞ்சையில் ஒரு விவசாயக் கல்லூரி ஸ்தாபிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

" அடுத்தபடியாக தரங்கம்பாடியிலிருந்து வேதாரண்யம் வரையிலுள்ள மேற்குக் கடலோரத்தில் பல மீனவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கட்டு மரம் கட்டுவதற்கோ அல்லது மரங்கள் வாங்கிக் கொடுப்பதற்கோ இரண்டாவது 5-வருஷத் திட்டத்தில் சர்க்கார் வழி செய்தார்களானால், அவர்களுக்குக் அதிக வருமானம் கிடைப்பதோடு, சர்க்காருக்கும் மீன் இலாகாவிலிருந்து அதிக வருமானம் கிடைக்கும். அதனால் அந்த மீனவர்களும் முன்னுக்கு வரமுடியும் என்பதை கனம் மந்திரி அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

" அடுத்தபடியாக சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால் முதல் ஐந்தாண்டு திட்டத்தில் முன்னுக்கு வந்து விட்டோம் என்று சொல்லுகிறார்கள். ஆனால் 9-39 p.m. கிராமங்களில் பார்த்தால் சவக்குழி போல்தான் காணப்படுகிறது. எங்கு பார்த்தாலும் வசதி இல்லாமல் இருக்கிறது. கிராம கைத்தொழில்களை எடுத்துக்கொண்டால் அது எந்த வழியிலும் முன்னேற்றமடைய வில்லை. கிராமங்களில் மழை பெய்து விட்டால் மனிதன் கீழே காலை வைக்க முடியாது. அந் நிலைமையில் இருக்கிறது கிராமத்திலுள்ள சேரிகள். இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேரிகளுக்கு ரோடுகள் போடுவதாக சொல்லப்படுகிறது. அப்படி ரோடு போடுவதாக இருந்தால் யாருக்கு அந்தக் காண்ட்ராக்டை கொடுக்கப்போகிறார்கள் ? ரூ. 50-க்கு செலவு செய்துவிட்டு ரூ. 700-க்கு பில் அனுப்பி வைத்து சாங்க்ஷன் கேட்கக் கூடியவர்களுக்குத்தான் அப்படிப்பட்ட காண்ட்ராக்டுகளை கொடுக்கப்போகிறார்கள். அதைப்பற்றிக் கேட்க வேண்டுமென்றால் அதற்குள் இந்த ஐந்து ஆண்டுகளும் முடிந்து போய்விடும். அந்த வேலையில் எடுத்துக்கொண்டவர்களை நிறுத்தியிருப்பார்கள். அதனால் எடுத்து நடத்தப்படும் வேலைகளை யெல்லாம் கண்ட்ராக்ட் முறையில் விடாமல் பொது ஜனங்களுடைய தொடர்பு வைத்துக்கொண்டு அந்த வேலைகளை முடிக்கவேண்டும். அப்படி பொது ஜனங்களுடைய தொடர்பு வைத்துக்கொள்வதற்கு ஒரு கமிட்டியை அமைத்து வரப்போகும் ஐந்தாண்டு திட்டத்திற்கு ஒதுக்கப்படும் பணத்தை செலவு செய்வதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். கண்ட்ராக்டர்களுக்குக் கொடுத்தோ அல்லது இஞ்சினீயர்களுக்குக் கொடுத்தோ செலவு செய்யக்கூடாது. அப்படி அவர்கள் மூலம் செய்வதாக இருந்தால் லஞ்சம்தான் தாண்டவமாடும். அந்த அளவிற்கு எந்த நன்மையையும் அடைய முடியாது. அதனால் பொது ஜனங்களுடைய தொடர்புள்ள ஜனநாயக கமிட்டியை அமைத்து கிராமங்களில் நல்ல முறையில் வேலைகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

[Sri S. Vadivelu] [26th August 1955

"அடுத்தபடியாக எடுத்துக்கொண்டால் குடியிருப்பு மனைக்கட்டுகள். இப்பொழுது நாம் சுதந்திரம் அடைந்து எட்டு ஆண்டுகளாகின்றன. முதல் ஐந்தாண்டு திட்டம் போடப்பட்டு இரண்டாவது ஐந்தாண்டு திட்டம் கூட கொண்டுவந்து விட்டார்கள். ஆனால் ஏழைகளுக்கு குடியிருக்க வழியில்லை. கிராமங்களில் மக்களுக்கு வேலை கிடைக்கவில்லை. வேலையில்லா திண்டாட்டம் தாண்டவமாடுகிறது. அதற்குக் காரணம் அவர்களுக்கு குடியிருக்க வீடு இல்லை, குந்தக் குடிசை இல்லை. அதனால் வேலையில்லா திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது. அவர்கள் சென்னை போன்ற பெரிய நகரங்களுக்கு வந்து எச்சிக்கலை எடுத்து ஜீவனம் செய்யும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்கப்போவதாகவும் சுய தேவைகளை பூர்த்தி செய்யப்போவதாகவும் சொல்லப்படுகிறது. ஆனால் நாளுக்கு நாள் வேலையில்லாத் திண்டாட்டம்தான் அதிகரித்துக்கொண்டு போகிறது. மேலெழுந்தவாரியாக பல திட்டங்களை போட்டுக்கொண்டு போனால் மக்களுக்கும் ஏழை விவசாயிகளுக்கும் நன்மை அளிக்கிறதா என்பதை பார்க்கவேண்டும். போடப்படும் திட்டம் மக்கள் தங்களுடைய திட்டம் என்று உணர வேண்டும். திட்டத்தில் மக்களுக்கு சம பங்கு இருக்கிறது என்று மக்கள் உணரவேண்டும். ரோடுகள் போடுவதாக இருந்தாலும் சரி மரத்தை வெட்டுவதாக இருந்தாலும் சரி, அவைகளில் ஏழைகளுக்கு பங்கு பெரிய அளவில் இருக்கிறது என்று அவர்கள் உணர வேண்டும். ஆனால் இன்று என்ன நடக்கிறது. ஹரிஜனங்களும் ஏழை விவசாயிகளும் வசிக்கக் கூடிய வீடுகளை பிரித்தெரிகிறார்கள். வீட்டை விட்டு கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு சுதந்திர இந்தியாவிலும் சரி வரப்போகும் ஐந்தாண்டு திட்டத்திலும் சரி ஏதாவது உத்தரவாதம் அளித்திருக்கிறார்களா என்று பார்க்கவேண்டும். நம் மாகாணத்தில் முதன் முதலாக மனைக்கட்டை விட்டு வெளியேற்றுவதை உடனடியாக தடுக்கவேண்டும். எந்த ஜாதியாக இருந்தாலும் சரி பிராமணராக இருந்தாலும் சரி, முதலியாராக இருந்தாலும் சரி, படையாச்சியாக இருந்தாலும் சரி, பிள்ளைகளாக இருந்தாலும் சரி, ஆதிதிராவிடராக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் அவர்களை அவர்கள் குடியிருக்கும் இடத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்றும் அவர்கள் குடியிருக்கும் வீட்டை பிரிக்கக் கூடாது என்றும் சர்க்கார் ஒரு உத்தரவு போடவேண்டும். எந்த இடத்தில் அவர்கள் குடியிருந்தாலும் அந்த இடத்தை அவர்களுக்கு சர்க்கார் வாங்கிக் கொடுக்கவேண்டும். அப்படி வெளியேற்றுவதற்கு பொறுப்புள்ளவர்கள் யார் என்று சர்க்கார் கண்டு பிடிக்கவேண்டும். அவர்கள் எல்லோரும் திண்ணைச் சோம்பேரிகளாகத்தான் இருப்பார்கள். அவர்கள் குடியிருப்பு மனைக்கட்டுகளிலிருந்து ஏழைகளையும் விவசாயிகளையும் வெளியேற்றி விட்டு அவர்கள் நகரங்களில் குடியிருக்கிறார்கள். மதுரையிலும் கோடைக்கானலிலும், ஊட்டியிலும், குற்றாலத்திலும் தஞ்சையிலும் பெரிய வீடுகளையும் பங்களாக்களையும் வாங்கிக் கொண்டு வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் எப்படி வீடுகள் வந்தன என்பதை கவனிக்க வேண்டும். எப்படி பங்களாக்கள் வந்தன ? இப்படிப்பட்ட சர்க்கார் இருந்தால் இவர்கள் ஏன் இப்படிப்பட்ட பங்களாக்களையும் வீடுகளையும் வாங்க மாட்டார்கள் !

"அடுத்தபடியாக எடுத்துக்கொள்ள வேண்டியது நிலச்சீர்திருத்தம். ஒரு தடவை நில வெளியேற்றத்தைத் தடுக்க சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். மற்றொருதடவை நில வரம்பை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இன்னொரு தடவை வாரக் குத்தகையை நிர்ணயம் செய்யவேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்படியெல்லாம் கொண்டு வந்தால் யாருக்குப் பயன் ஏற்படும் ? இவ்விதம் தனித்தனியாகக் கொண்டு வருவது எதற்காக ? ஒரே தடவையாகக் கொண்டு வந்தால் என்ன ? யாருக்கு பயப்படவேண்டும் என்று கேட்கிறேன். மிராசுதார்களுக்கு பயப்படவேண்டிய அவசியம் இல்லை. கோடிக்கணக்கான மக்கள் ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஆதரவு கொடுக்க கோடிக்கணக்கான மக்கள் இருக்கும் போது கொஞ்சம் கொஞ்சமாக சட்டங்களைக்கொண்டு வருவானேன் என்று

26th August 1955] [Sri S. Vadivelu]

கேட்கிறேன். வட பாதிக்கும், வலிவலத்திற்கும் ஏன் பயப்படவேண்டும். மக்கள் ஆதரவு இருக்கும்போது கோயம்பத்தூர் கௌண்டர்களுக்கு பயப்பட வேண்டிய அவசியமில்லை. கோடிக்கணக்கான மக்கள் பின்னால் இருக்கிறார்கள், சர்க்காருக்கு வேண்டிய உதவி அளிக்க தயாராக இருக்கிறார்கள். இந்த நிலைமையில் பூமிதான சட்டம் எதற்குக் கொண்டுவர வேண்டும் ? சட்டங்களைக்கொண்டு வந்தால் 'க்ளாஸ் பை க்ளாஸ்' ஏன் பாஸ் பண்ணவேண்டும். நேரடியாகச் சட்டம் கொண்டுவந்தால் என்ன ? சாகுபடி அளவை வரம்புகட்ட வேண்டியதவசியமில்லை. 40 வாரம் 50 வாரம் என்று நிர்ணயம் செய்யவேண்டிய அவசியம் என்ன ? இப்படிப்பட்ட சட்டம் எதற்கு என்பது தான் எங்களுக்கு புரியவில்லை. நில வரம்பை நிர்ணயம் செய்துவிட்டு அதாவது ஒருவர் ஐந்து வேலி அல்லது மூன்று வேலி என்று நிர்ணயம் செய்துவிட்டு அதற்கு மேல் உள்ள நிலங்களை பறிமுதல் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட நிலச் சீர்திருத்தம்கொண்டு வந்தால்தான் வெற்றி பெற முடியும். இங்கிலிஷில் சட்டத்தைக்கொண்டு வருகிறார்கள். யாருக்குத் தெரிகிறது ? 'க்ளாஸ் பை க்ளாஸ்' என்று சொல்லுகிறார்கள், 144 செக்ஷன் போட்டு விட்டு சட்டத்தை நிறைவேற்றி விடுகிறார்கள்.

"அடுத்தபடியாக எடுத்துக்கொண்டால் கல்வி. கல்வியைப் பொறுத்த வரையில் நமது நாட்டிற்கு எது போன்ற கல்வி தேவை என்று பார்க்க வேண்டும். இப்பொழுது படித்தவர்களைப் பார்த்தால் வேலையில்லா திண்டாட்டம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுவருகிறது. எவ்வளவோ பேர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணி விட்டு வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். ஆனால் மூன்றாவது பாரம் பாஸ் பண்ணியவர்களுக்கும் உத்யோகங்கள் கிடைக்கின்றன. அப்படிப்பட்டவர்களுக்கு மந்திரிகளுடைய சிபாரிசுகளும் இன்னும் மற்றவர்களுடைய சிபாரிசும் இருப்பதால் அவர்களுக்கு உத்யோகங்கள் கிடைக்கின்றன. ஆனால் அப்படி சிபாரிசு இல்லாதவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.யாக இருந்தாலும் அவர்களுக்கு உத்தியோகம் கிடைப்பது இல்லை. இது ஜனநாயக முறையா என்று கேட்கிறேன். உத்யோக முறையில் எடுத்துக்கொண்டாலும் ஜனநாயக முறையை கையாளுவதாகத் தெரியவில்லை. மேட்டூரில் தண்ணீர் இல்லை யென்றால் அதற்கு கனம் பக்தவத்சலம்தான் காரணம் என்று சொல்லுகிறார்கள். கரும்புக்குத் தண்ணீர் விட்டதால்தான் அங்கு தண்ணீர் இப்பொழுது 60 அடிக்கு வந்துவிட்டதாகச் சொல்லுகிறார்கள். சாகுபடிக்கு தண்ணீர் இல்லாமல் போனதற்குக் காரணமும் அவர்தான் என்று சொல்லுகிறார்கள். இந்த மாதிரியான நிலைமைக்குக் கொண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள் இப்பொழுதுள்ள ஜனநாயக சர்க்கார். அதைப்போலவே உத்யோகம் வழங்குவதிலும் கொள்கைகள் கையாளப்பட்டுகிறது. யாருக்கு சிபாரிசு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் உத்யோகங்கள் கிடைக்கின்றன. திறமையையும் தகுதியையும் பார்ப்பது இல்லை. யார் காக்கா பிடிக்கிறார்களோ அவர்களுக்குத்தான் உத்யோகங்கள் கிடைக்கின்றன. இன்றைக்கு காக்காய் பிடிப்பதுதான் அதிகமாகிக் கொண்டுவருகிறது. உத்யோகங்கள் கொடுக்கவேண்டுமென்றால் ஜனநாயக முறையில்தான் கொடுக்கப்படவேண்டும். தகுதியையும் திறமையையும் பார்த்துதான் உத்யோகங்கள் கொடுக்கப்படவேண்டும். படிப்புத் திறமையை பார்த்துதான் வேலைகள் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்."

Sri A. RAMASWAMY TEVAR :—"On a point of information, Sir, as most of the hon. Members feel dull and sluggisn, why not you give us a cup of coffee or tea?"

DEPUTY SPEAKER :—"I think the hon. Member himself can supply this."

Sri A. SAMBASIVAM :—"மதிப்புக்குறிய துணைத் தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்கி, நல்ல முறையில் தயாரித்து, மத்திய சர்க்காருடன் போராடி, அவர்களால் இயன்ற அளவுக்கு நல்ல முறையில் தயாரித்துக் கொடுத்த நமது நிதி மந்திரி அவர்களுக்கு முதலாவதாக என்னுடைய பாராட்டுதலை தெரிவித்துக் கொள்ளுகிறேன். 9-45 p.m.

[Sri A. Sambasivam] [26th August 1955

"வரப்போகும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நீர்த்தேக்கங்களுக்கும் மின்சாரத்திற்கும் வேகமாக இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் சில பகுதிகளில் தக்க முறையில் போதுமான காலத்தில் கவனம் செலுத்தப்படவில்லை என்று கருதவேண்டியிருக்கிறது. குறிப்பாக சேலத்தைப் பொறுத்தமட்டில்—காலையில் எதிர்க் கட்சி அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு பதில் அளிக்கும்போது சொன்னர்—வாளையார் ப்ராஜெக்ட் ஏற்கெனவே திட்டத்தில் இருந்தது இப்பொழுது காணப்படவில்லை. தொப்பையார் ப்ராஜெக்ட் ஒன்று இருக்கிறது. இதையெல்லாம் எடுத்து நடத்தவேண்டும். அடுத்தபடியாக கோயம்பத்தூரை எடுத்துக்கொண்டால் அங்குள்ள இட வாய்க்காலை இன்னும் விஸ்தரித்து நாமக்கல் திருச்செங்கோடு முதலிய பிராந்தியங்களுக்கு பாசன வசதி செய்யவேண்டும் என்று அடிக்கடி வற்புறுத்திக்கொண்டு வருகிருர்கள். இங்கே கீழே இருப்பவர்களுக்குப் போதுமான பாசன வசதி இல்லை. இதைப்பற்றி அடிக்கடி சொல்லிக்கொண்டு வந்தாலும் அதிகாரிகள் அதை கவனிப்பது இல்லை. இப்பொழுது நாம் சொந்த அரசாங்கத்தை நடத்துகிறோம். பழைய காலத்தில் ராஜாக்கள், ஜமீந்தார்கள், மிராசுதார்கள் இருந்தார்கள். அவர்களுடைய சொந்த உரிமையைப் பொறுத்து சமூகத்தில் வேலை செய்ய வேண்டியதாக இருந்தது. இப்பொழுது அப்படி இல்லை, சொந்த அரசாங்கமாக இருப்பதால் அவைகளை எடுத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"இப்பொழுது குழாய்க் கிணறுகளை அமைக்கப்போகிருர்கள். அப்படி குழாய்க் கிணறுகளை அமைப்பதாக இருந்தால் அவைகளை தஞ்சை ஜில்லாவில் குறைந்த செலவில் அமைக்கலாம். அங்கு ஜல வசதி அதிகமாக இருப்பதால் தஞ்சை ஜில்லாவில் குழாய் கிணறுகளை அமைத்துவிட்டு சேலம் கோயம்பத்தூர் ஜில்லாக்களில் அமைக்கவேண்டும் என்பதை நிறுத்தி வைக்கவேண்டும். அவ்விதம் தஞ்சை ஜில்லாவில் குழாய்க் கிணறுகளை அமைத்துவிட்டு மேட்டூரிலுள்ள காவேரி ஆற்றுத் தண்ணீரை சேலம் கோயம்பத்தூருக்கும் திருச்சிக்கும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதைச் செய்தால் தஞ்சை ஜில்லா ஏமாற்றம் அடைவதாக ஆகாது. தஞ்சை ஜில்லாவில் வறண்ட நிலைமை ஏற்பட்டுவிடாது. ஆகவே இதில் அரசாங்கம் முக்கிய கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படிச்செய்வது தென்னுட்டு ராயலசீமை என்று சொல்லக்கூடிய சேலம் கோயம்பத்தூர் பிரதேசங்களை வளப்பமடையும்படி செய்வதற்கு உதவியாக இருக்கும்.

9-49 p.m. "அதே சமயத்தில் இப்பொழுது சாத்தூர் தாலூக்காவில் நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப்பட்டிருந்தாலும், அவற்றைப் பயிர் செய்வதற்கு வேண்டிய பொருள் வசதியோ, கருவியோ அந்த விவசாயிகளுக்கு இல்லை. ஆகவே முன் இருந்த கலெக்டர் அவர்கள் 400 கிணறுகளை வெட்டுவதற்கான திட்டம் தயாரித்து இருந்தார். இவ்வாறு சிறிய சிறிய கிணறுகளை பல இடங்களில் வெட்டுவதற்கு பதிலாக ஆங்காங்கே 5, 6 பெரிய கிணறுகளை வெட்டி இயந்திரங்களின் மூலம் தண்ணீரை இறைத்து அந்த நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி கொடுத்தால் மிக நன்ருக இருக்கும். விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கக்கூடிய காலத்தில் இம்மாதிரி தண்ணீர் சப்ளை செய்வதற்கு ஏதாவது தீர்வை வாங்கிக்கொள்வதாக இருந்தாலும் ஓரளவு நன்ருக இருக்கும். எப்படியாவது இந்த ஐந்தாண்டு திட்டக் காலத்திலேயே அந்த நிலக்காரர்களுக்கு நல்ல நீர்ப்பாசன வசதியை அளிக்கவேண்டும். சோழ நாட்டு விவசாயத்திற்கு பாதகமில்லாத வகையில் மதுரை போன்ற இடங்களுக்கு காவேரித் தண்ணீரைக் கொண்டுப்போவதாக இருந்தாலும் நல்ல பயன் ஏற்படும். மேலும் ஆந்திரா சர்க்காருடன் உடன்படிக்கை செய்துகொண்டு கிருஷ்ணு நதியை தெற்கே கொண்டுவந்தாலும் திருவாங்கூர்-கொச்சி சர்க்காருடன் ஒப்பந்தம் செய்துகொண்டு மேற்கு புறமாக ஓடி அரபிக் கடலில் விழுகின்ற ஆற்றின் தண்ணீரை சென்னை ராஜ்யத்தின் பக்கம் திருப்பி விடுவதாக இருந்தாலும் விவசாயத்தை நல்ல முறையில் அபிவிருத்தி அடையச் செய்ய முடியும். சென்னை ராஜ்ய முதல் அமைச்சர் அவர்கள், முதல் மந்திரி என்ற தோரணையில் இல்லாவிட்டாலும் தனது சொந்த செல்வாக்குக் காரணமாக

26th August 1955] [Sri A. Sambasivam]

இந்த அண்டைய நாடுகளோடு பேச்சுவார்த்தை நடத்தி, சுமூகமான முறையில் இந்த ஒப்பந்தங்களை செய்துகொண்டால், அதனால் இந்த நாட்டுக்கு ஏராளமான நன்மையுண்டு. அத்தகைய நன்மையை இந்த நாட்டுக்கு அவரால் செய்து கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆகவே எந்த வகையிலேனும் இந்த நாட்டின் நிலவளங்களைப் பெருக்க, உணவுப் பொருளை ஏராளமாக விருத்தி செய்ய, சர்க்கார் அதிக அக்கரை காட்டவேண்டுமென்று இந்த சபையில் வற்புறுத்த விரும்புகிறேன். உணவுப் பொருள் ஏற்றுமதிக் கொள்கையில் அடிக்கடி மாறுதல் ஏற்படுவதின் காரணமாக உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எதிர் கட்சியில் இருக்கக்கூடியவர்கள் கூட விலைவாசிகளின் வீழ்ச்சியைப் பற்றியும், அதனால் இந்த ராஜ்யத்திலுள்ள உற்பத்தியாளர்களுக்கு ஏற்படும் நஷ்டத்தைப்பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். ஏற்றுமதிக் கொள்கை விஷயத்தில் மாறுதல் செய்யக்கூடிய அதிகாரத்தை மத்திய சர்க்காருக்கு விடாமல், மாகாண அரசாங்கம் தன் கையிலேயே அந்த அதிகாரத்தை வைத்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் விவசாய உற்பத்தி மிகவும் சிறந்த தொழிலாக இந்த நாட்டில் இருக்க முடியும். மற்றொன்று காலையில் எதிர் பக்கத்து நண்பர் ஒருவர் குறிப்பிட்டது போல மலைவாசிகள்பற்றி இத்திட்டத்தில் அதிகமாக ஒன்றுமில்லை. திருச்சிராப்பள்ளி அருகில் கொல்லிமலை, பச்சைமலை, சேர்வராயன்மலை போன்ற பல மலைகள் இருக்கின்றன. அங்கே மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள். நமது பண்டைய நூல்களில் சொல்லப்பட்டது போல 'மலைபடு பொருள்' என்ற வகையில் சந்தனக்கட்டை, அரக்கு, மூங்கில் முதலியவைகள் எல்லாம் அங்கே அபிவிருத்தி செய்வதற்கு திட்டங்கள் போடவேண்டும். சந்தனக்கட்டையை மிக அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அங்கே வசதிகள் இருக்கும். இம்மாதிரியான அபிவிருத்தித் திட்டங்களைப் போடுவதினால் மலையில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழி இருக்கும். அங்கே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்ல, நல்ல வசதியான ரோடுகள் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். அடுத்தபடியாக ஆசிரியர்களுக்கு ஓரளவு சம்பளம் கிடைக்கும்படி இத்திட்டத்தில் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக, அரசாங்கத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கிய பிறகு உடனடியாக ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடிய சம்பளத்தை கூட கொடுப்பது, வரவேற்கக்கூடியதாய் இருக்குமென்றும் ஆலோசனை கூற விரும்புகிறேன். இன்றைக்கு அரசாங்கப் பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும், ஸ்தல-ஸ்தாபன பள்ளிகளில் இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் சம்பளத்தில் சிறிது வேற்றுமை காட்டப்படுகின்றது. இதற்குக் காரணம் தெரியவில்லை. ஆரம்ப ஆசிரியர்களுக்கும், ஓரளவு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்கலாம். தற்காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் மற்ற ஆசிரியர்களுக்கும் கொடுக்கக்கூடிய வசதிகளை எல்லாம் கொடுக்க முடியும் என்பதை அரசாங்கம் அறிய வேண்டுமென்று இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடைசியாக இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் வீடு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஹரிஜனங்களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் தொழிளாளர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க வசதி செய்யப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது. பொருளாதாரத்தில் அவர்கள் முன்னேற்றம் அடைய எல்லா வகையிலும் நாம் உதவ வேண்டும். தொழிலாளர்களுடைய நலனை அரசாங்கம் முக்கியமாக கவனிக்கவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நாட்டில் இருக்கிற தொழிலாளர்கள்—பத்திரிகைத் தொழிலாளர்கள் முதற்கொண்டு முதலாளிகள் தயவில் வாழவேண்டிய நிலைமை இன்றைக்குமிருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் எப்படி தங்கள் ஊழியத்திற்கோ இதர சலுகைகளுக்கோ அங்கே யாருடைய தயவையையும் நாடி நிற்காத நிலைமை இருக்கின்றதோ அதே நிலைமை எல்லா தொழிலாளர்களுக்கும், அவர்கள் எந்த ஸ்தாபனத்தில் வேலை செய்து வந்தாலும்கூட கிடைக்கவேண்டியது மிகவும் அவசியம் ஆகும். வாழ்க்கையில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவேண்டும். அப்பொழுதே அவர்கள் தாங்கள் செய்யக்கூடிய தொழிலை திறமையாகவும், செம்மையாகவும் செய்யமுடியும் பிராவிடண்ட் பண்டு, இன்சூரன்ஸ் திட்டம் போன்ற எல்லா வசதிகளும் அவர்களுக்கு செய்து கொடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான்

[Sri A. Sambasivam] [26th August 1955

அவர்கள் செல்வ நிலைமை உயரும். ஆகவே, இந்த அளவில் ஒரு அதிகாரியை போட்டு, இன்றைக்கு எல்லா துறைகளிலும் பணியாற்றி வருகிற தொழிலாளருடைய நிலைமையை யெல்லாம் நன்கு பரிசீலித்து அவர்களுக்கு அதிகப்படியான ஊதியம், நிரந்தரமான ஊதியம், லீவு போன்ற வசதிகள், வைத்திய வசதிகள், வீட்டு வசதிகள் ஆகிய எல்லாவற்றையும் கவனிக்கும்படி செய்யவேண்டும். இதற்கான ஏற்பாட்டை அரசாங்கம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.''

DEPUTY SPEAKER :—'' Now I have reduced the time-limit from ten minutes to seven minutes.''

9.56 p.m. * SRI S. DEIVASIGAMONEY :—'' Mr. Deputy Speaker, Sir, the magnitude of the Second Five-Year Plan appears to be very magnificent at the first sight. The common man is thinking that during the coming five years, the Madras State will be very busy and will be humming with nation-building activities. He imagines that all over the State factories for starting heavy industries, large-scale industries, medium-sized industries and small-scale industries would be set up.''

SRI A. IYANAR :—'' மலையாள அங்கத்தினர்களும் வெளியே போய்விட்டார்கள். ஆகவே, கனம் பேச்சாளர் அவர்கள் பிரசங்கத்தைத் தமிழிலேயே நிகழ்த்தினால் நலமாக இருக்கும்.''

DEPUTY SPEAKER :—'' The hon. Member can continue his speech in English.''

*Sri A. SENAPATHI GOUNDER :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் பல பல தொழில்களையும், கிராமாந்திர மக்களுக்கு ரோடுகள், பள்ளிக்கூடங்கள் போன்ற பல வசதிகளையும் செய்ய இடமளித்திருப்பதுடன், பாசன வசதியை பெருக்க பல நீர்த்தேக்க திட்டங்களை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதையும் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். நல்ல முறையில் தான் இந்த திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. என்றாலும் ஒரு குறை இருக்கத்தான் செய்கிறது. அந்தக்குறை என்னவென்றால், இந்த நீர்ப்பாசன திட்டங்களால் பலன் பெறக்கூடிய விவசாய மக்களின் கடன் சுமை எந்த அளவிற்கு ஏறியிருக்கிறது, அவர்கள் எவ்வளவு கடனில் ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதை கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் முறையில் யாதொரு காரியமும் செய்யப் போவதாக இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை என்பது கண்டு நான் வருத்தமடைகிறேன். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்ற மதிப்பிடப்பட்டிருக்கிற செலவு தொகையாகிய 200 கோடி ரூபாய் அளவு போன்ற ஒரு பெரிய தொகைக்கு விவசாயிகள் கடன்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கடன் சுமை அந்த அளவில் இருக்கும்போது, அவர்களுடைய நிலைமை எப்படி அபிவிருத்தி அடைய முடியும். அவர்களுடைய ஒத்துழைப்பும் ஊக்கமின்றி போடப்படும் அபிவிருத்தி திட்டங்கள் எப்படி வெற்றி பெற முடியும் என்பது சந்தேகமாயிருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கடன் சுமையை போக்க தகுந்த வழிகளை இந்த திட்டத்தின் மூலம் ஏற்படுத்தித் தர முயற்சிக்க வேண்டும். 11 p.m.

"பொதுவாக, கிராமங்களில் உள்ள விவசாய மக்களுக்கு வருஷத்தில் மூன்று மாத காலம்தான் சரியான வேலை இருக்கின்றது. மற்ற காலங்களில், அவர்கள் வீணாக தங்கள் பொழுதை போக்கிக் கொண்டிருக்கக் கூடிய நிலைமையில், வறுமையில் ஆழ்ந்து கிடக்க நேருகிறது. ஆகவே, புதுப்புது கைத்தொழில்களை நகரப் பகுதிகளில் மட்டும் ஏற்படுத்தாமல், பரவலாக கிராமப்பகுதிகளிலும் ஏற்படுத்தி, கிராமப் பகுதிகளிலுள்ள விவசாய மக்கள் வேலையின்றி திண்டாடும் காலங்களில், அவர்களுக்கு இந்த கைத்தொழில்களில் வேலை கொடுத்து உதவினால் மிகவும் சிறந்ததாக இருக்கும்.

[Sri A. Senapathi Gounder] [26th August 1955

"இன்று நீர்ப்பாசன வசதிகளைப் பொருத்தமட்டில், எங்கள் ஜில்லாவிற்கு பம்பையாறு திட்டம் என்கிற ஒரு பெரிய நீர்ப்பாசன திட்டம் இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சாங்ஷன் (sanction) ஆகியிருக்கிறது. இந்த பம்பையாறு திட்ட வேலைகளையெல்லாம் எங்கள் ஜில்லா எஞ்சினியர்கள் செய்து தயராக வைத்திருக்கிறார்கள். சர்க்கார் உத்திரவிட்டால் உடனடியாக வேலையை ஆரம்பிக்கக்கூடிய நிலையில் வைத்திருக்கிறார்கள். இன்று நமது மலையாள நண்பர்கள் இந்த ஐந்தாண்டு திட்டத்தையே வெறுத்து வெளியேறும் சந்தர்ப்பத்தில், அவர்கள் நம்மைவிட்டே பிரிந்து செல்லக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் நம்மை விட்டு பிரிந்து விட்டால், மலையாள பகுதியிலிருந்து வரும் தண்ணீரை தமிழர்கள் உபயோகபடுத்தக்கூடாது என்று சண்டை போடக்கூடிய நிலைக்கு வந்து விடுவார்கள். ஆகவே, அவர்கள் நம்முடன் இருக்கும்போதே, இந்த திட்டத்தை நிறைவேற்ற சர்க்கார் சீக்கிரம் முயற்சியெடுக்க வேண்டும்.

"சர்க்கரை ஆலை ஒன்றை உடுமலைப்பேட்டையில் ஏற்படுத்த வேண்டிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்த சர்க்கரை ஆலையை கூட்டுறவு முறையில் ஏற்படுத்த உத்தேசித்திருப்பதால், கூட்டுறவு அதிகாரிகளுடைய ஒத்தாசை மிகவும் அவசியம். ஆனால் அவர்கள் உடனடியாகவும் சீக்கிரமாகவும் ஒரு காரியத்தையும் செய்வதில்லை என்பதை நாம் நடைமுறையில் பார்த்து வருகிறோம். ஆகவே கூட்டுறவு முறையில் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த அந்த கூட்டுறவு அதிகாரிகளை நல்ல முறையில் தூண்டிவிட வேண்டுமாறு சர்க்காரை கேட்டுக்கொண்டு, எனக்கு பேச இந்த சந்தர்ப்பத்தையளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, எனது உரையை முடித்துக் கொள்ளுகிறேன்."

11-15 p.m. SRI T. ANANTA PAI :—" Mr. Deputy Speaker, Sir, the Planning Commission reduced the size of the Plan and you have reduced the time of our speech. The effect is the same. We will not be able to do justice to the people. However, the main objective of the Second Five-Year Plan is to provide employment and raise the standard of living of our people. In a poor country like ours with its chronic poverty, with its problems of illiteracy and ill-health and resources which have got to be harnessed to solve all these problems, the First Five-Year Plan has not been an easy task. In the midst of all the difficulties that we had to face—of famine, difficulties due to partition and several other problems—we have done wonderfully well. I say this because people who talk of capitalistic planning and criticise all that sort of thing have forgotten one fact that unlike in Totalitarian countries we had a democratic planning of our own where people were persuaded to fall in and join in a great effort in the buildng up of this State. That a democratic plan is not free from defects is known to all of us. Though leaders like Panditji say that we must think big, that our programme must go a long way to solve the problems of the people, that Planning must not depend upon financial resources, that we should concentrate to find out what the physical needs of the people are such as how many houses they want, how many schools they want, how many hospitals they want and how to go about solving the basic problems of the people and so on and so forth, still all these things cannot be achieved without the country being prepared to make sacrifices to the extent required. It is not as if the Planning Commission has got Rs. 4,500 crores to be distributed among all the States, among all the Districts of the States, and among all sections of the people. All of us have been talking in a manner as if the money is ready there and it is

26th August 1955] [Sri T. Ananta Pai]

only a question of distributing it among ourselves. But it is not so. The size of the Plan depends upon the extent of sacrifices we are prepared to make. But still I agree with persons when they say that it would have been proper for us to find out what exactly were our failures during the First Five-Year Plan and how we have failed to achieve certain things. After all we have got to take the people into confidence. While we have every reason to tell them that we should be proud of certain things, we must at the same time admit certain failures in certain sectors so that they may also feel that their efforts were lacking. Sir, I do feel that in spite of the great success of the First Five-Year Plan many of the people have been indifferent to it. They do not know what exactly has been going on around them. It is necessary, therefore, that we should go about talking to our people that they are also partners in this great enterprice and that they too have got a role to play. That means planning has to be taken to the doors of the people. We have been told that the draft proposals are only preliminary and that each district will have its 11-10
own plan. The objective of the plan of providing employment p.m.
can be realised not by distributing so much money for every district but by seeing that the schemes are so diffused as to provide some employment potential to the people of every district. Big schemes like the Bakra Nangal and the Hirakaud are necessary from the country's point of view because they are able to produce enough food for the country. But people in the countryside have a right to ask how they help in increasing their purchasing power. Schemes must be so widely distributed as to enable every part of the country to increase the purchasing power of its people. From that point of view, I would like to plead specially for Malabar and South Kanara. These are thickly populated districts and to increase the purchasing power of the people there either there must be migration of some people to outside places or employment must be taken to the doors of the people. There is a wrong impression that since we are having plenty of rain, no irrigation scheme need be carried out in our district. Particularly South Kanara has the misfortune of not having any major or minor irrigation work under the First Five-Year Plan. The Planning Commission's axe has fallen seriously on South Kanara. Though we are having substantial rain, all the water is drained away within 24 hours. I therefore plead that a major irrigation scheme like the Haladi Scheme must find a place in the Second Plan. I do hope that the Government will recommend to the Planning Commission the inclusion of the Haladi Scheme also in the Second Plan because it will serve a part of a State which has plenty of rain but no water for irrigation. I hope all hon. Members will give their support to the Government in this recommendation.

" Every district will like to see that its resources are developed to the maximum extent possible in the interests of the people. I pointed out the fishery resources of our district and said that in the First Plan we had not done much to exploit them. So much of wealth nature has given us! I suppose no other part of the

State except the coastal belt could provide so much good fish which will serve as food for the interior parts. For the development of marine fisheries, the mechanisation of country craft is essential and deep-sea fishing should be developed. We should see that we get a good price for the fish and that our people get good fish to eat.

" Since the time allotted to me is over, I resume my seat."

11-15 p.m. **Sri P. G. KARUTHIRUMAN** :—" உதவி சபாநாயகர் அவர்களே, எதோ இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே 5 நிமிஷமாவது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது வரையிலும் இந்த முதல் ஐந்தாண்டுத் திட்டம் எதோ தோல்வியுற்றது போல, நம் எதிர்கட்சி அங்கத்தினர்கள் இன்னும் இரண்டாவது திட்டத்திலேகூட மக்களுக்கு போதிய அளவு வேலை கொடுக்க வசதியில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இது உண்மை அல்ல என்பதை மனவருத்தத்துடன் சொல்ல வேண்டி இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் எந்த அளவிற்கு வெற்றியடைந்திருக்கிறது என்பதை இரண்டொரு புள்ளி விவரங்களுடன் சொல்ல ஆசைப்படுகிறேன்.

" முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே மிகவும் வெற்றிகரமாக முடிக்கப்பட்ட கீழ் பவானி அணைக்கட்டு பகுதியிலேயிருந்து நான் வருகிறேன். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் வேலையில்லாத திண்டாட்டம் ஒன்றும் கிடையாது. வேலை செய்யாத திண்டாட்டம் என்பது தான் என் அபிப்ராயம்.

" கீழ் பவானி திட்டம் நடத்தும்பொழுது கட்டிடம் கட்டுவதற்காக ரூ. 5 கோடி செலவழிக்கப்பட்டது. அங்கே கூலியாட்களுக்கு மட்டும் ரூ. 2 கோடி கூலி மூலமாக விநியோகிக்கப்பட்டிருக்கிறதென்பதை எதிர்கட்சி அங்கத்தினர்கள் உணர வேண்டும். திட்டத்தை பூர்த்தி செய்தவுடனே 2 லட்சம் ஏக்கராவிற்கு தண்ணீர் பாசன வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதனால் எத்தனை லட்சக் கணக்கான விவசாயிகள் பயிர்த்தொழிலில் ஈடுபட்டு, இன்னும் எத்தனை கூலியாட்களுக்கு வேலை கிடைத்திருக்கிறது என்பதை யோசிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு வேலையில்லாத் திண்டாட்டம் என்றால் படித்தவர்களுக்கு அரசாங்கத்திலே உத்தியோகம் கிடைக்காதது என்று பார்ப்பார்களானால், அது தோல்விதான். படிப்பு என்பது உத்தியோகம் பார்ப்பதற்கு மட்டும் அல்ல. படித்தவர்கள் எல்லாத் தொழிலையும் கவுரவமாக எடுத்து நடத்த வேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தினால் உணவு உற்பத்தியை அதிகமாக பெருக்கி நமக்கு வேண்டிய சுயதேவையை அடைந்திருக்கிறோம்.

" அது மட்டுமல்ல. இப்பொழுது நாட்டிலே இருக்கின்ற மதுவிலக்கினால் சாதாரண மக்களுக்கு எவ்வளவு நன்மை என்பதைச் சொல்லவேண்டும்.

" கீழ் பவானி சாகரிலே **1950-51**-ல் சாதாரண ஏழை கூலியாட்கள் தங்களுடைய சாப்பாட்டு செலவு போக ரூ. **14** லட்சம் **money order** மூலமாக தங்களுடைய வீடுகளுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இந்த புள்ளி விவரத்தை மறுக்க முடியாது. ஆகவே உண்மையை மறைத்து வெறும் குற்றத்தைமட்டும் சொல்லிக் கொண்டு இருப்பதானால் இருக்கலாம். வேண்டாத மனைவி கால் பட்டால் குற்றம் கை பட்டால் குற்றம் என்று சொல்லாமே தவிர வேறு ஒன்றும் கிடையாது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே, அந்த திட்டத்திலே சில குறைகள் இருந்தால் அதற்கு காரணம் வெள்ளைக்கார அரசாங்கத்திலே இருந்த பழைய இயந்திரத்தை வைத்து நடத்தியது தான். ஆனால் அந்த திட்டத்தை எங்கெங்கே கிராம மக்கள் உற்சாகத்தோடு வரவேற்றார்களோ, எங்கெங்கே நன்றாக வேலை செய்தார்களோ,

26th August 1955] [Sri P. G. Karuthiruman]

அங்கெல்லாம் வெற்றிகரமாக நடைபெற்றது. க்ஷேமநல அபிவிருத்தி திட்டம், சமுதாய அபிவிருத்தி திட்டம் முதலியன எங்கெங்கே மக்கள் உற்சாகத்தோடு இருக்கிறார்களோ, எங்கெங்கே தங்கள் சக்தியையும், முயற்சியையும் உபயோகப்படுத்திக் கொண்டு இருக்கிறார்களோ அங்கெல்லாம் மிகவும் வெற்றிகரமாக நடந்து கொண்டுதான் இருக்கின்றன. குற்றம் சொல்வதற்காக நமது எதிர்கட்சி அங்கத்தினர்கள் ஈடுபடாமல் சர்க்கார் செய்தால் அது தனிப்பட்ட காங்கிரஸ் கட்சிக்குதான் வெற்றி என்று ஒதுங்கி நின்ற இடங்களில் தான் வெற்றி பெறவில்லை. மற்றவிடங்களில் எவ்வளவோ பள்ளிக்கூடங்கள் வந்திருக்கின்றன **Primary Health Centres** வந்து இருக்கின்றன. கால் நடை ஆஸ்பத்திரிகள் ஏற்பட்டு இருக்கின்றன. இதை யாரும் மறுக்க முடியாது.

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே உள்ள பெருந் திட்டங்களெல்லாம் முடிவடைந்து விட்டன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே கிராம மக்களுடைய வசதிகளுக்காகவும், குடிசைத் தொழில் வளர்ச்சிக்காகவும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் பல திட்டங்கள் தீட்டப்பட்டு இருக்கின்றன. இந்தத் திட்டங்களை யெல்லாம் நிறைவேற்றுவதற்கு பணத்தைப் பற்றிய கவலை கூடாது. இவற்றை முடிக்க வேண்டும் என்ற மனம், சக்தி இருக்க வேண்டும். கிராம மக்கள் எல்லோரும் சேர்ந்து வேலையிலே ஈடு படுவதால்தான் இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமேதவிர சர்க்கார் இந்த திட்டத்தை போட்டதாலோ, பல்லாயிரக் கணக்கான கோடி ரூபாய்கள் செலவழிப்பதாலோ ஒன்றையும் செய்ய முடியாது. ஆகவே மக்களின் சக்தியையும், உற்சாகத்தையுமே பொருத்து இருக்கிறது இத்திட்டங்களின் வெற்றி.

"அடுத்த படியாக ஒரு பக்கத்திலே ஜன உற்பத்தி பெருகிக் கொண்டே போகிறது. ஆனால் அதற்கு தகுந்தபடி உணவு உற்பத்தியையும் பெருக்குவது மிகவும் கஷ்டமான காரியம். நமது தேசம் ஜனத் தொகை அதிகமுள்ள இடம். ஆகவே ஜனத் தொகையை கட்டுப்படுத்த வேண்டியது அவசியம். நம் நாட்டிலே குஷ்ட ரோகிகள் பல்லாயிரக் கணக்கானவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஜன உற்பத்தி செய்வதை தடுக்க சர்க்கார் தைரியமாக 'வாஸக்கடமி' என்ற முறையை எடுத்து நடத்தி ஜன உற்பத்தியை கட்டுப்படுத்த வேண்டும்.

'ஆகையினாலே இந்த நிலையிலே நமது மகாத்மா காந்தி அவர்கள் கண்ட ராம ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டும்

'கூற்றமில்லை ஒரு குற்றம் இல்லாமையால்,
சீற்றமில்லை, சிந்தையிற் செம்மையால்
உண்மையில்லை ஓர் பொய்யுரை இலாமையால்,
ஆற்ற நல்லறம் அல்லது இலாமையால் ஏற்றமில்லை இழிதகவு மில்லையே.'

என்ற சமுதாயத்தை உலகம் உள்ளவரை சமாதானம் நிலை பெறுவதற்கு இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் உதவும் என்று சொல்லிக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்."

*Sri P. VENKATESHA SHOLAGAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி அதில் என்ன என்ன திட்டங்கள் இருக்கின்றன என்பதைப்பற்றியும் பல கட்சித் தோழர்களும் இங்கு தங்களுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டதைப் போல எங்கள் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உள்ளவர்கள் ஒவ்வொரு கொள்கையைப் பற்றியும் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். நான் அது மாதிரி விமர்சிப்பதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் இருப்பதால் குறிப்பாக தஞ்சாவூர் ஜில்லாவைப் பற்றி சில வார்த்தைகளை கூற விரும்புகிறேன். 11-20 p.m.

"அங்கு போக்கு வரத்து வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அந்தப் பிரதேசத்திலே வருஷா வருஷம் பல ஆயிரக் கணக்கான மூட்டை நெல்கள் வெளியேறக் கூடிய பல பிர்க்காக்கள் இருக்கின்றன. அந்த பிர்க்காக்களுக்கு ரோடு வசதி அறவே கிடையாது. அங்கு இந்த தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் வேலை செய்ய வேண்டும் என்று கூறும்

போது, ஒரு குறிப்பிட்ட அளவு பணம் கொடுத்தால்தான் வேலை செய்ய முடியும் என்ற நிபந்தனை இருப்பதனாலே அவ்வேலைகள் சரிவர நடக்கவில்லை. மன்னார்குடிக்கும் முத்துப்பேட்டைக்கும் 22 மைல் தூரம் ரோடு இருக்கிறது. அதிலே 11 மைல் நன்றாக இருக்கிறது. இன்னும் 11 மைல் மண் ரோடாகவே இருக்கிறது. உழைப்பின் மூலம் வேலை செய்ய வேண்டுமென்றால் அந்த ரோடை போட முடியும். ஆனால் அதற்கு பணம் போட வேண்டும் என்று சொல்லும்போது அந்த வேலையை எங்களால் செய்ய முடிய வில்லை. குறிப்பாக தஞ்சை ஜில்லாவிற்கு கற்கள் கொண்டு வர வேண்டுமென்றால் அதிகமான பணம் செலவழிக்க வேண்டியதாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவுக்கு மற்ற ஜில்லாக்களுக்கு மேல் தொகையை ஒதுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்படி செய்தால் அங்கு பலவிடங்களில் நல்ல ரோடுகளை அமைக்க முடியும்.

"அடுத்தபடியாக சர்க்கரை ஆலையைப் பற்றி இங்கு பேசியிருக்கிறோம். அதற்கு ரூபாய் 10 லட்சம் மக்களிடம் வசூலிக்க வேண்டும் என்று சொல்லி இருக்கிறார்கள். அதை கூட்டுறவு முறையிலே அமைக்க முயற்சித்து வருகிறோம். பணத்தை வசூல் செய்தால்தான் ஆலை ஆரம்பிக்கப்படும் என்கிற சட்டத்தை வைத்திருந்தால் எங்கள் முயற்சி கைகூடாது என்று சந்தேகப் படுகிறோம். இதில் ஏற்படும் லாபம் சகல பகுதி மக்களுக்கும் போய் சேருமாதலால் இதற்கு தக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

"இரண்டாவது ஐந்து ஆண்டு திட்டத்தின்படி இப்பொழுது எல்லோருக்கும் வாழ்க்கை தரம் உயரும் என்று கூறப்படுகிறது. வருடத்திற்கு 5% தேசிய பொருளாதாரம் உயரும் என்றும் கூறப்பட்டுள்ளது. அது எந்தப் பகுதி மக்களுக்கு உயர்த்தப் படும் என்பதை புரிந்து கொள்ள முடிய வில்லை. சர்க்கார் சிப்பந்திகளை பொருத்த வரையிலே 1% உயர்த்திக் கொடுக்க முடியுமா என்று தோழர் ராமலிங்கம் கேட்ட பொழுது நிச்சயமாக சொல்ல முடியாது என்று சொல்லி விட்டார்கள். அப்படியானால் யாருடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் போகிறார்கள்.

"நேற்றைய தினம் ஆரூராருக்கு தண்ணீர் விட்டாலும், வேலூராருக்கு தண்ணீர் விட்டாலும், சர்க்கரை ஆலை வர வேண்டும் என்று சொன்னார்கள். தஞ்சை ஜில்லாவில் தண்ணீர் தனிப்பட்ட மிராசுதாருக்கு விடப் பட்டிருக்கிறது என்று மந்திரி பதில் சொல்லி இருக்கிறார்கள். சுமார் 10 லக்ஷம் ஏக்கருக்கு பாயக் கூடிய தண்ணீரை இது மாதிரி தனி மனிதருக்கு (தண்ணீர்) விட்டு கரும்பை வளர்க்கிறோம் என்று கூறினால் அந்த தொழிலின் லாபம் பூராவும் தனி நபருடைய சவுகரியத்திற்கு வருவதனால் அங்குள்ள பொது மக்களுக்கு அதனுடைய பிரயோஜனம் கிடைப்பதில்லை. ஆகையால் இந்த மாதிரி தனிப்பட்ட நபர்கள் ஏக போக தொழில்கள் வைப்பதற்கு இந்த சர்க்கார் உதவி செய்வதைப் பார்க்கிலும் பொது மக்களுக்கு உதவிகரமாக இருக்கும் தொழில்களை வைப்பதற்கு இவர்கள் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்."

11–25 p.m. *Sri P. G. MANICKAM :—"மதிப்பிற் குறிய உதவி சபா நாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை ஆதரித்து சில சங்கதிகளைச் சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டமானது ரொம்பவும் வரவேற்கத்தக்க திட்டம். கல்வி வசதிக்கும் எலிமெண்டரி படிப்பிற்கும் அதில் இடம் கொடுத்திருக்கிறார்கள். அவைகளுக்கு என்று ஒரு பெரும் தொகையை ஒதுக்கி யிருக்கிறார்கள். அதன் மூலம் 17 லட்சம் பேர்களுக்குப்படிப்புச் சொல்லிக்கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்படுகிறது. பிற்போக்கு வகுப்பினருக்கும் ஹரிஜன வகுப்பினருக்கும் உள்ள குழந்தைகளுக்கு படிப்புக்கும் மத்தியான சாப்பாட்டிற்கும் $2\frac{1}{2}$ கோடி ரூபாயும் புஸ்தகங்கள் ஸ்லேட்டுகள் முதலியவைகளும் சப்ளை செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இந்த திட்டம் ரொம்பவும் வரவேற்கக் கூடிய திட்டம் என்று சொல்லுகிறேன். மத்யான சாப்பாட்டிற்கும் படிப்புக்கும் $2\frac{1}{2}$ கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பது போதாது. இன்னும் கொஞ்சம் அதிகமாக ஒதுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

26th August 1955] [Sri P. G. Manickam]

"அடுத்தபடியாக வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவதற்காக கவர்ன்மெண்டார் அநேக காரியங்களை இந்த ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்திருக்கிறார்கள். இந்த வேலையில்லா திண்டாட்டத்தை ஒழிக்க வேண்டும் என்று கேட்டால், இந்த வேலையில்லா திண்டாட்டம் யாரிடத்தில் முக்கியமாக இருக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். முக்கியமாக தாழ்த்தப்பட்ட மக்களிடத்தில்தான் அதிகமாக இருக்கிறது. பிற்பட்ட மக்களிடத்தில்தான் அதிகமாக வேலையில்லா திண்டாட்டம் இருக்கிறது. அதை ஒழிக்க வேண்டும்.

"ட்ரெயினிங் முறையில் அநேகம் பேர்களுக்கு வேலை சொல்லிக் கொடுக்கப்போவதாக சொல்லியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ட்ரெயினிங் முறையில் மாணவர்கள் எடுக்கப்படும்போது முக்கியமாக பிற்பட்ட வகுப்பினர்களும் ஹரிஜன மாணவர்களும் எடுக்கப்பட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

"வீடு கட்டும் திட்டத்திற்கு குறிப்பாக ஹரிஜனங்களுக்கு பெரும் தொகை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். வருஷம் தோறும் 5,000 வீடுகள் கட்டுவது என்று திட்டம் போட்டு 25,000 வீடுகள் கட்டுவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜில்லாவிலும் ஹரிஜனங்களுடைய தொகையை கணக்கிட்டு அதன்படி ஹரிஜனங்களுக்கு ஜில்லா வாரியாக சம பங்கு கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

"அடுத்தப்படியாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு விஷயத்தை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். அந்தியூர் குளத்தைப் பற்றி சட்டசபையில் நான் கேள்விகள் கேட்டேன். அந்தக் குளத்தில் தண்ணீர் நிரப்புவதன் மூலம் ஏறக்குறைய ஏழு குளங்களுக்கு தண்ணீர் பாயக்கூடும். அதை இந்த இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கும்படியாகக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்."

SRI K. T. RAJU :—"On a point of Information Sir, மூன்று தினங்களுக்கு முன் B.C.G.யைப்பற்றி விவாதிக்க ஒரு மணி நேரம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டதற்கு அதைப்பற்றி யோசிக்கப்படும் என்று தலைவர் அன்று சொன்னார். நாளை சட்டசபை கலையப்போகிறது. இது ஒரு முக்கியமான விஷயமாக இருப்பதால் அந்த விவாதத்தை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாமா என்று கேட்க விரும்புகிறேன். அந்த பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக நாட்டில் இருக்கிறது. அதனால் நாளையாவது அதற்கு என்று ஒரு மணி நேரம் ஒதுக்கி விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்."

DEPUTY SPEAKER :—"நாளை காலை அலுவல் கமிட்டி கூடுகிறது. அப்பொழுது இதைப்பற்றி முடிவு செய்யலாம் என்று தோன்றுகிறது. அப்போது இதைப்பற்றி யோசிக்கலாம்.

"We shall sit for five minutes more. The hon. Member Sri Iyanar is very eager to speak."

THE HON. MEMBERS :—"Let us sit till midnight, Sir."

DEPUTY SPEAKER :—"If the House wants to sit, I have no objection. The Hon. Minister must also agree."

SRI A. IYANAR :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 11-30 p.m. இப்பொழுது விவாதத்தில் இருக்கும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நான் மிகவும் வரவேற்பதோடு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

"இப்பொழுது நம் நாட்டில் வேலை யில்லா திண்டாட்டம் நிறைந்திருக்கிறது. எந்த திட்டத்தை எடுத்துக் கொண்டாலும் தனிப்பட்ட முதலாளிகளுக்கும்தான் திட்டத்திலுள்ள வேலைகளைக் கொடுக்கிறார்கள். அநேக

[Sri A. Iyanar] [26th August 1955

கோடி ரூபாய்களை கடனாக கொடுத்து தொழிற்சாலைகளை அமைக்கப்போவ தாகவும் இருக்கிறது. அவைகளை பெரிய முதலாளிகளுக்கு விடாமல் சர்க் காரே பல தொழிற்சாலைகளை கைப்பற்றி அவைகளை தேசீய மயமாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் தான் நலமாக இருக்கும். இப்பொழுது சென்னையில் நடைபெற்று வரும் நகர பஸ்களை சர்க்கார் எடுத்து நடத்துவதால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் சர்க்காருக்கு கிடைக்கிறது. அது போன்று இதர ஜில்லாக்களிலும் நடை முறையில் ஓடிக் கொண்டிருக்கும் கார்களையெல்லாம் அரசாங்கமே எடுத்து நடத்தினால் ஏராளமாக வருமானம் அடையலாம். அதன் மூலமாக சிறிய சிப் பந்திகளுக்கும் போலீஸ்காரர்களுக்கும் அதிகப்படியான சம்பளம் கொடுக்க லாம். இப்பொழுது சிறிய சிப்பந்திகளுக்கும் போலீஸ்காரர்களுக்கும் இர ண்டு ரூபாய் கூட அதிமாகக் கொடுக்க முடியாமல் தத்தளித்துக் கொண் டிருக்கும் நமது சர்க்கார் தங்களுடைய வருவாயை இதன் மூலம் அதி கரித்துக் கொள்ளலாம். அப்படி அதிகரித்துக் கொண்டு கீழ்த்தர சிப் பந்திகளுக்கு ஓரளவு அதிகப்படியான சம்பளம் கொடுக்க ஏதுவாக இருக்கும்.

"அடுத்தப்படியாக டெவலெப்மெண்ட் வேலைகள் நடந்து வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் அப்படி ஆரம்பிக்கப்பட்டு வருகிறது. அதில் கலெக்டர் என்ன உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்றால், இப்பொழுது பல ரோடுகள் ஜில்லா போர்ட் மூலமாக போடப் பட்டு பத்து வருஷங்களாகி யும் கூட அங்கு சரளை போடாமல் மண் போட்ட படியே இருக்கிறது. அதை டெவலெப்மெண்ட் மூலமாக எடுத்து நடத்த வேண்டும் என்று சொன்னால் அங்கு குக்கிராமங்களில் இருக்கும் பல கூலி ஜனங்கள் விவ சாயம் செய்யக் கூடியவர்கள் ஒன்று வேலை செய்ய வேண்டும் இல்லா விட்டால் நாலில் ஒரு பாகம் பணத்தை கொடுக்க வேண்டும் என்று கலெக் டர் சொல்லுகிறார். மண் வேலையாக இருந்தாலும் அல்லது மண்ணை வெட்டிப் போடக் கூடிய வேலையாக இருந்தாலும் ஜனங்கள் செய்து விடலாம். பணம் கொடுத்து அவர்களுக்கு சரளை போட வேண்டும் என்றால் அவர்களால் முடியாமல் இருக்கிறது. இப்பேற்பட்ட விஷயங்களில் சர்க்கார் அந்தந்த கலெக்டர்களுக்கு ஒரு உத்தரவு போட வேண்டும், அதாவது ரோடு போடும் விஷயங்களில் சர்க்கார் பணத்தை செலவு செய்து போட்டுக் கொடுக்க வேண்டும் என்று. அப்படி ஏற்பாடு செய்தால்தான் நலமாக இருக்கும். அத்துடன் கிராமங்களில் படிப்பதற்கு வேண்டிய பள்ளிக் கூடங்கள் கட்ட வேண்டியதாக இருக்கிறது. அதற்கும் ஜனங்கள் நாலில் ஒரு பங்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். சுகா தார வசதிக்காகவும் குழந்தை வளர்ப்புக்காக நிலையங்களை அமைப் பதற்கும், சிறு ஆஸ்பத்திரிகளைக் கட்ட வேண்டும் என்றாலும் அதற்கும் பணம் கேட்கிறார்கள். முக்கியமான விஷயங்களில் கிராமத்தாரிடத்தில் ஏதோ ஜனங்களால் உழைக்கக் கூடிய வேலைகளை எதிர் பார்க்கலாமே யொழிய பணத்தை சர்க்கார் எதிர் பார்க்கக் கூடாது என்பதை தெரி வித்துக் கொள்ளுகிறேன்."

11-35 p.m. * Sri M. P. SUBRAMANYAM :—" கனம் துணைத்தலைவர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை நல்ல முறையில் தயாரிக்கவேண்டு மென்ற நல்ல நோக்கத்தோடு மக்களிடமிருந்து புள்ளி விவரங்களைச் சேகரிக்க தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறினார். ஆனால் அந்தப் புள்ளி விவரங்கள் சபைக்குக் கொடுக்கப்பட வில்லை. எல்லா ஜில்லாக்களிலும் இந்தமாதிரியாக புள்ளி விவரங்களைத் தயாரிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. தேவைப்படுகின்ற விவரங்களை அறிந்து கொள்வதற்கு வாய்ப்புகள் இல்லாமல் திட்டத்தின்மேல் அபிப் பிராயத்தைத் தெரிவித்துக் கொள்வது என்பது முடியாத காரியம் என் பதை முதலில் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" இருந்தபோதிலும்கூட இந்தத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் குறிப்பாக நம்முடைய மாகாணத்திற்கு சேரவேண்டிய நியாயமான பங்கை இதுவரை யிலும் கொடுக்கவில்லை என்பதை பல உறுப்பினர்கள் எடுத்துக் கூறியிருக் கிறார்கள். முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசாங்கம் சென்னை அரசாங்கத்தை பலவகையிலும் ஏமாற்றிவிட்டது. இதனை நாங்கள் பல

26th August 1955] [Sri M. P. Subramanyam]

காலமாகக் கூறிக் கொண்டு வந்திருந்தபோதிலும் கொஞ்சம் கொஞ்சமாக சர்க்காரே உணர ஆரம்பித்திருக்கிறார்கள் என்பதை கனம் மந்திரி அவர்கள் நிகழ்த்திய பிரசங்கம் ஓரளவு எடுத்துக் காட்டுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட பல திட்டங்கள் வடநாட்டிலேயே தான் போடப்பட்டன. தென்னாடு புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இதை மந்திரி அவர்களே உணர்ந்திருப்பதைக்கண்டு ஓரளவு மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை மக்களைக்கொண்டு வகுக்கப்போவதாக மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கமும் அறிவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இதுவரையிலும் மக்களிடையே காட்டி அவர்களுடைய யோசனைகளைப் பெறவில்லை. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒதுக்கப்படும் பணம் 2,300 கோடி ரூபாயில் நம் ராஜ்யத்திற்காக 230 கோடி ரூபாய் செலவழிக்க பிளானிங் கமிஷன் ஒத்துக் கொள்ளும் என்ற நம்பிக்கை இருப்பதாக மந்திரி அவர்கள் சொன்னார்கள். அதாவது ஜனத்தொகை அடிப்படையில் நம் ராஜ்யத்திற்கு மொத்தப் பணத்தில் 10 பெர்சன்ட் கிடைக்குமென்றும், 10 பெர்சன்ட் கொடுக்க வேண்டுமென்று தாங்கள் வற்புறுத்தியிருப்பதாகவும் அவர்கள் கூறினார்கள். திட்டத்திற்காக ஒதுக்கப்படும் பணம் 4,300 கோடி ரூபாயில் நமது ராஜ்யத்திற்கு நியாயமாக 10 பெர்சன்ட் கணக்குப்படி பார்த்தாலும் 430 கோடி ரூபாய் ஒதுக்கப்படவேண்டும். முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயே நம் ராஜ்யம் சரியாக கவனிக்கப்படவில்லை. முதல் 5-ஆண்டு திட்டத்தில்; மக்கள் கணக்குப்படி நமக்குக் குறைந்தது 200 கோடி கிடைத்திருக்கவேண்டும் ; ஆனால் கிடைத்ததோ 90 கோடிதான். ஆகவே நமக்கு கணக்குப்படி 110 கோடி ரூபாய் ஏமாற்றப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக 430 கோடி ரூபாயும், பழைய திட்டத்திற்காக நமக்கு சேரவேண்டிய 110 கோடி ரூபாயும், ஆக சென்னை ராஜ்யத்திற்கு 540 கோடி ரூபாய் ஒதுக்கப்படவேண்டும். ஸ்ரீ காமராஜர் அவர்கள் டில்லிக்குச் சென்று சென்னை மாகாணம் எல்லா வகையிலும் பிற்பட்ட நிலையில் இருக்கிறது. எந்தவிதமான அபிவிருத்தி திட்டங்களும் அந்த ராஜ்யத்தில் கிடையாது, பம்பாயைப்போலவோ, வங்கத்தைப்போலவோ நம் மாகாணம் தொழில் வளம் பெருகிய நாடு அல்ல, பொருளாதரத்தில் வாழ்க்கைத்தரத்தில் மிக பின் தங்கிய நாடு என்பதை எடுத்துச் சொல்லி நம் ராஜ்யத்திற்குச் சேரவேண்டிய பணத்தில் கொஞ்சம்கூட குறைக்காமல் இருக்கும்படி கூறியிருக்கிறோம் .என்றார்கள். டில்லிக்குச் செல்லும்போது அவர்கள் இந்த ராஜ்யத்தில் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் கன ரகத் தொழிற்சாலைகளைப்பற்றியெல்லாம் நம்பிக்கை தெரிவித்தார்கள். ஆனால் டில்லியிலிருந்து வந்தபிறகு நிலைமை அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. இந்த ராஜ்யத்தில் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்ட அலுமினியம் தொழிற்சாலையைப்பற்றி நிச்சயமாக நாம் ஒன்றும் நினைப்பதற்கு இல்லை. அது சென்னை மாகாணத்திற்கு வருமோ, வராதோ என்கின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எப்படியிருந்தாலும் நம்முடைய ராஜ்யத்தில் அலுமினியம் தொழிற்சாலையை ஏற்படுத்தவேண்டும். அலுமினியம் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்குவேண்டிய உலோகம் இங்கே கிடைக்கிறது. அதுவும் சேர்வராயன் மலையில் இருக்கிறது. ஆகவே இது விஷயத்தில் கனம் மந்திரி அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால் அவர்களுடைய பேச்சு எங்களுக்கு எல்லாம் நம்பிக்கை அளிக்கக் கூடியதாய் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். அதுமாத்திரமல்ல. இரும்புத் தொழிற்சாலையை மின்சார உதவியைக்கொண்டு ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்யவேண்டும். இதில் நமது அரசாங்கம் மின்சார நிபுணர்கள் உதவியைக்கொண்டு கலந்து பேசி ஒரு முடிவு செய்யவேண்டும். இதுமாதிரியாகவெல்லாம் பல திட்டங்களைப் போட்டு சென்னை ராஜ்யத்தை அபிவிருத்தி செய்ய எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளவேண்டும். தென்னாட்டை வடநாடு எந்தவகையிலும் புறக்கணிக்காமல் இருக்க எல்லா நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளவேண்டும். இதுவரையிலும் கட்சியின் கட்டுப்பாட்டுக்காக அகில இந்திய ரீதியில் அமைக்கப்பட்ட ஒரு ஸ்தாபனத்தின் கீழ் தாங்களும் அங்கத்தினர்களாக இருக்கிறோம் என்கின்ற காரணத்திற்காக சென்னை ராஜ்ய காங்கிரஸ்காரர்கள், வடநாட்டார், தென்னாட்டை புறக்கணித்து வருகிறார்கள் என்று நாங்கள் சொல்வது போல சொல்லாவிட்டாலும் கூட இன்றைக்கு அந்த உண்மையைத்

தெள்ளத்தெளிய அவர்களே உணர ஆரம்பித்திருக்கிறார்கள். இதுவரையிலும் சென்னை ராஜ்யத்தில் பெரிய கன ரகத் தொழிற்சாலைகளை ஆரம்பிக்கவே வட நாட்டார் எண்ணவில்லை. இப்பொழுதுதான் தென்னாட்டாரின் கிளர்ச்சியில் நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டிருக்கிறார்கள். குறுகிய காலத்திலேயே வடநாட்டில் மூன்று இரும்புத் தொழிற்சாலையை ஏற்படுத்தியிருக்கும்போது கடந்த 8 வருஷங்களாக இந்த நெய்வேலி திட்டத்தை முடிக்கவில்லையென்றால் இதிலிருந்தே அவர்களுக்கு தென்னாட்டிடம் எவ்வளவு அக்கறையிருக்கிறது என்பதைத்தெரிந்து கொள்ளலாம். இதை எல்லாக் கட்சினரும் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த நிலக்கரிச் சுரங்க வேலை சீக்கிரத்தில் ஆரம்பிக்கப்படக்கூடாது என்பதற்காகவே பலர், குறிப்பாக வெளிநாட்டு நிபுணர்களும்கூட இதனை இழுத்துக் கொண்டே போகிறார்கள் என்பது மிக நன்றாகத் தெரிகிறது. இதை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்த்து இந்த நெய்வேலி திட்டத்தை வெகுசீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"தென்னாடு எவ்வளவு தாழ்ந்த நிலையில் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் வடநாடு எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதற்கு பல உதாரணங்கள் காட்ட முடியும். நிதி அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன் இந்த அவையில் கூறினார்கள். சென்னையில் உள்ள ஒரு விவசாயக் கூலியின் குடும்ப சாராசரி வருமானம் ஒரு ஆண்டுக்கு 130 ரூபாய் என்று ஆனால் அதே நேரத்தில் வடமேற்கு இந்தியாவில் பஞ்சாபில் விவசாயியின் சராசரி வருமானம் ரூ. 440 என அறிகிறோம். இது எதைக் காட்டுகிறது ?

"நிலைமை இவ்வாறிருந்தாலும் மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் கொள்கைகளும், திட்டங்களும் வடநாட்டை மேலும் வளமாக்கவும் தென்னாட்டை மேலும் தேயவைக்கவுமானதாகத்தான் இருக்கிறது.

"உணவு நெருக்கடி என்று இருந்த காலத்தில் உத்தர பிரதேசத்தில் அரிசி மிகுதியாக கிடைத்தது. சென்னையில் அரிசி பற்றாக் குறையென்று கேட்டால் எவ்வளவு லாபம் கொடுப்பாகள் என கேட்டார்கள். ஆனாலும் நாம் எல்லாம் பாரதப் புதல்வர்கள், சகோதரர்கள் தாம். தென்னாட்டில் உணவு பண்டங்களின் விலை வீழ்ச்சியுற்றிருக்கிறது. விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டார்கள். ஆனால் தென்னாட்டில் விலை வீழ்ச்சியை தடுத்து நிறுத்த முன்வராத மத்திய அரசாங்கம் உத்தரபிரதேசத்தில் பஞ்சாபில் கோதுமை பயிர் வகைகளின் விலைகள் வீழ்ச்சியுற துவங்கிவிட்டன என்றதும் 10 கோடி ரூபாய் செலவு செய்தது.

"மேலும் இலங்கையிலிருந்து கள்ளத்தனமாக குடியேறியவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டு தாயகத்திற்கு துரத்தியடிக்கப்படும் ஆயிரக்கணக்கானவர்களை கவனிக்க இங்கு நாதியில்லை. காரணம் இவர்கள் திராவிடத்தை சேர்ந்தவர்கள் என்பதுதான். ஆனால் அதே நேரத்தில் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்த அகதிகளுக்கென மத்திய அரசாங்கம் இதுவரை 270 கோடி செலவு செய்திருக்கிறது. இது எதை காட்டுகிறது ? ஆதலால்தான் நாங்கள் கூறுகிறோம் "வடநாடு தென்னாட்டை புறக்கணிக்கத்தான் செய்யும், செய்கிறது" என்று இன்னும் எத்தனை ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அவைகளெல்லாம் வடநாடு வாழவும் தென்னாட்டை சுரண்டவுமான திட்டங்களாகத்தான் அமையும் என்பதையும் இப்பொழுதாவது அரசாங்கம் உணரவேண்டும். ஆகவே இனியாவது அவையில் உள்ளவர்கள் தெளிவுபெறவேண்டுகிறேன்."

11-43 a.m. * **Sri T. GANAPATHY** :—"கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கோயமுத்தூர் ஜில்லாவிலிருந்து வந்தால் பாட்டு வரும், எல்லாம் வரும். ஏனென்றால் அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் என்பதே இல்லை. அங்கேயுள்ள தேவைகளைக் கவனிப்பதற்கு இரண்டு மந்திரிகள் இருந்தார்கள். இப்பொழுதும் ஒரு மந்திரி இருக்கிறார். இன்னும் நண்பர் திருகருத்திருமன் போன்றவர்களும் 2-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் மந்திரி சபையிலே இருந்துவிட்டால் இன்னும் திருப்தியாக இருக்கும். மற்ற

ஜில்லாவிலுள்ளவர்களுக்கு அப்பாக்கியம் கிடைக்கவில்லை. எங்கள் ஜில்லா திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது. நாகர் கோவில் பக்கமுள்ள தமிழ்ப் பிரதேசம் இங்கு சேர்ந்தால், பெரும் தொழிற்சாலைகளை நடத்துவதற்கு ஏதாவது திட்டம் வகுக்கலாம் என்றாலும் அந்தச் சர்க்காரின் விரோதத்தினால் ஒரு திட்டமும் நடக்க வில்லை. அந்த தமிழ்ப் பிரதேசத்தில் இந்த சர்க்கார் ஒன்றும் செய்ய முடியாது என்ற நினைப்பில் அதை நிராகரித்து விட்டார்களோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.

"முக்கியமாக எனது தொகுதியாகிய ராதாபுரம், திசையன்விளை பிர்க்காக்கள் எப்பொழுதுமே பஞ்சப் பிரதேசங்கள். பஞ்ச நிவாரணத்திற்காக சர்க்காரிலிருந்து கனம் நிதி மந்திரியும், ரெவினியு மந்திரியும் தாராள மாக பணம் சாங்ஷன் செய்திருக்கிறார்கள். பஞ்ச நிவாரண வேலைகள் நடக்கிற லட்சணத்தைப் பார்ப்பதற்கு மந்திரிகள் இல்லாததால் அலங் கோலமாக இருக்கிறது. மண் வேலை செய்வதற்கு உத்தரவாகி மூன்று மாதங்கள் ஆகியும் யாதொரு வேலையும் நடவாதது மந்திரி இல்லாத தாலா ? அல்லது அடிக்கடி போய்ப் பார்த்துத் தூண்டுவதற்கு அதிகாரி களும் மந்திரிகளும் முயற்சி இல்லாத குறையினாலா என்று தெரியவில்லை இதைச் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

"திருநெல்வேலி ஜில்லாவில் தனிப்பட்ட நபர்கள் காகித உற்பத்தி ஆலை தொடங்குவதற்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏதாவது உதவி செய்வதாக சர்க்கார் வாக்களித்து, அவர்கள் விட்டுவிட்டதால் அப்படியே கைவிடப்பட்டிருக்கிறதாக அறிகிறோம். ஆனால் திருவாங்கூரிலும், மைசூ ரிலும், ஆந்திராவிலும் சர்க்காரே பேப்பர் மில் ஆரம்பித்து நடத்தி வருகி றார்கள். அதே முறையை நாமும் கையாளுவதற்கு என்ன கஷ்டம் ஏற்பட்டி ருக்கிறது என்பதைச் சர்க்கார் ஆராயவேண்டும்.

"கீரியாறு திட்டத்தைப்பற்றி நண்பர்கள் பலர் சொன்னார்கள். சிறு சிறு திட்டங்களுக்கெல்லாம் அப்போதைக்கப்போது இருப்பதைக்கொண்டு நாம் சமாளித்து விடலாம். ஆனால், பெரிய தொழிற்சாலைகளுக்கு, பெரிய நகரங்களுக்கு இந்த ஜில்லாவுக்கு இவ்வளவு என்று ஒதுக்காவிட் டால் நல்ல முறையில் அந்தந்த ஜில்லாக்களுக்குப் பகிர்ந்து கொடுக்க முடியாது. ஆங்காங்கே ஆதிக்கம் உள்ள மந்திரிகள் செல்வாக்குள்ள ஜில்லாக்களுக்குக் கொண்டுபோவது இயற்கையாக இருக்கிறது. முக்கிய மாக கீரியாறு திட்டத்திற்கு $1\frac{1}{2}$ கோடி ஆகலாம். இது இப்பொழுதுதான் பரிசீலனை முடிந்திருக்கிறது. ஆனால் பாலாறு விஷயத்தில் இப்பொழுது தான் பரிசிலனை செய்து $3\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவுள்ள ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் அங்கிருந்து இரண்டு மூன்று மந்திரிகள் வந்து இருப்பதினால்தான் என்று தெரியவருகிறது. ஆகவே மந்திரிகள் இல்லாத காரணத்தால் எங்கள் ஜில்லா ஒதுக்கப்பட்டு விட்டதா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. மழை பெய்தால்தான் பாலாற்றில் தண்ணீர் வரும். மழை இல்லாத காலங்களில் மணல்தான் பால் போல இருக்கும். அப்படியிருக்க அதற்கு ஒரு திட்டத்தை அங்கீகரித்திருக்கிறார் கள். எங்கள் ஜில்லாவில் திட்டம் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

"எங்கள் ஜில்லாவில் சிறு சிறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு லாயக்காக அநேக காட்டாறுகள் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து வருகின்றன. பணகுடிமலை திருக்குறுங்குடிமலை, களக்காடு மலை இன் னும் இதுபோன்ற சிறு திட்டங்கள் இருக்கின்றன. திருவாங்கூர் தண்ணீ ரைக்கொண்டு வரவும், நம்பியாற்றின் கடைசியில் ஒரு அணை கட்டவும், அங்கு தனி என்ஜினியரிங் டிவிஷன் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று கடந்த ஒரு வருஷ காலமாகச் சொல்லியும், காலம் கடத்திக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் சொன்னமாதிரி ஒரு வருஷத்திற்கு முன்னா லேயே தனி என்ஜினிரிங் டிவிஷனை ஏற்படுத்தியிருந்தால், அணைத்தேக்கங் களை எங்கெங்கு ஏற்படுத்தவேண்டுமென்று, நல்ல முறையில் பரிசிலனை செய்யப்பட்டிருக்கும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பல நீர்த் தேக்கத் திட்டங்களைச் சேர்ப்பதற்குத் தயாரிக்கப்பட்டு, அவைகளுக்கு வேண் டிய பணத்தையும் இப்பொழுது ஒதுக்குவதற்கு சௌகரியமாக

இருந்திருக்கும். தனி என்ஜினிரிங் இலாகா நியமிக்காத காரணத்தினுல் திட்டங்களைப் பரிசீலனை செய்ய முடியாமலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்கூட சேர்க்க முடியாமலும் போய்விட்டது. ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ஜில்லாவாக இருக்கக்கூடிய எங்கள் ஜில்லாவை இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் ஒதுக்கிவிடுவார்களோ, என்னவோ தெரியவில்லை.

"இன்னும் பெரிய திட்டங்களை நடத்துவதற்கும் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதற்கும் காண்டிராக்ட் எடுப்பதற்கு வட நாட்டிலிருந்து தொழில் நிதிக் கார்ப்பரேஷன் அமைத்திருக்கிருர்களாம். அம்மாதிரி கார்ப்பரேஷனை மத்திய சர்க்கார் சிபாரிசு செய்யப் போவதாக நாங்கள் அறிகிறோம். அது தவறு தமிழ் நாட்டில் பணம் போட முதல் போட, தயாரானவர்கள் அவர்களுக்கு அவ்வேலைகளைக்கொடுத்தால், அப்பணம் நம் நாட்டிலுள்ளவர்களுக்கு செலவு செய்வதற்கு சௌகரியம் ஏற்படும்.

"திருநெல்வேலி ஜில்லாவில் 6 கலாசாலைகள் இருக்கின்றன. எங்கள் ஜில்லா தெற்கு ஓரத்தில் இருக்கிறது. திருவாங்கூர்-கொச்சி ராஜ்ய தமிழ் பகுதியின் பக்கத்திலிருந்து நான் வருகிறேன். திருவாங்கூர்-கொச்சியிலுள்ள தமிழ்ப் பகுதிகளும் தமிழ் நாட்டோடு சேர்ந்துவிட்டால், திருநெல்வேலி ஜில்லாவுக்குத் தனி முக்கியத்துவம் ஏற்படும். அதற்காக இப்பொழுதே திருநெல்வேலி ஜில்லாவில் ஒரு வைத்தியக் கல்லூரியையும், பொறியியற் கல்லூரியையும் ஆரம்பித்து நடத்துவதற்குத் திட்டம் வகுத்திருக்கிருர்களா, வகுக்கப்போகிருர்களா என்று தெரியவில்லை. மந்திரி இல்லாத காரணத்தால் அதையும் விட்டுவிடப் போகிருர்களோ என்னவோ என்று ஐயப்படவேண்டியதாக இருக்கிறது."

Sri A. GOVINDASWAMY NAYAGAR :—"கனம் சபாநாயகர் அவர்களே, ஐந்தாண்டுத் திட்டத்தில் அமோகமாக மந்திரிகள் உற்பத்தியாக வேண்டுமென்று அங்கத்தினர் விரும்புகிருரா என்று அறிய விரும்புகிறேன்."

* **Sri T. GANAPATHY** :—"மந்திரிகள் உற்பத்தியாக வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. மந்திரிகள் எந்த ஜில்லாக்களிலிருந்து வந்திருக்கிருர்களோ, அந்த ஜில்லாக்களுக்குத்தான் காரியங்கள் அதிகமாக நடக்கின்றன. மந்திரிகள் இல்லாத ஜில்லாக்களில் முன்னேற்ற வேலைகள் குறைவாக இருக்கின்றன என்பதற்காகத்தான் நான் இதைச் சொல்லுகிறேன். எல்லா ஜில்லாக்களையும் ஒரேமாதிரியாக, சமமாக பாவிக்க வேண்டுமென்று எல்லாப் பிரதிநிதிகளின் சார்பாகவும் நான் மந்திரி சபையினரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கெஜட் பதிவில்லாத ஊழியர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு நமது சர்க்கார் இன்னும் யோசனை செய்துகொண்டேயிருக்கிருர்கள். மக்கள் எல்லாத் துறையிலும் முன்னேறவேண்டுமென்று திட்டங்களைப் போட்டாலும், அந்தத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதற்கு கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்களும் நல்ல நிலையில் வந்தால்தான் மக்களோடு ஒத்து வாழ்வார்கள். அந்த முறையில் மத்திய சர்க்காரில் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களுக்குச் சம்பள விகிதம் எப்படி இருக்கிறதோ அதே முறையில் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பள விகிதத்தை உயர்த்துவதற்கு நமது சர்க்கார் சரியான முறையில் திட்டம் வகுக்க வேண்டும். ஏராளமான ரூபாய் கடன் வசதி இருக்கிறது. இதை யெல்லாம் வைத்து மத்திய சர்க்காரில் வேலை செய்பவர்களுக்கு என்ன படிப்பு இருக்கிறதோ அதே படிப்பு நம்முடைய ராஜ்ய சர்க்காரில் வேலை செய்பவர்களுக்கும் இருந்தால், ஒரேவிதமான சம்பளம் கொடுப்பதற்கு ஏன் தயக்கம் என்று தெரியவில்லை. சரியான முறையில் சம்பள விகிதத்தை நிர்ணயிக்காமல் நாம் இந்த சபையில் இருந்து என்ன பிரயோஜனம் என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"கடற்கறை யோரத்தில் ரோடு போட்டிருக்கிருர்கள். எனது தொகுதியில் அந்த ரோடு வேலை மிகவும் நிதானமாக நடக்கிறது. ஆகவே மிகவும் வேகமாக நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

26th August 1955] [Sri T. Ganapathy]

“ திருநெல்வேலியிலிருந்து கன்யாகுமரிவரையில் ரயில் பாதை போடுவதற்கு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் திட்டம் வகுத்திருக்கிறார்கள். அப்படிப்போடும்போது பழவூர்-கருங்குளம் வழியாக நேராக போட வேண்டும் என்று மத்திய ரயில்வே மந்திரி ஸ்ரீ அழகேசன் அவர்களிடம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அவரிடம் பல மகஜர்களும் கொடுத்திருக்கிறோம். நாகர்கோவில் வழியாக ரயில்பாதை போட்டால் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள பிரதேசங்களுக்கு நன்கு உபயோகப்படாது. காவல் கிணற்றிலிருந்து நாகர்கோவிலுக்கு ரயில்பாதை போடுவதை ஆட்சேபிக்கவில்லை. அதுவும் போடவேண்டியதுதான். ஆனால் காவல் கிணற்றிலிருந்து நேரடியாக குருக்கு பாதையில் போகும்படி அதாவது பழவூர் கருங்குளம் வழியாகப் போகும்படி செய்து நமது ஜில்லா மக்களுக்கு நன்மை பயக்குமாதலால் இந்த சர்க்காரை மத்திய சர்க்காருக்கு இதை சிபார்சு செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“ Sir, on behalf of hon. Member Sri Mogral I want to say a few words because he comes from South Kanara and I am closely associated with him.”

DEPUTY SPEAKER :—“ The hon. Member is here and if he wants he can speak for himself.”

* Sri M. S. MOGRAL :—“ Mr. Deputy Speaker, Sir, I must congratulate myself for having got an opportunity at least at this time of the night to say a few words about the Second Five-Year Plan. The future prosperity of our country is wedded with the Second Five-Year Plan. During the long period of British rule in India, the districts of South Kanara and Malabar have been neglected like orphans. With the advent of freedom and independence, an era of hope and faith dawned on the people of these districts and they expected a good deal of developments under the First Five-Year Plan. Unfortunately the level of development under the First Five-Year Plan did not come up to the expectations of the people of these districts. However we expect a good deal of development to ensure for the benefit of the masses under the Second Five-Year Plan. My hon. Friend Sri Anantha Pai and Sri Vaikunta Baliga have during the discussion detailed some of our grievances and I hope Government would consider them sympathetically. As the time that is allotted to me is only 5 minutes I do not propose to repeat them.

“ Sir, South Kanara is at the cross-roads now. We do not know our future alignments. This transition period gives us much anxieties. I hope this factor will not influence the Government to bestow less attention to our district which is quite modest in her demands and we cry only when we are hardpressed. The condition of villages in South Kanara district, at least a majority of them if not all, is very very appalling. It is no exaggeration when I say that some of the villages are in a very primitive stage. It looks as if civilization has not reached those villages. Our villages should be made livable. What is to be done to-day and in the near future is to brighten and industrialise our villages and township units in their proper perspective. This could be done only by the introduction of electricity, and taking up water-supply and drainage schemes in these areas. Of course the question of communication is there. So many of our villages are not connected

[Sri M. S. Mogral] [26th August 1955

by roads. During the last two or three years, I have been harping on this point. There are groups of villages in Kasaragod taluk which are not connected by any road. If people from these villages want to go to the town, they have to travel about 10 to 12 miles on hills and forests. I am sure an easy way could be found out to satisfy this longstanding and just demand of the people who have suffered so far for want of attention, if the Government consider this problem seriously.

" Sir, much has to be done to relieve unemployment in our village. My hon. Friend Sri Baliga mentioned about the deep-sea fishing. There is great scope for deep-sea fishing throughout the west coast. Further I am sorry to find that in South Kanara district nothing has been done worth mentioning, about minor irrigation schemes. In South Kanara district unemployment problem is as acute as it was ever before and the standard of living of the people has not gone up appreciably. I hope that our modest demands which we have put forth to be included in the Second Five-Year Plan would not suffer an unjust set-back.

" Thank you, Sir."

DEPUTY SPEAKER :—" The House will now adjourn and meet again at 9 a.m. to-morrow (27th August 1955)."

The House then adjourned.

LIBRARY
19 DEC 1955
STATE LEGISLATURE, MADRAS
TRUTH ALONE TRIUMPHS

Appendix

[Vide answer to starred question No. 2294 asked by Sr O. Chengam Pillai at the meeting of the Legislative Assembly held on 26th August 1955, page 792 supra.]

Expenditure incurred on establishment charges and the amount of subsidy and aid given for the benefit of Harijans in Ponneri taluk during 1953.

	RS.	A.	P.
1. Establishment charges—			
Pay and dearness allowances of teachers in the 12 Harijan Welfare schools in Ponneri taluk	19,591	2	0
2. Subsidy and aid—			
Repairs to the four Harijan Welfare schools in Ponneri taluk for the benefit of Harijan students	1,267	0	0
Six cement platforms intended for communal purposes constructed under grant-in-aid schemes for the removal of untouchability	2,040	0	0
Acquisition of house-sites	5,474	0	0
Maintenance of the Government Harijan hostel at Ponneri.	4,944	9	0
Provision of midday meals	3 ,051	0	0
Scholarships	592	2	0
Total ..	47,368	11	0
Grand total of items 1 and 2 ..	66,959	11	0

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

8